# கணவன் அமைவதெல்லாம்

லக்ஷ்மி

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 1984
மூன்றாம் பதிப்பு : மார்ச், 1987
நான்காம் பதிப்பு : அக். 1993
உரிமை : டாக்டர் கே. மகேஸ்வரன்

விலை ரூ. 35-00

16337
3206388

அச்சிட்டோர் :
தேவிராஜன் பிரிண்டர்ஸ்
26, வன்னியர் தெரு, சென்னை - 600 094.

# பதிப்புரை

மாதவி தான் மனப்பூர்வமாகக் காதலித்த சந்திரனை மணந்துகொள்ள முடியாது போனதால் பூபதியை மணந்து அவனது அன்பான அரவணைப்பால் இனிதே இல்லறம் நடத்துகிறாள்.

சந்திரனை மாதவியிடமிருந்து தன் பணபலத்தைக் காட்டிப் பறித்துக் கொள்கிறாள் பரிமளா. பணத்துக்காகத் தன் காதலைப் பலியிட்ட சந்திரன் அதோடு நில்லாது மாதவியின் வாழ்க்கையில் குறுக்கிட்டு சீர்குலைக்கிறான். கணவன் அவள் நடத்தையில் சந்தேகப்பட்டுப் பிரிந்து செல்கிறான். அது அவளது வளர்ப்பு மகளின் வாழ்க்கைத் துணைவனாக நல்ல கணவன் அமைவதற்கும் தன் சொந்த மகன் வேறொருத்திக்கு நல்ல கணவனாக அமைவதற்கும் இயலாமல் தடையாய் நிற்கிறது.

இந்நாவலை பல்வேறு உணர்ச்சிப் போராட்டங்கள் நிறைந்த—படிப்போர் உள்ளங்களை நெகிழ வைக்கும் வண்ணம் எழுதியுள்ளார் இந்நாவலின் ஆசிரியை லக்ஷ்மி அவர்கள்.

இந்நாவலின் நான்காம் பதிப்பை வெளியிட அனுமதியளித்த டாக்டர் கே. மகேஸ்வரன் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகும்.

**வே. சுப்பையா**
பூங்கொடி பதிப்பகம்

## "லக்ஷ்மி"யின்
## பூங்கொடி வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| இரண்டாவது மலர் | ... | 40 | 00 |
| அசோக மரம் பூக்கவில்லை | ... | 13 | 50 |
| மீண்டும் பிறந்தாள் | ... | 26 | 00 |
| அடுத்த வீடு | ... | 64 | 00 |
| பெயர் சொல்ல மாட்டேன் | ... | | |
| பெண் மனம் (தமிழ்நாடு அரசு பரிசு நூல்) | | 30 | 00 |
| கோடை மேகங்கள் | ... | 32 | 00 |
| ஸ்ரீமதி மைதிலி | ... | 55 | 00 |
| பெண்ணின் பரிசு | ... | 15 | 00 |
| நீலப்புடவை | ... | 19 | 00 |
| நதிமூலம் | ... | 18 | 00 |
| ஒரு காவிரியைப்போல | | | |
| (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | ... | 50 | 00 |
| மீண்டும் வசந்தம் | ... | 38 | 00 |
| மண்குதிரை | ... | 19 | 00 |
| மீண்டும் ஒரு சீதை | ... | 24 | 00 |
| உறவுகள் பிரிவதில்லை | ... | 13 | 00 |
| வாழ நினைத்தால் | ... | 16 | 00 |
| துணை | ... | 13 | 50 |
| மாயமான் | ... | 10 | 00 |
| இனிய உணர்வே என்னைக் கொல்லாதே | | 44 | 00 |
| அரக்கு மாளிகை | ... | 70 | 00 |
| திரும்பிப் பார்த்தால் | ... | 20 | 00 |
| நியாயங்கள் மாறும்போது | ... | 27 | 50 |
| காளியின் கண்கள் | ... | 25 | 00 |
| கங்கையும் வந்தாள் | ... | 46 | 00 |
| அதிசய ராகம் | ... | 30 | 00 |
| மருமகள் | ... | 20 | 00 |
| நாயக்கர் மக்கள் | ... | 60 | 00 |

16337
3206388

# 1

அவர்கள் புதுமனை புகுந்து சில நாட்கள்தான் சென்றிருந்தன.

''தேவி'நிலையம்''— வீட்டின் பெயர்.

சமையலறையை ஒட்டிய பின் வராந்தாவில்தான் பாத்திரங்கள் காய்ந்து கிடந்தன.

குழாயைத் திருப்பிவிட்டு சில்லென்றிருந்த சிமெண்ட் தரைமீது வராந்தாவில் வந்து உட்கார்ந்து கொண்டாள் மாதவி.

நாள் முழுவதும் உழைத்து அலுத்துவிட்டிருந்த உடலுக்கு அந்தச் சிறு ஓய்வு தேவையாகத்தானிருந்தது.

தோட்டத்தில் வராந்தா அருகில் வளர்ந்து நின்ற பெரிய வேப்பமரம் இலை தெரியாது பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. வெளியே எரித்த கோடை வெயில் தெரியாது வராந்தா மீது அதன் நிழல் படிந்தது. ஊடே வீசிய காற்றால் அடிக்கடி கிளைகள் அசைந்தபோது தரையில் உதிர்ந்த சில பூக்கள் வராந்தாவிலும் வந்து விழுந்தன.

லேசான ஒரு மணம்—குளிர்ந்த காற்று—தவறி உடல் மீது வந்து விழுந்த மலர்களின் மெல்லிய வருடல்... நெஞ்சத்திலே எண்ண அலைகள்...

தன்னை மறந்து மரத்திற்கு மேல் பளிச்சிட்ட நீல வானத்திற்குள்ளே ஊன்றிப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். பல ஆண்டுக்கு முன்னர்—குழந்தைப் பருவத்து நினைவு அலைகளில் சுழன்று கொண்டு மெய்மறந்து போனாள்.

குடிதண்ணீர்— கிணற்று தண்ணீர் இரண்டிற்கும் மேல் நிலைத் தொட்டிகள் இருந்தன. காலையிலேயே இரண்டின் ''மோட்டார்'' களையும் இயக்கி தொட்டிகளில் நிறைய தண்ணீரை ஏற்றியிருந்தாள். கிணற்றுத் தண்ணீர்— குளிக்க, துணிகளைத் துவைக்க, பாத்திரங்களைத் துலக்க என்று பல உபயோகத்திற்கு உதவியது. சமைக்கவும்— குடிக்கவும் தனிக் குழாயில் எப்பொழுதும் தண்ணீர் கொட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகவே அதற்குத் தனியான தொட்டி.

கிணற்று நீரானாலும் அது இளநீர் போல் குடிக்கக்கூட நன்றாகத்தானிருந்தது. அப்படி ஒரு பாக்கியம் அந்த வீட்டிற்கு. எல்லாம் தன் அதிர்ஷ்டத்தினால்தான் என்ற நம்பிக்கை தங்கம்மாளுக்கு.

மனைவி என்று தான் காலடி எடுத்து வைத்த வேளை கைலாசம் அடிமட்டத்திலிருந்து மளமள வென்று முன்னேறி பிரபல வியாபாரியாகி விட்டார்— செல்வத்திலே புரண்டு கொண்டிருக்கிறார் என்று தன் ராசியைப் பற்றிய உயர் வான மதிப்பு. எல்லாவற்றிற்கும் அவள்தான் காரண பூதம் என்ற எண்ணம்—ஒரு வகையில் அது உண்மையுங் கூட. செல்வ சுகத்திலே அவள் இந்தச் சில ஆண்டுகளில் பூதமாக பருத்துவிட்டிருந்தாள்!

''மாதவி! மாதவி!''

அன்று நூறாவது முறையாகத் தங்கம்மாள் கூவினாள்.

அந்தக் குரல், மாடியிலிருந்து படிகளில் தாவி முன் னறையில் நுழைந்து— குழாய் கொட்டிய தண்ணீருக்குத் தாளம் போட்ட பாத்திரங்கள் எழுப்பிய ஒலியுடன் மறைந்து விட்டது. மாதவி வேறு உலகில் எங்கேயோ எண் ணங்கள் இடையே வளைய வந்துகொண்டிருந்தாள்.

பன்னிரண்டு ஆண்டுக்கு முன்னர், இதேபோல் ஒருநாள் மாலை நேரம். இடையில் அழுக்குப் பாவாடை. கழுத் தோரம் எண்ணெய்ப் பிசுக்கேறிய சட்டை. நீண்ட தூரம் புகைவண்டிப் பயணம் செய்து சலித்த முகம். பரட்டைத்



தலை-இந்தத் தோற்றத்தில் இடையில் தகரப்பெட்டி ஒன்றை இடுக்கிக்கொண்டு, மெல்ல அந்தப் பழைய வீட்டின் முன்னறையினுள் வந்து நின்றாள் மாதவி.

அவளை அழைத்து வந்திருந்த பரமசிவம் ஓர் அப்பாவி. சேரவேண்டிய இடத்தில் அவளைச் சேர்த்துவிட வேண்டு மென்ற ஆவலில் நேரே ரெயில் நிலையத்திலிருந்து அங்கு அழைத்து வந்து விட்டார். தலையை வாரி—முகத்தைக் கழுவிச் சீர்படுத்தி-சுத்தமான துணி அணிவித்து அழைத்து வரவேண்டுமென்ற எண்ணமே அவருக்கு எழவில்லை.

மாதவிக்கு அப்போது ஏழு வயது. வறுமையில் ஒடுங் கிய உடல். ஐந்து வயதுச் சிறுமிபோல் தோற்றம். ஆனால் ஐம்பது வயதுடையவள்கூட சமாளிக்கஇயலாத துன்பச் சுமை அந்தப் பிஞ்சு உள்ளத்தில்.

பிறந்தவுடனேயே அவளைத் தவிக்கவிட்டுத் தாய் போய் விட்டிருந்தாள். அங்குவருவதற்குச் சில தினங்களுக்கு முன் அவள் தந்தையும் போய்விட்டார். அவர் இறந்த கதையை வரகனூர் வாசிகள் வாய்வலிக்கப் பேசினார்கள். அனுதாபப் பட்டுப் பேசினார்கள். எல்லாம், வாயளவில் உதவிக்குத் தான் யாரும் முன்வரவில்லை.

''பள்ளிக்கூட வாத்தியார் கோதண்டம், நல்லமனிதர். காவேரி ஆற்று வெள்ளத்தில் தத்தளித்த சிறுவன் ஒருவ னைக் காப்பாற்றப் போய் ஆற்றோடு போய்விட்டார். பச்சிளங் குழந்தை மாதவி! இப்போது அவளை யார் காப் பாற்றப் போகிறார்கள்? ச்சோ...ச்சோ...பாவம்...''

பரிதாபப்பட்டவர்களின் வார்த்தைகள், அழுதழுது கன்னத்தில் ஓடிய இவளது கண்ணீரைத் துடைக்கவில்லை. அதற்குப் பதில் அவளது அவல நிலையைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியாத ஒரு நினைவுதான் அவள் உள்ளத்தில் உருவாக்கியது. ''நான் அநாதை! எனக்கு யாருமில்லை...'' என அவளது இதயம் பயத்தில் துடித்தது.

கோதண்டம், வரகனூர் மக்களுக்குச் செய்த சேவைக்குக்கிடைத்த பரிசு...மரணம். மகளுக்கு அவர்

விட்டுப்போன சொத்து வறுமை—தனிமை எனும் கொடுமை.

வரகனூர் மக்களில் ஒரே ஒருத்தருக்குமட்டும் அனுதாப வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கப் பொழுது இருக்க வில்லை. அன்பாக இணைந்து பழகிய பரமசிவம், நண்பரின் மறைவால் இடிந்துவிட்டிருந்தார். அந்த அதிர்ச்சி நீங்க சில தினங்கள் சென்றன. அப்போதுதான் அவருக்கு மாதவி யைச் சேர்க்கவேண்டிய இடத்தில் கொண்டு சேர்க்க வேண் டும் என்ற நினைப்பு எழுந்தது. அந்தப்பெரும் கடமை அவரது வாய்க்குப் பூட்டுப் போட்டிருந்தது. அனுதாப வார்த்தைகளில் பொழுதை வீணாக்காமல், கடமையைச் செயலாக்க அவளுடன் அவர் இங்கே புறப்பட்டு வந்திருந் தார்.

முதன்முதலாகத் தங்கம்மாளைக் கண்டதும் மாதவிக்கு ஒரே வியப்பு. திறந்த வாயை மூட மறந்து பிரமிப்புடன் பார்த்துக்கொண்டு நின்றாள். வரகனூர் கிராமத்தில் அவர் கள் வசித்த வீட்டில் கூடத்துச் சுவரில் மாட்டியிருந்த மகா லட்சுமியின் படத்து நினைவு உடனடியாகத் தோன்றியது.

''அப்பா இந்தச் சாமிக்கு ரொம்ப நகைகள்...''

''எல்லோருக்கும் செல்வத்தை வாரிக் கொடுக்கிற வளாச்சே. அவளும் மேலே அள்ளிப் போட்டுக் கொண்டிருக் கிறாள்.''

''நமக்கும் கொடுப்பா இல்லையா?''

''நாம் வரிசையில் ரொம்பகடைசியிலே இருக்கிறோம்- கொடுத்து சலித்துப்போய் அவள் ஓய்வா இருக்கிறா.. நம்ப முறை வரலையே- அதனால்தான் இப்படி இருக்கிறோம்.''

மகளை செல்லமாக அணைத்து, தலையை வருடிக் கொண்டு சிரித்தார், கோதண்டம். அதன் பொருள் அவ ளுக்கு அப்பொழுது விளங்கவில்லை.

கண்ணாடிச் சட்டத்திற்குள் அடங்கிவிட்ட அந்த தேவி யைப் போல், தங்கம்மாளும் செவேலென்று- வட்ட வடிவ மான முகமும்- கரிய கண்களும்- நெளிந்த கூந்தலுமாகப்



பார்க்க மிகவும் அழகாகக் காணப்பட்டாள். காதுகளிலும் மூக்குகளிலும் வைரங்களின் தகதகப்பு. கழுத்திலே பட்டை பட்டையாகத் தங்கச் சங்கிலிகள்—முழங்கை வரை ஒடிய வளைகள். இடுப்பிலே பட்டுச்சேலை. சோபாவிலே சாய்ந்து கொண்டிருந்த அந்தம்மாளைப் பார்த்து மயங்கிப் போய் நின்றாள் மாதவி.

பரமசிவம் நின்றபடியே என்னென்னவோ பேசிக்கொண் டிருந்தார். வந்தவரை உட்கார் என்று கூடச் சொல்லாது சாய்ந்து கொண்டிருந்த தங்கம்மாள், நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்தாள். அந்த அழகான முகத்திலே திடீரென்று மாறுதல்கள்.

மாதவிக்கு விளங்காத திகைப்பு. தொடர்ந்து பார்க்க அஞ்சி, தலையைக் குனிந்து கொண்டாள்.

''நல்லா இருக்கு கதை! எங்கேயோ உறவுன்னு எதையோ பிடிச்சிக்கொண்டு கிளம்பி இருக்கிறீங்களே? ஆண்பிள்ளையானாலும் போகட்டும்—இருந்தொழியட்டும் —எடுபிடி வேலைக்கு உதவுவான் என்பேன். பெண் குழந்தை படிப்பு, கல்யாணம் இப்படி எத்தனை பொறுப்பு கள்? இந்த செலவெல்லாம் எங்களுக்கு எதுக்கு? எவரான் பிள்ளையைக் காப்பாத்தினார்...தன் பிள்ளையைத் தவிக்க விட்டுட்டுப் போயிட்டார். இந்தக் கதையை எங்கேயாவது அனாதை ஆசிரமத்தில் போய்ச் சொல்லுங்க; எடுத்துக் கொள்வாங்க. அதைவிட்டு இங்கே கொண்டு வந்து என் கழுத்தை அறுக்கிறீங்களே...''கோபத்துடன்படபடவென்று பேசினாள்.

பயத்தில் மாதவியின் உடல் வெடவெடவென்று நடுங் கியது. அந்த அதட்டல் குரல் அவளது அழுகையைத் தூண் டியது...ஓவென்று வாய்விட்டு அவள் அழத் தொடங்கி னாள்.

''என்ன சொல்லிட்டேன். இப்படிப் புலம்புகிறாள்? பாருங்கோ, நீங்களே! ஒண்ணும் பேசாதபோதே அடிச்சுக் கொன்னுட்டாப்போல அலறுகிறாளே—இந்தச் சனியனை வச்சு எப்படிக் காப்பாத்த முடியும்? வரகனூர்போல் இது

ஒரு பட்டிக்காடா? பட்டணத்து விலைவாசிகளைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? எங்கள் வீடு என்ன சத்திரமா? சாவடியா?...யாரோ விட்டுப்போன அநாதையை வச்சுப் படைக்க என் தலையில் கூழா கரைச்சுக் கொட்டியிருக்கு?''

ஊரான் குழந்தையை ஊட்டி வளர்த்தால்...''

''நானும் படிச்சிருக்கேன். அந்தப் பழைய பஞ்சாங்கமெல்லாம் இங்கே தேவையில்லை...''

''உங்களுக்குத் தெரியாதா? கோதண்டமும் உங்கள் கணவரும் நெருங்கின நண்பர்கள்''- விடாப்பிடியாகச் சொன்னார் பரமசிவம்.

''இதென்ன புதுக்கதை!'' ஏளனமாகச் சிரித்தாள் அவள்.

''உண்மையம்மா!''

''நான் சொல்றதைக் கேளுங்க. ஒரு பாலர் இல்லத்து விலாசம் எனக்குத் தெரியும், கொடுக்கிறேன். அங்கே போய் முயற்சி பண்ணிப் பாருங்க. வருஷத்துக்கு நூறு அனாதைக் குழந்தை என்கிற கணக்கில் சேர்த்துக் கொள்வதாகக் கேள்வி.''

பரமசிவத்தினால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ''மாதவி ஒண்ணும் அநாதையில்லை, அம்மா... வாட்டசாட்டமாக மரம்போல நான் உயிருடன் இருக்கும் வரை அவள் அநாதையில்லை.''

சற்று காரமாகவே சொல்லிவிட்டார்.

''பின்னே நீங்களேவச்சுக்கிட்டு வளர்க்கிறதுக்கென்ன? இத்தனை தூரம் புறப்பட்டு வரவேண்டாமே?''

வெறுப்பாகச் சிரித்தார், பரமசிவம். ''நாங்கள் ஏழைகள். அத்தோட பிள்ளையில்லாத பரம ஏழைகள். என் மனைவியும் நானும் மாதவியை கண்ணுக்குள்ளே வைச்சு வளர்ப்போம். ஆனால் அந்த பாக்கியத்துக்குக் கொடுத்து வைக்கலை. மாதவியின் வருங்காலத்தைஉத்தேசித்துத்தான் அழைச்சுக்கிட்டு வந்தேன்.குழந்தைக்கு நல்லபடிப்புகொடுக்



கணும்னு என் நண்பர் கோதண்டம் விரும்பினார். நாங்க இருக்கிற கிராமத்திலே பெரிய படிப்புக்கு வசதியில்லை. அதுக்குத் தக்க இடம் இதைப்போல பட்டணந்தான். வேறு ஒரு முக்கிய காரணமும் இருக்கு. நாங்கள் மிதியடி தயாரிக்கும் தொழிலாளி வகுப்பைச் சேர்ந்தவங்க. மாதவி உயர்ந்த சாதியைச் சேர்ந்த பெண். எங்ககிட்ட வளர்ந்தால் பின்னாடி கல்யாணத்தின்போது பல பிரச்னைகள் வரலாம். அதுக்கு பயந்துதான் வந்தேன். என் உயிர் நண்பர் கோதண்டத்தின் குழந்தைக்கு ஒரு பிடி சோறுகூடப் போட முடியாதபடி சாதி என் கைக்கு விலங்கு போட்டுவிட்டதேன்னு நான் ரொம்ப வேதனைப்படுகிறேன். அது வார்த்தையால் விளக்க முடியாத துக்கம்மா...'' திணறினார்.

திடுக்கிட்ட தங்கம்மாள் எழுந்து நின்றாள். ''நல்ல வேளை அவரை உட்காரச் சொல்லவில்லை'' என எண்ணிகொண்டாள். ''அவரைக் கேட்காமல் இங்கே ஒண்ணும் நடக்காது. தற்சமயம் அவர் ஊரில் இல்லை, எப்போ வருவார்னும் சொல்ல முடியாது.''

பரமசிவம் லேசாகச் சிரித்தார். ''உங்கள் கணவர் தம் கைபட கடிதம் போட்டிருப்பதால்தான் நான் இங்கே வந்தேன். நண்பர் மரணமடைந்த செய்தி கேட்டு வருந்தி எனக்குக் கடிதம் எழுதி ரெயில் செலவுக்குப் பணமும் அனுப்பி வைத்தார். குழந்தையைக் கொண்டு இங்கே விட்டு விடும்படி உத்திரவும் போட்டிருக்கிறார். தாம் ஊரில்லா விட்டாலும் உங்களிடம் விஷயத்தைச் சொல்லி மாதவியை விட்டுப் போகும்படி எழுதியிருக்கிறார்'' மடியிலிருந்த ஒரு கடிதத்தை அவளிடம் நீட்டினார்.

தங்கம்மாளால் சட்டென்று பேசவே முடியவில்லை அவளை ஒரு வார்த்தை கேட்காமல் கணவன் இப்படி ஒரு காரியம் செய்வாரா என்ற ஆத்திரம். ''எனக்குத் தெரியாது. அவர் வந்தப்பறம் பேசிக்கோங்க'' கோபத்துடன் வேகமாக உள்ளே சென்று விட்டாள்

பரமசிவம் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு மாதவியுடன் வெளியில் வந்தார்.

புகைவண்டியில் ஏற்பட்ட ஒரு சிநேகிதம். எப்படியோ தடுமாறிக்கொண்டு அவன் 'இடத்தைக் கண்டுபிடித்துவிட்டார். கூவம் ஆற்றை ஒட்டிய குடிசைப்பகுதி ஒன்றில்தான் அவன் வாசம். மிக்கமகிழ்ச்சியுடன் அவருக்கும் மாதவிக்கும் மூன்றுநாள் தங்க இடமளித்தான்.

நான்காவது நாள் காலை குழந்தையுடன் மீண்டும் அவர் 'தேவிநிலைய'த்திற்கு வந்துவிட்டார். தன் கணவன் அன்று காலை வந்துவிடுவார் என்று அவருக்கு எப்படித் தெரியும்? தங்கம்மாளுக்கு இதுநாள் வரை தெரியாத ஒரு ரகசியம் அது. மாதவிக்கு மட்டுமே தெரியும்.

அன்று காலை சிவகுரு சன்னல் வழியே முன்னறையை எட்டிப் பார்த்தான். பரமசிவத்தின் மீதும் அவர் பக்கத்தில் நின்ற சிறுமி மீதும் அவனுக்கு இரக்கம் பொங்கிக்கொண்டு வந்தது. அவர்கள் பேசிய அனைத்தையும் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தான். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று அவனுக்கு தானாகவே ஓர் எண்ணம். பரமசிவம் வெளியே வந்ததும் வழி மறித்துத் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். கைலாசம் ஊருக்கு திரும்ப விருக்கும் நாளையும் அவன்தான் சொல்லி வைத்தான். அவனும் மாதவியைப்போல் தங்க நிழல் தேடிக்கொண்டு ஆரம்பத்திலே அங்கு வந்தவன்தான். அந்த ஒரு பரிவு.

தங்கம்மாளுக்குக் கணவனிடம் மிகவும் பயம். அவளது வாய் வீச்சு வேலைக்காரர்களுடன் சரி. ''தங்கம்!'' என்று கைலாசம் ஒரு கூச்சல் போட்டால் அம்மா நடுநடுங்கிப் போவாள். பார்ப்பதற்கு அப்படி அவர் வாட்டசாட்டமாகவோ —பயங்கரமாகவோ இருக்கமாட்டார். மெலிந்த உருவம், நலிந்த வடிவு கொண்டவர். ''அம்மா குதிர்; ஐயா கதிர்'' என்று வேலைக்காரர்கள் அவள் காதில் படாமல் பேசிக்கொள்வது உண்டு. தங்கம்மாளின் அழகுக்கு



அவர் ஈடு இல்லை. ஆனால் அறிவிலும் வியாபார நுணுக்கத்திலும் அதிகாரத்திலும்... அவருக்கு ஈடு அவர்தான். அந்த வீட்டில் ஆண்மகன்தான் தலைவன்.

ஆரம்பத்தில் தங்கம்மாளுக்கு மாதவியைப் பிடிக்கவேயில்லை. வீட்டுக்குப் பாரம் எனக் கருதி வெறுத்தாள். ஆனால் இப்போது அவள் இல்லாமல் ஒரு வினாடிகூட அவளால் சமாளிக்க முடியாது போன்ற பிரமை. மாதவியைப் போல் முகம் கோணாது- நேரம் காலம் பற்றிக் கவலைப்படாமல் கூப்பிட்ட குரலுக்கு அலுக்காது பணிபுரியும் வேலைக்காரி எத்தனை பணம் கொடுத்தாலும் கிடைக்கமாட்டாளே?

துன்பம் நிறைந்த தன் குழந்தைப்பருவத்தை நினைத்து பார்த்த மாதவியின் நெஞ்சை என்னவோ இறுக்கியது. கண்களில் லேசாக நீர் திரையிட்டுக் கொண்டது.

''மாதவி!''

மிக அருகில் ஒலித்த தங்கத்தின் குரல் விழிப்படையச் செய்யவே அவள் சட்டென்று எழுந்திருந்தாள்.

வெளியே புறப்பட ஆயத்தமாக இருந்த தங்கம்மாள் பின்பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள்.

''குழாயைத் திருப்பி விட்டு என்ன குருட்டு யோசனை? முதல்லே குழாயை மூடு. டிரைவரைக் கூப்பிட்டு வண்டியை எடுக்கச் சொல்லு. மளமளன்னு காரியத்தை கவனிச்சிட்டு கதவைச் சாத்திகிட்டு பத்திரமாஇரு. சிவகுருவை டவுனுக்கு சாமான் வாங்கிவர அனுப்பிருக்கிறேன். இதுதான் சாக்குன்னு ஊரைச் சுத்திட்டு ராத்திரிதான் வருவான் சோம்பேறி. போன இடத்திலே எங்களுக்கு சாப்பாடு. பகல் மீதி சாப்பாடு பிரிட்ஜிலே வச்சிருக்கு. எடுத்துப் போட்டுக்கோ'' பல உத்திரவுகளை வீசினாள்.

தலையை அசைத்தாள் மாதவி.

''புடவைகளை அள்ளி அப்படியே படுக்கை மேலே போட்டு விட்டிருக்கேன். எடுத்து மடிச்சுவை...'' பின்னால் வந்த பரிமளாவின் உத்தரவு.

தாயைப்போல் அவள் மிகவும் அழகி. வெள்ளைப் பட்டுச் சேலையும்- கழுத்தில் முத்துமாலையுமாக அவள் மினுக்கிக் கொண்டு புறப்பட்டிருந்தாள்.

அவர்கள் கிளம்பினார்கள். மாதவி கதவைத்தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள். அவசரமாக பாத்திரங்களை துலக்கத் தொடங்கினாள்.

அவளையும் அறியாது அவளிடம் ஒரு குணம் தானே வளர்ந்து விட்டிருந்தது. தன்னை ஒத்தவயதுடைய பரிமளா வுடன் தன் நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும் வழக்கம்.

மாதவி மாநிறம். பரிமளா நிறத்திலே தாயைப்போல் நல்ல சிவப்பு. பத்தாம் வகுப்பு வரைதான் மாதவியைப் படிக்க அனுமதித்திருந்தாள் தங்கம்மாள். ஆனால் பரிமளா ஒரு பட்டதாரி- பி. ஏ. பொருளாதாரம்.

மாதவிக்கு அந்த வீட்டில் ஒரு வேலைக்காரியின் நிலை. பரிமளா அவர்களின் ஒரே மகள்! அந்தனை செல்வத்திற் கும் வாரிசு.

எத்தனை ஏற்றத் தாழ்வுகள்?

பாத்திரங்களை உள்ளே கொண்டு போய் துடைத்து அடுக்கி விட்டு, கதவைத் தாளிட்டுக்கொண்டு வந்து முன்னறையில் உட்கார்ந்தாள் மாதவி.

அவளையும் அறியாது கன்னத்திலே உருண்ட கண்ணீ ரைத் துடைத்துக்கொண்டாள்.

துன்ப நினைவுகளை உதறி எறிந்துவிட்டு, எண்ணங் களை வேறு திசையில் திருப்ப ஒரு கதைப் புத்தகத்தை கையில் எடுத்துக்கொண்டாள்.

பரிமளா அருகில் இருந்த நூல் நிலையத்திலிருந்து வாரம் பலபுத்தகங்களை அள்ளிக்கொண்டு வருவாள். நாள் மூழுவதும் நகத்தைக் கடித்துக்கொண்டு கதைகள் படிக்க அவளுக்குப் பொழுது இருந்தது. சில சமயம் பரிதாபப்பட் டுக் கொண்டு மாதவிக்கு இரண்டு புத்தகங்களை படிக்க இரவல் கொடுப்பது உண்டு. வீட்டு வேலைகளுக்கிடையே ஒழிந்த நேரத்தில் துண்டும் துளியுமாக மாதவி ஆவலுடன் படித்து தீர்த்துவிடுவாள்.



முதல் நாள் பரிமளா கொடுத்த அந்தப்புத்தகம் மிகவும் சுவையாக இருந்தது. காதலன் காதலியைச் சந்திக்கும் கட்டத்திலே அவள் ஊன்றிப் போயிருந்த சமயம்; "மாதவி!" என்று தங்கம்மாள் அலறவும் இடையில் விட்டி ருந்தாள். இப்போது யாருமில்லை. நிம்மதியாகப் புத்த கத்தைத் திறந்தாள்.

கதாநாயகி அவளைப்போல ஓர் ஏழை- அனாதைப் பெண். அவளை ஒரு பணக்கார அழகான வாலிபன் சந்திக் கிறான், காதலிக்கிறான்...

திடீரென்று கவலையுடன் மாதவி கடைசிப் பக்கத்தை புரட்டிப் பார்த்தாள். நல்ல வேளை! அவன் அவளை முடி வில் கல்யாணம் செய்துகொள்கிறான்!

அப்படி ஓர் அதிசயம் அவளது வாழ்க்கையில் நடந்து விட்டால்?...

வாயில் மணி கிணுகிணுத்தது.

திடுக்கிட்டு எழுந்திருந்தாள்.

அதற்குள் நன்றாக இருட்டிவிட்டிருந்தது. விளக்கைப் போட்டாள். பரிமளாவைப் போல் சட்டென்று பயந்து விடுகிறவள் அல்ல. தனியே அந்த வீட்டில் பலமுறை தங்கி யிருந்து பழக்கம்.

"யாரது? அண்ணாவா?" குரல் கொடுத்தாள்.

"இல்லை. தம்பி!..." வாயிலில் பதில் அளித்த ஆண் குரல் தொடர்ந்து சிரிப்பது கேட்டது.

"விளையாட்டு வேண்டாம். கேட்ட கேள்விக்கு ஒழுங் காகப் பதில் சொன்னால் என்னவாம்?..."

அதட்டிக்கொண்டே கதவைத் திறந்தாள்.

"அடேயப்பா. மாமாவின் மகள் புலே வாயாடி தான் போலிருக்கு. பயந்துவிட்டேன்..." என்று கேலியாகச் சொன்ன வாலிபனை மாதவி அதிசயமாகப் பார்த்தாள். யார் அவன்?

அவள் அவனை இதுவரை பார்த்ததில்லை.

அவனும் அவளை ஏற இறங்க உற்றுப் பார்த்தான்.

ஏனோ அவள் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது!

## 2

இனம்புரியாத இன்ப உணர்விலே ஒரு வினாடி மயக்கம்.

என்னசொல்வதென்று புரியாதுஅமைதியாக நின்றாள் மாதவி.

வந்தவன் மீண்டும் வியப்புடன் பார்த்தான்.

அவள் காதுகளும்- கன்னங்களும் கபகபவென்று எரியத் தொடங்கின. அவமானத்திலே குன்றிப் போய் விட்டாள்.

கதை படிக்கத் துடித்த அவள் முகத்தைக் கழுவி தலையை வாரி முடித்துக்கொள்ள மறந்து அப்படியே உட்கார்ந்து விட்டிருந்தாள். இப்போது அந்த அழகான வாலிபன் அவளை அந்தக் கோலத்திலே பார்த்துவிட்டானே?

"நீ மாமா கைலாசத்தின் மகள்தானே?..."

திடுக்கிட்டுப் போனாள்! "இல்லை..நான் வந்து.. அவருக்கு தூரத்து உறவுமுறை" சொல்லமுடியாது விழித்தாள்.

அவள் உடுத்திருந்த ஓரம் நைந்துபோன அந்தப் புடவை மீது அவன் கண்கள் ஓடின.

மாதவியின் முகம் சிவந்தது.

நெஞ்சு வேகமாகத் துடித்தது.

கால்கள் பாவாது தள்ளாடின.

புரிகிறது. நீ இந்த வீட்டில்... ஒரு சின்டிரெல்லாவா?" வரிசைப் பற்கள் தெரிய அவன் சிரித்தான். அவன் கண்களும் கூடச் சிரித்தன.

அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.



"கொஞ்சம் குடிக்க குளிர்ந்த நீர் கிடைக்குமா?"... வராந்தாவில் கிடந்த பிரம்பு நாற்காலியில் அவன் உட்கார்ந்தான்.

அவள் வேகமாக உள்ளே ஓடினாள்.

இன்பம் துன்பம் ஆத்திரம் ஏக்கம் என்ற பல்வேறு உணர்ச்சிக் கொந்தளிப்பில் அவள் உடல் ஆடியது.

உள்ளம் நடுங்கியது.

லேசாகக் கண்களில் நீர் துளிர்த்தது.

சமையலறை மேடையைப் பிடித்துக்கொண்டு ஒரு கணம் செயலற்று நின்றாள்.

இரவு மணி பத்து.

உள்ளத்தைக் குழப்பிய பல சிந்தனைகளால் தங்கம் மாளுக்கு உறக்கம் வரவில்லை.

கதிரேசன் வீட்டிற்கு அவர்கள் அடிக்கடி போய் வந்து கொண்டு இருந்ததற்கு ஒரு காரணம் இருந்தது.

கதிரேசன் நகரத்திலே பெரியதொரு புள்ளி. கோடம்பாக்கத்தில் அவருக்குப் பெரிய அச்சகம் இருந்தது. பூந்தமல்லியில் அரண்மனை போன்ற பங்களா. அவருடைய மகன் ரங்கதுரை அச்சுக் கலையில் தேர்வு பெற்று வெளி நாட்டில் இருந்து சில தினங்களுக்கு முன்னர்தான் திரும்பி யிருந்தான்.

கதிரேசன் மனைவி அமராவதியின் சிநேகிதத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு தங்கம்மாள் மனக்கணக்குப் போட்டுக் கொண்டிருந்தாள்.

"பரிமளாவை ரங்கதுரைக்குக் கட்டிக் கொடுத்து விட்டால்...?"

கதிரேசன் பிரபலமான அச்சகத்தின் அதிபதி. கைலாசம் பெரிய காகித வியாபாரி. இருபக்கமும் எக்கச்சக்கமான பணம். பரிமளா வீட்டுக்கு ஒரே பெண். ரங்கதுரையும் அவர்களுக்கு ஒரே மகன். எத்தனை பொருத்தம்!

ஆனால் கல்யாணம் என்பதில் சில வரைமுறைகள் இருக்கின்றனவே? பெண் வீட்டார் வலிய மாப்பிள்ளையைத் தேடிச் செல்வது... பழக்கமில்லா வழக்கமாயிற்றே!

தங்கம்மாள் படுக்கையில் புரண்டாள். கால்களில் தாங்கொணா வேதனை.

அமராவதி அடிநாளில் பாட்டனுடன் இலங்கையில் பல ஆண்டு தங்கி வளர்ந்தவள். மேல் நாட்டு பழக்கவழக்கத்திலே ஊறிப் போனவள். ஆங்கிலம் கலக்காது பேசத் தெரியாதவள். அவர்கவது பங்களாவிலே ஒரு பக்கத்திலே டென்னிஸ் பந்தாட்ட முற்றம் ஒன்று இருந்தது.

''டென்னிஸ் விளையாட்டினால் உடல் எடை குறையும்'' என்ற வருங்கால சம்பந்தியம்மாளின் வற்புறுத்தலைத் தட்ட முடியவில்லை. அன்று மாலை பயிற்சியாளர் போட்ட பந்தை தட்டத் தாவிக் குதித்த குதியில் புடவை ஓரம் தடுக்கி அவள் விழுந்து எழுந்திருக்கச் சமாளித்தபோது... முகம் சிவந்து அவமானத்தில் குன்றிப் போய்விட்டாள்.

''அம்மா காயம் ஏதாவது பட்டதா?'' பயிற்சியாளர் தவித்துப் போனான். ஆனால், பரிமளா...அவள் பெற்ற அருமை மகள் அறிவுகெட்டு, பெற்ற தாய் என்ற நினைப்பே இல்லாமல், அமராவதியுடன் சேர்ந்துகொண்டு குலுங்கக் குலுங்கச் சிரித்துக்கொண்டு இருந்தாள்.

''அமராவதிக்கு மட்டுமென்ன அந்தனை திமிர்? எப்பொழுதுமே இப்படியே கொடிபோல இருந்துவிடப் போகிறாளா!''

ஆரம்பத்தில் தங்கம்மாளும் ஒடிய ஒடியத்தான் இருந்தாள். இடையே வந்து தொலைந்ததுதான் அந்தப் பருமன்.

ஆத்திரத்தில் சூடாகப் பலவும் சொல்லத் துடித்து பொங்கிப் போய்விட்டாள். அவள் கைக்குட்டையால் வாயைப் பொத்திக்கொண்டு அமராவதி அருகில் வந்து நின்றபோது... வருங்கால சம்பந்தி ஆயிற்றே என்று வாயை அடைத்துக் கொண்டு புன்முறுவலிக்க வேண்டியிருந்தது. எல்லாம் பரிமளாவின் நன்மைக்காகத்தான். ஆனால் அந்தப் பெண்ணிற்கு ஏதாவது புரிகிறதா?...



கோபத்துடன் பலவும் எண்ணியபடி தங்கம்மாள் படுக்கைமீது புரண்டாள்.

வெளிவராந்தாவிலே மெல்லிய காலடி ஓசை கேட்டது.

வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு மாதவி இறங்கி வந்துகொண்டு இருந்தாள்.

அவர்கள் முன்பு வசித்த சிறிய வீட்டில் மாதவி சமயலறைத் தரை மீதுதான் தூங்குவது வழக்கம். இப்போது அவள் நிலையில் ஒரு சிறு முன்னேற்றம். புதிய வீட்டில் உக்கிராண அறைக்குப் பக்கத்தில் இருந்த சிறிய அறையை அவள் பயன்படுத்தக் கொடுத்திருந்தார்கள்.

ஆனால் இரவில் அவள் பரிமளாவுக்குத் துணையாக மாடியில் அந்தப் பெரிய படுக்கை அறையில்தான் உறங்க வேண்டும் என்று கைலாசத்தின் கட்டளை. இளம் வயதுப் பெண்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர் துணையாக இருப்பதுதான் முறை என்பது அவரது எண்ணம். தங்கம்மாளுக்கு இந்த ஏற்பாடு சிறிதும் பிடிக்கவேயில்லை.

''பரிமளாவுக்கு சமமாக அந்த அழகான அறையில் கட்டிலின் மேல் மிருதுவான பஞ்சணையில் அனாதைப் பெண் மாதவி படுத்து உறங்குவதா?...இவருக்குப் புத்தியே கிடையாது... யாரை எங்கே வைக்கணும் என்ற யோசனையே கிடையாது...'' உள்ளூர வெகுண்டாள்.

''சன்னல் ஓரமாகத் தரையில் பாயை விரிச்சு நீ படுத்துக்கோ. பக்கத்திலே காதுக்கிட்டே குரட்டை விட்டால் பரிமளாவுக்குப் பிடிக்காது. தெரியும் இல்லையா?'' எச்சரித்தாள் தங்கம்மாள்.

மாதவிக்குப் புரிந்தது. அவள் அந்த வீட்டில் சம்பளம் இல்லாது அமர்த்தப்பட்டு இருக்கும் வேலைக்காரி. எஜமானிக்குச் சமமாக சலுகைகளை எதிர்பார்க்க முடியுமா?...

காலடி ஓசை அருகில் கேட்டது-

''மாதவி!...என் கால்களை சித்த பிடிச்சுவிடு. ஒரே வலி'' கூப்பிட்டாள் தங்கம்.

இருட்டில் மெல்ல தடவிக்கொண்டு மாதவி அருகில்
வந்து உட்கார்ந்தாள்.
தங்கம்மாள் கட்டிலைவிட்டு, தன் கனத்த சரீரத்தை
மேசைக் தரைமீது கிடந்திருந்தாள். மற்ற நாளாக
இருந்தால் மாதவிக்கு அந்த உத்தரவு மிக்க அலுப்பைக்
கொடுத்திருக்கும். ஆனால் அன்று அவள் மனதில் கட்டுக்
கொள்ளாத மகிழ்ச்சி.

''அப்படித்தான்! அப்பா! நல்லா அமுக்கிப் பிடி!
பெருமூச்சு விட்டாள் தங்கம்.

தூண்கள் போன்ற அந்தக் கால்களைப் பிடித்துவிட்டுக்
கொண்டிருந்த மாதவியின் பார்வை சன்னல் வழியே
வெளியே வானத்தின் மீது படிந்தது.

பல உருவங்களாக நகர்ந்த மேகக் கூட்டத்தின் ஊடே
கண் சிமிட்டிய விண்மீன்களைப் பார்த்து அவள் தனக்
குள்ளே புன்னகைத்துக் கொண்டாள்.

அன்று மாலை வந்துவிட்டுப் போன அந்த வாலிபன்
அவளது சிந்தனை முழுவதிலும் நிறைந்து விட்டிருந்தான்.

''சிண்டிரெல்லா...''

விளையாட்டாக அவன் சொன்னபோது அவள் நெஞ்சு
எப்படி படபடத்தது? மூச்சே நின்றுவிடும்போன்ற பரவசம்!

சில வினாடிகளில் சமாளித்துக்கொண்டு உள்ளே சென்
றாள். சாப்பாட்டு அறையிலிருந்த 'வாஷ் பேஸி'னில்
முகத்தை அவசரமாகக் கழுவி முந்தானையால் துடைத்துக்
கொண்டாள். கூந்தலை விரல்களால் கோதி சரிப்படுத்திக்
கொண்டு பூஜையறையில் இருந்த குங்குமச் சிமிழில்
விரலைத் தொட்டு பளிச் சென்று பொட்டு வைத்துக்
கொண்டாள். அருகில் இருந்த அலமாரியைத் திறந்து
வெள்ளித் தம்ளரைக் கையில் எடுக்கும்போது அதில் பதிந்
திருந்த கண்ணாடியில் ஒருமுறை பார்த்து கசங்கிக் கிழிந்த
சேலையைத் தட்டி சீராக்கிக் கொண்டாள். பிரிட்ஜைத்
திறந்து குளிர்ந்த நீர் கொண்ட பாட்டிலில் இருந்து தண்
ணீரை தம்ளரில் நிரப்பினாள். வேகமாக அதை எடுத்துக்
கொண்டு வாயிலுக்கு வந்தாள்.



''ஐஸ் வாட்டரா? அத்தை பிரிட்ஜை பூட்டி விட்டுப்
போகவில்லையா? ஆச்சரியம்...!'' அவன் வேடிக்கையாகக்
கேட்டான். குறும்பாகச் சிரித்தான்.

தம்ளரை சன்னல் விளிம்பின்மீது வைத்துவிட்டு அவள்
நிமிர்ந்தாள்.

''எங்கள் அத்தையைப் பற்றி எனக்கு நீ சொல்லவேண்
டாம். அவுங்க எப்படிப்பட்ட கருமின்னு எனக்குத்தெரியும்.
ஆரம்பத்தில் பரிமளா சின்னக் குழந்தையாக இருந்தபோது
பட்டணத்தில் படிக்க எண்ணி மாமா வீட்டில் தங்க வந்த
வன் நான். சில மாதங்களிலேயே ஊருக்குத் திரும்பிவிட்
டேன். இல்லாவிட்டால், நான் இருந்த இடம் புல் முளைத்
துப் போயிருக்கும். எலும்பும் தோலுமாகத் திரும்பிய
என்னை மறுபடியும் ஆளாக்க எங்கம்மா பட்டபாடு...''
பகபகவென்று அவன் சிரித்தான்.

அவன் பேச்சு- சிரிப்பு- அந்தப் பார்வை எல்லாமே
அவளுக்கு இனித்தன!

ஆனால், முன்பின் தெரியாதவனுடன் இப்படிப் பேசிக்
கொண்டு நிற்பது சரியா... பெண்மையின் உறுத்தல்...

''அம்மா வரதுக்கு ராத்திரி ரொம்ப நேரமாகும்..''

''இரவு சாப்பாட்டுக்கு இங்கேயே முகாம் போட்டு
விடுவேன்னு பயப்படுறியா? அத்தை புறப்படுமுன் சாமான்
அறையைப் பூட்டிவிட்டுப் போயிருப்பாங்கன்னு எனக்குத்
தெரியும். உனக்கு சாப்பிட மீதி என்ன வச்சிருப்பாங்க என்
றும் என்னால் ஜோசியம் சொல்ல முடியும்... மாமா செல்வ
நிலையிலே ரொம்ப அபிவிருத்தி அடைஞ்சிருந்தாலும் அத்
தையின் மனம் அப்படியே குறுகிய நிலையிலேதான் இருக்கு
என்பதும் தெரியும்...'' தண்ணீரைக் குடித்துக்கொண்டு
குறும்புத்தனம் கொட்டிய விழிகளால் அவளை ஊடுருவிப்
பார்த்தபடி அவன் நின்றான்.

கன்னங்கள் சிவக்க— நெஞ்சு பதற அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனமாக நின்றாள்.

தம்ளரை அவளிடம் கொடுத்தான். கைகுட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். கால்களில் செருப்புகளைத் திணித்துக்கொண்டு மெல்ல அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''என் தாயார் கைலாசம் அவர்களுக்கு தூரத்து உறவு-சகோதரி முறை. ஆமாம் நீ யார்?...''

பட்டுபோல் மென்மையாக உடலைத் தழுவிய அந்தப் பார்வை அவளை மெய்சிலிர்க்கச் செய்தது.

''நானும் ஒரு வழியில் உறவுதான்... உறவு என்பதை விட என் தந்தை ஐயாவுக்கு நெருங்கிய நண்பர் என்பது பொருந்தும்..''

தடுமாறினாள் அவள். ஆதரவுக்காகக் கதவை மெல்லப் பிடித்துக் கொண்டாள். முதல் முதலாக ஓர் அழகான வாலிபனிடம் சரிக்குச்சமமாக நின்று பேசிய அந்தப் புதிய அனுபவமும் அவளை நிலைகுலையச் செய்தது.

''நீ யார்னு இப்போது தெரிஞ்சு போச்சு...வரகனூர் பள்ளி ஆசிரியர் கோதண்டம் அவர்கள் மகள்தானே? அம்மா சொல்லிக்கொண்டு இருந்தாங்க...''

தன்னைப்பற்றி அவர்கள் வீட்டிலே பேசியிருக்கிறார்களே? மெத்த வியப்பு அவளுக்கு!

''உன் பெயரை நான் தெரிஞ்சிக்கலாமா?...'' அவன் கண்களிலே கனிவுப் புன்னகை.

''மாதவி!'' - சொல்லி முடிக்குமுன் நெஞ்சே வாயில் வந்துவிடும் போன்ற பதட்டம் அவளுக்கு.

''உன் தந்தைக்குக் குழலூதும் கோபாலன் மீது பக்தியோ... இந்தப் பெயர்...'' விளையாட்டாகக் கேட்டபடி திரும்பிப் பார்த்தான்.



''தமிழ்மீது அவருக்கு ரொம்ப ஈடுபாடு. அவருக்கு மிகவும் பிடித்தமான சிலப்பதிகாரத்தைஆராய்ந்துகொண்டு இருக்கையில் நான் பிறந்தேனாம். அதனால் மாதவி என்று பெயர் வைத்தாராம்'' வலிய அவள் கூறிய விளக்கத்தைக் கேட்டு அவன் சட்டென்று நின்றான்.

''அப்படியானால் உனக்கு ஆடத் தெரியுமென்று சொல்...''

வெட்கத்திலே ரத்தமாக அவள் முகம் சிவந்து போனாள்.

''பாடத்தான் கொஞ்சம்தெரியும்...'' அவனுடன்பேசிக் கொண்டே இருக்கவேண்டும் போன்ற ஆவல்...

''மாமாவைப் பின்னொரு சமயம் வந்து பார்த்துக் கொள்கிறேன். நன்றி...'' படிகளில் வேகமாக இறங்கினான் அவன்.

அப்பொழுதுதான் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

''இந்தாங்க... உங்களைத்தானே! உங்கள் பெயரைச் சொல்லாமல் போகிறீங்களே...'' உரத்த குரலில் துணிவுடன் கூப்பிட்டாள். திரும்பி அவளை மோகனமாகப் பார்த்து ''என் பெயர் கோவலன்...'' என்று முறுவலித்தான்.

தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு. தாங்கமுடியாத வெட்கத்தில் தலையைக் குனிந்து கொண்டாள்.

''மன்னிக்கனும். விளையாட்டுக்குச் சொன்னேன். சந்திரசேகரன் என்பது அம்மா வைத்த பெயர், சந்திரன் என்று கல்லூரியில் சுருக்கிக்கொண்டு விட்டேன். நான் வந்திருப்பது தெரிந்தால் அத்தை அப்படியொன்றும் மகிழ்ந்து விடமாட்டாங்க. முக்கியமாக நான் மாமாவைத்தான் பார்க்க வந்தேன்...வரட்டுமா...'' அவன் புறப்பட்டான்.

தோட்டத்தைத் தாண்டி அவன் வெளியே சென்று வெகுநேரம் வரை அவள் பிரமித்துப்போய் வாயிலிலேயே நின்று கொண்டு இருந்தாள்......

மென்மையாக- இதமாக் மாதவி கால்களைப் பிடித்து விட்ட இன்பத்திலே தங்கம்மாளுக்குத் தூக்கம் வந்துவிட்டது. சில வினாடிகளில் லேசான குறட்டை கிளம்பியது...

மாதவி மெல்ல எழுந்தாள். உறக்கம் கலைந்து தங்கம்மாள் விழித்துக் கொண்டாள்.

''ஆமாம், அந்தப் பயல் சாயங்காலம் வந்தானே! எதுக்கு வந்தானாப்? வேலையத்தவன்... தூரத்து உறவைச் சொல்லிக்கொண்டு வந்து விட்டான். இவர் சொன்னால் கேட்கிறதே கிடையாது. இவங்க சொந்தக்காரங்க என்று வந்து 'தின்னு' அடி நாளிலே இந்தக் குடும்பத்தை அழிச்சிட்டாங்க. நான் மட்டும் இல்லாட்டி உங்க ஐயா திருவோடு தூக்க வேண்டியதுதான். ஆமாம், அவனுக்குக் காப்பி கீப்பி குடுத்தியா?...''

''இல்லை. குடிக்கத் தண்ணீர் கேட்டார். கொடுத்தேன்...'' கீழே வைத்திருந்த பாயை எடுத்துக்கொண்டு மெல்ல நகர முயன்றாள், மாதவி.

''கந்த வாயரட்டல் பேர்வழி. அவன் முகரக்கட்டையைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது. சரி போய்ப்படு...'' உத்தரவிட்டுக் கண்களை மூடிக்கொண்டாள் தங்கம்.

பாயைத் தரையில் விரித்துத் தலையைச் சாய்த்தாள் மாதவி.

''மாதவி!''

பரிமளாவின் மெல்லிய குரல் கட்டிலிலிருந்து எழுந்தது. ''ம்!...'' பிடி கொடுக்காது முனங்கினாள், மாதவி.



இதுசமயம் அவளுக்கு யாருடனும் பேசவே பிடிக்கவில்லை. தன் உள்ளத்திலே பொங்கிப் புரண்ட இன்பமான சிந்தனைகளைத் தனிமையிலே அசைபோட்டு மகிழ அவள் விரும்பினாள்.

''அந்த அமராவதி மகனை, இதுவரை போட்டோவில் தானே பார்த்திருக்கிறோம். இன்னிக்கு நேரேயே பார்த்து விட்டோம்...''

''ம்...ஓங்கி உசரமாக கரேலென்று... காட்டாளாட்டமாக இருக்கான். எனக்கு அவனைக் கொஞ்சங்கூடப் பிடிக்கலை. தூங்கிட்டியா?...'' பரிமளா அதட்டினாள். பதில் இல்லை...மாதவி தன் எண்ணங்களுக்குள்ளே மூழ்கி, மெய்மறந்து விட்டிருந்தாள்.

'என் பெயர் கோவலன்!...' எத்தனை வேடிக்கையாகப் பேசுகிறார். ஏன் அப்படிப் பார்த்தார்...?

பரிமளாவுக்கு ரங்கதுரையைப் பிடிக்காவிட்டால் இவளுக்கு என்ன? இவள் வரைக்கும் சந்திரசேகரனை மிகவும் பிடித்து விட்டிருந்தது...

கண்கள் பனிக்க இன்பப் பெருமூச்சுடன் சன்னல் வழியே வானத்தைப் பார்த்தபடி தனக்குள்ளே புன்னகைத்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டாள் மாதவி.

## 3

''கெட்டும் பட்டணம் போ'' என்பதை மெய்யாகவே கடைப்பிடித்தவன் சிவகுரு!

பள்ளியில் ஒழுங்காகப் படிக்காது, கெட்டு, இளம்பருவத்திலேயே குட்டிச்சுவராகிக் கொண்டிருந்த தன் மகனை அவன் தாய் ''டே சிவகுரு! நீ பட்டணம் போடா! அங்கே நம்ப அண்ணாச்சி இருக்கிறார். பெரிய கடை வச்ச

வியாபாரம் பண்றார். உனக்கு நாலு காசு சம்பாதிக்கிற வழி கத்துக் கொடுப்பார்'' என்று உபதேசித்து அனுப்பினான்.

அப்போது அவனுக்கு, வயது பதினெட்டு. மணலில் பிடுங்கி எடுத்த வள்ளிக் கிழங்கான உடல். ஆனால் கபடமேயில்லாத உள்ளம். ஒரு கத்தை இலை—தார் வாழைப்பழம் சகிதம் அவன் புறப்பட்டான். எப்படியோ விசாரித்துக் கொண்டு மாமா வீட்டைத் தேடிக் கண்டு பிடித்து வந்து விட்டான்.

அலுவலக அறையில் வாயில் பக்கம் வேலையாக இருந்தார் கைலாசம். தான் கொண்டு வந்த காணிக்கைகளை ஒருபுறம் வைத்துவிட்டு, வேரற்ற மரம்போல் தரையில் விழுந்து, அவர் கால்களைத் தொட்டுக் கும்பிட்டான்.

திடுக்கிட்டுப் போனார் அவர். ' எழுந்திருப்பா, யார் நீ?''—அதட்டினார்.

கட்டுக் குடுமியும், காதில் சிவப்பு கடுக்கன்களும், நெற்றியில் பட்டைத் திருநீறுமாக நின்ற பையனை எங்கோ பார்த்த ஞாபகம் அவருக்கு.

''நான்தான் சின்னக்கண்ணு பேத்தி மகன் சிவகுரு. அம்மா உங்ககிட்ட வேலை செய்ய அனுப்பினாங்க.''

அனுபவம், படிப்பு இரண்டுமே இல்லாத அவனுக்கு என்ன வேலை கொடுப்பது? ஆனாலும், பார்த்த அளவில் அவன்மீது இரக்கம். 'தங்கம் கூப்பிட்ட குரலுக்கு வீட்டில் வளைய வந்துகொண்டு இருக்கட்டும். அப்படியும் ஓர் ஆள் தேவைதானே' என்ற நினைவில் அவனை அவர் அங்கேயே தங்க அனுமதித்தார்.

நாளடைவில் சிவகுருவின் தோற்றத்திலே பல மாறுதல்கள். காதுக் கடுக்கன்கள் பெட்டிக்குள் மறைந்தன. கட்டுச் குடுமி கிராப் ஆகியது. வெள்ளைச் சட்டையும், சராயும் காலில் செருப்புகளுமாக அவன் கடைத் தெருவுக்குப் போய் வந்தான்.



தோற்றத்தில்தான் மாறுதல்—வேலையில் அதே நிலைதான். தங்கம்மாள் ஏவலுக்கு அடிபணிந்த உறவினன்; வேலைக்காரன் என நிச்சயிக்க முடியாத ஒரு திரிசங்கு சொர்க்கம்.

பட்டணத்தில் இருக்க சந்து பொந்துகள்—அக்கப்போர்—கடை கண்ணிகள் யாவும் அவனுக்கு அத்துபடி. ஆனால் சுதந்திரமாக வாழ ஒரு வகையும் தெரிந்து கொண்டிருக்கவில்லை.

கிராமத்திற்குத் திரும்பவும் வழியிருக்கவில்லை. ஏனென்றால், பட்டணத்துக்கு மகனை அனுப்பிவிட்டு, அந்த நிம்மதியில் அவன் அன்னை சில மாதங்களிலேயே பரலோகம் போய் விட்டாள்.

வருங்காலம், நாளை இவைகளைப்பற்றி சிவகுரு கவலைப்பட்டதில்லை. அதனால் தன் நிலையைப் பற்றி என்றுமே வருந்தியதில்லை. ஆனால் அவனுக்கு ஒரே ஒரு குறை உண்டு. தங்கம்மாள் இன்னமும் அவனை ஒரு பொடிப் பயல் என்று துச்சமாகப் பேசுகிறாளே! அது சரியா?... இப்போது அவன் வாட்டசாட்டமாக வளர்ந்து நிற்கும் ஓர் ஆண்பிள்ளையாயிற்றே?

சைக்கிளைத் தள்ளிக்கொண்டு தோட்டத்தை விட்டு வெளியே வந்தான் சிவகுரு. தங்கம்மாள் கொடுத்த பலசரக்குப் பட்டியலும், பணமும் பத்திரமாக உள்ளனவா என்று சட்டைப்பையை ஒருமுறை தடவிப் பார்த்துக்கொண்டான், வண்டியில் ஏறினான்.

கொஞ்ச தூரம் சென்றதும் நடைபாதை ஓரமாக மாதவி மெல்ல எங்கேயோ போய்க்கொண்டு இருப்பதைப் பார்த்தான். சட்டென்று கீழே இறங்கி விட்டான்.

''தங்கச்சி!''

திரும்பிப் பார்த்த மாதவி திகைப்புடன் நின்றாள்.

''கடைக்குப் புறப்பட்டீங்களா, அண்ணா?'' புன்னகைத்தாள் அவள்.

''ஆமாம்; பெரிய பட்டியல். ஒவ்வொரு சாமானையும் ஒவ்வொரு கடையிலே அவங்க சொல்றபடி தேடிப்பொறுக்கி வாங்கி வரணும். திரும்பி வந்தா 'எங்கேடா ஊரைச் சுத்திக் கிட்டு இருந்தே...'' அப்படின்னு கத்துவாங்க. எல்லாம் தெரிஞ்ச சங்கதிதான்...'' அலுப்புடன் பெருமூச்செறிந்தான்.

மாதவி அமைதியாக நின்றாள். தங்கம்மாளின் குணம் இருவருக்கும் தெரிந்த சங்கதி. பேசிப்பயன்?

''ஆமாம்! இருட்டப் போகுது. நீ எங்கே கிளம்பிட்டே?'' உரிமையுடன் கேட்டான் அவன்.

மாதவியின் நெஞ்சு பயத்திலே படபடத்தது. ''சீதாதேவி வைத்தியசாலையில் இருந்து கரிசிலாங்கண்ணித் தைலம் வாங்கிவர அனுப்பிச்சாங்க. அப்படியே பக்கத்தில் இருக்கிற லைப்ரரியில் இருந்து கதைப்புத்தகங்களை மாற்றி எடுத்து வரும்படி பரிமளா சொல்லிச்சு.''

காலம் கெட்டுக் கிடக்கு. நீ முன்னேபோல சின்னப் பிள்ளையில்லை. இப்படி ஒரு நாளைப்போல அம்மா உன்னை வேலைக்கு வெளியே அனுப்பறது நல்லா இல்லே. என்கிட்டே சொன்னா வாங்கியாந்திருப்பேனே, சரி போகட்டும். நான் வைத்திய சாலைவரை கூடத் துணைக்கு வரேன். மருந்தை வாங்கிட்டு நேரே வீட்டுக்குப் போ'' எச்சரித்தான் பரிவுடன்.

மாதவி நடுங்கிப் போனாள். குற்ற உணர்வில் அவள் உடல் வியர்த்து விட்டது.

வைத்தியசாலை வரை அவன் கூட வருகிறேன் என்கிறானே? அங்கே அவரைப் பார்த்துவிட்டால்? அச்சத்துடன் ஊமையாக அவள் நடந்தாள்.

சைக்கிளைத் தள்ளிக்கொண்டு அவன்கூட வந்தான்.



இருவர் மனதிலும் குழப்பம்.

'இன்னிக்கு அண்ணன் ஏன் இப்படி பிடிவாதமாகத் துணைக்கு வரப் புறப்பட்டிருக்கிறார்?' அவள் நெஞ்சம் கேட்டது.

''தங்கச்சி இப்போவெல்லாம் ரொம்ப மாறிவிட்டது' அவன் மனம் பதில் சொன்னது.

உண்மையில் மாதவி சில நாளாக மிகவும் மாறிவிட்டிருந்தாள். சந்திரனைச் சந்தித்த தினத்தில் இருந்து அவள் உள்ளம் மாறியதுபோல், தோற்றத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டன. முன் போல் அழுக்கடைந்த புடவையும் களையிழந்த முகமும், அலட்சியக் கூந்தலுமாக அவள் இருக்க விரும்பவில்லை. பரிமளாவைப் போல் பகட்டாக அவள் உடுத்த முடியாது என்றாலும், தன் தோற்றத்திலே அதிகம் அக்கறை எடுத்துக் கொண்டாள். காலையிலும் மாலையிலும் தலையை வாரிப் பின்னி பூ முடித்துக் கொண்டாள் முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு லேசாகப் பவுடரைப் பூசி, பொட்டு வைத்துக் கொண்டாள். கண்களில் மை தீட்டி அழகு பார்த்தாள். சோப்புப்போட்டு துவைத்த சுத்தமான புடவையைத்தான் அணிந்து கொண்டாள்.

''உனக்கென்ன கொள்ளை வந்துவிட்டது! சதா கண்ணாடி முன்னாலே நிக்கிறியே! சும்மா பார்த்துக்கிட்டே இருந்தால் பரிமளாவாட்டம் மாறி விடுவியா?'' ஒருநாள் தங்கம்மாள் கேசபமாகப் பேசிவிட்டாள்.

ஆனால், மாதவி அதைப் பாராட்டவில்லை. அவளுக்கு அதைப்பற்றி நினைக்கவும் பொழுது இருக்கவில்லை. நாள் முழுவதும் அவள் உள்ளத்து சிந்தனைகள்-கனவுகள் எல்லாம் வேறு ஒரு இன்பமான உலகில் சுழன்று கொண்டிருந்தன.

கடைத் தெருவிலும்- நூல் நிலையத்திலும்- வைத்திய சாலையிலும் அவளைத் தவறாது சந்திரன் சந்தித்துக்

கொண்டிருந்தான். இதெல்லாம் முன்கூட்டியே வீட்டில் உள்ளவர்கள் யாருக்குமே தெரியாது செய்த ஏற்பாடு. தங்கம்மா வீட்டு சமையல் அறையிலே கிடந்த அவனை அறிந்தவர்கள் மிகவும் சிலர். வெளியூரில் படித்துவிட்டு நகரத்திற்கு வேலைக்கு வந்திருந்த அவனை அறிந்தவர்களும் மிகவும் குறைவு. எனவே, இருவரும் அச்சமின்றி நேரம் போவது தெரியாது தெரு ஓரத்தில் நின்று பேசி மகிழ்வது வழக்கமாகி விட்டிருந்தது.

முதல் முதலில் தங்கம்மாள் வீட்டில் அவனைச் சந்தித்த பின்னர் தொடர்ந்து பலமுறை சந்திரன் அங்கே வரத் தொடங்கினான். ஒரு நாள் தங்கம்மாளின் நலன் விசாரிக்க வந்தான். இன்னொரு நாள் கைலாசத்தை காண வந்தான். பின்னர் ஒருநாள் அவர் அழைத்ததையொட்டிசாப்பிடவந்தான். மறுபடி ஒரு தடவை அம்மா எல்லோரையும் கண்டு போக வந்தான். இப்படி அடிக்கடி ஏதோ ஒரு முகாந்திரத்தை வைத்துக் கொண்டு பங்களாவிற்கு பன்முறை வந்தான். ஒவ்வொரு முறையும் முதல் சந்திப்பிலே பேசியது போல் அவனிடம் மாதவியால் பேச முடியவில்லை. ஆனால் இருவர் கண்களும் ஆயிரமாயிரம் எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டது என்னவோ உண்மை.

பங்களாவுக்கு சற்று தொலைவில் தான் அந்த தர்ம வைத்தியசாலை இருந்தது. ''நெல்லிக்காய் லேகியம் உடம்புக்கு நல்லது'' என்று யாரோ சொல்லி விட்டார்கள். மருந்தும் இனாமாகக் கிடைத்தது. தங்கம்மாள் உடனே மாதவியை அனுப்பி விட்டாள்.

லேகியத்தை வாங்கிக்கொண்டு வைத்தியசாலையின் தோட்டத்திலே ஏதோ யோசனையுடன் நடந்து கொண்டு இருந்தாள், அவள். ஒரு கால் இடறி நின்று விட்டாள். நகம் சிறிது விலகி, கால் கட்டை விரலில் ரத்தம் பெருகிக் கொண்டு வந்தது. விரலில் தொடங்கிய நோவு உச்சிவரை பாய்ந்து உடலைக் குலுக்கவே அவளுக்குக் கண்களில் நீர் தளும்பியது.



''பலமாகப் பட்டுவிட்டதா?''

கனிவுடன் கேட்ட குரல், அவளைத் திடுக்கிடச் செய்தது. நிமிர்ந்து பார்த்தாள்.

சந்திரன் அருகே வந்து நின்று கொண்டிருந்தான்

இவர் எங்கே வந்தார்?...அவள் நினைக்குமுன் அவன் பதில் சொன்னான்.

''அடிக்கடி நீ இந்தப் பக்கம் வருவதை சில நாளாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். உன்னோட பேசவேண்டும் என்ற ஆவல். பங்களாவில் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. அதனால்...'' அன்பு ததும்ப அவன் அவளைப் பார்த்தான்.

மகிழ்ச்சியிலேயே பதறிப் போனாள் மாதவி. காலில் ஏற்பட்ட நோவுகூட இப்பொழுது மாயமாக மறைந்து விட்டது போன்ற பிரமிப்பு.

' அடடா! ரத்தம்!...''

இரக்கத்துடன் கூவிய சந்திரன், பெருகிக்கொண்டு வந்த ரத்தத்தை தனது கைக்குட்டையால் துடைத்தான்.

அவளுக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. ''பரவாயில்லை. இப்போ நின்றுவிடும்'' விருக்கென்று காலை நகர்த்திக் கொண்டாள். நெஞ்சு வெடித்து விடும்போல் இன்ப உணர்வில் துடித்தது.

''நான் இந்தச் சமயத்தில் இன்னிக்கு இங்கே இருப்பேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?'' மெல்லக் கேட்டாள்.

''இருவர் உள்ளம் ஒன்று பட்டால்...செய்திகள் தந்தியிலே தெரிந்து விடாதா...'' கேலியாகச் சிரித்தான்.

அதற்குப் பின்னர் நேரம் போனதே தெரியவில்லை. இனிக்க இனிக்க அவன் பேசினான். பொழுது மறைந்து இருள் பரவி விட்டதைக்கூடப் பாராது அவள் கேட்டுக் கொண்டே நின்றாள்.

இந்தச் சந்திப்பு அன்றோடு முடியவில்லை—ஓர் இனிய நிகழ்ச்சியாக தினமும் தொடர்ந்து கொண்டு வந்தது.

சிந்தித்தபடியே இருவரும் வைத்தியசாலையை அடைந்தனர்.

அவளது வருகைக்காக அங்கே காத்துக்கொண்டிருக்கும் சந்திரனைக் கண்டால், அண்ணன் என்ன நினைப்பார்? அச்சத்தில் மாதவி கூசிப் போனாள். 'உன் நாடகம் அம்பலமாகப் போகிறது?'...மனசாட்சி இடித்துக் கொண்டிருந்தது.

''ஏதேது! அண்ணனும் தங்கையும் சேர்ந்தே வெளியே புறப்பட்டிருக்காப்புல இருக்கே?...'' விசாரித்தபடி சிரித்த முகத்துடன் சந்திரன் முன்னே வந்தான்.

திடீரென்று யோசனை ஒன்று பளிச்சிட்டது. ''ஒரு உபகாரம் செய்வீங்களா, தம்பி? மாதவி அறியாப் பெண். ஊர் நிலவரம் தெரியாம அம்மா இதை அந்தி வேளையில் அனுப்பியிருக்கிறாங்க. எனக்கு சாமான்கள் வாங்க கடைகளுக்குப் போக வேண்டியிருக்கு. நீங்க இருந்துகூட அழைச்சிட்டுப் போய் வீட்டிலே பத்திரமா சேர்த்து விடுங்க...'' என்றான்.

''தெரியும்! நாளைக்கு மாமா வீட்டில் பெரியவிருந்து. அதற்கு சாமான்கள் வாங்க புறப்பட்டிருக்கிறீங்க. கதிரேசன் குடும்பத்தோட வராராம். மாமா என்னையும் சாப்பிட அழைச்சிருக்கிறார்...நானும் நாளைக்கு வருவேன்'' என்று குறிப்பாகக் கூறிவிட்டு மாதவியைப் பார்த்தான் அவன்.

''அப்ப இருங்கோ, வருகிறேன்!'' —விடை பெற்றுக் கொண்டு சைக்கிளில் புறப்பட்டு விட்டான் சிவகுரு.

''அப்பாடி! பெரிய வில்லன் வருகிறானேன்னு பயந்து விட்டேன். உன் அண்ணன் நமது நண்பன்! இனிக் கவலை



இல்லை...'' சிரித்தான் சந்திரன். மாதவியும் மகிழ்ச்சியுடன் முறுவலித்தாள்.

அன்று அவள் வீடு திரும்பும் பொழுது நன்றாக இருட்டி விட்டது. வாயில்வரை துணை வந்த சந்திரனுக்கு அவளை பிரிய மனம் இல்லை. தோட்டத்திற்குள் நுழையுமுன் நூல் நிலையத்தில் இருந்து அவள் எடுத்து வந்த புத்தகத்திற்குள் ஒரு கடிதத்தை வைத்தான்.

''இன்னிக்கு உன்னைச் சந்தித்து நீண்ட நேரம் பேச முடியாவிட்டால் என்ன செய்வதுஎன்று ஒரு கடிதத்தை முன் கூட்டியே எழுதிக்கொண்டு வந்தேன். பொழுது கிடைக்கும் போது அதைப் படிச்சுப் பார்... பதிலை எதிர்பார்க்கிறேன்னு சொல்லத் தேவையில்லை...'' புன்னகைத்து விட்டு தயங்கிய படி பிரிந்து சென்றான்.

புத்தகத்திலிருந்து எடுத்து இடுப்பில் செருகிக்கொண்ட அந்தக் கடிதத்தைப் படிக்க வெகுநேரமாக மாதவிக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இரவு உணவிற்குப் பின்னர் தங்கம், மகளுடன் மாடிக்கு உறங்கப் போய்விட்டாள்.

சிவகுரு வாயில் வராந்தாவிற்குப் படுக்கச் சென்று விட்டான்

கைலாசம் வியாபாரக்கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார். அவர் வர நேரமாகும். இருந்து அவருக்குக் கதவைத் திறந்துவிட அவள் முன்னறையில் தரைமீது உட்கார்ந்திருந்தாள்

அப்போது மெல்லத் துணிவுடன் கடிதத்தை எடுத்து உணர்ச்சியில் நடுங்கிய விரல்களால் மெல்லப் பிரித்துப்படித்தாள்.

''மாதவி! என் அன்பே!

தொடர்ந்து நாம் சந்திப்பதின் பொருள் என்ன என்பதை நீ இதற்குள் புரிந்து கொண்டிருப்பாய் என நம்புகிறேன்.

இந்தச் சந்திப்பு அன்றோடு முடியவில்லை—ஓர் இனிய நிகழ்ச்சியாக தினமும் தொடர்ந்து கொண்டு வந்தது.

சிந்தித்தபடியே இருவரும் வைத்தியசாலையை அடைந்தனர்.

அவனது வருகைக்காக அங்கே காத்துக்கொண்டிருக்கும் சந்திரனைக் கண்டால், அண்ணன் என்ன நினைப்பார்? அச்சத்தில் மாதவி கூசிப் போனாள். 'உன் நாடகம் அம்பலமாகப் போகிறது?'...மனசாட்சி இடித்துக் கொண்டிருந்தது.

''ஏதேது! அண்ணனும் தங்கையும் சேர்ந்தே வெளியே புறப்பட்டிருக்காப்புல இருக்கே?...'' விசாரித்தபடி சிரித்த முகத்துடன் சந்திரன் முன்னே வந்தான்.

திடீரென்று யோசனை ஒன்று பளிச்சிட்டது. ''ஒரு உபகாரம் செய்வீங்களா, தம்பி? மாதவி அறியாப் பெண். ஊர் நிலவரம் தெரியாம அம்மா இதை அந்தி வேளையில் அனுப்பியிருக்கிறாங்க. எனக்கு சாமான்கள் வாங்க கடைகளுக்குப் போக வேண்டியிருக்கு. நீங்க இருந்துகூட அழைச்சிட்டுப் போய் வீட்டிலே பத்திரமா சேர்த்து விடுங்க...'' என்றான்.

''தெரியும்! நாளைக்கு மாமா வீட்டில் பெரியவிருந்து. அதற்கு சாமான்கள் வாங்க புறப்பட்டிருக்கிறீங்க. கதிரேசன் குடும்பத்தோட வராராம். மாமா என்னையும் சாப்பிட அழைஞ்சிருக்கிறார்...நானும் நாளைக்கு வருவேன்'' என்று குறிப்பாகக் கூறிவிட்டு மாதவியைப் பார்த்தான் அவன்.

''அப்ப இருங்கோ, வருகிறேன்!'' —விடை பெற்றுக் கொண்டு சைக்கிளில் புறப்பட்டு விட்டான் சிவகுரு.

''அப்பாடி! பெரிய வில்லன் வருகிறானேன்னு பயந்து விட்டேன். உன் அண்ணன் நமது நண்பன்! இனிக் கவலை



இல்லை...'' சிரித்தான் சந்திரன். மாதவியும் மகிழ்ச்சியுடன் முறுவலித்தாள்.

அன்று அவள் வீடு திரும்பும் பொழுது நன்றாக இருட்டி விட்டது. வாயில்வரை துணை வந்த சந்திரனுக்கு அவளை பிரிய மனம் இல்லை. தோட்டத்திற்குள் நுழையுமுன் நூல் நிலையத்தில் இருந்து அவள் எடுத்து வந்த புத்தகத்திற்குள் ஒரு கடிதத்தை வைத்தான்.

''இன்னிக்கு உன்னைச் சந்தித்து நீண்ட நேரம் பேச முடியாவிட்டால் என்ன செய்வதுஎன்று ஒரு கடிதத்தை முன் கூட்டியே எழுதிக்கொண்டு வந்தேன். பொழுது கிடைக்கும் போது அதைப் படிச்சுப் பார்... பதிலை எதிர்பார்க்கிறேன்னு சொல்லத் தேவையில்லை...'' புன்னகைத்து விட்டு தயங்கிய படி பிரிந்து சென்றான்.

புத்தகத்திலிருந்து எடுத்து இடுப்பில் செருகிக்கொண்ட அந்தக் கடிதத்தைப் படிக்க வெகுநேரமாக மாதவிக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இரவு உணவிற்குப் பின்னர் தங்கம், மகளுடன் மாடிக்கு உறங்கப் போய்விட்டாள்.

சிவகுரு வாயில் வராந்தாவிற்குப் படுக்கச் சென்று விட்டான்

கைலாசம் வியாபாரக்கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார். அவர் வர நேரமாகும். இருந்து அவருக்குக் கதவைத் திறந்துவிட அவள் முன்னறையில் தரைமீது உட்கார்ந்திருந்தாள்

அப்போது மெல்லத் துணிவுடன் கடிதத்தை எடுத்து உணர்ச்சியில் நடுங்கிய விரல்களால் மெல்லப் பிரித்துப்படித்தாள்.

''மாதவி! என் அன்பே!

தொடர்ந்து நாம் சந்திப்பதின் பொருள் என்ன என்பதை நீ இதற்குள் புரிந்து கொண்டிருப்பாய் என நம்புகிறேன்.

நேரில் சொல்ல ஆசைப்பட்டேன். துணிவு இல்லை. அதனால்தான் சொல்ல வந்ததை இதில் சுருக்கமாக எழுதி விட்டிருக்கிறேன்.

முதல் நாள் உன்னை மாமன் வீட்டில் சந்தித்ததில் இருந்து என் மனம் என் வச்மே இல்லை.

ஆமாம். மாதவி நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன். விரும்புகிறேன்.

உன் மனம் அப்படித்தான் என்பது உன் முகத்தைப் பார்த்த அளவிலேயே எனக்குப் புரிகிறது. தவறுஇல்லையே!

போன வாரம் மாமாவைச் சந்திக்க நான் வந்தபோது அவர் பூஜையறையில் இருந்தார். வராந்தாவில் நின்றபடி நான் அவருக்காகக் காத்திருந்தேன். அதுசமயம் உள்ளே யிருந்து வந்த பாடல் என்னை மெய்மறக்கச் செய்தது.

"தேமினிய குயிலே கேட்டியோ எங்கள் பெருமான்!"

உனக்கு எத்தனை இனிய குரல்! தமிழ், இசை இரண்டி லும் உனக்கு என்னைப்போல் ஈடுபாடு என்பதை அறிந்த நான் கொண்ட மகிழ்ச்சி சொல்லத் தரமல்ல.

அப்பொழுதே ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். அந்த அறையில் குடிகொண்டிருந்த ஆண்டவன் என் எண்ணத் திற்கு சாட்சி. மாதவிதான் என் வருங்கால மனைவி என்பது என் முடிவு.

நீ மனமுருகப் பாட பரவசத்துடன் மாமா கேட்டுக் கொண்டு பூஜையறையில் அமர்ந்திருந்தாரே, அதே போல் ஒருநாள் நமது வீட்டில்- மிகச் சிறிய நமது வீட்டில், நிறைந்த உள்ளத்தோடு நாம் இருவரும் சேர்ந்து இசை பாடுவது போன்று ஒரு இன்பக் கனவு என் உள்ளத்தை நிறைத்துக் கொண்டு நின்றது.

நீ என் மாதவி- நான் உன் கோவலன். மேலே என்ன சொல்ல?



இனி சொல்ல வேண்டியவள், நீ.

அன்பன்,
சந்திரன்'

கடிதத்தைப் பன்முறை வாசித்தான். உள்ளத்திலே பொங்கிப் புரண்ட உணர்ச்சி கண்களைப்பனிக்கச்செய்தது.

கன்னத்தின் மீது உருண்டு கைமேல் ஒரு துளி கண்ணீர் விழுந்தது.

அதற்குத்தான் எத்தனை குளிர்ச்சி!

அது ஆனந்தக் கண்ணீர், அதற்கு வெப்பம் ஏது?

# 4

அன்று அவர்கள் வீட்டில் கதிரேசன் குடும்பத் தாருக்குப் பெரிய விருந்து.

அதில் கலந்து கொள்ளச் சந்திரனையும் கைலாசம் அழைத்து இருந்தார்.

விருந்து தயாரிப்பின்பொறுப்பு முழுவதும் மாதவியிடம் விடப்பட்டது. சந்திரன் வரப்போகிறான் என்ற இனிய எண்ணத்தில் அவளுக்கு உடல் அலுப்பே தெரியவில்லை. அதிகமான அக்கரையுடன் மிகவும் சுவையாகச் சமைத்து இருந்தாள்.

சாப்பாட்டு அறை மேஜைமீது இலைகளைப் பரப்பி நடுவில் வெள்ளிக் கூஜாவையும் தம்ளர்களையும் வைத்து, தங்கம் தயார் செய்தாள். எல்லோரும் ஒருங்கேஉட்கார்ந்து உணவு உட்கொள்வது என்று ஏற்பாடு.

மாதவிதான் எல்லோருக்கும் பரிமாறினாள். முன் கூட்டியே தங்கம்மாள் எச்சரித்திருந்தபடி- அவள் வேலை முடிந்ததும் முகம் கழுவி- பொட்டிட்டு, சுத்தமான புட வையை உடுத்திக் கொண்டிருந்தாள்.

பரிமளாவைப் போல் அவள் பேரழகியல்லா நிறத்தி லும் மட்டந்தான். என்றாலும் அவளுடைய கனவுக் கண் களும், களை பொருந்தியமுகமும் அமராவதியைக் கவர்ந்து விட்டன.

"நீயாம்மா சமைச்சே? ரொம்பக் கெட்டிக்காரியாக இருக்கியே!"-சொல்லிவிட்டு அவள் முகத்தை ஆவலுடன் பார்த்தாள், அமராவதி.

தங்கம்மாளுக்கு இதைக் கேட்கவே பிடிக்கவில்லை. "எல்லாம் நான் சொல்லிக் கொடுத்துப் பழக்கப்படுத்தி யதுதான். இன்னும் பொறுப்பா இருந்தா எத்தனையோ கத்துக்கலாம். ரொம்ப விளையாட்டுப் புத்தி..." மட்டந் தட்டும் வகையில் தங்கம் முணுமுணுத்தாள்.

மாங்காய் பச்சடியைச் சுவைத்து விழுங்கிய கைலாசத் தால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. "மாதவி வீட்டு வேலைகளில் ரொம்பக் கெட்டிக்காரி. நன்றாகச் சமைப்பாள். நன்றாகப் பாடுவாள்..."

"அப்படியா! சாப்பாட்டுக்குப் பிறகு மாதவியின் பாட்டுக் கச்சேரின்னு சொல்லுங்கோ..." உற்சாகத்துடன் சிரித்தார் கதி-ரசன்.

மூக்கும் முகமும் சிவக்க, நெஞ்சு பதற நின்ற மாதவி திரும்பியபோது தன்னையே விழுங்கி விடுகிறவன் போல் சந்திரன் பார்த்துக்கொண்டு இருப்பதைக் கண்டு திடுக்கிட் டுப் போனாள்.

"கொஞ்சம் மோர்க் குழம்பு..." என்று அவன் கேட்ட போது பரிமாறிய அவள்கை உணர்ச்சி வசத்தில்நடுங்கியது.

உள்ளத்தில் பொங்கிய உவகையில் நெஞ்சே வெடித்து விடும் போன்ற வியப்பு...

சாப்பாட்டிற்குப் பின்னர் எல்லோரும் பின்கட்டில் இருந்த பெரிய கூடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டனர்.



வாசனைப் பாக்கு வெற்றிலையடங்கிய தாம்பூலத் தட்டை நடுவில் இருந்த மேஜைமீது மாதவி கொண்டுவந்து வைத்தாள்.

வெள்ளிக் கூஜாவில் நீரை நிறைத்து தம்ளர்களுடன் எடுத்து வந்து மேஜைமீது வைத்தாள்.

திரும்பிப் போக முனைந்த அவளை அமராவதி விட வில்லை.

"நீ பாடறதைக் கேட்க நாங்கள் எல்லோரும் ஆவலா காத்திருக்கிறோம். எங்க ஓடறே?" அவள் கையைப் பரி வுடன் பிடித்து இழுத்து தன் அருகில் ஆசனத்தில் அமர்த்திக் கொண்டாள்.

தங்கம்மாளுக்கு தாங்கமாட்டாத எரிச்சல்.

"சுருதிப் பெட்டியை எடுத்துக்கொண்டு வந்து வச்சு இரண்டு பாட்டுப் பாடும்மா" கைலாசம் உத்தரவிட்டார்.

தங்கம்மாளின் முகத்தைப் பார்க்கக்கூட மாதவிக்கு அச்சமாக இருந்தது.

விருந்தினர் போன பின்பு எத்தகைய மண்டகப்படி கிடைக்கும் என்பது அவளுக்குத் தெரியும்.

ஆனாலும் ஐயாவின் வேண்டுகோளைத் தட்ட முடி யாதே.

சுருதிப் பெட்டியுடன் உட்கார்ந்தாள்.

சுருதியுடன் இணைந்து இழைந்து வண்டுபோல் சுழன்ற அந்த குரலின் இனிமை, ஒவ்வொருவரின் மனதையும் இதமாகத் தொட்டது. கதிரேசன் மெய் மறந்து போனார். அவருக்குப் பிடித்தமான அருட்பாவில் இருந்தும், தேவாரம் திருவாசகத்தில் இருந்தும் அவள் இழைந்து உள்ளம் கசிந்து உருகிப் பாடினாள்.

காதுகள்—கழுத்து—கைகள் எங்கும் வைரங்கள் மின்ன கரும்பச்சை காஞ்சிபுரச் சேலை உடலைத் தழுவி நிற்க,

கொடி போல் இருக்கையில் சாய்ந்து கொண்டிருந்த பரிமளாவையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் ரங்க துரை. சிறிதுபொழுதில் அவனைக்கூட மாதவியின் பாடல் ஈர்த்துக்கொண்டு விட்டது. இருக்கையில் நிமிர்ந்து உட் கார்ந்து கொண்டு, பாட்டுக்கேற்றபடி தாளம் போட்டுக் கொண்டு அவன் ரசிக்கத் தொடங்கினான்.

தங்கம்மாளால் சகிக்க முடியவில்லை. 'பணத்தைக் கொட்டி இந்த பரிமளாவிற்கு வீணை கத்துவச்சு என்ன பயன்? பளிச்சென்று இரண்டு பாட்டை வீணையில் வாசிக் கத் தெரியாமல், கல்லுப்பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருக் கிறாளே கர்மம்!' தனக்குள்ளே எண்ணிப் புழுங்கினாள். எரித்து விடுகிறவள்போல் மாதவியைக் கண்களால் உருட்டி விழித்தாள்.

பாட்டு முடிந்தது.

எல்லோரும் மகிழ்ச்சியுடன் கையைத் தட்டினர்— மாதவியைப் பாராட்டினர்.

கைலாசத்திற்கு உற்சாகம் பிடிபடவில்லை. அவர் மனதில் திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது. சந்திரனின் பக்கம் திரும்பினார். "ஏன் தம்பி! நீ கூட நன்றாகப் பாடுவியே. நான் நிறையக் கேட்டிருக்கிறேன். நீயும் ரெண்டு பாட்டுப் பாடேன்" என்றார்.

அவ்வளவுதான், அமராவதியும் கதிரேசனும் அவனைப் பிடித்துக்கொண்டு விட்டனர். சந்திரன் மறுக்க முடியாமல் எழுந்தான்.

மாதவிக்கு அருகே சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்ட அவனைக் கண்டதும் தங்கம்மாளுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. 'பெரிய பாகவதர்னு நினைப்பு. காவாலிப் பயல். இவனுக்கென்ன பாடத் தெரியும்?...' மனதிற்குள் வெகுண்டாள். மவுனமாக அவனை வெறித் தாள்.



கைலாசத்திற்குப் பிடித்தமான 'மாசில் வீணையும்' எனும் தேவாரத்தை கம்பீரமான குரலில் அவன் பாடினான். கேட்டு மகிழ்ந்த கதிரேசனும், ரங்கதுரையும் கைதட்டிப் பாராட்டினார்கள்.

"எனக்கு ஒரு யோசனை. இந்த இரண்டுபேரும் சேர்ந்து ஒரு பாட்டுப் பாடினால் கேட்க அருமையாக இருக்குமே!" கதிரேசன் உற்சாகத்துடன் சொன்னார்.

"ஆமாம்! ஆமாம்!" என்று ஆர்ப்பரித்தாள் அமராவதி.

திகைப்புடன் மாதவி கைலாசத்தின் முகத்தைப் பார்த் தாள்.

"ஏம்மா கூச்சப்படறே? சந்திரனும் நம்ப வீட்டுப் பிள்ளைதானே... பரவாயில்லை, பாடு" சமாதானப்படுத் தினார் அவர்.

"என்ன பாடுவது?", கண்களால் கேட்டபடி அவளைப் பார்த்தான் சந்திரன்.

"தாமரை பூத்த தடாகத்திலே...தெரியுமில்லையா?" நாணத்துடன் தலையைக் குனிந்துகொண்டு அவள் கேட்டாள்.

"ஓ தெரியுமே - நீ ஆரம்பி..." என்றான்.

சுருதி சேர்த்துக் கொண்டு அவள் தொடங்கினாள்.

"தாமரை பூத்த தடாகத்திலே... செந்தாமரை பூத்த..." என்று குழைந்த அவளது குரலுடன் கம்பீரமாக இழைந்த அவனது குரல், அனைவரையும் மயக்கியது. மெய் மறந்து கேட்டுக்கொண்டு இருந்தனர். பாட்டு முடிந்ததும் கைதட்டல் - பாராட்டுகள்.

"இருவருக்கும் அபாரமான சங்கீத ஞானம்!" வியந்தார் கதிரேசன்.

"இத்தனைக்கும் முறைப்படி இருவரும் சங்கீதம் பயின்றவர்கள் இல்லை. எல்லாம் கற்ற ஞானந்தான்" பூரித்தார் கைலாசம்.

"இந்தப் பெண்ணிற்கு சங்கீதத்திலே நல்லவருங்காலம் இருக்கிறதுன்னு நினைக்கிறேன்' ரங்கதுரை எழுந்திருந்து மாதவியின் அருகில் இருந்த இருக்கை ஒன்றில் உட்கார்ந்து கொண்டான்.

சற்றுமுன் அவளது அழகைக் கண்டு அயர்ந்து விட்டிருந்த அவன், இப்போது குரலைக் கண்டு மயங்கி விட்டதைக் காணத் தங்கம்மாளால் பொறுக்கவே முடியவில்லை

"இப்படி நடக்கும் என்று தெரிந்துதான் முதலிலேயே இந்தப் பெண்ணை வீட்டில் சேர்க்க நான் விரும்பவில்லை. நல்லதுக்கா நரி முட்டையிடும்? இந்தப் பாவிப் பெண் என் மகளுக்கு முதல் எதிரி...' பொறாமையால் துடித்துப் போனாள் அவள்.

இருப்புக் கொள்ளாது எழுந்து நின்றாள் அவள். வந்தவர்களும் நேரமாயிற்று என விடைபெற்றுக் கொண்டு எழுந்தனர்,

"சுந்தரேசன் வேடிக்கையாகச் சொன்னார். "இரண்டு பேருடைய குரலும் நன்றாக இருப்பது போல - வாழ்க்கையிலும் இவங்க ஜோடியாக இணைந்து வாழும்படி வகை செய்துடுங்கோ... ரொம்பப் பொருத்தமான ஜோடி" சிரித்தார் அவர். எல்லோரும் சிரித்தனர்.

குங்குமமாக முகம் சிவக்க - நெஞ்சு பதற - வெட்கத்துடன் சமையல் அறைக்குள் ஓடி மறைந்து கொண்டாள் மாதவி.

கைலாசத்திற்கு அன்று ஒரே உற்சாகம். வெகுநேரம் உறக்கம் வரவில்லை. சந்திரனுடன் நீண்ட நேரம் ஏதோ பேசிக்கொண்டே உட்கார்ந்திருந்தார். சாப்பிட்ட பின்னர் தாம்பூலத் தட்டை எடுக்க வந்த மாதவியைக் கண்டதும் மறுபடியும் அவர் மனதில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது.



"வாம்மா, உட்கார். கடைசியா சந்திரன் புறப்பட்டுப் போகிறதுக்கு முன் ரெண்டு பேரும் சேர்ந்து எனக்காக ஒரு பாட்டுப் பாடுங்க...கேட்க ஆசையாக இருக்கு" பச்சைப் பிள்ளையைப் போல் குழைவாகக் கேட்டார்.

மனதுக்கினியவனுடன் மறுபடியும் பாட ஒரு வாய்ப்பா?... மாதவிக்கும் மகிழ்ச்சிதான்.

"வெண்ணிலாவும் வானும் போல—
வீரனும் யோர் வாளும்போல..."

இருவரும் இணைந்து பாடியதைக் கண்களை மூடிக் கொண்டு கேட்டு அனுபவித்துக் கொண்டிருந்தார்.

அது சமயம் படீர் என்று தலைக்குமேல் ஏதோ வெடிகுண்டு வந்து விழுந்தது போன்ற சத்தம்...

சுவரிலே தொங்கிய நிலைக் கண்ணாடி சுக்கல்சுக்கலாக நொறுங்கிக் கீழே விழுந்து சிதறியது.

கைலாசம் திடுக்கிட்டு எழுந்து நின்றார்.

தங்கம்மாள் பயந்து நடுங்கிப் போனாள்.

பாடுவதைச் சட்டென்று நிறுத்தி விட்டு மாதவியும் சந்திரனும் திகைப்புடன் விழித்தனர்.

"என்ன பாட்டு வேண்டிக் கிடக்கிறது... இரவு முழுவதும் இப்படிக் கத்திக் கொண்டிருந்தா மத்தவங்க தூங்க வேணாமா?"

ஆத்திரத்துடன் கத்திய பரிமளா, கோபமே உருவாக பெண் புலியாக சீறிக்கொண்டு நின்றாள். அவள் கண்களில் நீர் துளிர்த்துக் கொண்டிருந்தது.

மகளை உற்றுப் பார்த்த கைலாசம் ஒன்றும் பேசவில்லை.

நாளை மத்த விஷயங்களைப் பேசலாம். வாசலில் டிரைவர் இருக்கிறான்-முன்னமே சொல்லி வச்சிருக்கிறேன். உன்னைக் கொண்டுவிடச் சொல்" சுருக்கமாக சந்திரனுக்கு விடைகொடுத்து அனுப்பினார்.

அவனும் நிலைமையை ஊகித்துக் கொண்டு வணக்கம் தெரிவித்துவிட்டு வேகமாக வெளியேறி விட்டான்.

அவமானம் தாங்கமாட்டாது மாதவி தலையைக் குனிந்து கொண்டிருந்தாள்.

வாயிற் கதவைத் தாமே தாளிட்டுவிட்டு வந்தார் கைலாசம்.

தங்கத்தின் அருகே நின்று கொண்டிருந்த மகளிடம் நெருங்கினார்.

''நீ என்னன்னு நினைச்சுண்டு கூஜாவைத் தூக்கிப் போட்டு அந்தக் கண்ணாடியை உடைச்சே? சின்னப் பிள்ளையா இருக்கச்சே அது வேணும் இது வேணும்னு அடம் பிடிக்கும் போது கையில் கிடைத்ததை விசிறிப் போடற பழக்கம் உனக்கு உண்டு. தெரியும். இன்னுமா நீ சின்னப் பிள்ளை? வந்தவன் அந்தப் பிள்ளை சந்திரன் உன்னைப் பத்தி என்ன நினைப்பான்? உனக்கு வெட்கமில்லை?'' இடிபோன்ற குரலில் கர்ச்சித்தவண்ணம் மிகவும் அருகில் வந்தார்.

''அவன் என்ன வேணுமானாலும் நினைக்கட்டும். அக்கறையில்லை. அந்த மடையனின் அபிப்பிராயம் எனக்குத் தேவையில்லை...'' ஆத்திரத்துடன் கூச்சலிட்டாள் பரிமளா.

''என்ன சொன்னே...?'' கையை ஓங்கிக்கொண்டு நெருங்கிய கணவனின் கரத்தை தங்கம் வேகமாகப் பற்றிக் கொண்டாள்.

''என்னங்க இது?...'' அழுகை பொங்கியது அவள் குரலில். இடக்கரத்தால் மகளை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

''வாயை மூடு. எதிர்த்துப் பேசுவதை இன்றோடு நிறுத்திக் கொள். இன்னொரு வாட்டி நான் கேட்டால் ரொம்பப் பொல்லாதவனாக இருப்பேன். ஜாக்கிரதை!' மகளை அதட்டி விட்டு மனைவியின் பக்கம் திரும்பினார்.



''எல்லாம் நீ கொடுத்த இடம்- பெண்ணைக் குட்டிச் சுவராக்கி வச்சிருக்கிறே. இதன் பலனை நீதான் பின்னாலே அனுபவிக்கப் போறே...'' கத்தினார்.

தங்கம்மாள் ஒன்றும் பேசவில்லை. விம்மியழுத மகளை மார்புடன் அணைத்துக் கொண்டு குனிந்த தலையுடன் நின்றாள்.

''போதும்! மேலே போங்க எல்லோரும்'' அதட்டி விட்டு ஊஞ்சல்மீது வெறுப்புடன் உட்கார்ந்துகொண்டார்.

வரகனூரில் ஒரு சமயம் பெரும் புயல் வீசியது. மூன்று நாள் விடாதுமழை. ஓவென்று ஊளையிட்ட பேய்க்காற்று. இரண்டும் ஊரை சூரையாடிவிட்டன. மக்களின் ஓலமும் மந்தைகளின் கூக்குரலுமாக இயற்கை கோரக்கூத்தாடியது.

நான்காம் நாள் மேகப் படலத்தைக் கிழித்துக்கொண்டு புறப்பட்ட சூரியனைக் கண்டு மாதவிக்கு ஓரே மகிழ்ச்சி. வாயிலுக்கு ஓடி வந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி?...

கூரை ஓடுகளையும், ஓலைகளையும் வாரி தெரு முழுவதும் இறைந்துவிட்டிருந்த அந்தப் பேய்க் காற்று, அவர்கள் வீட்டுப் புளிய மரத்தை வேரோடு பிடுங்கிக்கொண்டு வந்து வாயிலில் வீசிவிட்டுப் போயிருந்தது. அதைக் கண்டு அவள் மேனி பயத்திலே நடுங்கி விட்டது.

இன்று அதே நடுக்கத்தைத்தான் மாதவி அடைந்தாள்.

சிறு வயதில் அன்று கண்ட புயலுக்குப்பின் ஏற்பட்ட அமைதியைப் போல் அங்கே பெரும் அமைதி நிலவிக்கொண்டிருந்தது.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தின் துடிப்பிற்கு எதிரொலியாக அவளது இதயம் பயத்திலே தாளமிட்டது.

தன் முன் கிடந்த கண்ணாடிச் சுக்கல்களைத் திகைப்புடன் பார்த்த வண்ணம் நின்றாள்.

உடைந்து சுக்கல் துகளாகச் சிதறிக் கிடந்த நிலைக் கண்ணாடி, தரைமீது உருண்டு கிடந்த கூஜா, வெற்றிலைத் தட்டு எல்லாம் அவளுக்கு நடந்து முடிந்த புயலின் அறிகுறிகளாகத் தோன்றின.

எதிரே சப்தமிடாது அசைந்த ஊஞ்சலில் கோபமே உருவாக உட்கார்ந்திருந்த கைலாசத்தைப் பார்க்கவும் அவள் அஞ்சினாள்.

சற்றுக் கழித்து, மெல்லத் துணிவைத் திரட்டிக் கொண்டு ஊஞ்சலின் அருகே வந்தாள் அவள்.

கைலாசத்தின் காலடியில் கிடந்த கண்ணாடித் துண்டுகளை மெல்ல எடுத்து அப்பால் போட முனைந்தாள்.

''இதெல்லாம் தொடாதே நீ! கையில் ஏதாவது காயம் பட்டுவிடும். உடைத்த கழுதையே இதை எடுத்து சுத்தம் செய்யட்டும். கதவை சாத்திவிட்டு, விளக்கை அணைச்சிட்டு, நீ போய்ப் படு. மணி பன்னிரண்டாகப் போகுது.''

கோபத்துடன் அதட்டிய அவர், ஊஞ்சலின் மீது கிடந்த தமது துண்டை உதறித் தோள்மீது போட்டுக்கொண்டு மாடிப்பக்கம் விரைந்தார்.

அவரது ஆணையை மீறினால் அவருக்குப் பிடிக்காது என்பது மாதவிக்குத் தெரியும். எனவே விளக்கை அணைத்துவிட்டு அவளும் கிளம்பினாள்.

கைலாசம் தமது அறையின் கதவைத் தாளிடும் சத்தம் கேட்டதுந்தான் அவளுக்கு நிம்மதியாக மூச்சு வந்தது.

அடிமேல் அடிவைத்து மெல்ல பரிமளாவின் அறைக்குள் வந்து நின்றாள்.

பஞ்சணை மீது புரண்டு கொண்டிருந்த பரிமளா' லேசாக விசும்பும் சத்தம் கேட்டது.

மாதவிக்கு மனம் தாளவில்லை.

கதவைத் தாளிட்டுவிட்டு, இருளில் மெல்ல நடந்து கட்டிலின் அருகே வந்து நின்றாள்.



பரிமளாவின் முகத்தில் புரண்ட கூந்தலை மெதுவாக நீக்கிவிட்டு, கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

''அழாதே பரிமளா. அப்பாதானே கோவிச்சுக் கொண்டார். நாளைக்கு எல்லாத்தையும் மறந்துவிடுவார்...'' குழைவாகச் சொன்னாள்.

''போதும், வாயை மூடு! உன் பசப்பைக் கண்டு ஏமாறுகிறவள் நான் இல்லை...'' சீறிய பரிமளா, மாதவியின் கரத்தை வேகமாக அப்பால் தள்ளினாள்.

''நியாயம் தெரிஞ்சவளைப் போல் பேசவந்துட்டே. நாள் முழுவதும் அப்பாவைக் காக்கா பிடிப்பதிலே நீ கெட்டிக்காரி. உன்னை எனக்குத் தெரியாதா?'' ஆத்திரத்துடன் தொடர்ந்து உறுமிய பரிமளா, முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டு படுத்து விட்டாள்...

எதிர்பாராத குற்றச்சாட்டு மாதவிக்கு கேட்கவேதனையாக இருந்தது.

''நல்லதுக்குச் சொன்னேன், அப்பாவிடம் நீ எதிர்த்து பேசியிருக்கக் கூடாது. அதுதான் அவருக்கு ரொம்பக் கோபத்தை உண்டு பண்ணி விட்டது. நீ என்னைவிட ரொம்பப் படிச்சவள்..''

மாதவி முடிக்குமுன் விருட்டென்று பரிமளா எழுந்து படுக்கை மீது உட்கார்ந்தாள்.

அருகில் மின்விளக்கைப் பொருத்தினாள்.

இயற்கையிலே பரிமளா மிகவும் அழகானவள். அவிழ்ந்த கூந்தல் நெற்றியிலும், மார்பிலும் புரள கோபத்துடன் உறுத்து விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த அந்த நிலையிலும், அவள் மிக்க அழகாகவேதான் இருந்தாள்.

ஆனால், விருந்தின்போது ஒளிவிட்டு அவளிடம் பிரகாசித்த அந்த அழகிற்கும், கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த இந்த அழகிற்கும், எத்தனை வித்தியாசம்?

"இது என் வீடு. என்ன செய்யவும் எனக்கு உரிமை உண்டு. அவர் என் அப்பா. என்ன வேண்டுமானாலும் அவரிடம் பேசுவேன். இதைப் பற்றிக் கேட்க நீ யார்? எங்க வீட்டு பிச்சை சோத்தைத் தின்னுட்டு வாழற நீ எனக்கு புத்தி சொல்ல வந்துட்டே.. இல்லையா...?" ஆத்திரமாக கேட்டாள்.

மாதவிக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. கோபம் வந்தால் பரிமளா வாயில் வந்தபடி பேசக் கூடியவள் என்பது தெரிந்த கதைதான் என்றாலும், அவளது குத்தல் மொழிகள் மனதை மிகவும் வேதனை செய்தன. கண்களில் நீர் முட்டிக் கொண்டு வந்தது.

ஏதோ பேச அவள் நினைத்தசமயம் கைலாசம் பலமாக இருமும் சத்தம் கேட்டது. பரிமளா டக்கென்று விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துவிட்டாள்.

பாயை விரித்துக்கொண்டு அதன்மீது உட்கார்ந்த மாதவிக்கு, உறக்கம் வரவில்லை.

கன்னத்தின்மீது விழுந்த கண்ணீரை மெல்லத் துடைத்துக்கொண்டு முழங்கால்கள் மீது தலையைச் சாய்த்தபடி வேதனை மிக்க எண்ணச் சுழலில் சிக்கியவளாக நெடுநேரம் உட்கார்ந்து விட்டாள்.

முன்னறை கடிகாரம் இரண்டு முறை அடித்தது.

திடுக்கிட்டுப் போன மாதவி படுக்கையில் விழுந்து கண்களை மூட முயன்றாள்.

ஆனால், உறக்கம் வந்தால்தானே?

## 5

அறுபத்தைந்து வயதை எட்டிக்கொண்டு இருந்தார் சரவணன்.



ஆனால், உடல் நலிவும் - மனத்தளர்வும் அவரை நூறு வயதுக் கிழவராகத் தள்ளாடச் செய்துவிட்டன.

வறுமை, ஏமாற்றம் இரண்டும் அவரது எஞ்சிய உற்சாகத்தையும் ஒடுக்கி விட்டிருந்தன.

புகழ் பெற்ற பாடகராக விளங்கப் போவதாக அவர் கொண்டிருந்த கனவுகள் எத்தனையோ! நடந்தது?...

நாலு வீட்டிற்குள் ஏறி இறங்கி, இசை என்பதே தெரியாத அறிவிலிகளுடன் தொண்டை கிழியக் கத்தி, தமது காலத்தைக் கடத்தவேண்டிய துர்ப்பாக்கியம்.

பாட்டு வாத்தியார் சரவணன் என்ற பட்டத்தையோ' தொழிலையோ அவர் சிறிதும் விரும்பவில்லை. அதிலும் தங்கம்மாள் போன்ற ஞான சூனியங்களின் தலைவாசலைக் கூட அவர் மிதிக்க விரும்பவில்லைதான். ஆனால் மாதத் துவக்கத்திலே வந்து நிற்கும் பால்காரனுக்கும், மளிகைக் கடைக்காரனுக்கும் பதில் சொல்லியாக வேண்டுமே!

என்னென்னவெல்லாமோ எண்ணிப் புனிதமாக அடி நாளில் அவர் பயின்ற இசைக்கலை, இன்று ஒருவாய்ச் சோறு போடுகிறதே என்ற திருப்தியுடன் அவர் ஆசைகள் அடங்கிப் போயின. இப்பொழுதெல்லாம் அவர் தம்மைப் பற்றி எண்ணுவதை விட்டுவிட்டார்.

வேண்டும் என்று விரும்பிய காலம் போன பின்—வேண்டாமென்று அசட்டையாக இருந்த போதுதான் அவருக்கு கௌரி பிறந்தாள். பதினாறு வயதுச் சிறுமி அவள். விடுவிடுவென்று வேகமாக, உயரமாக வளர்ந்து நின்றாள். அவளது வருங்காலத்தைப் பற்றி எண்ணிய போதெல்லாம்...சரவணன் பட்ட மனவேதனை-கவலைகள் ...எண்ணில் அடங்கா.

அவர் மனைவி காமாட்சி சில மாதமாக கடும் காச நோயில் படுத்துவிட்டாள். ஓயாது இருமிக்கொண்டு நரம்பும் தோலுமாகப் படுக்கையில் படுத்துக் கிடந்த அவள்

உள்ளத்தில் நின்ற எண்ணம் ஒன்றே ஒன்றுதான். மரணம் ஏன் இன்னமும் அவளை அழைக்கவில்லை?

நடையில் செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு, வீட்டின் முற்றத்திற்குச் சென்றார் சரவணன். ஒரு செம்பு நீரை முகந்து. கால்களையும் முகத்தையும் நன்றாகக் கழுவிக் கொண்டார். மேல் துண்டால் முகத்தைத் துடைத்தவாறு கூடத்தில் வந்து அமர்ந்தார்.

“அப்பா! அக்கா இந்த நோட்டுகளை இங்கே விட்டுப் போயிருக்கு. கடைத் தெருவிலிருந்து திரும்பி வரும்போது மறுபடி வருவதாகச் சொல்லிச்சு.”

கௌரி ஒரு தம்ளரில் குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து அருகில் வைத்தாள். அத்துடன் சில நோட்டுப் புத்தகங்களையும் தரையில் வைத்துவிட்டுப் போனாள்,

தண்ணீரைக் குடித்துவிட்டு. மெல்ல நோட்டுப் புத்தகங்களைப் பிரித்து ஆராய்ந்தார் சரவணன்.

முத்துக்களைப் போன்ற எழுத்துக்களில், அவர் சொல்லிக் கொடுத்த பாடல்களை சுவரத்துடன் வரிசைக் கிரமமாக மாதவி எழுதியிருந்தாள்.

அவரிடம் பயின்ற மாணவிகளுக்குச் சொல்லிக் கொடுத்த பாடல்களை நோட்டுக்களில் எழுதிக் கொடுக்க வேண்டிய வேலையும் அவருடையது. அவர் கையெழுத்து தலையெழுத்தைவிட மோசம். அதைச் செய்து முடிக்க அவர் மாதவியைக் கேட்டுக்கொண்டார். அவளும் செவ்வனே முடித்திருந்தாள்.

“மாதவி! நல்ல பெண்” - அவரது நெஞ்சு நெகிழ்ந்து அவளை வாழ்த்தியது.

சிரத்தையுடன் சங்கீதம் பயில ஆர்வம் காட்டிய அவளுக்குச் சொல்லிக் கொடுக்க முடியவில்லையே என்று அவருக்கு வருத்தம். பரிமளாவுக்குப் பாட்டுச் சொல்லி கொடுக்கத்தான் அவர் அமர்த்தப்பட்டிருந்தார். ஆனால், துணையாக அருகில் வந்து உட்கார்ந்த மாதவிதான்



உண்மையில் ஊக்கத்துடன் கற்றுக் கொண்டாள். இந்த உண்மை தங்கம்மாளுக்குத் தெரியாது.

கைலாசம் மகளுக்கு ஐந்தாண்டு காலமாக வீணை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார் அவர். அனாதையாக அந்த வீட்டில் வளர்ந்து வந்த மாதவிமீது அவருக்கு இரக்கம்—பெற்ற மகளைப் போன்ற பரிவு. அவளுக்கும் வாத்தியார் அய்யா மீது மட்டற்ற மதிப்பு.

சில நாளாக மாதவி திடீரென்று மாறிக்கொண்டு வருவதை அவரும் கவனித்தார். குரலில் அதிக உற்சாகம். நடையிலே ஒரு மிடுக்கு. தோற்றத்திலே பளிச்சென்ற புதுமை. ஆமாம்! இந்தப் பெண்ணுக்கு என்ன வந்து விட்டது? அவருக்கு மிக்க வியப்பு!

ஒரு நாள் எதிர்பாராத விதமாக அதன் காரணத்தையும் அவர் அறிந்து கொண்டுவிட்டார். தாயும் தந்தையும் இல்லாத அந்தப் பெண்ணுக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற கவலை அவருக்கு. எப்படிப் பேசுவது அவளிடம். என்ன கேட்பது என்ற குழப்பம். சில நாளாக அவர் மனதில் அமைதி இருக்கவில்லை.

கடைத்தெருவிலிருந்து திரும்பி வந்த மாதவி, தூக்கி வந்த சாமான் பையைத் தரையில் வைத்துவிட்டு, கால்களைக் கழுவிக் கொண்டாள். ரேழியை ஒட்டிய தமது அறையில் விளக்கடியில் நோட்டுப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த சரவணன் அருகே மெல்ல வந்து நின்றாள்.

“உட்காரம்மா...மாதவி!”

உபசரித்தார். அதே சமயம் அவளிடம் அதைப்பற்றிக் கேட்டுவிட வேண்டுமென்ற தீர்மானம்.

மாதவி பணிவுடன் எதிரே வந்து உட்கார்ந்தாள்.

தொண்டையைக் கனைத்துக்கொண்டார், சரவணன்.

“கௌரியைப்போல என் சொந்த மகளாக உன்னை நான் பாவிக்கிறேன். அதனால் உரிமையோடு கேட்கிறேன். நீ உள்ளதைச் சொல்லணும். இருட்டிய பின்னர் நிதமும்

நீ இந்தப் பக்கம் தெருக்களில் சுற்றிக்கொண்டு இருப்பதை சில நாளாக நான் கவனிக்கிறேன். உன்னைப்போல சின்னப் பெண்களுக்கு இது நல்லதா? அந்திப் பொழுதிலே கடைத் தெருவிலே உனக்கு என்ன வேலை?''

மாதவி திடுக்கிட்டுப் போய்விட்டாள். நெஞ்சு படபட வென்று துடித்துக் கொண்டது. குற்ற உணர்வின் சுமையை தாள முடியாது மூச்சு முட்டியது...

''பரிமளாவுக்கு புத்தகம் எடுக்க நூல் நிலையத்துக்கு போய் வருகிறேன்'' மென்று விழுங்கினாள்.

''பகலில் வந்து எடுத்துப் போகலாமே? மேலும் இந்த வேலையெல்லாம் செய்ய சிவகுரு இருக்கிறானே?'' என் றார் சரவணன்.

''தங்கம்மா உன்னை இப்படி வெளியே அனுப்புவது எனக்கு சரியாகப் படலை. சொந்தப் பெண்ணாக இருந் தால் இப்படித் தெருவில் அலைய சம்மதிப்பார்களா? ஏதா வது தப்புத் தண்டா நடந்து விட்டால் அவர்களுக்குத் தானே அவமானம்'' என்று நொந்து கொண்டார் அவர்.

கைலாசம் அய்யாவுக்குத் தெரிஞ்சால் ரொம்பக் கோவிச்சுக்குவார். அவர் மனசு எனக்குத் தெரியும். உன்மேல் அவருக்கு ரொம்ப பிரியம்மா'' என்று வாஞ்சை யுடன் சொன்னார்.

''என்னமோம்மா எனக்கு உன் போக்குப் பிடிக்கலை. உன்மேல் இருக்கிற அன்பினால் இப்படிக் காரமா பேசுகிறேன்'' என்றவர், ''அது சரி... அந்தப் பையனை உனக்கு எத்தனை நாளாகத் தெரியும்?'' என்று திடீர்என்று கேட்டார்.

மாதவி அயர்ந்து விட்டாள். சட்டென்று அவளால் பேச முடியாத திகைப்பு. ''அவர் வந்து...எங்களுக்கு தூரத்து உறவினர்...அதனால்...'' குழறினாள்.

''அப்படியே இருக்கட்டும், அதுக்காக ரகசியமாக வயது வந்த பெண்ணை தெரு மூலையில் சந்திக்கவேண்டிய



16337
32065588

அவசியம் இல்லையே? நேரம் போவது தெரியாமல் அவ னோட பேச அப்படி என்னம்மா சங்கதி இருக்கும்? பார்க்கிற வங்களுக்கு இது நல்லாவா இருக்கும். யோசிச்சியா...? உங்கப்பா இருந்தால் இதைத்தான் உங்கிட்டே கேட்பார். என்வரைக்கும் நீ என் குழந்தையம்மா...'' இறுக்கமாக— கண்டிப்பாக கூறினார்.

பொல பொல வென்று அவள் கண்களில் இருந்து கண் ணீர் இழை சிந்தியது.

''ஐயா! அவர் வந்து என்னை...என்னை...'' சொல்ல முடியாது அவள் விம்மினாள்.

சரவணனுக்கு நிலைமை சட்டென்று புரிந்துவிட்டது. ''அழாதேயம்மா மாதவி. எல்லாம் உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன். உன் மேலே அவனுக்கு உண்மையான அன்பு இருந்தால், அதைமுறைப்படித்தெரிவித்துக்கொள்ளலாமே. கைலாசம் கண்ணியமானவர். உன்னை சொந்த மகளாகப் பாவிக்கிறார் அவரிடம் வந்து நேரே தன் எண்ணத்தைச் சொல்லி பெண் கேட்கலாமே...''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மாதவி அவரை மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னைப் பற்றி நீங்கள் இவ்வளவு தூரம் அக்கரை காட்டுவது பற்றி நன்றி. சீக்கிரம் அவர் அப்படிச் செய்யத் தான் எண்ணிக்கொண்டு இருக்கிறார்.''

கூறிவிட்டு, இடையில் செருகிக் கொண்டிருந்த ஒரு கடிதத்தை அவர் முன் எடுத்து வைத்தாள். ''சில சமயங் களில் நாங்கள் சந்திக்கும்போது பேச முடிவதில்லை. அத னால் மனதில் தோன்றியதை இப்படிக் கடிதத்தில் எழுதிக் கொள்வது வழக்கம். அதனால்...'' சொல்லி முடிக்க வெட் கிக்கொண்டு தரையைப் பார்த்தாள்.

சரவணன் கடிதத்தைப் பிரித்துப் படித்தார்.

''அன்புள்ள மாதவி!

என்னை மணந்து கொள்ள உனக்கு முழுச் சம்மதம் என்பதை உன் வாயால் சொல்லக் கேட்டு நான் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கிறேன்.

நமது வருங்காலத்தைப் பற்றி என் சிந்தனை எழுப்பும் எண்ணக் குவியல்கள் எத்தனை எத்தனையோ? மனக் கண் முன் எழுந்து நிற்கும் இன்பக் கனவுகளுக்கோ கணக்கு வழக்கில்லை.

நம் கனவு நனவாக, காலம் இடையே குறுக்கிடுகிறது. ஆண்டு முடிவில் வரும் ஓய்வு நாட்களில்தான் நான் கிராமத்திற்குச் செல்லமுடியும். நேரில் விஷயத்தை என் பெற்றோர்களிடம் சொல்லி, அவர்கள் சம்மதத்தைப் பெற்று விடுவேன். பின்னர் மாமனிடம் சம்மதம் பெறுவது சிரமமான காரியமில்லை. அதுவரை நீ பொறுமையாக இருக்க வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் இருவரும் மனம் ஒன்றுபட்டிருப்பதை ஓரளவு திருமணம் நடந்து விட்டது போல எண்ணி மகிழ வேண்டிய விஷயம் இல்லையா?

அன்பன் சந்திரன்.''

கடிதத்தை மடித்துக் கீழே வைத்த சரவணன் லேசாகப் புன்னகைத்தார்.

''நீந்தத் தெரியுமா என்றால், ஓரளவு தெரியும் என்றால் என்ன அர்த்தம். தெரியும் அல்லது தெரியாது என்று தான் பதில் கொடுக்க வேண்டும். ஓரளவு நீந்தத் தெரியும் என்று சந்தேகத்துடன் யாராவது ஓடும் ஆற்றில் விஷப் பரீட்சை செய்யத் துணிவார்களா? திருமணம் என்பதில் ஓரளவு என்ற சொல்லுக்கு இடமில்லை'' பெருமூச்செறிந்தார் அவர்.

மாதவி பதில் பேசாது எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.



''வாழ்க்கையிலே உன்னைவிட நான் ரொம்ப அனுபவப் பட்டவன் அதனால் சொல்கிறேன். கேட்டுக் கொள். ஆதங்கப்படாமல் திருப்தியாக இருக்கவில்லை. இந்த விஷயம் என் மனதுக்கு அத்தனை திருப்தியாக இருக்கவில்லை. ஆரம்பத்தில் காதல் வேகத்தில் ஆண்பிள்ளைகள் அப்படித்தான் பேசுவார்கள். பெண்கள் தான் விழிப்பாக இருக்க வேண்டும். எதற்கும் நீ ரொம்ப எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அம்மா... ஏமாந்து விடக்கூடாது'' என்று கூறிவிட்டு. அவளை உற்றுப் பார்த்தார்.

கண்களில் மீண்டும் பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவள் தலையைத் தாழ்த்திக் கொண்டாள். ''அவரை நான் பூரணமாக நம்புகிறேன். அதனால்...'' இணறினாள்.

''நீ நம்பக்கூடாதுன்னு நான் சொல்லலை. ஏமாறக் கூடாதுன்னு எச்சரிக்கிறேன். கவலைப்படாதே. இதைப் பத்தி நான் யார்கிட்டேயும் பேசமாட்டேன். நீயும் எனக்கு ஒரு வாக்குக் கொடுக்கணும்...கொடுப்பியா?''

மாதவி தலையை அசைத்தாள்.

''சந்திரசேகரன் வந்து உன்னை முறைப்படி பெண் கேட்கிறவரை இனி நீ அவனை சந்திக்கவே கூடாது. தெரு முனையில் நின்று ரகசியம் பேசக்கூடாது. சரியா?'' கண்டிப்பான குரலில் கேட்டார்.

''அப்படியே செய்கிறேன்...'' விம்மினாள் மாதவி.

''முகத்தைக் கழுவித் துடைத்துக்கொண்டு — சீக்கிரம் வீட்டுக்குக் கிளம்பு. உம் ஆகட்டும்'' உத்தரவிட்டார் சரவணன்!

இரண்டு மாதம் சென்றது.

சந்திரனைப் பார்க்காமல் - பேசாமல் கழிந்த அந்த இரண்டு மாதங்களும் மாதவிக்கு இரண்டு யுகமாகத்தான் இருந்தன.

சந்திரன் முன்னைவிட அதிகமாகப் பங்களாவிற்கு வந்து போய்க் கொண்டு இருந்தான். கூடத்தில் கைலாசத் திடம் பேசும் அவனது குரல், கணீரென்று உள்ளேயிருக்கும் அவள் காதுகளில் விழத்தான் செய்தது. ஓடிச்சென்று ஒரு தடவையாவது அவனைப் பார்க்க மாட்டோமா என்று பதைபதைத்தது மனம். வாத்தியார் அய்யாவுக்குக் கொடுத்த வாக்கை எண்ணிப் பொறுமையுடன் வருட முடிவை நோக்கி அவள் காத்திருந்தாள்.

உள்ளத்திலே பொங்கிப் புரண்ட உணர்வுகள் அவளது உடலைக் குலைக்கத்தான் செய்தன? உறக்கமின்றி-உணவில் நாட்டமின்றி அவள் ஒடுங்கிக்கொண்டு வந்தாள்.

ஒருநாள் கைலாசமே கேட்டு விட்டார். "இந்தப் பெண்ணுக்கு உடம்புக்கு என்ன? ரொம்ப இளைச்சுப் போயிட்டாளே?"

"அவளுக்கென்ன கொள்ளை! பரிமளாவைவிட ரெண்டு பங்கு சாப்பிடுகிறாள். முன்னைவிட உசந்திருக் கிறாள். அதனால், உங்க கண்ணுக்கு அப்படிப் படுகிறது" எரிச்சலோடு பதில் அளித்தாள் தங்கம்மாள்.

வெள்ளித் தட்டுப் போல் பூரண நிலவு பொழிந்து கொண்டிருந்த ஒரு நாள் இரவு. உணவிற்குப் பின்னர், வழக்கம்போல் மாதவி மாடியறைக்கு உறங்கப் போனாள்.

"மாதவி! இப்படி வந்து கிட்டே உட்கார் - உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும்."

கெஞ்சும் குரலில் கூப்பிட்டாள் பரிமளா.

தன் காரியம் ஏதாவது இருந்தால் அவள் குழைவாள் - அதுவும் மாதவிக்குத் தெரிந்த கதைதான். கதவை தாளிட்டு விட்டு கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டாள்.

தலைக்குமேல் தொங்கிய மின்விளக்கை ஏற்றிவிட்டு பரிமளா தன் தலையணை அடியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்தாள்.



"மாதவி நீ காதலைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" பரிமளா எடுத்த எடுப்பிலே கேட்டாள்.

தூக்கிவாரிப் போட்டது மாதவிக்கு... "நீ என்னவோ வேடிக்கை செய்கிறாய்...இந்தக் கேள்வியின் பொருள் விளங்கவில்லையே... புரியும்படி சொல்லேன்..." அலுப் புடன்கேட்டாள்.

"உன் மனசில் காதல் மலர்ந்து இருந்தால் இப்படி அசட்டையாக நீ பேசமாட்டாய். காதல் என்பது ஓர் இன்ப மான உணர்வு—அது ஒரு வகையில் துன்பமான உணர்வு கூட. அதை உனக்கு எப்படிப் புரிய வைக்கிறதென்றே எனக்கு விளங்கவில்லை. இப்படி கிட்டே வா. ஒரு ரகசியம் சொல்கிறேன். மாதவி நான் ஒருத்தரை உயிருக்கு மேலாகக் காதலிக்கிறேன். அவரைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்.."

மாதவிக்கு ஏனோ நெஞ்சு பக்பக்கென்று அடித்துக் கொண்டது. இனம் விளங்காத ஓர் அச்சத்திலே உடல் நடுங்கியது...

"பரிமளா உனக்கு எப்பவும் வேடிக்கைதான். என்னை விடு. தூக்கம் கண்ணை அழுத்துகிறது" சிணுங்கினாள் மாதவி.

"இதோ பார் - இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு பின்னால் சொல். இவரைத்தான் நான் காதலிக்கிறேன்" என்று பெருமையாகக் கூறிக்கொண்டு, புத்தகத்திற்குள் மறைத்து வைத்திருந்த ஒரு புகைப்படத்தை எடுத்து அவ ளிடம் நீட்டினாள்.

கையில் வாங்கி, கண்களை அகல விரித்து விளக்கொளி யில் உற்றுப் பார்த்த மாதவிக்குத் தலையைச் சுற்றியது.

பரிமளா சொல்வது உண்மையா?

அவளுடைய சந்திரனை பரிமளா காதலிக்கிறாளா?

நெஞ்சே இரண்டாகப் பிளந்துவிடும் போன்ற வேதனை...

''நான் நம்பமாட்டேன். இவரைத்தான் உனக்குப் பிடிக்காதே. இவர் நம் வீட்டில் பாடியதைக் கேட்டு கண்ணாடியை உடைத்தாயே?'' மேலே பேசமுடியாது மாதவி திணறினாள்.

''நீ ஒரு பைத்தியம்...சமையல் அறையைத் தவிர உனக்கு உலகமே தெரியாது. மக்கு பிளாஸ்திரி. மிதமிஞ்சிய தலில் வெறுப்பதுபோல் அப்படி ஒரு நடிப்பு...உன்னோடு மாக உட்கார்ந்து பாடறதைக் கண்டு பொறாமையில் துடித்துப் போய்த்தான் அப்படி ஆர்ப்பாட்டம் பண்ணி ன். அம்மாவுக்கு இவரைப் பிடிக்காது. அப்பாவும் டுனு ஒப்புக் கொள்ள மாட்டார்... ஆனால், நான் னைச்சதை விடமாட்டேன். சந்திரன் ரொம்ப ழகானவர். எனக்கு ஏற்றவர் தானே-நீ சொல் மாதவி...'' ன்று இன்பத்தில் இழைந்தாள் பரிமளா.

நெருப்பை வாரித் தலையில் கொட்டியது போன்ற யங்கர உணர்வில் மாதவி தவித்துப் போனாள்.

வெடித்துவிடும்போல வேதனையில் நெஞ்சு விம்மியது. உணர்ச்சிகளை அடக்கமாட்டாது கண்களில் நீர் பொங்கிக் கொண்டு வந்தது.

நல்லவேளை, தங்கம்மாள் அவளை அதுசமயம் கூவி அழைத்து விட்டாள்.

''மாதவி! பூஜையறைக் கதவை மூட மறந்துட்டேன்—போய் விளக்கை அணைச்சு அதைச் சாத்திவிட்டு வா...''

தடதடவென்று படிகளில் இறங்கி ஓடினாள், மாதவி.

அப்படியே ஓடிக்கொண்டு இருக்க மாட்டோமா என்று ஓர் ஏக்கம்.

''கடவுளே! என் சந்திரனை எனக்கு விட்டுக்கொடு.''



பூஜையறைக் கதவைப் பிடித்துக்கொண்டு நின்ற அவள் உள்ளம் ஓவெனக் கதறிப் புலம்பியது.

# 6

கைலாசத்திடம் வந்து அடைக்கலம் ஆனதில் இருந்து பிறர் தன்னை ஏவுவது ஒன்றையேதான் சிவகுரு அறிந்திருந்தான். அவனுக்கு இப்போது திடீரெனப் பதவி உயர்வு கிட்டியிருந்தது. தலையை நிமிர்த்திக்கொண்டு பிறரை ஏவித் திரியும் பொன்னான சந்தர்ப்பம்.

கைலாசத்தின் அருமை மகள் பரிமளாவுக்குத் திருமணம். அதை அவர்கள் இல்லத்திலேயே நடத்த ஏற்பாடு. கல்யாண வேலைகளை மேற்பார்வையிட கைலாசம் அவனை அமர்த்தியிருந்தார். அவ்வளவுதான், சிவகுருவின் அதிகாரம் தூள் பறந்து கொண்டிருந்தது.

வாசல் பக்கத்தில் வேலையாட்கள் எழுப்பிக் கொண்டிருந்த கொட்டாரப் பந்தல் வேலை ஒழுங்காக நடைபெறுகிறதா என்று பார்வையிட்டு ஒருமுறை சுற்றி வந்தான். கடையிலிருந்து வந்த பலசரக்கு சாமான்களைக் கணக்கிட்டுப் பார்த்து உள்ளே வைக்க உத்தரவிட்டான். இன்னும் இப்படிப் பல வேலைகள்.

''ஏ...சின்னமுத்து! என்னப்பா பேச்சு... நடக்கட்டும் வேலை...'' என்று நடுநடுவே உரத்தக் குரலில் அதிகாரம்.

புதிதாக அமர்த்தப்பட்ட சமையற்காரர் ஆட்களில் ஒருத்தன் சுடச்சுடக் காப்பியை தம்ளரில் நிறைத்துக் கொண்டு வாசலுக்கே உபசரிக்க வந்துவிட்டான். சிவகுருவின் அதிகாரத்தையும் மிரட்டலையும் கண்டு அவன் அப்படி அரண்டு விட்டான்.

''சர்க்கரை முழுவதையும் காப்பியிலேயே கொட்டிவிட்டால் பலகாரங்களை எப்படிச் செய்வதாக உத்தேசம்...?'' அழுத்தலாகக் கேட்டுவிட்டுக் காப்பியை வாங்கி ஒரே மூச்சாகக் குடித்தான்.

''இந்தாப்பா! இங்கே நின்னு வேடிக்கை பார்க்காதே. உள்ளே ஏகப்பட்ட காரியங்கள் கிடக்கு. போ சீக்கிரம்...'' மிடுக்காக அவனை அதட்டிவிட்டு விறைப்பாக உள்ளே சென்றான். தரையைக் கழுவிக் கொண்டிருந்த புதிய வேலைக்காரி அவனை பயத்துடன் பார்த்து தலையைக் குனிந்து கொண்டாள்.

''வெட்டிப் பேச்சு வேண்டாம். ஆகட்டும் வேலை...'' அங்கங்கே வேலையாட்களை விரட்டியபடி பலகாரங்கள் செய்து கொண்டிருந்த பின் கட்டிற்கு வந்தான். மேல் துண்டை உதறித் தோள்மீது போட்டுக்கொண்டு மிடுக்காக அங்கே வந்து நின்றான்.

அருகில் தட்டுகளில் உருட்டி வைத்திருந்த லட்டுகளைக் கண்டதும் அவன் நாவில் நீர் சுரந்தது. அசட்டையாக நுனி விரல்களால் ஒன்றைப்பற்றி எடுத்து சிறிது பிட்டு வாயில் போட்டுச் சுவைத்தான். ''பேஷ்! ரொம்ப நல்லா இருக்கே! ஜட்ஜ் லோகநாதன் வீட்டுக் கல்யாணத்தில் செஞ்சாப் போல செய்திருக்காங்களே...'' என்றான் பாராட்டும் தோரணையில்.

அருகில் சற்று ஒதுக்குபுறமாக நின்று கொண்டிருந்த வாட்ட சாட்டமான மனிதர் அவனை முறைத்துப்பார்த்தார். காதுகளில் வைரக்கடுக்கன்கள், கழுத்திலே மெல்லிய தங்கச் சங்கிலி—சலவை செய்த தூய வெள்ளை ஜிப்பா—மல் வேட்டி— தோளில் துவண்ட சரிகை அங்கவஸ்திரம் என்ற அலங்காரத்தில் கம்பீர நடை போட்டுக்கொண்டு அவன் அருகே வேகமாக வந்த மனிதர், ''யாரையா நீ அறிவு கெட்டவனாக இருக்கிறீர்... எண்ணி ஒழுங்காக எடுத்து வச்சிருக்கிற லட்டைப் பிட்டுத் தின்னுகிட்டு -சே! சே!'' உறுமினார்.

சிவகுரு வெல வெலத்துப் போனான். விஷயம் புரிவதற்கு அவனுக்கு சில வினாடி பிடித்தது. வைரக் கடுக்கன் ஆசாமிதான் தலைமை சமையற்காரர், புகழ்பெற்ற சங்கநாதன். சமையல் மன்னன் என்று பல பெரிய மனிதர்களிடம் பட்டமும்-பரிசுகளும் பெற்றவர்... சில பிரபல மனிதர்கள் ''சமையல் மேற்பார்வை! சங்கநாதன்'' என்றுகூட திருமணப் பத்திரிகையில் ஒரு மூலையில் அச்சிடுவது உண்டு அத்தனை பிரபலமான மனிதர்... அவருக்கு முன் சிவகுரு எம்மாத்திரம்?



''உங்களுக்கு என்ன வேணும்...'' அசட்டையாக புருவங்களை உயர்த்தினார் சங்கநாதன். சிவகுரு அதற்குப் பின் அங்கே நிற்கவேயில்லை.

உள்ளே விரைந்த அவன், சாமான் அறைக்குள் எட்டிப் பார்த்தான். பின்கட்டு முழுவதும் தேடினான். மாடிப் பக்கம் விரைந்து சென்று வராந்தாவில் நின்றபடிகண்களை நாலாபுறமும் ஓட்டினான். மாதவியை எங்குமே காண வில்லை.

சில நாளாக அந்தப் பெண்ணிடம் காணப்பட்ட மாறுதல்கள் அவனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவேயில்லை. இன்னும் இரண்டுதினத்தில் வீட்டிலேதடபுடலாகக்கல்யாணம். மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டியதற்குப் பதில் புத்திகெட்ட பெண், யாரும் இல்லாத சமயங்களில் கிணற்று மேடை அருகேயும், தோட்டத்து வேப்ப மர மறைவிலும் உட்கார்ந்து குலுங்க குலுங்க அழுதுகொண்டு இருந்தாள். எப்பொழுதும் கண்களும் முகமும் சிவந்தே காணப்பட்டன.

சிவகுரு என்ன முட்டாளா? ''வயது பெண்களை வீட்டில் வைத்துக் கொள்வது கஷ்டம்'' என்று அடிக்கடி தங்கம் அலுத்துக் கொள்வதைக் கேட்டிருக்கிறான். அதன் பொருள் இப்பொழுது அல்லவா விளங்குகிறது?

''பரிமளாவுக்கு மட்டும் திருமணம் நடக்கிறது; நமக்கு நடப்பது எப்போது?'' என்று ஒரு சமயம் எண்ணி மாதவி ஏங்குகிறாளோ என்னவோ?

நமக்குப் பெற்றோர்கள் இல்லையே-இருந்தால் நகைகள்- நாலுவிதச் சேலைகள் என்று எடுத்து, சீரும் சிறப்புமாக எல்லாம் செய்வார்களே என்று எண்ணி வருந்துகிறாளோ?

என்ன முட்டாள்தனம்?

புலியுடன் பூனை போட்டியிட முடியுமா? கொஞ்சங் கூட இந்த பெண்ணிற்கு அறிவு கிடையாது.

என்னென்னவோ எண்ணியபடி கீழே இறங்கி வந்தான்.

பூஜை அறையின் கதவு பாதி மூடியிருந்தது. மெல்ல அருகில் சென்று திறந்து எட்டிப் பார்த்தான்.

முருகனின் திருவுருவம் அருகே குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. சந்தன ஊதுவத்தியின் மெல்லிய மணம் அறை முழுவதும் கமழ்ந்து கொண்டிருந்தது.

அறையின் மூலையில் சுவரில் சாய்ந்து கொண்டிருந்த மாதவி மாலை மாலையாகக் கண்ணீர் வடிய அழுது கொண்டு இருந்தாள்.

திகைத்துப் போய்விட்டான், சிவகுரு.

'இந்தப் பெண்ணுக்கு என்ன, பைத்தியமா பிடிச்சிருக்கு? நாளும் கிழமையுமா விளக்கு வைச்ச நேரத்தில் அழுகை என்னத்துக்கு?'' என்று நினைத்தவன், ''தங்கச்சி, என்னம்மா இது? கடைக்குப் போயிருக்கிற அம்மாவும் பரிமளாவும் வருகிற நேரம். அவங்க உன்னைப் பார்த்தா என்ன நினைப்பாங்க...?'' என்று உரிமையோடு அதட்டினான்.

திடுக்கிட்டுப்போன மாதவி எழுந்திருந்தாள்.

அவள் மடி மீது கிடந்த பட்டுச்சேலை தொப்பெனக் கீழே விழுந்தது.

அவசரமாகக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அதை எடுக்கக் குனிந்தாள்.

முந்திக்கொண்ட சிவகுரு அதைச் சட்டென தன் கையில் எடுத்தான்.

''புது உருப்படி போல இருக்கு. கண்ணீர் எல்லாம் சிந்தி கரையாக்கி விட்டிருக்கியே. கல்யாணத்துக்கு அம்மா



இதை உனக்கு வாங்கிக் கொடுத்தாங்களா?'' விசாரித்தபடி புடவை மீது படிந்த தூசியைத் தட்டி ஒழுங்குபடுத்த முனைந்தான்.

''இல்லை, இது பரிமளாவுக்கு அவங்க வீட்டில் எடுத்த கூரைச்சேலை. அம்மா பார்க்கணும்னு கேட்டு அனுப்பினாங்க. ஆள் கொண்டு வந்து கொடுத்தால், முருகன் சந்நிதியில் வைக்கும்படி என்னிடம் சொல்லிவிட்டு அம்மா வெளியே போனாங்க'' துயரத்துடன் கூறினாள்.

''நல்ல வேலை செஞ்சே. அம்மா பார்த்தா உன்னை இரண்டா கூறு போட்டிருப்பாங்க. முதல்லே இதை சாமி கிட்ட வச்சிட்டு வெளியிலே வா. அவங்க வர நேரமாச்சு'' என்று உத்திரவிட்டான்.

வெளியே வந்த மாதவியின் முகத்தைக் காண அவன் நெஞ்சம் நெகிழ்ந்து போயிற்று.

''ஏம்மா தங்கச்சி. உன்னை ஒண்ணு கேட்கிறேன். உண்மையைச் சொல்லணும். என்னத்துக்கு நீ இப்படி சதா அழுதுக்கிட்டே இருக்கே? பரிமளா கல்யாணமானதும் வீட்டைவிட்டுப் போய்விடுமேன்னு துக்கப்படுறியா? அது எங்கே போகப் போகிறது? அவர்தான் நம்ம வீட்டு மருமகனா இங்கேயே தங்கப் போகிறாரே?'' என்று அவளைப் பார்த்தான்.

''இல்லை. உனக்கும் சீக்கிரம் கல்யாணம் ஆகலைன்னு வருத்தப்பட்டுக் கொண்டு அழறியா? காலம் வந்தா உன்னையும் கட்டிக்கொடுக்காம அம்மா ஊறுகாயா போடப் போகிறாங்க...சுத்தப் பைத்தியம். உனக்குக் கல்யாணம் கூடி வரட்டும். இந்த மாதிரி சேலையை நானே அண்ணன் சீராக உனக்கு எடுத்துத் தரேன்—எங்கே கொஞ்சம் சிரி! சிரிச்சு எத்தனை நாளாச்சு?'' என்று சிரித்தான்,

''என்னவோ இந்தக் கல்யாணம் கூடினதிலிருந்து இந்த வீட்டிலே ஒரே அழுகையும் ரகளையுமாப் போச்சு. முதல்லே பரிமளா - அப்புறம் அம்மா - இப்போ நீ... உம் எனக்கு

ஒண்ணுமே புரியலை...சரி சரி முகத்தைக் கழுவிக்கொண்டு தயாராக இரு. அவங்கள்ளாம் வர நேரம்'' கூறிவிட்டு அப்பால் சென்றான்.

முகத்தைக் கழுவித் தலையை வாரி முடித்துக்கொண் டாள் மாதவி.

அழுத களைப்புத் தெரியாமல் இருக்க முகத்தில் லேசாகப் பவுடரைப் பூசி, நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டாள்.

அலங்கி விட்டிருந்த புடவையைக் களைந்து விட்டு, துவைத்துக் காயவைத்து மடித்து பத்திரமாகப் பெட்டிக்குள் வைத்திருந்த சுத்தமான நூல் சேலையை எடுத்து உடுத்திக் கொண்டு, தன் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள்.

மீண்டும் துக்கம் அவள் நெஞ்சை அடைத்தது. கண் களில் நீர் ததும்பியது. பரிமளா போல் அவள் பேரழகி யல்ல. அந்தஸ்திலும் அவளுக்கு ஈடு இல்லாதவள்தான். ஆனால் இவைதான் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமா?

களங்கமற்ற அன்புக்கு முன் இவையெல்லாம் தூசிக்குச் சமமாயிற்றே.

அவளும் சந்திரனும் இதையெல்லாம் பற்றி எத்தனை தடவை பேசியிருந்தனர்? உள்ளத்து அழகைப்பற்றி அவன் வர்ணித்தது எல்லாம் வெறும் பொய்யா? கபடம் சிறிதும் இல்லாத, களங்கமே துளியும் இல்லாத தனது உள்ளத்திலே அவனைத் தெய்வமாக வைத்து இது நாளும் வாழ்த்தி வழி பட்டு வந்தாளே, அதற்கு கிடைத்த பரிசு இதுவா?

அந்தஸ்து, அழகு என்ற இரண்டுடன் அவளது தூய அன்பை எடை போட்டுத் தூர எறிந்து விட்டானே, சந்திரன்!

என்ன கொடுமை...!

அன்றே பாட்டு வாத்தியார் சொன்னாரே?...



மீண்டும் மீண்டும் அவள் உள்ளம் புலம்பிக் கொண்டே இருந்தது.

நெஞ்சே வெடித்துச் சுக்கலாகிவிடும் போன்ற வேதனை யில் துடித்தாள்.

கண்ணீரைச் சமாளித்துக்கொண்டு தன் அறைக்குள் சென்று அலமாரியைத் திறந்தாள் மாதவி.

தன் தந்தையின் ஞாபகமாக வைத்திருந்த அந்தச் சிறிய தகரப்பெட்டியை எடுக்குமுன் அவள் கரங்கள் நடுங்கின.

அதற்குள்தானே அவள் சந்திரன் கடைசியாக அவ ளுக்கு எழுதிய அந்தப் பயங்கரக் கடிதத்தை வைத்தாள்!

எத்தனையோ முறை படித்தாள். படித்த பின்னர் அழு தாள். எனினும் மறுபடியும் படிக்க வேண்டும் என்ற வேகம்.

''அன்புமிக்க மாதவி—

இந்தக் கடிதத்தை எழுதும்போது நான் படும் வேதனையை நீ புரிந்து கொள்ள மாட்டாய். புரிந்து கொண்டால் நான் மிக்க மன ஆறுதல் கொள்வேன்.

இதைப் படிக்கும்போது நீ தாங்கொணாத் துன்பத்தில் துடிக்கப் போகிறாய் என எண்ணும்போதே என் நெஞ்சு வெடிக்கிறது. ஆனால், கடமை வற்புறுத்துவதால் துணி வுடன் எழுதுகிறேன்.

மாதவி! உன்னை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள் கிறேன். என்னை மன்னிப்பாயாக.

பரிமளா இதற்குள் உன்னிடம் ஒரு சமயம் சொல்லி யிருப்பாள். இல்லையெனில் நானே சொல்லி விடுகிறேன். அவள் என்னை மிகவும் நேசிக்கிறாள். திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாள். என் பேற்றோர் என் வருங்

காலத்தை எண்ணி வழிவரும் நீதியை நான் புறக்கணிப்பது தவறு என்று போராடி வெற்றி கண்டு விட்டனர்.

பரிமளா முடிவில் என்னைக் கணவனாக அடைந்து விட்டது பற்றி பெருமைப் பட்டுக் கொள்ளலாம். என் பெற்றோர் மகளது மகத்தான வாழ்க்கையைக் கண்டு மகிழலாம். கைலாசம் கைக்கு அடங்கிய மருமகனைத் தேடிப் பிடித்து விட்டதாகக் கர்வப்பட்டுக் கொள்ளலாம். ஆனால், உண்மை வேறு.

என் உள்ளத்தைப் பரிமளா ஒரு நாளும் விலைக்கு வாங்க முடியாது. அதைத்தான் நான் உனக்கு எப்பொழுதோ காணிக்கையாகத் தந்துவிட்டேனே? இனி இந்த உடல்தான் அவளுக்குச் சொந்தம்.

வழி வழியாகக் காதலியைக் காவியத்திலும், கதைகளிலும் கண்ணீர் வழியக் கைவிட்டு ஓடிய கயவர்கள் கூட்டத்திலே நானும் சேர்ந்துவிட்டேன்.

என் அன்பே! என்னை மன்னித்துக்கொள்
உன்னை என்றும் மறவாத, சந்திரன்.''

நடுங்கும் விரல்களால் கடிதத்தை மடித்து பெட்டிக்குள் பத்திரமாக வைத்தாள்.

வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

முகத்தைத் துடைத்துக்கொண்டு வேகமாக அங்கே வந்தாள்.

அன்று கைலாசத்தின் அருமை மகளுக்குக் கல்யாணம். பந்தலில் கூட்டம் வழிந்து கொண்டிருந்தது.

கடந்த சில மாதமாக மாதவி அடிக்கடி கற்பனையில் கண்டு மகிழ்ந்த காட்சியை அன்று கண்களாலேயே கண்டாள்.

நண்பரும் உறவினர்களும் சூழ, நாதசுவரம் இசை பொழிய - பெண்களின் சிரிப்பொலி உள்ளத்தைக்



கிளுகிளுக்க மல்லிகையும் சந்தனமும் மணம் வீச மணமேடையில் பச்சை வண்ணக் கோடிட்ட சேலை தரித்து அமர்ந்திருந்த மணப் பெண் அருகே சந்திரன் உட்கார்ந்திருந்தான்.

ஆனால் மணப்பெண்தான் அவளாக இருக்கவில்லை.

புரோகிதர் மந்திரம் ஓத, கெட்டி மேளம் காதைப் பிளக்க, உற்றாரும் மற்றோரும் மலர் வாரி இறைத்து வாழ்த்த, சந்திரன் மங்கல நாணை எடுத்துப் பரிமளாவின் கழுத்திலே கட்டினான்.

மாதவியால் அதற்குமேல் பந்தலில் நிற்கமுடியவில்லை. நகர முயன்றாள். அப்பொழுது ''மாதவி!'' என்று மெல்லிய குரலில் கூப்பிட்டதைக் கேட்டு திரும்பிப் பார்த்தாள்.

பாட்டு வாத்தியார் சரவணன் நின்றுகொண்டிருந்தார்.

அன்று அவர் கூறிய வாக்கு பலித்து விட்டதே!

அவளால் தாளவே முடியவில்லை. ஆத்திரமும் துக்கமும் ஆட்டிப் படைக்க, ''மாதவி நீ வஞ்சிக்கப்பட்டு விட்டாய். ஏழை என்பதால் ஏமாந்து விட்டாய்...'' என்று யாரோ உரத்துக் கூவியது போன்ற பிரமிப்பில், அவள் உடல் ஆடியது. கால்கள் தள்ளாடின. கண்கள் மறைத்தன.

''என்ன இந்த பெண்ணுக்கு? உடம்புக்கு என்ன?...''

பின்கட்டில் இருந்த வேலையாளில் சிலர் பதறிக் கொண்டு ஓடிவந்தனர்.

சுவரை எட்டிப் பிடிக்கத் தடுமாறிய மாதவி தடாலெனக் கீழே சாய்ந்து விட்டாள்.

அருகில் இருந்த மேஜையின் முகடு நெற்றியின் ஓரத்தில் பலமாகப் பட்டு ரத்தம் தாரையாக வழிந்து தரையில் ஓடியது.

# 7

மகளின் திருமணத்திற்குப் பின்னர் தங்கம்மாள் நோய் வாய்ப்பட்டு படுத்து விட்டாள்.

உணவும், உறக்கமும் கொள்ளாது அவளது உடல் மிகவும் வாடிவிட்டது. உள்ளத்தில் கடுகளவும் அமைதி இருக்கவில்லை.

அவமானத்தால் உணர்வுகள் குன்றி அவள் யாரிடமும் அதிகம் பேசப் பிடிக்காதுநாளின் பெரும்பகுதியைப்படுக்கையிலேயே கழித்துக் கொண்டிருந்தாள்.

அவளைப் பார்வையிட்ட வைத்தியர்கள் பலரும், ''உடம்புக்கு ஒன்றுமில்லை - மனத்தில்தான் ஏதோ தளர்ச்சி'' என்று ஒரு மனதாகக் கூறிவிட்டனர்.

கைலாசம் சிகிச்சையின் பொறுப்பைக் காலத்தின் கையில் விட்டுவிட்டு அமைதியாக இருந்தார்.

திருமணம் நடந்த மறுநாள் காலையிலேயே மணமக்கள் பெங்களூருக்கு உல்லாசப் பயணம் செய்யக் கிளம்பிவிட்டனர். இரண்டுவாரம் சென்றபின்னர் அப்படியே பம்பாய்க்குப் பயணமாகத் திட்டம். கைலாசம் பம்பாயில் ஒரு கிளை தொழிலகத்தை ஆரம்பித்தார், அதை மேற்பார்வையிட்டுக் கவனிக்கும்பொறுப்பை மருமகனுக்குக் கொடுத்துவிட்டார். கிளை நிறுவனத்தின் நிர்வாகி என்ற பெரும் பதவியில் சந்திரன் தன் இளம் மனைவியுடன் பம்பாய் வாசத்திற்குப் புறப்பட்டு விட்டான்.

தேனிலவில் இருந்து திரும்பி வந்து ஒரு இரண்டு நாள் கூடத் தன்னுடன் மகள் தங்கியிருக்கவில்லை என்று தங்கத்திற்கு மிக்க வருத்தம். ''கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தேன். எவனோ ஒருத்தனைக் கண்டதும் பெற்ற தாயை மறந்து விட்டாளே, ஒரு நொடிப் பொழுதில்'' என்று வருந்தினாள். இந்த அதிர்ச்சியை அவளால் தாள முடிய



வில்லை. அழுது புலம்பிக் கண்ணீர் வடித்து, தன் ஆரோக்கியத்தைத் தானே அவள் குறைத்துக் கொண்டாள்.

தன் அருமை மகள், சந்திரசேகரன்மேல் காதல் கொண்டு விட்டாள்—அவனைத்தான் மணப்பேன் என்று அடம்பிடிக்கிறாள் என்ற உண்மையை உணர்ந்த அன்றே அவளது அழுகைப் படலம் ஆரம்பமாகியது. அதிர்ச்சியில் உடல் ஆரோக்கியமும் அழிய ஆரம்பித்து விட்டது.

ஏழைகள் என்றால் தங்கத்திற்கு மிக்க அருவெறுப்பு. அந்தஸ்து இல்லாதவர்களை தூசிக்குச் சமமாகப் பார்த்தாள். எத்தனையோ தடவை தன் ஏழை உறவினர்களை அசட்டை செய்து அனுப்பியிருக்கிறாள். எல்லாவற்றிற்கும் இப்போது அவளுக்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டது.

ஒரு சமயம் நகரத்திலே தெரிந்த ஒரு பெண்மணி, அந்தஸ்தில் அடிமட்டத்தில் இருந்தவள், துணிவுடன் தன் மகனுக்குப் பரிமளாவைக் கேட்க வந்துவிட்டாள். தங்கம்மாள் ஆத்திரத்தில் கொதித்துப் போய்விட்டாள். அவளால் அடக்கவே முடியவில்லை. ''நல்லா இருக்கு. பரிமளாவுக்கு இப்போ கல்யாணத்திற்கு என்ன அவசரம்? வெளிநாட்டுக்குப் போய் பட்டம் வாங்கின மாப்பிள்ளைக்கு தான் கொடுப்பதாக அவள் அப்பா எண்ணிக் கொண்டிருக்கிறார்...'' முகத்தில் அடித்தாற்போல் பேசி, வந்தவளை அவமானப் படுத்தி அனுப்பி வைத்தாள். மஞ்சளும் குங்குமமும் துலங்க மகாலட்சுமி போல் வந்த ஒரு பெண்மணியை மனம் நோகப் பேசி ஆனுப்பிய பாவந்தானா இப்போது அவள் அனுபவிப்பது!

என்னவெல்லாமோ எண்ணி இறுமாந்திருந்த அவளுக்கு வாய்த்த சம்மந்திகளின் நிலையை நினைத்துப் பார்க்கவும் அவளுக்கு வெட்கமாக இருந்தது. அவர்களை உறவினர்கள் என்று கொண்டாடுவதையே வெறுத்தவள் இப்போது சம்பந்தி என்று எப்படி ஒட்ட வைத்துக் கொள்வாள்? சரி சமமாக முன்னறை சோபாவில் அவர்களும் வந்து உட்காரும்படி நேர்ந்து விட்டதே என்று அவள் எண்ணி எண்ணி மனம்

நொந்து போனாள். பரிமளாவின் மாமனார் கிராமத்தில் ஒரு மிராசுதாரிடம் தோட்ட வேலையாளாக இருந்தவர் என்று யாரிடமும் சொல்லிக்கொள்ள முடியுமா?

ஆனாலும் இந்தப் பெண் படித்தவள். காதல் என்று சொல்லிக் கொண்டு முன்பின் யோசிக்காமல் இப்படி ஒரு சகதியில்போய் விழவேண்டுமா? கைலாசத்தின் கவுரவத்தை நாசப்படுத்தி விட்டாளே?

கல்யாணத்துக்கு வந்த அவளுடைய சிநேகிதிகள் பலர், தங்கத்தை பாராட்டவா வந்தார்கள்? துக்கம் விசாரிப்பவர்கள் போல் அல்லவா தங்கள் அனுதாபத்தை ஜாடைமாடையாகத் தெரிவித்தார்கள்.

வெட்கம்! வெட்கம்!!

வெளியில் சொல்லிக் கொள்ளவோ - மற்ற சிநேகிதிகளுடன் தலைநிமிர்ந்து பேசவோ இனி அவளுக்குத் துணிவு ஏது? திருமண வரவேற்பிற்கு வந்த அமராவதி என்ன சொன்னாள்? கத்தியால் குத்திக்கொள்ளாத குறை. சம்பந்தியம்மாள் ஒரு நாட்டுப்புறம் என்பதை எவ்வளவு நாசூக்காகக் கூறிச் சென்றாள்?

கைலாசம் பணத்தைச் செலவழித்து வைத்த லால்குடி சகோதரிகளின் கச்சேரியை வந்த பெண்களில் யாராவது ரசித்துக் கேட்டார்களா? அவர்களது வம்புக் கச்சேரிதான் வான்முகட்டை எட்டும்படி ஒரே இரைச்சலாக இருந்தது

உடலை அலட்டிக்கொண்டு, பணத்தைத் தண்ணீராகச் செலவழித்து இந்தக்கல்யாணத்தில் அவள் தேடிக்கொண்ட பரிசு...அவமதிப்புதான்.

யாரையும் குற்றம் சொல்லிப் பயன் இல்லை! பெற்ற மகளும், கட்டின கணவனுமே அவளுக்கு முதல் எதிரிகளாகி விட்டனர், மற்றவர்களைக் கேட்பானேன்..?

உள்ளூரப் பல எண்ணித் தனக்குள்ளே குமைந்து கொண்டிருந்த தங்கத்தின் கண்களில் இருந்து நீர் தலையணைமீது உருண்டு ஓடியது.



காலடி ஓசை கேட்டதும் நனைந்து விட்ட கன்னங்களைச் சட்டெனத் துடைத்துக்கொண்டு முகத்தைத் திரும்பிக்கொண்டு உறங்குவதுபோல் பாவனை செய்தாள்.

அருகில் கிடந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்த கைலாசம், சிறுது நேரம் மவுனமாக இருந்தார். பிறகு லேசாக இருமிவிட்டு ''தங்கம்! தங்கம்!'' என்று மிகவும் கனிவுடன் அழைத்தார்.

''ம்...!'' முனகினாள், அவள்.

''என்ன நடந்து விட்டது? இப்படி நீ ஓயாமல் அழுது கொண்டு உடம்பைக் கெடுத்துக்கிறே. பரிமளா ஏதாவது தப்புக் காரியம் செய்து விட்டாளா? வீட்டை விட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விட்டாளா?...' அதட்டினார்.

''நான் ஒண்ணும் அப்படிச் சொல்லலையே...'' அவள் குரல் கரகரத்தது.

''சொல்லாட்டாலும் எனக்கு உன் மனசு புரியலையா? இஷ்டமில்லாத இடத்தில் கட்டிக் கொடுப்பதை விட அவளுக்குப் பிடிச்ச இடத்திலே கொடுத்தோம் என்ற திருப்தியோடு நீ இருக்கணும். உனக்கு சந்திரசேகரனை அந்த நாளிலேயே பிடிக்காது...அதனால்தான்...'' காரமாகப் பேசினார்.

தங்கம் பதிலே பேசவில்லை.

''முன்பு அவனுக்கு அந்தஸ்து ஏதும் கிடையாது. இப்போது அவன் நம் வீட்டு மருமகன்னு உயர்ந்து விட்டான். நமக்குப் பின்னாடி இந்த ஆஸ்தி, வீடு, வாசல் எல்லாத்தையும் அனுபவிக்கப் போகிறவன் அவன்தானே! அதனால் அவனை நீ இன்னமும் வெறுப்பதில் அர்த்தம் ஏதாவது உண்டா?...''

''நல்லா அனுபவிக்கட்டுமே, யார் வேண்டான்னாங்க?...'' எரிச்சலை அடக்கிக் கொண்டு மெல்லிய குரலில் தங்கம் சொன்னாள்.

''அந்த விவேகம் வந்திருந்தால் நீ இப்படிக் கூத்தடிக்க மாட்டே. உன் உடம்புக்கு எந்தவிதமான நோயும் இல்லை. எழுந்து நல்லா குளிச்கட்டு, அலங்காரமாக உடுத்திக் கொண்டு, வாய்க்குப் பிடிச்சதைச் சாப்பிட்டுவிட்டு, வெளி வாசல்லே போய் உட்கார்ந்து கொண்டு இரேன். நான் தடுக்கவா செய்கிறேன்...'' குரலைத் தாழ்த்திக்கொண்டு நிதானமாகக் கேட்டார்.

கண்களில் மீண்டும் பொங்கி எழுந்து கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் தங்கம் சட்டென்று துடைத்துக் கொண்டாள்.

சுடச்சுட பதில் கூற அவள் மனதில் ஆயிரம் வார்த்தைகள் அடைந்து கிடந்தன. ஆனால் சொல்லத் துணிவு இருக்க வில்லை.

கைலாசத்தின் மனைவி என்று அவர் கையைப் பிடித்த நாளில் இருந்து அவள் வெளிப்படையாகத் தனது எண்ணங் களை ஒரு பொழுதும் எடுத்துச் சொன்னதே இல்லை. மனத்திற்குள்ளே அவை அனைத்தையும் இறுத்திக்கொண்டு மருகிப் போனவள்.

கைலாசம் எழுந்திருந்தார். ''மாதவி! அம்மாவுக்கு ஏதாவது சாப்பிடக் கொண்டு வந்து கொடு.''

உத்திரவிட்டு நகர்ந்தார்.

வேதனையுடன் முனகிக் கொண்டு திரும்பிப் படுத்தாள் தங்கம்.

காலடியில் வந்து உட்கார்ந்துகொண்ட மாதவி மெல்ல உபசரணையாகத் தங்கத்தின் கால்களைப் பிடித்து விட்டாள்.

விர் என்று ஊதல் காற்று வீசும் குளிர் காலத்தில் அடுப்புக்குள் அணைந்து போன சாம்பல் குவியல் மீது கண்ணுறங்கும் பூனைக் குட்டிக்குத் திடீரென்று அந்த அடுப் பின் மீது நன்றியும் பாசமும் பெருகி வந்துவிடுமாம். ''குர்ர்!...'' என்று தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டு சுருண்டு திரும்பிப் படுத்துக் கொள்ளுமாம் –



இதைத்தான் பூனைக் குட்டி விசுவாசம் என்பார்கள். இதைப்போல் மாதவிபால் தங்கத்திற்கும் கடந்த சில தினங்களாக ஆசையும் அன்பும் ஏற்பட்டிருந்தன.

உள்ளமும் உடலும் புண்ணாகிவிட்டிருந்த அவளுக்கு மாதவியின் பணிவிடை ஆறுதலைக் கொடுத்தது. தன் சொந்தப் பெண்ணிற்கும் இந்தப் பெண்ணிற்கும் எத்தனை வித்தியாசம் என எடை போட்டுக் கொண்டிருந்தாள்.

உயிராகக் கருதி வளர்த்த ஆசை மகள் ஒரு நாள்கூட ''அம்மா, உங்களுக்குத் தலை வலிக்கிறதா?'' என்று உபசாரத்திற்குக்கூட கேட்டவள் இல்லை, ஒரு தம்ளர் பச்சைத் தண்ணீரைக்கூட தாயாருக்குக் குடிக்கக் கொண்டு வந்து கொடுத்ததில்லை.

மகளின் முகம் வாடக்கூட காணச் சகிக்காத தாய் ஓடி ஓடி மகளுக்கு உபசரித்தாள். அன்றுவரை, கணவன் என்று இடையே ஒருத்தன் வந்ததும் ஆசைத் தாயைத் தூசிக்கு சமமாக உதறிவிட்டுப் போய்விட்டாள். போனவள் தன் தந்தைக்குத்தான் கடிதம் எழுதினாளே தவிர, தாயாருக்கு ஒரு கடிதம் கூடப் போடவில்லை.

எண்ணிப் பார்த்த தங்கம்மாளுக்கு வருங்காலம் மிகவும் பயங்கரமாகத்தான் பட்டது.

அரவணையற்ற கணவன், அன்பற்ற மகள், நன்றி யில்லா மருமகன் இவர்கள் நடுவே இனி அவளுக்கு என்ன இருக்கிறது?

துயரம் தாங்க முடியாது அவள் வாய்விட்டு விம்மி அழத் தொடங்கினாள்.

பதறிப் போனாள் மாதவி.

''அம்மா! உடம்பை என்ன செய்கிறது? எங்கே வலிக் கிறது...? சொல்லுங்க...'' முகத்தருகே குனிந்து பணிவாக விசாரித்தாள்.

அருகில் இருந்த துண்டை எடுத்து அவளது முகத்தையும் கண்களையும் மெல்லத் துடைத்துவிட்டாள்.

அன்பான இந்த உபசரிப்பு தங்கத்தின் மனத்திற்கு ஆறுதலாக இருந்தது. மாதவியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்! "எல்லோரும் சேர்ந்து சதி பண்ணி விட்டீங்களே? நீயாவது முன்னாடி என்னைக் கொஞ்சம் எச்சரித்திருக்கக் கூடாதா?...ம்!...,' தீணறினாள்.

மாதவிக்குப் பதில் அளிக்க முடியாத குழப்பம். தங்கம்மாளின் கூந்தலை ஒதுக்கிவிட்டு, ஆடைகளைச் சரிப்படுத்துவதில் முனைந்தாள்.

"அழகா இருக்கான்னு பரிமளா பல்லைக் காட்டி மகிழ்ந்து போறா. அழகு சோறு போடுமா? தானா சம்பாதிச்சு என் பெண்ணை வச்சுக் காப்பாத்த இவனுக்கு என்ன யோக்கியதை இருக்கு? நல்ல சங்கீத ஞானமுன்னு இவள் புகழ்கிறா. ஆபீசிலே உட்கார்ந்து பஜனையா பண்ணப் போகிறான். இவன் பாட்டு இங்கே யாருக்கு வேணும் மொத்தத்திலே பாவிப்பயல் சிரிச்சுப் பேசி என் பெண்ணை மயக்கி விட்டான். கடைத் தெருவுக்குப் போகிறேன் - சிநேகிதியைப் பார்க்கப் போகிறேன்னு சொல்லிவிட்டு பரிமளா காரை எடுத்துக்கிட்டு இந்தப் பயலோட ஊரை சுத்திக்கிட்டிருந்த விஷயம் அப்புறந்தானே எனக்குத் தெரிஞ்சுது... சந்திரனுக்கு இவள் மேலே காதலாம். இருக்காதா பின்னே? கட்டி கட்டியா கைலாசம் அய்யா சேர்த்து வச்சு அழகான பெண்ணையும் கொடுத்தா காதல் வராம... காலராவா வரும்? தாலிச்சரடு முதல் நம்ப செலவு... வெட்கக்கேடு... நினைச்சாலே வயிறு பத்தி எரிகிறது..." ஆத்திரம் தீர வார்த்தைகளை வாரிக்கொட்டினாள் தங்கம்

மாதவிக்கு பதில் அளிக்க ஏதும் இருக்கவில்லை.

ஏமாற்றத்திலே அவளுக்கு வாழ்க்கையே கசந்து விட்டிருந்தது. பல ஆண்டாக அவர்கள் வீட்டு உப்பைத் தின்றவள். அந்தக் கடனைக் கழிக்க நோயாளியாகப் படுத்திருந்த



தங்கத்தை அவள் அன்புடன் கவனித்துக் கொண்டாள். வெறும் கடமை உணர்ச்சி. அவ்வளவுதான்.

ஒரு சில தினங்களில் தங்கம் குணமடைந்து எழுந்துவிட்டாள்.

மாதவியின் கவனிப்பினால் அவள் மிக்க மன அமைதி பெற்றிருந்தாள். முன்னிருந்த அதிகார தோரணை ஒடுங்கிவிட்டிருந்தது. கலகலவென்று வீடு முழுவதும் பரவி நின்ற அந்தச் சிரிப்பும் மறைந்து விட்டது. ஆனால், கண்ணீர் வடித்து அழுது புலம்புவதை அவள் நிறுத்திக் கொண்டாள்.

சில மாதங்களுக்குப் பின்னர் ஒரு நாள் கைலாசம் அவளிடம் சொன்ன செய்திகளைக் கேட்டு அவள் திகிலடைந்து போனாள்,

பம்பாயில் இருந்த மருமகனை தமக்கு உதவியாக சென்னையிலேயே தங்கும்படி வரவழைக்க முடிவு செய்து கடிதம் எழுதியிருந்தார் அவர். பரிமளாவும் அவள் கணவனும் அந்த மாத இறுதியில் பம்பாயில் இருந்து புறப்பட்டு தேவி நிலையத்தில் வந்து குடியேறுவது என்ற ஏற்பாடு.

செய்தியைக் கேள்விப்பட்டதில் இருந்து தங்கம்மாளுக்கு ஒரே மனக் கலக்கம். நஞ்சு போல் அவள் வெறுத்த மருமகனுடன் ஒரே வீட்டில் வசிக்க அவள் சிறிதும் விரும்பவேயில்லை. பாசமுடன் நேசித்த மகள் மீது அவளுக்கு தாங்கொணா மனக் கசப்பு. எத்தனைதான் முயற்சித்தாலும் அவளையறியாது அவளது வெறுப்பு உணர்வு தலை நீட்டி வரும் - வார்த்தைகள் தடித்துவிடும் - வீண் மனத்தாங்கல் சண்டை சச்சரவுகள் ஏற்படும்.

மேலும், பரிமளா துடுப்பைக்கூட தூக்கி அப்பால் போட இசையாத பெரும் சோம்பேறி. வேண்டாத மருமகனுக்கும், அடங்காப்பிடாரி மகளுக்கும், ஓடி உழைக்க இப்போது அவளுக்கு வாலிபமா திரும்பி விட்டிருக்கிறது? இதுவரை துணையாக இருந்து உதவி வந்த மாதவிக்குக்

கல்யாணமாகி புக்ககம் புறப்பட்டு விட்டால், அவனைக் கவனிப்பவர் யார்?...

பலவும் நினைத்து வருந்திய தங்கத்தின் மனதில் திடீரென்று ஒரு யோசனை பளிச்சிட்டது. அது கைகூடி விட்டால்? அவனது பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல முடிவு ஏற்பட்டு விடும் என அவள் நம்பினாள்.

அதே சமயம் மாதவியின் வாழ்க்கையில் ஒரு திடீர் திருப்பம் சரவணன் மூலம் உருவாகிக் கொண்டு இருந்தது. தேவி இல்லத்தை விட்டு வெளியேற உதவக்கூடிய அந்தப் பொன்னான வாய்ப்பை மாதவி முழுமனதுடன் வரவேற்றாள்.

## 8

பரிமளாவும் அவள் கணவன் சந்திரனும் பெற்றோருடன் தங்கியிருக்கப்போகிறார்கள் என்ற செய்தி சரவணன் காதுகளுக்கும் எட்டியது. அவர் மிக்க குழப்பமடைந்து போனார்.

காதல் என்பது ஒரு வகையில் நெருப்புக்கு ஒப்பானது. மாதவி தன் உள்ளத்திலிருந்த எண்ணங்கள் எல்லாவற்றையும் உதறி விட்டாள். சந்திரனை முற்றிலும் மறந்து விட்டாள் என்பதற்கு என்ன ஆதாரம்? நீறுபூத்த நெருப்பாக அவள் உள்ளத்தில் இன்னமும் அவன்மீது அன்பு இருக்குமானால்...

நீடித்து அவள் அந்த வீட்டில் அவர்களுடன் தங்கியிருப்பது முறையா?

காதலித்து ஏமாந்து கண்ணீரில் கலங்கிக் கொண்டிருக்கும் ஒரு தண்டனை அவளுக்குப் போதாதா?

சந்திக்க கூடாதவர்கள் சந்தித்து, நடக்கக் கூடாதவை ஏதேனும் நடந்து விட்டால்...



அந்த ஏழைப் பெண்ணின் வாழ்க்கை சீர்குலைந்து போய்விடுமே...

இதை எப்படித் தடுப்பது?... பலவும் எண்ணித்தவித்துப் போனார் சரவணன்.

ஒருநாள் காலை கௌரி தேவிநிலையத்திற்கு வந்தாள். "அப்பா உன்னைக் கையோடு கூட்டி வரச் சொன்னார். அவசரமாம்" என்றாள் பதட்டமாக.

மாதவி பயந்து விட்டாள். ஒருவேளை வாத்தியார் அய்யாவின் மனைவிக்கு நோய் அதிகமாகி விட்டதோ? பரபரப்புடன் அவள் தங்கம்மாளிடம் ஓடி அனுமதி வாங்கிக் கொண்டு கிளம்பினாள்.

"ஒரு சின்ன விஷயம். அதுக்குத்தான் கூட்டிவரச் சொன்னேன். பயந்துட்டியா?..."மெல்லச் சிரித்தார் அவர். "என் நண்பர் ஒருவர் வெளியிலிருந்து வந்திருக்கிறார். நீ அவருக்குக் கொஞ்சம் வீணை வாசித்துக் காட்ட வேண்டும்."

மாதவிக்கு ஒரே குழப்பம். சரவணனின் விசித்திரமான வேண்டுகோளுக்குப் பொருள் என்ன? அப்படி அவளுக்கு பிரமாதமாக வீணை வாசிக்கத் தெரியாதே?... விழித்தாள் அவள்.

"தெரிஞ்சவரை வாசித்துக் காட்டினால் போதும்மா..." வற்புறுத்தலாக உத்தரவிட்டார் சரவணன்

அவரது ஆணையை அவளால் தட்ட இயலவில்லை. கூடத்துத் தரையில் விரித்திருந்த சமுக்காளத்தில் தயாராக வைக்கப்பட்டிருந்த வீணை அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

அப்பொழுதுதான் அசைப்பில் கவனித்தாள். தூண் ஓரத்திலே கிடந்த பிரம்பு நாற்காலியில் அவள் பார்த்திராத ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான்.

'ஊரிலிருந்து வந்திருக்கும் நண்பர் போலும்...' அதற்கு மேல் அவளது சிந்தனை ஓடவில்லை.

உட்கார்ந்திருந்தவனை நிமிர்ந்து ஒரு முறை பார்க்க வேண்டும் என்ற ஆவலும் அவளுக்கு இருக்கவில்லை.

அவளது உள்ளத்தைக் கவர்ந்த சந்திரன் அவளது அன்பை உதறிவிட்ட பின்பு. அவளுக்கு எந்த ஆடவனும் மனிதனாகவே தென்படவில்லை. உணர்ச்சிகள் மரத்து-உள்ளம் உளுத்து விட்டிருந்த அவளுக்கு சூழ்நிலையைப் பற்றிய அக்கறை குறைந்து விட்டிருந்தது.

அருட்பாவில் இருந்து சரவணனுக்குப் பிடித்தமான "தண்டனிட்டேன் என்று சொல்லடி சுவாமிக்கு நான் தண்டனிட்டேன் என்று சொல்லடி" என்ற கீர்த்தனத்தைத் தோடி ராகத்திலே உருக்கமாக அனுபவித்து வீணையுடன் இசைந்து பாடினாள்.

எ ரே உட்கார்ந்திருந்த வாலிபன் மந்திர சக்தியால் கட்டுண்டவன்போல் சொக்கி அவளையே பார்த்தவண்ணம் சிலையாகி விட்டான்.

ஓரக் கண்ணால் சரவணன் பார்த்து மகிழ்ச்சியடைந்தார். அவருக்கு உள்ளூரப் பெருமை. அதே சமயம் ஏக்கம். அற்புதமாக வாசிக்கும் திறமையுள்ள இந்தப் பெண்ணுக்கு முறைப்படி வீணை சொல்லிக் கொடுக்கக் கொடுத்துவைக்கவில்லையே என்ற வருத்தம்.

"நல்லா வாசிக்கிறேம்மா. என்ன இனிமையான குரல்... பேஷ்! பேஷ்!..." உணர்ச்சி வசப்பட்டு உரத்த குரலில் பாராட்டினார்.

"ரொம்ப நல்லா வாசிக்கிறாங்க— வீணைக்கேற்ற குரல்" பாராட்டிய அந்த வாலிபனை அப்பொழுதுதான் அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

திடீரென்று அவள் நெஞ்சு கலவரத்தில் படபடத்தது. இப்படித்தானே அன்றொரு நாள் சந்திரன் அவளது பாட



லைக் கேட்டுப் புகழ்ந்து பாராட்டினான். அந்த துன்ப நினைவு கண்களைப் பனிக்கச் செய்தது.

சமாளித்தபடி கரம் குவித்து அந்த வாலிபனுக்குத் தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு விர் என்று உள்ளே சென்று விட்டாள்.

கௌரி தயாரித்துக் கொண்டு வந்த சிற்றுண்டியையும் காப்பியையும் உண்டு, சிறிது நேரம் உரையாடிவிட்டு, அவன் புறப்பட்டுவிட்டான். அவனை வழியனுப்பிவிட்டு உள்ளே வந்த சரவணன் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"காப்பி பலகாரம் சாப்பிட்டியா அம்மா..." ஆதரவுடன் கேட்டார்.

அவரது ஆதரவு, பேச்சு, வேண்டுகோள் எல்லாமே மாதவிக்கு மிக்க குழப்பமாக இருந்தன. "ஆமாம்" என்று தலையை அசைத்தாள்.

"இப்படி வாம்மா. உன்கிட்ட கொஞ்சம் தனிமையில் பேசணும்" உரிமையுடன் உத்தரவிட்டபடி அவர் சேமி அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டார்.

மெல்ல பின் தொடர்ந்த மாதவி கலவரத்துடன் சற்றுத் தொலைவில் தரையில் வந்து எதிரே உட்கார்ந்து கொண்டாள்.

"நீ அந்த வாலிபனை பார்த்தியே, அவனைப்பத்தி என்ன நினைக்கிறே? அவன் என்னுடைய சினேகிதனின் மகன். ரொம்ப நல்ல பிள்ளை. அவனுக்கு உன்னைப் பிடிச்சுப் போச்சு. உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறான். உன் அபிப்பிராயம்..." நிறுத்தினார் சரவணன்.

திடுக்கிட்டுப் போனாள் மாதவி- திடீரென்று அவளுடைய கண்களில் நீர் வெள்ளமாகப் புரண்டது. நெஞ்சு துன்பத்தால் விம்மியது. "கல்யாணமா? எனக்கா...? இனி எனக்கு வாழ்வு இருக்கிறதா?" வேதனை தாளாது திணறினாள்.

''இதென்ன முட்டாள் தனமான பேச்சு! கண்ணீரைத் துடைச்சிக்கோ. நீயும் வாழ வேண்டியவள். மங்களமாக சகல நலனுடன் வாழ உனக்கும் எல்லா உரிமையும் உண்டு. இப்போ என்ன நடந்துட்டது? உனக்கு ஏன் இந்த வெறுப்பு?'' அன்பும் கோபமும் கலந்த குரலில் கடிந்து கொண்டார் அவர்.

''ஒருவரிடம் உள்ளத்தைக் கொடுத்தபின்னர் இன்னொருத்தரை மணந்துகொண்டு வாழ்வது தவறு இல்லையா?'' விம்மினாள் மாதவி.

''அப்படியானால் சந்திரன் செய்தது மட்டும் தவறு இல்லையாம்மா? ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதியா? ஒழுக்கம் என்பது இருவருக்கும் பொதுவான விஷயம். இளமைப் பருவத்திலே முதல் முதலாகச் சந்தித்த வாலிபனைக் கண்டு மனம் தடுமாறினாய், நீ—அவ்வளவு தானே? காலத்தை ஒட்டி ஒழுக்கம் என்பதற்கு விளக்கம் கொடுக்க வேண்டியிருக்கிறது. வயது வந்த ஓர் ஆண் பிள்ளையோடு பேசினால்கூட தப்புன்னு நினைக்கிறகாலம் போச்சு. ஆணுக்கு நிகர் பெண் என்று சரிசமமாக இப்போ படிக்கத் துவங்கிவிட்ட பெண்கள், வேலைக்குப் புறப்பட்டு விட்டாங்க... அதனாலே, ஒருத்தனைப் பார்த்து மயங்கி—கல்யாணம் செய்து கொள்ளலான்னு முடிவு செய்து, அது கூடிவராவிட்டால் அந்தப் பெண் குற்றம் செய்தவளாகக் கருத முடியுமா? அப்படி நினைக்க ஆரம்பிச்சா, சினிமா கதாநாயகனைப் பார்த்து அழகா இருக்கிறானேன்னு வியப் படைகிற பெண்கள் எல்லாம் ஒழுக்கம் இல்லாதவர்களாகி விடுவாங்க. நீ சுத்த பத்தாம் பசலியாக இருக்கிறாயே, அம்மா...'' படபடவென்று சிறிது கோபத்துடன் பேசினார்

விழிகளில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண் டாள் மாதவி. ''உள்ளம் அழிந்து விட்டால், அதை எப்படி மறுபடி சீராக்கிக் கொள்ள முடியும்?'' துணிவுடன் கேட்டாள்.



''காலம் பலவித அற்புதங்களைச் செய்யமுடியும். சிந்திய பாலை எண்ணி சிந்தனையைச் சிதற விடுவதில் லாபமேயில்லை. நேற்று வடித்த சோறு இன்னிக்குப் பழைய‌து. நேற்று நடந்த சம்பவம்— நடந்து போன கதை. நேற்று— அதற்கு முதல் நாள்—போன வருடம் இப்படின்னு கடந்து போனதை நினைச்சு வாழ வேண்டும்னு இருந்தால் மனிதனுக்கு தலைக்குப் பின்புறத்திலே ஆண்டவன் கண் களை வச்சிருப்பார். முகத்திலே நமக்கு ஏன் கண்கள்? முன்னே இருக்கும் வாழ்வின் பாதையைப் பார்த்துக் கொண்டு நாம் மேலே நடக்க வேணுங்கிறதுக்குத்தான்'' என்றார் சரவணன்.

அவள் தலை குனிந்தபடி இருந்தாள்.

''மாதவி, நான் சொல்றதைக் கேள். பூபதி நல்ல பிள்ளை. அவனை மணந்து கொள்ள ஒப்புக்கொள்— எல் லாத்தையும் நானே முன் நின்று முடிச்சிறேன். உன் வருங் காலம் சுகமானதாக இருக்கும்'' மனம் நெகிழ்ந்து வற்புறுத் தலாகப் பேசி முடித்தார் சரவணன்.

மாதவி சிறிது நேரம் மவுனமாக இருந்தாள். பின்னர் அவர் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். நெஞ்சை அடைத்த துன்ப உணர்வை விழுங்கிக் கொண்டாள். ''தந்தைக்கு ஒப்பாக என்மேல் அன்பு வச்சிருக்கும் நீங்கள் நன்மைக்குத் தான் சொல்றீங்க உங்கள் வார்த்தைக்கு நான் கட்டுப்படு கிறேன்...'' என்றாள் ஒரு மூச்சுடன்.

ரொம்ப சந்தோஷம், அம்மா. உடனடியா கைலாசம் அவர்களைக் கலந்துகொண்டு எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விடுகிறேன். வருகிற வாரத்திலேயே ஒரு முகூர்த்த நாள் இருக்கு. அன்னிக்கே நடத்தி விடலாம்னு என் யோசனை. பரிமளாவும் அவள் கணவனும் வருமுன் நீ அந்த வீட்டை விட்டுக் கிளம்பி விடணும்னு என்திட்டம். அவங்களோட நீ இருப்பது இனி நல்லா இருக்காதம்மா, புரிகிறதா?'' என்று சரவணன் கேட்டார்.

மாதவிக்குப் புரிந்தது.

சிறிது நேரம் அங்கே தங்கி காமாட்சியிடம் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்துவிட்டு மெல்லத்தான் வீடுதிரும்பினாள்.

•

அதே சமயம் தேவி நிலையத்தின் பின் கட்டில் வந்து நின்ற தங்கம்மாளுக்கும் ஒரு யோசனை தோன்றியது.

கிணற்றடியில் நின்று கொண்டிருந்த சிவகுருவை அவள் ஏற இறங்கப் பார்த்தாள். உடனேயே அவள் உள்ளத்திலே ஒரு திட்டம் உதயமாகியது. அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியை உடனடியாக சுடச்சுட முடித்துவிட வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு.

''சிவகுரு! இங்கே வாப்பா...'' கனிவான குரலில் அழைத்தாள்.

அடித்துக் கட்டிக் கொண்டு ஓடிவந்து நின்றான், அந்த அப்பாவிப் பையன்.

''இப்படி உட்கார். நாள் முழுவதும் ஏதாவது செய்து கிட்டு உடம்பை ஏன் அலட்டிக்கிறே? சமையல் மேடை மேலே உனக்கு காப்பியும் இட்லியும் எடுத்துவச்சிருந்தேனே சாப்பிட்டியோ...?'' அனுதாபத்துடன் விசாரித்தாள்.

''எப்பவோ எடுத்துச் சாப்பிட்டேனே...'' பற்களைக் காட்டிக்கொண்டு மகிழ்ச்சியுடன் பின்கட்டுத் தரைமீது அவள் அருகே உட்கார்ந்து கொண்டான்.

''உன் உடம்புகூட அரை உடம்பாப் போச்சே. முன் போல நீ நல்லா சாப்பிடறதில்லை. நான் நோயாகப் படுத்ததிலிருந்து நீ இருக்கியா போனியான்னு கவனிக்க இங்கே நாதியத்துப் போச்சு. ம்! உனக்குன்னு ஒருத்தி இருந்தா அந்தக் கதையே வேறே. உனக்கும் வயசாகுதே. இப்படியே இருக்கமுடியுமா? நானும் ஐயாவும் நேத்துமுழுக்க உன்னைப்



பத்திதான் பேசிக்கிட்டிருந்தோம். உனக்கு சீக்கிரம் கல்யாணம் கட்டி வச்சுடணும்னு அய்யா சொல்லிகிட்டிருக்கிறார்...'' அவள் குரல் குழைந்தது.

''கல்யாணம்... அது... இப்போ எனக்கு என்னத்துக்கு...'' கூச்சத்துடன் தலையைச் சொரிந்து கொண்டான் சிவகுரு.

''பயப்படாதே. கல்யாணமானதும் நீ உன் பெண்ஜாதியுடனே வீட்டோடயே எங்களோடயே எப்பவும் போல இருக்கலாம். பெத்த மகனைப்போல உன்னை நினைச்சுத்தான் சொல்றேன். தோட்டத்து மூலையிலே கட்டி முடிச்சிருக்கிற அவுட் ஹவுசிலே உங்களைக் குடிவச்சுடறேன். நான் இருக்கிற வரைக்கும் நீயும் உன் பெண்ஜாதியும் அதுலே நிம்மதியாக இருக்கலாம்...''

திறந்து கிடந்த பின்கட்டுக் கதவு வழியே வெளியே தெரிந்த வானத்தை உற்றுப் பார்த்தான் சிவகுரு.

''மாதவிக்கு முதலில் ஆகட்டும். அப்புறம் பின்னால் என்னைப் பத்தி...'' கூச்சத்துடன் மெல்லச் சிரித்தான்.

''இரண்டு பேருக்குமாகத்தான் ஒரு முடிவு பண்ணி ஐயா என்கிட்ட இதைச் சொன்னார். மாதவி நம்ப வீட்டிலே வளர்ந்த பொண்ணு. உன்னையும் நாங்க சிறு பிள்ளையில் இருந்தே சொந்த மகன்போல வளர்த்துட்டோம். வயது காலத்திலே உங்க ரெண்டு பேரையும் நாங்கள் எப்படிப் பிரிஞ்சு இருக்க முடியும்? அதனாலே மாதவியை உனக்கே கட்டிக் கொடுத்து, இங்கேயே எங்களோட வச்சுக்கிறதுன்னு தீர்மானம் பண்ணிட்டோம்.''

உற்சாகமாகச் சொன்னாள், தங்கம்மாள். ஆனால் தீயை மிதித்தவன்போல் சிவகுரு திகைப்புடன் எழுந்து நின்றான். ''முடியாது அம்மா முடியாது...'' ஆத்திரத்துடன் அழுத்தமாகச் சொன்னான்.

தூக்கி வாரிப் போட்டது தங்கத்திற்கு. இந்த பதிலை அவள் சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை. ''சிவகுரு; மக்குப்

பயலே! உன்னைப்பத்தி என்னடா நினைச்சுக் கொண் டிருக்கே. மாதவியைவிட உனக்கு ஒரு ரம்பை வருவான்னு நினைப்பாடா— மடச்சாம்பிராணி...'' ஆத்திரத்துடன் படபடத்தாள்.

''ஒருத்தியும் வராவிட்டால் போகட்டும். பரவா யில்லை. நான் மாதவியைக் கட்டிக்கிறது நடவாத காரியம். ஐயாவோ, நீங்களோ இந்த விஷயத்திலே என்னை ஒண் ணும் வற்புறுத்த முடியாது...''பிடிவாதமாகச் சொன்னான்.

''ஏன்? உன் முகரக்கட்டைக்கு அவள் அழகு போதாதோ!'' கோபத்துடன் தங்கம் உறுத்து விழித்தாள்.

''அழகைப்பத்தி இப்ப யார் பேசினாங்க? இப்ப உறவைப் பத்திதான் பேச்சு. மாதவியை நான் தங்கச்சியாக நினைச்சு கிட்டிருக்கிறேன். இந்த வீட்டுக்கு அது வந்த நாள் முதலா எனக்கு அதே நினைப்புத்தான். எந்த அண்ணன் தங்கச்சியைக் கட்டிக்கொள்வான்?...''

''உன் கூடப் பிறந்தவ யாரு? தங்கச்சியாம் தங்கச்சி! என்னடா பெரிய நாடகமாடறே?'' மிரட்டினாள் தங்கம்.

''உங்கள் வயிற்றில் பிறந்தேனா நான்? என்னைப் பெத்த பிள்ளையைப் போல் பாவிக்கிறேன்னு சொன்னீங் களே! பெத்தால்தான் பிள்ளையான்னு நியாயம் பேசி னீங்க - அதுபோல கூடப் பிறந்தால்தான் தங்கச்சியா? உங்களுக்கு ஒரு நியாயம் எனக்கு ஒரு நியாயமா?...'' என்று மில்லாத துணிவுடன் காரமாகக் கேட்டுவிட்டு, விர் என தோட்டத்திற்குள் சென்று விட்டான், சிவகுரு. ''அட பாவிப்பயலே!...'' முனகிய தங்கம் அப்படியே இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

**திருமண விஷயமாக அவள் போடும் திட்டங்கள் யாவும் இப்படிப் பொடிப் பொடியாகவா போகவேண்டும்?**

# 9

திம்மனூர் மிகவும் சிறிய கிராமம். ஜெயின்ஜெல்லையில் இருந்தது அவர்கள் வசித்த வீடு.

மிகவும் சிறிய ஓட்டுக் கட்டிடம். பூபதி வேலை பார்த்து வந்த முதலாளிக்குச் சொந்தமான வீடு அது. முதலாளிக்கு அவன் மீது நம்பிக்கை - பற்றுதல். மிகக் குறைந்த வாடகைக்கு அந்த வீட்டை அவர்கள் வசிப்பதற்கு அவர் கொடுத்து இருந்தார்.

குடிவந்த புதிதில் அது வசிப்பதற்கு சிறிதும் லாயக்கற்ற தாகத்தான் இருந்தது. மாதவிக்கு அதைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை. ஆனால், வெகு விரைவில், பூபதி அந்த வீட்டைச் செப்பனிட்டு மிகவும் அழகானதாக மாற்றி அமைத்து விட்டான்.

சிறிதும் அயராத உழைப்பாளி அவன். ஓய்வு நாட் களை சிறிதும் வீணாக்காது தானே பழுது பார்க்கத் தொடங்கினான். ஓடுகளை மாற்றி - தரையைச் செப்ப விட்டு - சுவர்களுக்குக் காரை பூசி - வெள்ளையடித்து - கூடத்திலே புதிய சன்னலை வைத்து வீட்டின் தோற்றத் தையே விரைவில் மாற்றி விட்டான். புழக்கடையில் இருந்த புதர் மறைந்து கீரைப் பாத்தியும், மூங்கில் பந்தல்மீது படரத் துடிக்கும் அவரைக் கொடியும் பசுமையாக விளங் கின.

அந்தி சாயும்நேரம். அன்று மாதவி தோட்டத்திற்குள் வந்து நின்றாள். பூபதியின் மனைவியென்று அவள் வாழ் வைத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. புழக்கடை திண்ணையை அடைத்த மூங்கில் தட்டி மீது படர்ந்து கிடந்த சம்பங்கிக் கொடி முழுவதிலும் கொத்து கொத்தாகப் பூக்கள் காற்றுடன் கலந்து கம் மென்று வீசிய மலரின் மணம் மாதவியின் நினைப்பை எங்கோ இழுத்துக் கொண்டு ஓடியது.

புதிய மனைவியுடன் வாழ்க்கையைத் தொடங்கிய பூபதி மறுநாளே தோட்டத்தின் ஒரு பகுதியை கொத்தி சமனாக்கி, தன் கரத்தினால் சம்பங்கிச்செடியை நட்டான். மாதவி அவன் சொற்படி ஒரு செம்புத் தண்ணீரை முகந்து கொண்டு வந்து பாத்தியில் வார்த்தாள். "நாம் இருவரும் நட்டு நீர் வார்த்துப் பயிராக்கும் இந்தக் கொடி ஒரு வருட காலத்திற்குள் நம் வீட்டுக் கூரையின் பெரும்பாகத்தை வியாபித்துக் கொண்டு விடும். கொத்துக்கொத்தாக மலரும் பூக்களின் மணம் கூடத்திற்குள் வந்து தவழும்...அப் போது?..." என்று சொல்லிவிட்டு மனைவியின் அருகே நெருங்கி அவள் முகவாயை நிமிர்த்தி, "மாதவி!"-என்றான் ஆசையுடன். "அப்போது நம் செல்வ மகன் கூடத்துத் தரையில் நீந்திக்கொண்டு கிடப்பான்...இல்லையா?... குழந்தைகள் என்றால் எனக்குக் கொள்ளை ஆசை. நமக்கு விரைவில் ஒரு மகன் பிறந்தால்..."

அவன் பேசி முடிக்குமுன் அவனது பிடியினின்று நழுவி வேகமாக உள்ளே ஓடிவிட்டாள், மாதவி.

கூடத்துத் தூண்மீது சாய்ந்துகொண்டு நின்ற அவளது உள்ளத்தை உணர்ச்சி, புயலாக உலுக்கியது - நெஞ்சம் வெடித்துவிடும் போல் அழுகை விம்மலாகப் புறப்பட்டு உடம்பைக் குலுக்கிக் கொண்டு வந்தது.

"என்ன மாதவி! என்ன சொல்லிவிட்டேன்?" பதற்றத் துடன் கேட்டபடி பூபதி அருகில் ஓடி வந்தான்,

பதில் சொல்லாது தூணின் மீது முகத்தைப் பதித்துக் கொண்டு அவள் குமுறிக் குமுறி அழுதாள்.

தானே மனம் ஆறட்டும் என்று பொறுமையுடன் அவன் நின்று கொண்டிருந்தான்.

பின்னர் அவளுடைய கைகளைப் பற்றி அருகில் இருந்த கட்டில் மீது உட்காரச் செய்தான். கலைந்து விட்டிருந்த கூந்தலை சீர் செய்தான். தன்மேல் துண்டினால் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டான். உள்ளே சென்று ஒரு



தம்ளரில் குடிக்க நீர் முகந்து எடுத்து வந்து கொடுத்து உபசரித்தான்— பின்னர் அருகில் வந்து அமர்ந்து கொண் டான். மெல்ல அவளுடைய கரத்தைப் பற்றி தன் கன்னத் துடன் சேர்த்துக் கொண்டு மெல்லிய குரலில் பேசினான்.

"மாதவி! என்னத்துக்கம்மா அழுதே? நான் ஏதாவது தவறு செய்து விட்டேனா? உன் மனசு நோக ஏதாவது செய்து விட்டேனா? என் சிறிய தாயார் இறந்த பின்னால் நான் கல்யாணம் என்கிற நினைப்பே இல்லாமல் வெகுகாலம் ஒண்டிக்கட்டையாக இருந்து விட்டேன். சரவணன் அய்யா எங்களுக்கு மிகவும் வேண்டியவர். அவர் வற்புறுத்தலுக்கு இணங்கி சென்னைக்குப் பெண் பார்க்க வந்தேன். பல இடத்தில் பார்த்தேன்—எனக்கு ஒருத்தியை யும் பிடிக்கவில்லை. ஏமாற்றத்தோடு ஊர் திரும்ப நினைத்த போதுதான் கடைசியாக உன்னைப் பார்த்தேன். உண்மையைச் சொல்கிறேன். முதல் முதலாக என் மனசைச் கவர்ந்த பெண் நீ ஒருத்திதான்."

அவள் குனிந்த தலை நிமிராமல் அமர்ந்து இருந்தாள்.

"உன்னைப் பற்றி சரவணன் அய்யா ரொம்பவும் சொன்னார். சின்ன வயதிலேயே உனக்கு ஏற்பட்ட கஷ்டத்தையெல்லாம் கேட்டு என் மனம் ரொம்ப கரைஞ்சு போச்சு. உன்னைக் கல்யாணம் செய்து கொண்டு - ஒரு குறைவும் வைக்காமல் - சுகமாக உன்னை வாழவைப்பது என்று அப்பவே முடிவு செய்துவிட்டேன். எனக்கு அழகாக ரொம்பப் பேசத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் உண்மை...என்னால் முடிஞ்சவரை உன்மனம் கோணாமல்- உன் தேவைகளைப் புரிஞ்சுகொண்டு உன்னை சந்தோஷ மாக வச்சிருக்க முயற்சிப்பேன்...ஆமாம் இப்போ சொல்லு ஏன் அழுதே?" மிகவும் கனிவாகக் கேட்டான்.

அதுவரை அடங்கியிருந்த மாதவியின் கண்ணீர் மீண்டும் பெருக்கெடுத்துக் கொண்டு விட்டது. அவனது கனிவான மொழிகள் நெஞ்சை நெகிழச் செய்யவே அவள்

உணர்ச்சிவசப்பட்டு அவன் தோள் மீது சாய்ந்து கொண்டு மீண்டும் விம்மத் தொடங்கிவிட்டாள்.

''மாதவி! உன் மனம் நோகப் பேசிவிட்டேனா என்னை ரொம்பக் குழப்பாதே...'' வேதனையுடன் அவன் கெஞ்சினான்.

கண்களைத் துடைத்துக் கொண்டாள் அவள்.

என்ன மதியீனம்! தூய தன் அன்பை அவளது காலடியில் வைத்துப் பணியக் காத்திருக்கும் கணவனுக்கு அவள் கண்ணீரையா பரிசாகத்தர வேண்டும்?... மனச்சாட்சி அவளைச் சாடியது.

''இத்தனை அன்பைச் சொரியும் உங்களுக்கு நான் அருகதையானவளா என்று நினைத்துக் கொண்டேன்... மனத்தில் ஒரு சந்தேகமும் பயமும் ஏற்பட்டது. அழுகை வந்துவிட்டது'' திணறினாள்.

''நீ என் அன்புக்குப் பூரண அருகதையுடையவள்னு எண்ணியதால்தானே உன்னை மணந்து கொண்டேன்? என்னைவிட நீ பலவயது சிறியவள். உணர்ச்சிகள் வளர்ச்சி பெற்று பண்படையாத பருவத்துப் பெண் நீ. உலக அனுபவத்தில் அடிப்பட்டு ஊறிய கட்டை நான். என்னைப் புரிந்து கொள்ள உனக்கு நான் நிறைய அவகாசம் கொடுப்பேன் - பயப்படாதே. அழுகையை நிறுத்திவிட்டு கொஞ்சம் சிரி பார்க்கலாம்'' அன்புடன் அவளுடைய கன்னங்களை வருடினான்.

இரண்டு ஆண்டு காலத்தில், பூபதியுடன் உறவாடி வாழ்ந்த அந்த இனிய நாட்களில்,மாதவியின் மனம் மிகவும் மாறிவிட்டது.

நிழல்போல் எழுந்து, புயலாகச் சீறி அவள் உள்ளத்தை வேதனை செய்த சந்திரனின் நினைவு அவள் மனதில் இருந்து அடியுடன் மறைந்தோடி விட்டது. ஆதரவு காட்டி அன்பைச் சிந்திய கணவன் மீது ஆரம்பத்தில் ஏற்பட்ட மதிப்பு உணர்வு படிப்படியாக வளர்ந்து பாசமாக மாறி .



பக்தியாகப் பரிணமிக்கத் தொடங்கியது என்றால் மிகையில்லை.

பூபதி பார்ப்பதற்கு மனதைக் கவரும் பேரழகன் அல்ல. சற்று பருத்த மாநிற மேனி. நல்ல உயரம். சுருண்டமுடி - கனிவு மிகுந்த கண்கள். பார்த்துப்பார்த்துப் பழகியதாலோ என்னவோ அந்தக் குறுகிய காலத்தில் அவன் அவளுக்குக் கண் நிறைந்த கணவனாக விளங்கினான். மாதம் அவன் கொண்டு வந்த இருநூறு ரூபாய் சம்பளத்தில் அவர்கள் நிறைவும் இன்பமுமாகத்தான் வாழ்ந்து வந்தனர்.

அவள் கணவன் வேலை செய்து வந்த ஜவுளிக்கடைக்கு சரக்கு எடுத்து வர சென்னைக்குச் சென்றிருந்தான். மறுநாள் காலை திரும்பிவிடப் போவதாக அவனிடமிருந்து கடிதம் வந்திருந்தது. மறுநாள் காலை அவசரமாக எழுந்து குளித்து விட்டு—வேறு ஆடை அணிந்து கொண்டு வாரி முடித்து கூந்தலில் இரண்டு சம்பங்கிப் பூங்கொத்தை ஒடித்து செருகிக் கொண்டாள். அவனுக்குப் பிடித்தமான உணவு வகைகளை சீக்கிரம் சமைத்து முடித்துவிட்டு, அவனது வருகைக்காக வாயிலில் வந்து அடிக்கொரு தடவை எட்டிப் பார்த்த வண்ணம் நின்றாள்.

கைலாசம் வீட்டுக்கு பூபதி போயிருப்பானா? தங்கம் அவனை வரவேற்று உபசரித்தாளா?பரிமளா எப்படி நடந்து கொண்டாள்? என்ற கவலை மாதவியை உள்ளூர வாட்டிக் கொண்டு இருந்தது.

தான் எண்ணியபடி நடக்காது மாதவியைப் பூபதி மணம் செய்து கொண்டதைத் தங்கம் அவ்வளவாக விரும்பவில்லை. ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. கைலாசம் மனமுவந்து மாதவிக்குக் கல்யாணப் பரிசாக மூவாயிரம் ரூபாய் கொடுத்தார்.

தங்கம்மாள் தன் பங்கிற்கு அவளுக்குச் சீர் என்று எதுவுமே செய்யவில்லை. ஆரம்பத்திலே இரண்டொரு

கடிதங்கள் எழுதி விசாரித்த தங்கம்மாள் நாளடைவில் மாதவியை வேகமாக மறந்துவிட்டாள்.

காலையில் ஊர் திரும்பியவன், உடனே கடைக்குப் போய் விட்டான். இரவு உணவிற்குப் பின்னர்தான் கூடத்தில் அமர்ந்துகொண்டு வெற்றிலையை மென்று கொண்டு அவன் ஊர்க் கதைகளைப் பேச முடிந்தது.

''தங்கம்மாளுக்குத் திருச்சி வெற்றிலை பிடிக்கும் என்று நீ சொன்னது ஞாபகத்தில் இருந்தது. பத்து கவுளி வெற்றிலையும் ஒரு தார் ரஸ்தாளிப் பழமும் இங்கிருந்து வாங்கிக்கொண்டு போயிருந்தேன். நான் போன சமயம் கைலாசம் வெளியே கிளம்பிக்கொண்டு இருந்தார். என்னை அன்பாக வரவேற்றுப் பேசிவிட்டுத்தான் வெளியே போனார். தங்கம்மாள் என்னை வாசலிலேயே உட்கார வைத்துப் பேசி அப்படியே அனுப்பி விட்டாங்க. உபசாரத்துக்குக்கூட சாப்பிடுறீங்களா என்று கேட்கவில்லை. அது சமயம் பெரிய காரில் வந்து இறங்கிய வீட்டு மருமகன் என்னை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. உன் சகோதரி பரிமளா மாடியைவிட்டு கீழே இறங்கவில்லை...இரண்டு வருடம் கழித்துப் போன மருமகனுக்கு இதுதான் கிடைச்ச வரவேற்பு...'' சிரித்தான் அவன்.

மாதவியின் உள்ளம் பதைபதைத்தது. ஆத்திரமும் அழுகையும் நெஞ்சை அடைத்தன. அவளுடைய பெற்ற தாயோ - தந்தையோ இருந்தால் பூபதியை இப்படியா வரவேற்று இருப்பார்கள்? கண்களில் ததும்பிய நீரை கஷ்டத்துடன் அடக்கிக் கொண்டாள் உள்ளத்திலே அலைமோதிய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''அண்ணாவைப் பார்க்கலையா? சரவணன் ஐயாவைப் பார்த்தீங்களா?'' பேச்சை மாற்றும் போக்கில் விசாரித்தாள்.

''பார்க்காமல் விடுவேனா? உன் அண்ணன் சுகமாக இருக்கிறார். யாரை மறந்தாலும் சரவணன் ஐயாவை



மறப்பேனா?...'' கேட்டுவிட்டுக் கண்களை சிமிட்டிக் கொண்டு சிரித்தான். பின்னே உள்ளே எழுந்து சென்று பெட்டியைத் திறந்து ஒரு சிறு பேழையை எடுத்துவந்தான்.

''என்ன கொண்டு வந்தீங்கன்னு நீயாகக் கேட்பாய்னு இதுவரை காத்திருந்தேன். நீ கேட்க மாட்டேங்கிறீயே. ஊரிலிருந்து ஏதாவது பரிசு உனக்குக் கொண்டு வந்திருப்பேன்னு உனக்குத் தெரியும், நீ படு கள்ளி!'' கொஞ்சலாகக் கூறியவண்ணம் பேழையிலிருந்து முத்து மோதிரத்தை எடுத்து அவளுடைய இடது கைவிரலில் அணிவித்தான்.

''ஒரு கடையில் இதைப் பார்த்தேன்; எனக்கு ரொம்ப பிடித்துவிட்டது. கல்யாணத்தின்போது உனக்கு நான் நகை ஏதும் போடலையேன்னு மனசிலே ஓர் உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது. அதனால் விலையைப் பற்றி யோசிக்காமல் சட்டுனு இதை வாங்கிட்டேன். உனக்குப் பிடிச்சிருக்கா?...''

''உங்கள் பூரண அன்பை எனக்குக் கொடுத்திருக்கிறீங்களே, அதற்கு மேலே என்ன வேணும்? நகை...புடவைகளுக்கு நான் என்னிக்குமே அதிகம் ஆசைப்பட்டதில்லை''

''இது என் அன்புப் பரிசு. நகை ஆசை இல்லாவிட்டாலும் எனக்காக ஏற்றுக்கொள். ஆமாம் இதற்குப் பதிலாக நீ என்ன பரிசு எனக்குக் கொடுக்கப் போகிறே?'' வேடிக்கையாகக் கேட்டபடி அவளை மெல்ல அணைத்துக் கொண்டான்.

நாணத்தால் முகம் சிவந்து போனாள் மாதவி. அவனைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்தாள். ''உம்! நானும் ஒரு பரிசு கொடுக்கத்தான் போகிறேன்'' வெட்கத்துடன் முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள்.

''இப்பவே கொண்டா, பார்க்கலாம்'' பிடிவாதம் கலந்த வேடிக்கைக் குரலில் வினவினான் அவன்.

"அப்படி அவசரப்பட்டால் முடியுமா? இன்னும் சில மாதங்கள் கழித்து அப்பாவுக்கும் மகனுக்கும் விளையாட நேரம் போதாதே."

"உண்மையாகவா மாதவி!" பூபதிக்கு மகிழ்ச்சி கட்டுக் கொள்ளவில்லை.

எழுந்து உள்ளே ஓட முயற்சித்த அவளை இழுத்துத் தன் அருகே அமர்த்திக்கொண்டு ஆர்வத்துடன் இறுகத் தழுவிக் கொண்டான்.

இன்பத்தின் சுமையைத் தாளாது இருவரின் இதயங்களும் வேகமாகத் துடித்தன.

## 10

அன்று மறுநாள் பொங்கல் புது நன்னாள்.

காலைக் கதிரவனின் பொன் ஒளி வீசிக்கொண்டிருந்த கூடத்துத் தரைமீது வாழை இலையை பரப்பிச் சூடான இட்லிகளை கணவனுக்குப் பரிமாறிக் கொண்டு இருந்தாள் மாதவி.

இட்லியைப் பிட்டு, சூடுபோக வாயால் ஊதி, மடிமீது வைத்துக் கொண்டிருந்த ஆசை மகன் மணிவண்ணனின் வாயில் ஊட்டி மகிழ்ந்து கொண்டு இருந்தான் பூபதி.

சின்னஞ்சிறு விரலால் தந்தையின் கழுத்தை வருடிக் கொண்டிருந்த அந்தப் பொல்லாத பையன் தன் ஓரக் கண்ணால் தாயைப் பார்த்து மெல்ல சிரித்தான்.

இட்லிமீது நெய்யை வார்த்துவிட்டுத் தலைநிமிர்ந்தாள் மாதவி. "பார்த்தீங்களா, உங்கள் மகனை? எங்கப்பா இட்ட கேட்டா எனக்கு எதுவும் கொடுப்பார்னு சவால் விடுறான். இப்பவே பிடிச்ச செல்லம் கொடுத்து கெடுத்து வையுங்க. பிறகு சமாளிக்க இருவரும் கஷ்டப்படுவோம்..." அன்புடன் கடிந்து கொண்டாள்.



"என்னசெல்லம் கொடுத்தாலும் என் கண்ணுப்பயல் ஒரு நாளும் கெட்டுவிட மாட்டான். அப்படியே அவன் அப்பாவாக்கும்...இல்லையாடா கண்ணா...அம்மாவுக்கு தான் உன்னைக்கொஞ்சுவதைக் கண்டு பொறாமைபோல்!" வேடிக்கையாகப் பேசிய வண்ணம் மகனை நெஞ்சோடு ஆரத் தழுவிக் கொண்டான் அவன்.

ஆரோக்கியத்தின் வடிவமாகக் கொழு கொழு வென்றிருந்த மணிவண்ணன், பிஞ்சுக் கரங்களை நீட்டி பூபதியின் கழுத்தைப் பின்னும் இறுக்கமாகக் கட்டிக் கொண்டான். மென்று விழுங்க முயற்சித்த இட்லியைத் தந்தையின் முகத்தில் பூசி ஆசையுடன் முத்தமிட்டான். அந்த இன்பத்தின் கிளுகிளுப்பு பூபதியை மெய்சிலிர்க்கச் செய்தது.

"அப்பா! நீ நல்ல அப்பா..." மழலையில் குழறினான் குழந்தை. அதைக் கேட்கத் தகப்பனுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி!

இடக் கரத்தை நீட்டி மாதவியைப் பற்றி இழுத்துத் தன் அருகே உட்கார வைத்துக் கொண்டான் அவன். இன்னொரு சிறு இட்லித் துண்டத்தைப் பிட்டு வற்புறுத்தி அவள் வாயில் போட்டான். "இந்தா! உன்பங்கும் கொடுத் துவிட்டேன்— இனி என் மகனுடன் சண்டை போடாதே... தெரியுதா?" வேடிக்கையாக அவள் கன்னத்தைக் கிள்ளி விளையாடினான் கணவன்.

"விடுங்க, இதென்ன விளையாட்டு, குழந்தை எதிரில்!" சிணுங்கினாள் அவள்.

"ஏன் கூடாது...? உன்னோட வாழ்நாள் முழுவதும் விளையாடிக் கொண்டிருக்கத் திட்டமிட்டு இருக்கேன். மணிவண்ணன் பெரியவனாகிப் படித்துப் பட்டம் பெற்று நல்ல நிலைக்கு வரும்போது இந்தப் பூபதி தலை நரைச்சு— நடை தள்ளாடும் கிழவனாகிப் போய் விடுவான். ஆனாலும், அவனுக்கு மாதவி மேலிருக்கிற அன்பும் ஆசையும் இன்னிக்

இருப்பது போல அன்னிக்கும் அப்படியே பகமையாகத் தானிருக்கும்... சந்தேகமாக இருக்கா உனக்கு?...'' கேலியாகக் கேட்டவண்ணம் அவள் கரத்தைச் சற்று வலுவாகத் தன் பக்கம் இழுத்து மெல்ல அணைத்துக் கொண்டான்...

மாதவிக்குக் கட்டுக்கொள்ளாத மகிழ்ச்சி...பெருமையுங்கூட. ''சமையலறையில் எனக்கு எத்தனையோ வேலை விடுங்கள். நான் போகவேண்டும்.'' மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்து உள்ளே சென்றாள்.

பூபதியும் அவளும் மண வாழ்க்கை தொடங்கி ஆண்டு ஐந்து ஓடிச் சென்று விட்டது. அன்றுபோல் இன்னும் அதே விளையாட்டு- அதே பரிகாசம்- அதே பூபதியாக மாறுதலேயின்றி இருந்தான். அவள் கணவன்.வேடிக்கைக்காக என்று அவன் ஒருநாள்கூட அவளிடம் கடுமையாகப்பேசினதில்லை. அவர்கள் வாழ்க்கையில் சண்டைகள்—சச்சரவுகள்— காரமான பேச்சுகள்-ஏசல்கள்... கண்ணீர் எதுவுமே தலைகாட்டியதேயில்லை.

கோபமாகவே பேசத் தெரியாதவன் பூபதி. அவன் முன் முகத்தை சுளுங்கக்கூட மனம் வந்ததில்லை. அவனது வாழ்க்கையை இனிதாக அமைத்துக்கொடுக்க வேண்டியது தன் கடமை என நம்பினாள். ஒழுக்கத்தின் உறைவிடமாகவும்—அன்பு மனைவியாகவும் அவள் இருக்கப் பெரிதும் விரும்பினாள். அதில் இருந்து சிறிதும் பிறழ்வதைக்கூட அவள் உள்ளம் விரும்பவில்லை. அப்படி நேர்ந்தால் உயிர் அகன்றுவிடும் போன்ற ஒரு நிலையை அவள் அடைந்து விட்டிருந்தாள். இதைத்தான் கற்பு என்று கூறினார்களோ பெரியவர்கள்? தனக்குள் எண்ணிப் பலமுறை அவள் வியந்தது உண்டு.

சரவணன் அவளிடம் ஒருமுறை சொல்லியிருந்தார். ''அன்பின் ஆழத்திலிருந்து பிறப்பதுதான் கற்பு என்னும் திண்மை!'' அவர் சொன்னதின் பொருளை அவள் இப்போது நன்கு உணர்ந்து கொண்டு விட்டாள்.



பூபதி மேல் நாளுக்கு நாள் பெருகி வளர்ந்து கொண்டு போன அவளது அன்பில் சிறிதளவு களங்கம் இருக்கவில்லை -கடந்த காலத்தின் நினைவின் நிழல்கூட அவளது தெளிந்த உணர்வின் மீது படவில்லை. அத்தனை மனமாற்றம் அவள் பெற்று விட்டிருந்தாள்.

பற்பல எண்ணியபடி அடுப்பிலே கொதித்த சோற்றைக் கிண்டி விட்டாள் அவள். ஒரு சிறு துளி கொதித்த கஞ்சி அவள் விரல் மீது பட்டுவிட்டது. சட்டென்று அதைத் துடைத்துக் கொண்டாள். சூட்டின் எரிச்சலால் வேதனை கொடுத்த விரலை வாயால் ஊதிக் கொண்டு நின்றாள்.

ஒரு சிறுதுளி கொதிக்கும் கஞ்சிதான் என்றாலும் உடல் முழுவதும் பற்றிக்கொண்டு விட்டது போன்று அல்லவா எரிகிறது? ஒரு சிறு பொறிதான்- ஊர் முழுவதையும் எரிக்கும் கொடுமை அதற்கு உண்டே? இந்த எண்ணம் அவளை எங்கெல்லாமோ இழுத்துச் சென்றது.

துன்பமே தெரியாது மேலும்மேலும் இன்பமே பெருகிக் கொண்டு போகும் அவர்களது வாழ்க்கையில் ஒரு துளி இடர் ஏற்பட்டு விட்டால்...? இந்த மகிழ்ச்சி நீடிக்குமா? விளையாட்டுச் சிட்டினால் கட்டிய கோட்டை போல் தடுமாறிப் பிரிந்து விழுந்து விடுமா?

'சே! இது என்ன கற்பனை...ஏன் இந்த சிந்தனை?' தன்னைத்தானே அவள் கடிந்து கொண்டாள்.

மறுநாள்.

பொழுது புலருமுன்னே அவர்கள் எழுந்து விட்டனர்.

வீட்டைப் பெருக்கி—கழுவித் துடைத்து-கோலமிட்டு அலங்கரித்த பின்னர் மாதவி குளித்தாள். புத்தாடை உடுத்திக்கொண்டு மகிழ்ச்சியுடன் பாலைப் பொங்கவிட்டாள்.

வாயிலுக்கு மாவிலைத் தோரணம் கட்டிவிட்டு, தலை முழுகிப் புதிய வேட்டி சட்டை அணிந்து கொண்டான் பூபதி. தன் அருமை மகனுக்குத் தன் கையாலேயே குளிப்

துடைத்துவிட்டு, புத்தாடைகளை அணிவித்தான். பின்னர் மகனுடன் வாயிற் திண்ணையில் போய் அமர்ந்து கொண்டான்.

பூசைக்கு எல்லாவற்றையும் ஆயத்தம் செய்து வைத்து விட்டு கணவனைக் கூப்பிட வாயிற்புறம் வந்தாள் அவள். தந்தை மண்டியிட்டு யானையாக திண்ணையில் ஊர்ந்து கொண்டிருந்தான்... அவன் முதுகில் மகன் ஏறி சவாரி செய்து கொண்டிருந்த காட்சியைப் பார்த்து அவள் பெருமையும், ஆனந்தமும் தாளாது மெல்லச் சிரித்தாள்.

''இன்னும் விளையாட்டு முடியலையா? பூஜைக்கு நேரமாகிறதே...'' அன்புடன் கடிந்துகொண்டு திரும்பிய போது தெரு முனையில் அவளது பார்வை விழுந்தது.

வெகு தொலைவில் தெருவில் வந்து கொண்டிருந்த அந்த மனிதனின் நடை பழக்கமானது போல் காணப் படவே, அவள் வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்று விட்டாள்.

சிறிது பொழுதில் அவன் அருகில் வந்துவிட்டான்.

''இந்தாங்க...எழுந்திருங்க...யார் வராங்க பார்த்தீங் களா?'' பரபரப்புடன் கணவனை எச்சரித்து கூப்பிட்டாள்.

முதுகில் உட்கார்ந்திருந்த மகனை மெல்லத் தழுவி இறக்கிவிட்டு நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்தான் பூபதி. அவனுக்கும் ஒரே மகிழ்ச்சி. ''வாங்க.வாங்க-உட்காருங்க!'' உற்சாகத்துடன் உபசரித்தான்.

தோளில் சுமந்து வந்த கரும்புக்கட்டு, மஞ்சள் இலைக் கொத்து முதலியவற்றை திண்ணை மீது இறக்கி வைத்தான். சிவகுரு. அடுத்தபடி தலையை அழுத்திக்கொண்டிருந்த மூட்டையையும் இறக்கிவிட்டு, பூபதியிடமிருந்து குழந் தையை வாங்கி முகத்தோடு முகம் அழுத்தி, முத்தம் இட்டான்.

**முன்பின் அறியாத ஆசாமி, தன்னை முரட்டுத்தன மாக கையாளுவதைமணிவண்ணன்வெறுத்தான். ஓவென்று**



அலறிக் கூச்சலிட்டுக் கொண்டு கையை நீட்டித் தன் தந்தை யின் பக்கம் பாய்ந்து விட்டான்.

''பாத்தியா, பயலுக்கு வேற்று முகம் தெரியுது...'' கேலி செய்த சிவகுரு உரக்கச் சிரித்தான்.

''இல்லை. உங்க தாடி மீசையைக் கண்டு பயந்துட் டான். ஆமாம் இதென்ன...சபரிமலைக்குப் போக மாலை போட்டுக் கிட்டிருக்கிறீங்களா?... சரி, வாங்க உள்ளே'' மகனைத் தூக்கிக்கொண்டு எழுந்தான் பூபதி.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. என்னை கவனிக்க எனக்கு நேரம் இல்லை. எனக்கு இப்போ உத்தியோக மாற் றம் ஏற்பட்டிருக்கு. அவ்வளவுதான். அதெல்லாம் பெரிய கதை. பின்னால் பேசிக்கலாம்...'' மூட்டையைத் தூக்கிக் கொண்டு சிவகுரு உள்ளே வந்தான்.

பிரயாணக் களைப்புத் தீர அவனும் குளித்து முழுகி விட்டு சுத்தமான வேட்டியை உடுத்திக் கொண்டு தாழ் வாரத்தில் வந்து உட்கார்ந்தான் சிவகுரு. முதல் காரிய மசுகத் தான் கொண்டு வந்த மூட்டையை அவிழ்த்தான்.

''இந்தாடா பொடிப் பயலே! மாமன் பரிசு வாங் கிக்கோ'' ஒரு சிறு விளையாட்டு எலி பொம்மையை எடுத்து குழந்தையின் முன் நீட்டினான்.

வயிற்றைப் பிடித்து அழுத்தினால் கிரீச்சிட்ட அந்த பொம்மையை ஆவலுடன் தன் கையை நீட்டிப் பெற்றுக் கொண்டான் மணிவண்ணன்.

''பரவாயில்லையே! மாமன் சொக்குப்பொடி தூவிவிட் டார். இனி மாமனும் மருமகனும் நம்மை சட்டை செய்ய மாட்டாங்க...''கேலியாகச் சொன்ன மாதவிக்குப் பெருமை பிடிபடவில்லை. கூடப் பிறக்காதிருந்தும் அன்புக்குக் குறைவில்லாத ஓர் அண்ணன் தனக்கு இருப்பதை எண்ணிப் பூரித்துப் போனாள். அன்புக் கணவன் - ஆசை மகன் - பாசமிக்க அண்ணன் - இன்னமும் அவளுக்கு வேறு என்ன வேண்டும்?

''வீட்டு மருமகப் பிள்ளையை நான் மறக்கலை,' சிரித்தபடி சிவகுரு பட்டுக்கரை வேட்டி, அங்கவஸ்திரம் ஆகியவற்றை எடுத்து பூபதியின் முன் வைத்தான்.

''என்னங்க இதெல்லாம்?'' மறுத்த பூபதியின் பேச்சை அவன் காதுகளில் போட்டுக் கொள்ளவில்லை.

''தங்கச்சி இப்படி வா!'' உரிமையுடன் அழைத்து மூட்டையின் அடியில் இருந்த காகிதப் பொட்டலத்தை எடுத்து அவள் கையில் கொடுத்தான். ''ரொம்ப நாளைக்கு முன் கொடுத்த வாக்கு - கையில் ஓட்டமில்லாததால் வாயிழந்து இருந்தேன். இப்பத்தான் நானே சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டேனே?''

அவசரமாகப் பொட்டலத்தைப் பிரித்து எடுத்த மாதவி ஒருகணம் தன் கண்களை நம்பவில்லை. காகித மடிப்புக் குள்ளே மின்னிய பச்சை வண்ண சரிகைக் கொட்டடிச் சேலை சிவகுருவின் களங்கமில்லா உள்ளத்திற்குக் கட்டியம் கூறியது.

''அண்ணா!'' உணர்ச்சி வேகத்தில் அவள் குரல் கம்மியது. கண்கள் பனித்தன.

''எத்தனை செலவு உங்களுக்கு? எப்படித்தான் நன்றி தெரிவிப்பது என்று தெரியவில்லை...'' தடுமாறினான் பூபதி.

''அண்ணன் செய்ய வேண்டிய கடமையைத்தான் செஞ்சேன். இதுக்கென்ன நன்றி. சீக்கிரம் இதையெல்லாம் உடுத்திக்கிட்டு வந்து நில்லுங்க...இருங்க, என் மருமக னுக்கும் கொண்டு வந்திருக்கிறேன். அளவு சரியாக இருக்குமோ என்னவோ?'' சிரித்துக்கொண்டே குழந்தை யின் புதுச்சட்டையை எடுத்து அவள்கையில் கொடுத்தான்.

பச்சை கொட்டடி சேலையில் மணமகள் போல் அழகு டன் மாதவி கணவன் அருகில் வந்து நின்றாள். இருவரும்



கைகூப்பி சிவகுருவை வணங்கினர். அதற்குமேல் மாதவி யால் கட்டுக்கொள்ள முடியவில்லை.

''அண்ணா! நான் எவ்வளவு கொடுத்து வைச்சவள். என்ன சொல்வதுன்னே தெரியலை...'' திணறிவிட்டு ஓவென்று அழத்தொடங்கினாள்.

''என்னம்மா இது? நல்ல நாளும் அதுவுமா-சந்தோ ஷமா இருக்கணும் நீ. இப்போ சித்த முன்னே பார்த்தேனே இந்த வீட்டில், அதே அமைதியும் ஆனந்தமும் நீடிச்சு நிக்கணும். இதுதாம்மா என் உண்மையான ஆசை. எங்கே கொஞ்சம் சிரி...''

ஆசீர்வதித்த சிவகுருவின் மனதை ஏன்னவோ செய்தது. புரியாத பல உணர்ச்சிகளின் மோதலில் கண்கள் கலங்க— மனதிலே இன்பம் பொங்க...அந்த சிறு குடும்பத்தைப் பார்த்த வண்ணம் அவன் சிறிது நேரம் நின்று கொண்டு இருந்தான்.

அன்று பொழுது முழுவதும் அந்த வீட்டில் சிரிப்பு- பேச்சு- கூச்சல்... பொழுது ஆனந்தமாகக் கழிந்தது. அவர் களின் வேண்டுகோள் பேரில் சிவகுரு தொடர்ந்து சில நாள் அங்கேயே தங்கினான். மணிவண்ணன் அதற்குள் அவனி டம் பழகிவிடவே பயமின்றி மார்பின் மீது ஏறிக் கொஞ்சிக் குலாவிக் குதித்து ஆர்ப்பரித்தான். தங்கையாக அவன் பாவித்துவிட்ட மாதவி சீரும் சிறப்புமாகக் கணவனுடன் வாழ்வதைக் கண்டுவிட்ட திருப்தியில் அவன் மனம் நிம்மதி அடைந்தது.

அன்று இரவு வண்டிக்கு அவன் மீண்டும் சென்னைக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டு இருந்தான்.

முதலாளியிடம் கேட்டுக்கொண்டு, கொஞ்சம் முன்ன தாகவே வந்து வழியனுப்பப்போவதாக பூபதிசொல்லிவிட்டு வேலைக்குப் போயிருந்தான்.

அதற்குமுன் தன் மனத்தில் அடைத்து வைத்திருந்த சங்கதிகள் எல்லாவற்றையும் தங்கையிடம் சொல்லிவிட வேண்டுமென்ற தவிப்பு சிவகுருவிற்கு.

''தங்கச்சி! நான் ஏன் தேவி நிலையத்தை விட்டு வெளியே போனேன் தெரியுமா? இப்போ சுகபவனத்திலே சர்வர் வேலை பார்த்துக்கிட்டு எவ்வளவோ நிம்மதியாக இருக்கேன்.''

''ஏதோ மனஸ்தாபம் என்றீங்க. கிளறிக் கேட்பானேன்னு சும்மா இருந்து விட்டேன்.''

''பரிமளா இப்போ மாறிவிட்டது. மட்டு மரியாதையே கிடையாது. சிநேகிதிகள்- பணக்கார சிங்காரிகள் எல்லாம் அதிகமாயிடுச்சு. அத்தோடு கர்வமும்-திமிருங்கூட ஏறிக் கொண்டு விட்டன. நாயைப் போல் பலர் முன்னிலையில் என்னைக் கேவலமாக நடத்தத் தொடங்கியது. அந்தவீட்டு உப்பைத் தின்னுட்டமேன்னு நானும் பொறுத்துக்கொண்டு தான் இருந்தேன். கடைசியில் ஒரு திருட்டுப் பட்டம்வேறே, தன் கைப் பையிலேயே வைர நெக்லசை கழற்றிவைச்சுட்டு- 'காணலை...சிவகுருதான் எடுத்தான்'னு ஒரே பிடியா என் மேலே குத்தத்தை சுமத்திடுச்சு. அப்பப்பா...போலீஸ்-கிலீஸ் என்று அமர்க்களம் பண்ணிட்டாங்க. கடைசியிலே தன் தோளிலேயே தொங்கவிட்டிருக்கிற பையிலே நகையைக் கண்டதும் அது முகம் போன போக்கைப் பார்க்கணுமே! கைலாசம் அய்யாவும் மன்னிப்பு கேட்டுக்கிட்டு ரொம்ப கெஞ்சினாங்க. எனக்கு அவங்க யார் மேலும் கோபமில்லை மனசுதான் கசந்து போச்சு. பேசாமல் உடனே இருந்ததை எடுத்துக்கிட்டு வெளியே கிளம்பிட்டேன். இப்ப என்ன செத்தாபோயிட்டேன்'' ஆத்திரம் தொனித்த குரலில் பேசினான்.

நெஞ்சம் நுணுக்குற்றாள் மாதவி. ''அண்ணா உங்களை போயா பரிமளா திருடன் என்று அழைத்தாள். உங்க கால்



செருப்புக்குக்கூட அந்த கெட்ட புத்தி தோணாதே. கேட்க ரொம்ப மனம் வேதனைப்படுதே...''

மேல்துண்டை உதறிப் போட்டுக்கொண்டு தாழ்வாரத்தில் யோசனையுடன் சிறிது உலாவினான் சிவகுரு. பின்னர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு தணிவான குரலில் அருகே வந்து சொன்னான்.

''ஒண்ணு சொல்வேன். நீ ரொம்ப புண்ணியம் செஞ்சவ. அதனாலே உனக்கு ஒரு நல்ல கணவன் அமைஞ்சுட்டார். சுகமா ஏதோ உன் வரைக்கும் நல்லா இருக்கே. தேவி நிலையத்தில் பணம் இருக்கு- வசதிகள் இருக்கு... ஆனா அங்கே ஆசை-அன்பு-மகிழ்ச்சி இவை ஒண்ணுமே இல்லை, தெரியுமா?''

மாதவி சிறிது திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

''ஒருசமயம் என் மட்டி புத்தியிலே கூட ஒரு யோசனை இருந்திச்சு. இந்த சந்திரன் பார்க்க நல்லா இருக்கானே- இவனை மாதவிக்குக் கட்டி வச்சால் என்னென்னு நானே கணக்குப் போட்டுக் கொண்டிருந்தேன். அது பெரிய மடத்தனம்னு இப்பப் புரியுது. நாள் முழுவதும் புருஷனும் மனைவியும் பாடிக்கிட்டா இருக்கப் போகிறாங்க? சந்திரனை நீ கட்டிக் கொண்டிருந்தால் இப்படி ஆனந்தமாக இருந்திருக்க முடியாது. ஏன் என்று கேட்கிறாயா அந்த சந்திரன் பார்க்கத்தான் அழகன். ஒழுக்கம் கெட்டவன். இதனாலே அந்த வீட்டிலே கணவனுக்கும் மனைவிக்கும் தினசரி சண்டை- ரகளை- அப்பப்பா அது ஒரு வீடா? ...ம்! அவங்களுக்குன்னு ஆண்டவன் அப்பவே முடிச்சுப் போட்டு வச்சிருக்கிறாரே? என்னவோ தங்கச்சி! நீ சுகமா இருக்கணும். அது ஒண்ணு எனக்கு போதும். எப்பவாவது முடிஞ்சா இந்தப் பக்கம் வந்தா உன் வீட்டு வாசலிலே உக்காந்துதங்கச்சின்னு கூப்பிட்டு உன் கையால் ஒரு தம்ளர் பச்சைத்தண்ணி வாங்கி குடிக்கிற அளவு யோகமிருந்தாக் கூடப் போதும் எனக்கு. அவ்வளவுதான் சொல்வேன்.''

மாதவியின் கண்களில் லேசாக நீர் திரையிட்டுக் கொண்டது. நெஞ்சம் நெகிழ்ந்து போனவள் சமாளித்துக் கொண்டாள் நன்றியுடன் ''புரிகிறது'' என்ற பாவனையில் தலையை அசைத்தாள்.

அன்று இரவு வெகுநேரம் மாதவிக்கு உறக்கம் வரவில்லை.

சிவகுரு சொன்னவற்றையெல்லாம் எண்ணிக் குழம்பியபடி படுக்கையில் புரண்டாள்.

காரணமற்ற பயத்தில் அவள் மேனி நடுங்கியது.

விவரிக்க இயலாத ஒரு திகில் நெஞ்சைக் கவ்வியது.

அருகில் படுத்திருந்த பூபதி விழித்துக் கொண்டான்.

''உன் உடம்புக்கு என்ன மாதவி?'' பதறினான் அவன்.

''ஏதோ கெட்ட கனவு பயமாக இருக்கு. என் கையை பிடிச்சுக்கோங்க...'' குழறினாள் அவள்.

''பயப்படாதே! நான் பக்கத்தில் தானே இருக்கேன்.'' ஆதரவுடன் அவள் கரத்தைப் பற்றித் தன் மார்பின் மீது வைத்துக் கொண்டான் அவன்.

அவளது கவலைகளை எல்லாம் தாங்க அந்த பலம் பொருந்திய இரு தோள்களும், அவளை ஆசையுடன் வைத்து பூசிக்க பரந்த அந்த மார்பும் பக்கத்திலே துணையாக இருக்கையில் மாதவி ஏன் பயப்பட வேண்டும்? கலங்க வேண்டும்? அவளுக்கு விளங்கவில்லை.

# 11

நான்கு நாளாக விடாது பெய்த மழை அன்றுதான் ஓய்ந்திருந்தது.



16337
3206388

கருமேகங்களால் மூடிக்கிடந்த வானம் லேசாகத் தலை நீட்டிய சூரியனால் பளிச்சிடத் தொடங்கியது.

ஈரமாகக் கிடந்த விறகுகளை வாரிப் புழக்கடையில் இணற்று ஓரத்து மேடையில் அவசரமாகப் பரப்பினாள் மாதவி.

அவள் அலுத்துக் கொள்ளாவிட்டாலும் ஈர விறகுடன் போராடி அடுப்பை ஊதிய அவள் வாய் அலுத்துப் போயிருந்தது.

புகையினால் சிவந்து போன கண்கள் வீங்கி விட்டிருந்தன.

மழை நீரில் நனைந்து விளையாடியதினால் இரண்டு தினமாக மணிவண்ணனுக்கு சளியும் காய்ச்சலும் வந்து விட்டன. இரவு முழுவதும் அவன் தூங்காது அழுது கொண்டிருந்தான். அயர்ந்து உறங்கும் கணவனுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் அவனை மடியில் கிடத்திக்கொண்டு இரவு முழுவதும் அவள் கூடத்திலேயே உட்கார்ந்திருந்தாள். இப்பொழுது காய்ச்சல் விட்டிருந்தாலும் உடல் அயற்சியினால் அவன் உறங்கிக் கொண்டிருந்தான்.

கணவன் வேலைக்குச் சென்ற பின்னர் கதவைத் தாளிட்டுக்கொண்டு வந்த மாதவி, களைப்புத் தாளாது தரை மீது படுத்து நன்றாக உறங்கிவிட்டாள். திடுக்கிட்டு விழித்த பொழுது பிற்பகலை நாடி நேரம் வேகமாக முன்னேறி விட்டதை அறிந்தாள். அவசரமாக எழுந்து தொட்டியில் விழித்துக்கொண்டு அழுத குழந்தைக்கு உணவை ஊட்டி மீண்டும் தொட்டிலில் இட்டு ஆட்டி உறங்கச் செய்தாள். மறுபடி எழுந்து அவன் தன்னை தொந்திரவு செய்யுமுன் வீட்டு வேலைகளை முடிக்க வேண்டுமென்ற கவலை அவளுக்கு.

சமையலை முடித்து - வீட்டைச் சுத்தப்படுத்தி — முன்னறையில் போடப்பட்டு இருந்த நாற்காலிகளைத்

துடைத்து வைத்தாள். அருகில் இருந்த முக்காலியில் கணவன் படித்தபடி போட்டுவிட்டுப் போயிருந்த பத்திரிக்கையை எடுத்து மடித்து வைத்தாள்.

முன்போல் பூபதி நாள் முழுவதும் கடையில் உட்கார்ந்து உடலை அலட்டிக்கொள்ளத் தேவை இல்லாமல் இருந்தது. அவனுடைய எஜமானர் அவனது சலியாத உழைப்பைப் பாராட்டி சம்பள உயர்வு கொடுத்து வேலையின் நிலையையும் உயர்த்தி விட்டிருந்தார். அதன் பயனாக பிற்பகல் ஐந்து மணிக்கே வேலையை முடித்துக்கொண்டு பொழுது சாயு முன்பே அவன் வீடு திரும்ப முடிந்தது.

மாதச் சம்பளத்தில் அதிகமாகக் கிடைத்த முப்பது ரூபாயை மாதவி பாழாக்க விரும்பவில்லை. குழந்தையின் வருங்காலத்திற்கு என்று அந்தப் பணத்தை பாங்கியில் சேமித்து வைக்கத் தொடங்கினாள். ஆண்டு முடிவில் பெருகியிருந்த தொகையைஎண்ணிப்பார்த்துஇருவரும் பூரித்துப்போய்விட்டனர். அந்தப் பணம் அவர்களுக்கு எத்தவன பலத்தைக் கொடுத்தது! நண்பர்களும் - உறவினர்களும் கொடுக்க முடியாத ஒரு துணிவை அந்தச் சிறு தொகை அவர்களுக்குக் கொடுத்தது. அந்திப் பொழுதில் அருகருகே உட்கார்ந்து கொண்டு அந்தச் சிறு தொகையை கணக்கிட்டபடி அவர்கள் கட்டிய கோட்டைகள்...எழுப்பிய கற்பனைகள் - கண்ட கனவுகள் எத்தனையோ?

கணவன் வரும் நேரம் நெருங்கியதும் மாதவி அவசரமாக குளியலறைக்குள் புகுந்தாள். அலங்கிய கூந்தலும் அழுக்கான உடையுமாக மனைவி காட்சியளித்தால் பூபதிக்குப் பிடிக்காது என்பதை அவள் நன்கு அறிவாள். பட்டு ஜவுளிக் கடையில் வேலை பார்த்ததின் பயனாகவோ என்னவோ பெண்களின் ஆடை அலங்காரத்தில் அவனுக்கு நல்ல ரசிப்புத்தன்மை உண்டு. சுத்தமான, ஆனால், பொருத்தமான ஆடை அணிந்து தன் மனைவி சிரித்த முகத்துடன் என்றும் மகிழ்ச்சியுடன் இருப்பதையே அவன் விரும்பினான்.



ஒரு சமயம் பேச்சின் இடையே விசித்திரமான ஒரு விருப்பத்தைத் தெரிவித்தான் பூபதி. அதை நினைக்குந்தோறும் விவரிக்க இயலாத அச்சத்தில் மெய்சிலிர்த்துப் போவாள் மாதவி.

''மாதவி! நம்மைப் போன்ற தம்பதிகள் இந்த உலகில் ஒரு சிலர்தான் இருப்பார்கள் என நான் எண்ணுகிறேன். நடந்து வரும்போதே என் காலடி ஓசையிலிருந்து என் மன நிலையைப் பளிச்சென்று நீ புரிந்து கொண்டு விடுகிறாய். உணவு பரிமாறும் போது உன் கை வளை குலுங்குவதில் இருந்து உன் உள்ளத்து எண்ணங்களை நான் கணக்கிட்டுக் கொண்டு விடுகிறேன். இப்படி ஒருவரையொருவர் புரிந்து கொண்டு திருப்தியும் - இன்பமுமாக நாம் வாழுகிறோம். ஆனால், எந்த நிலைக்கும் ஒரு முடிவு என்பது உண்டு. அது தான் இயற்கையின் நியதி. அப்படி ஏதாகிலும் நமது வாழ்வில் ஏற்பட்டு விட்டால்...?''

மாதவி கலவரத்துடன் குறுக்கிட்டாள். ''போதும். என்ன பேச்சு இது?'' அன்புடன் கடிந்து கொண்டாள்.

ஆனால் அவன் நிறுத்தவில்லை. ''நெருப்பு என்றால் வாய் வெந்து விடாது. இன்பமான நமது வாழ்க்கையில் மரணம் ஒன்றுதான் இடையே குறுக்கிட முடியும். அதைத் தடுக்க யாருக்கும் சக்தி கிடையாது. எனக்கு முன் ஒரு சமயம் நீ மறைந்து விட்டால், நான் கூடவே இறந்துவிட மாட்டேன். மணிவண்ணனைப் பற்றி நாம் கொண்ட கற்பனைகளை உண்மையாக்க வெகுவாகப்பாடுபட்டு நிறைவேற்றுவேன். உனக்குப் பின்னர் பெண் என்ற நினைப்பிற்கு என் வாழ்க்கையில் முற்றுப் புள்ளி வைத்துவிட்டுஉன் நினைவிலேயே வாழ்வேன்'' என்றான்.

நெஞ்சுருகி - கண்கள் பனித்து - உணர்ச்சி வசப்பட்டு போன மாதவி, அவன் தோள்களை மெல்லப் பிடித்துலுக்கினாள். ''போதும் நிறுத்துங்கள்'' கெஞ்சினாள்.

ஆனால், அவன் தொடர்ந்தான். ''ஒரு பகுதியைக் கேட்டாய். இன்னொரு பகுதியை நீ கேட்க வேண்டாமா? ஒரு சமயம் உனக்கு முன் மரணத்திடம் இருந்து எனக்கு அழைப்பு வந்து விட்டால்...நீ மனம் கலங்கி, உற்சாகம் இழந்து ஒடுங்கி விடக்கூடாது. மணிவண்ணனுக்குத் தாயும் தந்தையுமாக இருந்து அவனை ஆளாக்கி விட வேண்டியது உன் முக்கியப் பொறுப்பு. உன் தோற்றத்திலும் நீ விதவை கோலம் பூண்டு - சோகத்தின் வடிவமாக இருப்பதை நான் விரும்ப மாட்டேன்- இப்பொழுது போல் நீ எப்பொழுதும்- எனக்குப் பின்னும் இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை''

மாதவிக்கு அழுகை பொங்கிக்கொண்டு வந்துவிட்டது. ''என்ன வேண்டுகோள் இது? கேட்கவும் என்னால் தாள முடியவில்லை. முடியாது...என்னால் உங்களைப் பிரிந்து வாழவே முடியாது...'' அவன் தோள் மீது சாய்ந்து கொண்டு அவள் விம்மினாள்.

''என்னால் மட்டும் உன்னைப் பிரிந்து வாழ முடியுமா? சிந்திக்கவே பயங்கரமாக இருக்கிறது, அந்தத் தனிமை? சரி சரி! மன்னித்துக்கொள். நான் பேசியதையெல்லாம் மறந்து விடு ..ஏதோ உணர்ச்சிவசத்தில் வாயில் வந்ததைச் சொல்லி விட்டேன்'' அவளைத் தேற்றினான்.

குளித்துவிட்டு வேறு உடை உடுத்திக்கொண்டு கண்ணாடி முன் நின்ற அவளுக்கு அந்தப் பேச்சின் நினைவு வந்தது. அதை அழிக்க முற்பட்டவள் போல் கூந்தலை அவிழ்த்து சீவத் தொடங்கினாள். பிள்ளைப் பேற்றிற்குப் பின்னர்கூட அவள் கூந்தல் கருமையாக - அடர்ந்து நீண்டு இடைவரை முன்னர் போலவே செழிப்பாகத் தொங்கத் தொடங்கியது.

வாரி முடித்துக்கொண்டு - கொண்டையைச் சுற்றி மல்லிகைச் சரத்தைச் சூட்டிக் கொண்டாள். இமைகளில்



லேசாக மையைப் பூசிக்கொண்டு, நெற்றியில் வைத்த குங்குமத்தை விரலால் சீராக்கி வட்டவடிவமாக்கிக் கொண்டாள். சிறிது நேரம் கண்ணாடி பிரதிபலித்த தனது உருவத்தைப் பார்த்து வியந்தபடி நின்றாள்.

தெருக்கதவை யாரோ அவசரமாகத் தட்டியது கேட்டது.

தொட்டிலில் கிடந்த குழந்தை விழித்துக்கொண்டு வீரிட்டு அழுதான்.

ஓடிச்சென்று அள்ளி அணைத்துக்கொண்டு அவனைச் சமாதானப்படுத்தியபடி வாயிற்கதவைத் திறந்தாள், மாதவி.

திறந்ததும், மூச்சே நின்றுவிடும் போன்ற திகைப்பில் அயர்ந்து போய் நின்றாள்.

''தவறான விலாசத்துக்குத்தான் வந்துவிட்டேனென்று ஒரு கணம் பயந்தே போனேன், மாதவி! எப்படி இருக்கிறே? ஐந்து ஆண்டுக்குப் பின் இப்பொழுதுதான் பார்க்கிறோம். ஆனாலும் நீ அதிகம் மாறவேயில்லை. அப்படியேதான் இருக்கிறாய்?...''

உல்லாசமாகச் சிரித்தபடி வாசலில் நின்றான், சந்திரசேகரன்.

அவனுக்குப் பின்னால் தெருவில் கப்பலைப் போன்ற ஒரு பெரிய கார் நின்று கொண்டிருந்தது.

நெருப்பை மிதித்துவிட்ட வேதனை மாதவிக்கு. நெஞ்சு வேகமாகத் துடித்துக் கொண்டது. குப்பென்று உடல் வியர்த்தது, கால்கள் தடுமாற கலவரத்துடன் ஒரு கணம் விழித்தாள்.

பூபதி வீட்டிற்கு, கோட்டும் - சூட்டும் அணிந்து பெரிய தொரு காரில் விருந்தாளி ஒருத்தர் வந்திருக்கிறார் என்ற செய்தி தெருக்கோடிவரை பரவிவிட்டது. ஒவ்வொருவர்

வீட்டு வாசலிலும் பெண்களும் குழந்தைகளும் ஆவலுடன் எட்டிப் பார்த்துக்கொண்டு நின்றனர்.

மாதவி குற்ற உணர்வில் தவித்துப் போனாள். ''ஊரில் எல்லோரும் சுகந்தானே?'' ஒப்புக்குக் கேட்டாள்.

''உட்காருங்கள்!'' வேண்டா வெறுப்பாக முன்னறையில் கிடந்த நாற்காலியைக் காட்டி உபசரித்தாள்.

வேகமாகக் கூடத்திற்குச் சென்று குழந்தையைத் தொட்டிலில் கிடத்திவிட்டு, சமையல் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

நடுங்கும் விரல்களால் பால் பாத்திரத்தைப் பிடித்து அடுப்பின் மீது வைத்தாள். கணவனது வரவிற்காகக் கட்டுக் கொள்ளாத மகிழ்ச்சியுடன் இருந்த அவள் மனம் இப்போது குமைந்து போயிற்று.

'இந்தச் சந்திரசேகரன் ஏன் வந்தான்? எதற்காக வந்தான்? அதுவும் தனியாக. இவனை யார் அழைத்தார்கள்?'' பன்முறை தன்னையே கேட்டுக் கொண்டாள்.

அருகில் காலடி ஓசை கேட்டது.

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

சந்திரசேகரன் இரு கைகளாலும் வாசல்படியைப் பிடித்துக்கொண்டு அவளை வழி மறிப்பவன்போல் சமையல் அறை வாசலில் நின்றுகொண்டு இருந்தான்.

''ஒன்றும் பேசாமல் இங்கே ஓடிவந்து ஒளிந்துகொண்டு விட்டாயே. உன்னைப் பார்க்க வேணும் - பேச வேணும்னு எத்தனை மைல் தூரம் காரை ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறேன் தெரியுமா?...''

அவனது பசப்பான பேச்சு அவள் காதைச் சுட்டன. பார்வை உடலை எரித்தது. அவனது கள்ளச் சிரிப்பைக் கண்டு மேனி நடுங்கியது. 'இவன் நல்லதிற்கு வரவில்லை' என்ற உள்ளுணர்வின் எச்சரிப்பில் அவள் தவித்தாள்.



''எங்கள் குழந்தையைப் பார்க்கவில்லையே...தொட்டிலில் படுத்திருக்கிறான்'' பேச்சை வேறு திக்கில் பதற்றமாக மாற்றினாள்.

''அப்படியா?'' ஆச்சரியத்துடன் கேட்டுவிட்டு, கூடத்திற்கு நகர்ந்தான் அவன்.

மாதவி சற்று நிம்மதியாக மூச்சு விட்டாள்.

அவசரமாகக் காப்பியைக் கலந்து தம்ளரில் நிறைத்து எடுத்துக் கொண்டு முன்னறைக்கு விரைந்தாள்.

அங்கிருந்த முக்காலி மீது வைத்துவிட்டு நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு, வாயிற்பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள்.

கணவனைக் காணவில்லை. அதற்கு பதில் வேடிக்கை பார்க்கும் கூட்டம் பெருகிவிட்டிருந்தது. ஏக்கத்துடன் உள்ளே திரும்பினாள்.

தொட்டிலில் கிடந்த குழந்தையை உற்றுப் பார்த்துக் கொண்டு சங்கிலியைப் பிடித்தவண்ணம் நின்ற சந்திரசேகரன், ''மாதவி! இங்கே வாயேன். உன் குழந்தைக்கு என்ன பெயர் வச்சிருக்கே? என்னைக் கண்டு புலி — சிங்கம் போல் ஓடறயே?'' சிரித்தான்.

அவள் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ''காப்பி ஆறிவிடும். எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

விழுங்கி விடுகிறவன் போல் அவளைப் பார்த்துக் கொண்டு இடுப்பில் கையை வைத்துக்கொண்டு நின்றான். அவன், சில ஆண்டில் அவனது தோற்றத்திலும் அதிகம் மாறுதல் இருக்கவில்லை. சுகமான வாழ்வின் பயனாக முன்னைவிட உடல் பருத்துவிட்டிருந்தது. ஆடம்பரமாக ஆடை அணிந்து கொண்டிருந்தான். தெருவில் நின்ற கார் அவனது அந்தஸ்தின் விளம்பரப் பொருளாகத் திகழ்ந்தது.

அவளை நேரிடையாகப் பார்த்துபேச அவளுக்குப் பிடிக்கவில்லை. ''மணிவண்ணன் என்று பெயர் வைத்திருக்

கிறோம். வயது மூன்று ஆகிறது. இரண்டு நாளாகக் காய்ச்சல்—அதனால் சோர்வாக இருக்கிறான்...இல்லா விட்டால் நல்லா விளையாடுவான்'' என்று சரவேகத்தில் பிதற்றுவதைப் போல் தொட்டில் பக்கம் பார்த்தபடி பேசினாள்.

''குழந்தை அப்படியே உன் கண்களைக்கொண்டு பிறந்திருக்கிறான். கனவுகள் மிதக்கும் அதே கண்கள். காந்தமாக உள்ளத்தை ஈர்க்கும் அதே பார்வை'' சொல்லிவிட்டு அவன் அவளைப் பார்த்து லேசாகச் சிரித்தான்.

மாதவிக்கு கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. 'மடையா, உளராதே- இங்கிருந்து உடனே போய்விடு... போ...' என்று கிரீச்சிட்டு அலறவேண்டும் போன்ற ஆத்திரம். கீழ் உதட்டைப் பற்களால் கடித்துக்கொண்டு நின்றாள்.

''காப்பி ஆறிவிடும், சாப்பிடுங்கள்'' மறுபடி நினைவு படுத்தினாள்.

சந்திரசேகரன் கபடமாகச் சிரித்தான். ''காப்பி சாப்பிடவா இங்கே நான் வந்தேன்? உன்னைக் கண்டு உன்னோடு கொஞ்சம் தனியாகப் பேசிவிட்டுப் போக வந்தேன். கொஞ்ச தூரமா- இருநூறு மைலுக்கு அப்பால் இருந்து வந்திருக்கிறேன், என் உள்ளத்தில் நீறுபூத்தநெருப்பாகக் குடிகொண்டிருக்கும் உணர்ச்சியால் உந்தப்பட்டு இறக்கை கட்டிக்கொண்டு வந்திருக்கிறேன் மாதவி! உண்மையைச் சொல். நீ சந்தோஷமாக இருக்கிறாயா? அல்லது என்னைப்போல் அமைதியின்றித் தவிக்கிறாயா?'' குழைந்த குரலில் கேட்டுக்கொண்டு அவள் அருகே நெருங்கினான்.

சட்டென்று பின் வாங்கினாள் மாதவி. அவள்நெஞ்சு வெடித்துவிடும் போல் படபடத்தது. உடல் கிடுகிடுவென்று நடுங்கியது. 'இதென்ன விபரீதம்?' என்று உள்ளூர அச்சத்



தில் கலங்கிப் போனாள். ஆனாலும் துணிவைத் திரட்டிக்கொண்டு அவனை உறுத்து விழித்தாள்.

'நீங்கள் பேசுவது ஒன்றும் நன்றாகவேயில்லை-இந்த மாதிரி எண்ணத்துடன் இங்கே வருவது முறையும் அல்ல'' என்று சீறினாள்.

சந்திரசேகரன் பதில் கூறுமுன் பழக்கப்பட்ட சைக்கிள் மணியோசை அவளைப் பதறிக்கொண்டு வாசலுக்கு ஓட வைத்தது. கணவன் கையிலிருந்த கனமான சாமான் மூட்டையை வாங்கிக்கொண்டாள். காரைப் பார்த்துவிட்டு அவன் கண்களில் மிதந்த கேள்விக்குச் சட்டென்று பதிலும் கொடுத்துவிட்டாள்.

''அக்கா புருஷன் ஊரில் இருந்து வந்திருக்கிறார். உங்களைப் பார்த்துவிட்டுப் போகத்தான் காத்திருக்கிறார்...''

இதைக் கூறி முடிப்பதற்குள் ஏனோ அவள் தடுமாறிப் போய் விட்டாள்.

## 12

தெருவில் குழல் விளக்குகள் பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தன.

ஆனால், தேவி நிலையத்தில் ஒரே இருட்டடைப்பு.

முன்னறையில் மட்டும் ஒரு விடிவிளக்கு மங்களாக எரிந்தது. வீட்டின் பெரும்பகுதி இருளில் மூழ்கிக் கிடந்தது. காரைக் கொணர்ந்து ஷெட்டில் நிறுத்திவிட்டுக் கையில் பிடித்த டார்ச்சின் உதவியால் முன்புறத் தோட்டத்தில் மெல்ல நடந்து வந்தான் சந்திரசேகரன்.

தோட்டத்தில் அவிழ்த்து விடப்பட்டிருந்த நாய் குரைக்கும் ஓசை கேட்டதும் பின்கட்டு ஊஞ்சலில் படுத்துக்கிடந்த தங்கம்மாள் எழுந்தாள்.

செல்வத்தின் செழுமையில் கொழு கொழுவென மெருகிட்டு வளர்ந்த அவள் உடல், இந்தச் சில ஆண்டில் பாதியாக வற்றிப் போய் விட்டது. கருகருவென்றிருந்த கூந்தலின் பெரும் பகுதி தும்பைப் பூவாக வெளுத்துப் போயிருந்தது. நடை தளர்ந்து, உற்சாகம் குறைந்து அவள் முதுமையை வேகமாக எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

எரிமலை போல் அடிக்கடி உள்ளூரப் பொங்கி எழும் சினம்கூட இப்போது கசப்பாக மாறிவிட்டிருந்தது. கணவன் மீது, பெற்ற மகன்மீது, ஏன் அவளது ஆசையிலே மண்ணை அள்ளிப் போட்ட வாழ்க்கையின் மீதும் ஓயாத கசப்பு. கசப்புத்தான் அவள் நெஞ்சில் மோலோங்கி நின்றது.

கொஞ்ச நாட்களாக இரவு வெகு நேரம் சென்ற பின்னர்தான் சந்திரசேகரன் வீட்டிற்கு வர ஆரம்பித்தான். மற்றவர் உறக்கம் கெடுமே என்ற சிந்தனையின்றி நள்ளிரவில் வந்து கதவைத் தட்டினான். திடீரெனக் கதவைத் தாளிடுவதும், குளியலறைக்குள் புகுந்து அந்த வேளையில் ஆர்ப்பாட்டம் செய்வதும், அதற்குமேல் சாப்பிட வந்து வேலையாட்களை அதட்டுவதுமாக அவனது போக்கு நாளுக்கு நாள் பொறுக்க முடியாததாகப் போய்க் கொண்டு இருந்தது.

தங்கம் அவற்றைக்கூட அதிகம் பாராட்டவில்லை. ஆனால், சமீப காலத்தில் அவள் தன் மருமகனைப் பற்றி கேள்விப்பட்ட செய்திகள்? இதற்கு ஒரு வழி செய்யாவிட்டால் பொருள் நஷ்டத்துடன் அவளது மகளின் வாழ்வும் அல்லவா பாழாகிவிடும்?

இரண்டு நாளைக்கு முன்னர் கணவனிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தாள் தங்கம். ' மகாபலிபுரத்தில் யாரோ ஒரு பொண்ணோட நம்ப தம்பியைப் பார்த்தானாமே, கோதை மகன் சுந்தரம்'' என்று துணிவோடு தொடங்கினாள்.



வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்த கைலாசம் பதிலுக்கு ''உம்'' என்று உறுமினார்.

''சிந்தாதிரிப்பேட்டையில் பெரிய தெருவிலே ஒரு மூணு மாடிக் கட்டிடத்தின் பக்கம் நம்ம வீட்டுக் கார் அடிக்கடி வந்து நிக்குதாம். முதல் மாடியில் யாரோ ஒரு பாட்டுக்காரி குடியிருக்கிறாளாம்.''

''உம்!''என்ற உறுமல்தான் மீண்டும் அவரிடம் இருந்து எழுந்தது.

''போன வாரம் பெங்களூருக்குப்போன உங்க மருமகன் ஓட்டலில் தனியாக இல்லியாம். கூட ஒரு வயசுப் பொண்ணும் இருந்தாளாம். இதெல்லாம் எனக்குக் கேக்க சகிக்கல்லே. இதைப் பத்தி நீங்க விசாரிக்காம இருந்தா பரிமளா கதி என்னாகிறது? கண்டவங்களுக்குப் பணத்தை வாரி இறைக்கவா நீங்க பாடுபட்டு பணத்தைச் சேத்தீங்க?...'' ஆத்திரத்துடன் கேட்டாள்.

ஊஞ்சலை விட்டுக் குதித்தார் கைலாசம்.

''தங்கம்!'' என்று ஓங்கிய குரலில் அதட்டி விட்டு, குளியலறைக்குள் சென்று வெற்றிலையைத் துப்பி வாயைக் கழுவிக்கொண்டு வந்தார்.

''எனக்கு எப்போது என்ன செய்யணும்னு தெரியும். உன் உபதேசம் தேவையில்லை. கண்டவங்க பேசுகிற கட்டுக் கதைகளையெல்லாம் கொண்டு வந்து இங்கே என் மூளையைக் குழப்பாதே...'' கண்டிப்பான குரலில் பேசினார்.

''கட்டுக் கதை ஒண்ணுமில்லை. அப்பட்டமான உண்மை எல்லாம்...'' கோபத்துடன் முணுமுணுத்தாள் அவள்.

''அப்படி உண்மையாகவே இருக்கட்டும். அதனால் என்ன? ஆண் பிள்ளை சிலர் அப்படியும் இப்படியுமாகத் தான் இருப்பாங்க. இளவயசு. அதன் கோளாறு. இதெல்லாம் நாம் சொல்லித் திருத்துகிற காரியமா?''

''பின் யாராரா சொல்லி ஒழுங்கு பண்ணுவாங்க?''

''நான் மாமன். அவன் என் மருமகன். பெண்ணைக் கொடுத்தேனே ஒழிய அவனது உரிமை, உணர்வுகள்... ஒழுக்கம் இத்தனையையும் விலைக்கு வாங்கி விடவில்லை. இதைப்பற்றி அவனிடம் பேசக்கூட நான் விரும்பவில்லை. நீயும் இதைப்பத்தி யாரிடமும் கேட்டுத் தெரிந்துகொள்ளத் தேவையில்லை. புரிஞ்சுதா?'' முடிவாகத் தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

தங்கம்மாள் வழக்கம்போல் வாயை மூடிக்கொண்டாள் ஆனால் ஆத்திரம் மட்டும் அடங்கவேயில்லை.

மாரி காலத்துக்கென பாடுபட்டுச் சேர்த்து வைக்கும் எறும்பபோல அவர் தமது நலனைக்கூடத் தியாகம் செய்து சேர்த்து வைத்த அந்த சொத்தை இந்த சந்திரசேகரன் அள்ளி இறைப்பதா? இதென்ன கேள்வி முறையில்லையா? குமுறிக் குமைந்து கொண்டிருந்தாள்.

மகளிடம் பேசுவோம் என்றால், அங்கேயும் எதிர்ப்புத் தான். ''என் புருஷனை அடக்கி ஆள எனக்குத் தெரியும். நீங்கள் சும்மா வாயை அடக்கிக்கிட்டு இருங்கள்...'' பெண் புலியாக மகள் சீறி விழுந்தாள்.

தாய் என்ற மதிப்பும் பாசமும் அவளிடம் மறைந்து எத்தனையோ காலமாகி விட்டது. பேரதாததிற்கு சமீபத் தில் அவளுக்குப் பொதுதல வாழ்க்கையில் ஈடுபாடு அதிக மாக இருந்தது. இங்கே பொதுக்கூட்டம்—அங்கே திறப்பு விழா என்று அவள் வீட்டிலே நிலை கொள்ளாது வெளியில் சுற்றிக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நஞ்சமிருந்த பொழுதுக்கு அவளைத் தேடி புதுப்புது தோழிகளின் படையெடுப்பு. பெரும் தலை வேதனையாகப் போய்விட்டது. வந்தவர்களுக்குப் பொய் யாக நகை முகம் காட்டி, காப்பி, பலகாரம் வைத்து உபசரிக்காவிட்டால் மகளின் கோபத்திற்கு ஆளாக



வேண்டுமே என்ற அச்சத்தில் உடல் சோர்வைப் பாராது வயது காலத்தில் தங்கம்மா ஓடியாடிக் கொண்டிருந்தாள். ''எல்லோருமா சேர்ந்து குழிதோண்டுகிறாங்க, எனக்கு...', என்று புலம்பிய அவள் மனதில் யாவர் மீதும் அலுப்பு, வெறுப்பு.

கதவைத் திறந்துவிட்ட வீட்டுஎஜமானியின்முகத்தைக் கூடப் பாராமல் விர்ரென நடந்து மாடிப்பக்கம் விரைந் தான், சந்திரசேகரன்.

காற்றுவாக்கிலே முகத்தின்மீது வந்து வீசிய சிகரெட் டின் நாற்றம் குடலைப் புரட்டியது.

''சோப்பு—பவுடர், சென்டு—சிகரெட்—பாட்டு இது தான் மிச்சம்...'' முணுமுணுத்துவிட்டு கதவைத் தாளிட் டாள் அவள்.

மெல்ல மாடிக்குச் சென்று வராந்தாவின் கோடியில் இருந்த சிறிய அறைக்குள் புகுந்தாள். இப்பொழுதெல்லாம் அதுதான் அவளது படுக்கை அறை. சத்தமிடாது மெல்லப் படுக்கை மீது வந்து உட்கார்ந்தாள்.

பரிமளாவின் படுக்கையறையிலிருந்து எழுந்த பேச்சுக் குரல் காதுகளில் கணீரென்று வீழ்ந்தது. இரவின் அமை தியை கிழித்துக்கொண்டு ஓங்கிய குரலில் சந்திரசேகரன் கத்திப் பேசினான்.

''போதும் வாயை மூடுங்கள்'' பரிமளா பதிலுக்குக் கத்தினாள்.

''மரியாதை தவறிப் பேசினால் பல் உடைந்துவிடும்'' இது மருமகனின் மிரட்டல்.

தொடர்ந்து ஏதோ தடால் என்று விழுந்த ஓசை.

பிறகு விம்மல் ஒலி.

இதெல்லாம் கேட்க தங்கம்மாளுக்குப் பொறுக்கவே முடியவில்லை. ''இரவு-கருமம். வயசு காலத்தில்சன்முகா-

கந்தப்பா- முருகான்னு ஆண்டவனின் பேராவது காதில் வந்து விழக்கூடாதா? நான் செஞ்ச பாவம்!...'' தனக்குள்ளே பேசிக்கொண்ட தங்கம், மேலே கேட்கப் பிடிக்காது காதுகள் மீது கனமான கம்பளிப் போர்வையை இழுத்து மூடிக்கொண்டாள்.

பரிமளா கட்டிலின் மீது படுத்துக் கிடந்தாள்.

கோபத்தில் அவள் விட்டெறிந்த புத்தகம் சந்திரசேகரனின் காலடியில் கிடந்தது.

சிலையே உருவாகச் சன்னல் அருகே நின்று வெளியே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

''உங்களைத்தான் கேட்கிறேன். ஏன் இந்த அடம்?'' விம்மிய பரிமளா ஆவேசம் வந்தவள் போல் படுக்கைமீது ஒரு குலுக்கலுடன் எழுந்து உட்கார்ந்தாள்.

சங்கு போன்ற அவளுடைய கழுத்தில்புரண்டநல்முத்து மாலையில் தொங்கிய வைரப்பதக்கம் அவளது உள்ளத் துடிப்பின் எதிரொலி போல் நெஞ்சக்குழி மீது ஆடிக்கொண்டிருந்தது. அடர்ந்து நீண்டு தொங்கிய அவளது கூந்தல் முதுகில் புரண்டு கிடந்தது. சாயத்தால் பவளம் போல் மின்னிய உதட்டில் ஏளனப் புன்னகை.

''நீங்கள் ரொம்பவும் மாறிவிட்டீங்க. வாயைத் திறந்தால் போதும். வீடே அதிரும்படி கத்துறீங்க. நீங்கள் செய்வதெல்லாம் நியாயமா?'' தணிந்த குரலில் கேட்டுவிட்டு மையுண்ட விழிகளால் மருள அவனைப் பார்த்தாள்.

இவைகளுக்கெல்லாம் மயங்கி அவள் நிலை தடுமாறி அவளது கைபொம்மையாக இருந்த காலம் மலையேறி விட்டிருந்தது. திரும்பிப் பாராது அசட்டையாக அவன் பேசினான்.

''மாற்றத்திற்கு நீதான் காரணம். கணவனிடம் நடந்து கொள்ளும் முறை அப்படி இருக்கிறது!''



ஏனோ அதுசமயம் கணவனின் காலடி ஓசை கேட்டதும் பதறிக்கொண்டு வாசலுக்கு ஓடி வரவேற்ற மாதவி அவன் நினைவில் வந்து நின்றாள். அதுடன் கூட ஓர் ஏக்கப் பெருமூச்சு.

''யாரை நினைச்சுக்கொண்டு இந்த ஏக்கம்?...'' குத்தலாகப் பரிமளா கேட்டாள்.

''அது என் சொந்த விஷயம். எல்லாவற்றையும் உன்னிடம் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு நீ அருகதையுமில்லை.''

''அருகதையுடையவள் வேறு எவளோ ஒருத்தியோ?'' பரிமளாவின் புருவங்கள் அகம்பாவத்தால் நெரிந்தன.

''ஒருத்தியென்ன? பலர் இருக்கிறாங்க... இப்போஎன்ன செய்யப்போறே?''

''பேச மாட்டீங்களா? இந்த வாய் வீச்சு அப்போது இருக்கவில்லையே? அந்தக் காலத்தில்?...''

''ஆமாம். அந்தக் காலத்தில் வறுமைங்கிற சாக்கடையில் நான் கிடந்தேன். கருணை கொண்டு என்னைத் தூக்கி இந்த சிம்மாசனத்தில் வைத்தாய். இப்போது வேண்டாம் என்றால் உதைத்துத் தள்ளி விடுவதுதானே!''

''உம்! இப்போ பேச மாட்டீங்களா? உங்களைச் சொல்லி குற்றமில்லை.''

''பெரிய புள்ளியென்று ஊரில் உலவிவரும் உனக்கு கணவனை உதறிவிட்டவள் என்ற பட்டபெயர் பயங்கரமாகத் தோன்றுகிறதாக்கும். கண்டவங்க காரித் துப்புவாங்களே என்கிற அச்சம்!''

''உங்களுக்கு மட்டும்?''

''ஆமாம்! பணம், பதவி இரண்டும் போய் விடுமே என்கிற பயம். அப்படித்தான் வைத்துக்கொள்ளேன். இந்தப்

பயம் ஒன்றைத் தவிர நம்மை பரஸ்பரம் பிணைப்பது வேறு என்ன? பாசமா பாழாப் போகிறது?''

''உங்களோடு என்னால் பேச முடியாது...''

''உன் புலம்பலை என்னாலும் பொறுக்க முடியாது. என் மன அமைதியைக் குலைக்கிறாய்.''

சீற்றத்துடன் அறையை விட்டு வெளியே வந்தான் சந்திரன்.

திறந்த வெளி மாடியில் முன்னும் பின்னும் நிலை கொள்ளாது உலவத் தொடங்கினான்.

உண்மையில் அவன் உள்ளம் சில தினங்களாக அமை தியை இழந்து தவித்துக்கொண்டுதான் இருந்தது.

கைப்பிடிச் சுவர்மீது சாய்ந்து கொண்டு வெளியே கவிந்து கொண்டிருந்த இருளை ஊடுருவிப் பார்த்தவண் ணம் சிந்தனையில் மூழ்கிப் போனான்.

குளுகுளுவென்று வீசிய காற்றில், அருகில் படர்ந்து நின்ற நித்திய மல்லிகை மலரின் மணம் மிதந்து வந்தது.

உடனே அவனது நினைவில் மஞ்சள் நிற சேலையும்-பச்சை வண்ண ரவிக்கையும் அணிந்து இளமை குலையாத அழகுடன் மாதவி வந்து நின்றாள்.

அவளது கருங்கூந்தலில் மணம் வீசிய மலர்ச்சரமும்-கொழு கொழுவென்ற கரங்களில் குலுங்கிய கண்ணாடி வளையல்களும் சிந்தனையில் எழுந்து அவனை என்னவோ செய்தன.

எத்தனை முயன்றும் அடிநாளில் அவனிடம் கொண்ட அந்தப் பெரும் பற்றுதல்-இரக்கத்துடன் கலந்து விட்ட கவர்ச்சி உணர்வை அவனால் உதறித் தள்ள முடியாத ஒரு மயக்க நிலையில் தவித்தான்.



மாதவியை மணந்து கொண்டிருந்தால்...மறக்க இய லாத அந்த ஏக்கம் அவனது இதயத்திற்குள் வஞ்சகமாகக் கோர நடமிட்டது.

பரிமளா அன்றாடம் அவன் மீது தொடுத்த குற்றச் சாட்டுகள் அனைத்தும் உண்மைதான். அவளது பேரழகிற் குச் சொக்கி அவளை மணந்து கொண்டு வாழ்க்கை நடத்திய சில மாதத்திலேயே அவனுக்கு வாழ்க்கை புளித்து விட்டது. அவளுக்கு அழகு இருந்தது. ஆனால் அறிவு கலையில்லை. படித்தவள்தான். ஆனால் பண்பற்றவள், இவ்வாறு நாளைக்கு ஒன்றாக அவளிடம் குறைகளைக் கண்டு மனம் வெதும்பி நின்றான்.

இந்த ஏமாற்றத்தை இட்டு நிரப்ப அவன் கையாண்ட வழிகள் எவ்வளவோ? நாடிய பெண்கள் பலர். அழகான பெண்கள் பலரின் உறவு அவனுக்குக் கிட்டியது. ஆனால் மனதில் அவன் தேடிய நிறைவுதான் கிடைக்கவில்லை.

சமீபகாலமாக அவனிடம் சொந்தம் பாராட்டிக் கொண்டிருந்தவள் மோகினி. ஒரு தேயிலை விளம்பரத் திற்குப் புள்ளி விவரம் சேர்க்கத் தெருத் தெருவாக அலைந்து கொண்டிருந்த அவளைச் சந்தித்தான் சந்திரன். அவள் அவனைக் கண்டு மயங்கிப்போனாள். நெருக்கமாகப் பழகத் தொடங்கினர். ஆரம்பத்தில் மாமனாரைப் பற்றிக் கொஞ்சம் பயம் அவனுக்கு இருந்தது- காலம் செல்லச் செல்ல அந்த அச்சம் துச்சமாக மாறும் அளவுக்கு அனு பவங்கள் துணிவைக் கொடுத்து விட்டன.

கடற்கரை, கண்காட்சி, கடைத்தெரு என்று இருவரும் போகாத இடம் பாக்கியில்லை. அன்று மாலைப்பொழுது முழுவதும் மோகினி அவனது நிழல் போல் பின் தொடர்ந்து கொண்டிருந்தாள். ஆனால், அவளது அருகாமைகூட முன்னைப்போல் அவனுக்கு இனிக்கவில்லை. என்னென் னவோ எண்ணிவிட்டு அலுப்புடன் திரும்பி வந்து படுக்கை மீது அவன் சாய்ந்து கொண்டான்.

பரிமளா விளக்கை அணைத்துப் படுத்துவிட்டாள்.

அறையில் இருள் கலந்து கொண்டிருந்த போதிலும் அவள் தூங்காதுபுரண்டு கொண்டிருக்கிறாள் என அவனால் உணர முடிந்தது. எனினும் அவள்மேல் அவனுக்கு இரக்கம் ஏற்படவேயில்லை.

மிக அருகில் இருந்த போதிலும் இருவர் உள்ளத்து இடையே ஒரு பெரும் சுவர் எழுந்துகொண்டே இருந்தது.

சுவர் இடிந்து இருவர் உள்ளமும் ஒன்றுபடும் நாள் இனி இல்லை என்பதை நன்கு உணர்ந்திருந்தான் சந்திரன்.

அது தகர்க்க முடியாத. அகற்ற முடியாத, அழிக்க முடியாத ஓர் இரும்புச் சுவர்!

## 13

இறைவன் படைப்பில் இதயம் என்பது ஒரு பெரும் இரும்புப் பெட்டி.

இதற்குள் திறக்க முடியாத, வழி புலனாகாத் எத்தனையோ கள்ள அறைகள்.

கணவனுக்கும் புரியாத ஆயிரம் ஆயிரம் சிந்தனைகளை அடைத்துக் கொள்கிறது மனைவியின் உள்ளம்.

மனைவிக்கு விளங்கா கணக்கில்லாத எண்ணங்கள் குமிழியிட்டு அலைபாய்கிறது, கணவனது உள்ளத்து ஒரு மூலையில்.

இப்படி இருக்கும் போது எந்த ஆதாரத்தைக்கொண்டு இத்தம்பதிகள் மிகவும் ஒற்றுமையானவர்கள், ஒளிவு மறைவின்றி ஒருவரையொருவர் புரிந்து கொண்டவர்கள் என்று சொல்லிவிட முடியும்?



நெருக்கமிக்க தாம்பத்திய உறவிற்கும் எட்டாத எண்ணங்களைத் தன்னுள்ளே புதைத்துக் கொண்டிருக்கிறதே இந்தப் பொல்லாத மனித உள்ளம்?

இவ்வாறான சிந்தனை அன்று மாதவியின் கை வேலையைச் சற்றுத் தடை செய்தது.

கிழிந்து போன ஆடைகள் யாவற்றையும் பொறுக்கி ஒரு மரப்பெட்டியில் அடுக்கி ஒழுங்குப்படுத்தும் நிமித்தம் அதிகம் வெளிச்சமாக இருந்த தோட்டத்துத்தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள் அவள்.

மணிவண்ணன் பிளாஸ்டிக் கூடை ஒன்றை வைத்துக் கொண்டு தோட்டத்து மண்ணைக் கிண்டிக் கிளறி வாரி இறைத்து விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்தான்.

முதுகுப்புறம் சிறிதளவு மட்டும் கிழிந்திருந்த பூபதியின் வெள்ளைச் சட்டையை முதலில் பழுது பார்க்கக் கையில் எடுத்தாள். உடனே அன்று காலைச் சம்பவம் பளிச்சென்று நினைவுக்கு வந்தது. துக்கம் நெஞ்சை அடைக்க ஊசியில் நூலைக் கோர்க்க முடியாது கண்களில் நீர் ததும்பத் தடுமாறினாள்.

சில நாளாகவே பூபதி மிகவும் விசித்திரமாகக் காணப்பட்டான்.

அவனது பார்வை, நடந்துகொண்ட விதம், பேச்சு எல்லாமே அவளை மிகவும் குழப்பின. மிக்க மன வேதனை அளித்துத் துன்புறுத்தின.

''ஏன் இப்படிப் பேசுகிறீங்க? என்ன நடந்தது?...'' என்றெல்லாம் கேட்க வேண்டும் என எத்தனையோ முறை எண்ணியிருக்கிறாள். ஆனால், துணிவுதான் இல்லை.

அன்பைத் தவிர வேறு எதற்கும் இடம் கொடாத கபடமற்ற பூபதியின் முகத்தில் தெறித்த கடுமை அவள் வாய்க்குப் பூட்டுப் போட்டுவிட்டது. அவனது பேச்சில் தொனித்த குத்தல்கள் அவளது உயிரை ஊடுருவி வேதனை செய்தன

ஏன் இந்த மாறுதல்கள்? அவளுக்கு புரியாத புதிர்.

அவளுடைய ஆசைக் கணவனை அவள் எண்ணியது போல முழுவதும் தெரிந்து கொண்டிருக்கவில்லை. அவனும் அவளை அறிந்து கொண்டிருக்கவில்லை. அறிந்தவனாக இருந்தால் உணர்வுகள் வாடி- உள்ளம் குமுறி ரகசியமாகக் கண்ணீர் வடிக்க அவளை இப்படி வைப்பானா?

எல்லாம் பொய். உலகில் ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்துகொண்டு விட்டதாகத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். மனிதஉள்ளம் புரிந்துகொள்ள முடியாத பெரும் புதிர்.

பல்வேறு சிந்தனைகளால் கலங்கிய கண்கள் வடித்த நீரை மெல்லத் துடைத்துக் கொண்டாள் மாதவி.

அன்று காலை அப்படி என்ன நடந்து விட்டது? பூபதி சாப்பிடாமல் ஏன் வேலைக்குப் புறப்பட்டுப் போகவேண்டும்? அவளுக்கு விளங்கவேயில்லை, அவன் போக்கு!

குளியலுக்குப் பின்னர் வேறு உடை அணிய உள்ளே வந்தான் பூபதி. அவன் உடுத்திக்கொண்டு போவதற்காக ஆடைகளை வழக்கம்போல் தயாராக எடுத்து முக்காலி மீது வைத்திருந்தாள். சலவையில் இருந்துவந்த வெள்ளைச் சட்டையைப் பிரித்து உதறினான். முதுகுப் பக்கத்தில் ஒரு சிறு கிழிசல் சட்டென்று கண்ணில் பட்டுவிட்டது. அதை கவனியாமல் விட்டது மாதவியின் தவறுதான்.

இதற்கு முன் ஒருமுறை அவள் இவ்வாறு தவறு செய்து விட்டாள். வெளுத்து வந்த சட்டையின் கழுத்துப் பித்தான்கள் அனைத்தையும் உடைத்து விட்டிருந்தான் சலவைத் தொழிலாளி. தானே பித்தான்களை வைத்துத் தைக்கும் கணவனைக் கண்டு ''அடடா! நான் கவனிக்கவில்லையே?'' என்று அவள் ஓடிவந்து அவனிடமிருந்து அதை வாங்க கை' நீட்டினாள். ''அதனால் என்ன? காலையில் இருந்துஉனக்கு எத்தனையோ வேலைகள்.மேலும் நீ இப்போது உடல்நலம்



இல்லாமலிருக்கிறாய். இந்த சின்னக் காரியத்தை நானே கவனிச்சுக்கிறேன்!''

இப்போ அளித்த பதில்? ''உனக்கு இதெல்லாம் கவனிக்க பொழுது ஏது?'' காரமாகச் சொன்னான்.

ஒரு நாளும் கணவன் அப்படிப் பேசக்கூடியவன் அல்ல. கிழிந்து போன சட்டையைக் கொடியில் போட்டுவிட்டு வேறு ஒன்றை அணிந்து கொண்டான். மனைவி கொண்டு வைத்த காலைப் பலகாரத்தைத் தொடவில்லை. ''பசியில்லை வருகிறேன்'' கூறிவிட்டு விருட்டென வெளியே கிளம்பிச் சென்று விட்டான்.

பட்டினியுடன் அவன் வேலைக்குப் போகும்படி அவள் செய்த குற்றம்?

நெற்றி வியர்வை நிலத்தில் பட பாடுபட்டு உழைத்த அவன் உண்ணாமல் பசியோடு வெளியே கிளம்பிய பின்னர் அவளுக்கு மட்டும் சாப்பிட ஆசை இருக்குமா? அவளும் அன்று பட்டினி.

வெளியே போகும் முன் வாயில்வரை வந்து வழியனுப்பும் அவளிடம் பிரியாவிடை பெற்றுச் சற்றுத் தயங்கி நின்று விட்டுத்தான் அவன் போவது வழக்கம். அதற்குள் பலமுறை ஆசை பொங்கும் குரலில் ''வரட்டுமா?...வரட்டுமா?...'' என்று கேட்டுத் துளைத்துவிடுவான். அப்படிப்பட்டவன் சில தினங்களாக...''வருகிறேன்'' என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டு வேலைக்குச் செல்லத்தலைப்பட்டான்.

அன்று காலை அதைக்கூடச் சொல்லவில்லை. வாயிலுக்கு அவள் விரைந்து வருமுன் அவனது சைக்கிள் வண்டி தெரு முனையைத் தாண்டி மறைந்து விட்டது. இதை அவளால் தாங்கவே முடியவில்லை. கதவைத் தாளிட்டுக் கொண்டு வந்து கூடத்துத் தரைமீது படுத்துக் கட்டுக் கொள்ள முடியாமல் வாய்விட்டு வெகுநேரம் அழுது விட்டாள்.

''மரணம் ஒன்றைத் தவிர நம்மை யாரும் பிரிக்க முடியாது. காற்றுகூட நம் அன்பின் இடையே புக இயலாத்'

என்றெல்லாம் பெருமை பேசுவானே... இப்பொழுது அவர்கள் இடையே புகுந்து கொண்டது யார்?...

கல்லொன்றின் மீது இடறிவிட்ட மணிவண்ணன் ஓவென்று அலறித் துடித்தான். கை வேலையைப் போட்டுவிட்டு ஓடிச் சென்று மகனை வாரி அணைத்துக் கொண்டாள் அவள். தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு—மகனது கண்ணீரையும் துடைத்தாள். மார்புடன் தழுவி முத்தமிட்டு குழந்தைக்கு ஆறுதல் பல சொல்லிச் சமாதானப்படுத்த முயன்றாள். வெகு நேரம் குழந்தையை இடையில் வைத்துக் கொண்டுதோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள்—பிற்பகல் பொழுது. குழந்தைக்கு உணவு ஊட்ட உள்ளே வந்த பொழுதுதான், அவள் கவனித்தாள். வாசல் கதவு இடுக்கில் ஒரு கடிதம் செருகப்பட்டிருந்தது. கதவைத்தட்டி அலுத்துப்போனதபால்காரன் வேலை அது.

முகவரியின் முகப்பில் அவள் பெயர் காணப்பட்டது. பழக்கமான அந்தக் கையெழுத்தைக் கண்டதும் அவள் நெருப்பை மிதித்தவள் போல்நெஞ்சம் துணுக்குற்றுப்போய் விட்டாள். பிரித்துப் படிப்பதற்கு மெய்பதறி—நாக்குலர—சோர்ந்து விட்டாள்.

''என்றும் மறக்க முடியாத என் மாதவி!

வருகிற வெள்ளிக்கிழமை அலுவலக சம்பந்தமாக நான் திருச்சிக்கு வர வேண்டியுள்ளது. வெகு அருகில் வந்துவிட்டு உன்னைக் காணாதுபோவது என்பது என்னால் முடியாத காரியம். மாலை மூன்று மணி சுமாருக்கு அங்கு வருவேன். ஒரு முக்கிய விஷயம் உன்னிடம் பேச வேண்டும்.

உன் சந்திரன்.''

அழுக்கைத் தொட்டு விட்டது போன்ற அருவெறுப்பை கையில் பிடித்திருந்த அந்தக் கடிதம் கொடுத்தது. அத்துடன் அவளை ஆத்திரப் படவும் வைத்தது.



பிறன் மனைவி என்று தெரிந்திருந்தும் மட்டு மரியாதையின்றி இப்படியா எழுதுவது? என்ன நெஞ்சழுத்தம்? பணத்திமிர் இப்படிச் செய்யச் சொல்கிறதா! சந்திரசேகரனைப் பார்க்கவோ பேசவோ, கடந்து போனவைகளை நினைக்கவோ அவள் கடுகளவும் விரும்பவில்லையே. எடுத்துச் சொல்லியும் ஏன் அந்த மூடன் புரிந்து கொள்ள மறுக்கிறான்! இதற்கென்ன வழி? நெஞ்சு படபடக்க, உடல் முழுவதும் வியர்வை அரும்பு கட்ட...பதறிப் போய் அவள் வெகுநேரம் சிந்தனையுடன் நின்றாள்.

கணவனிடம் இதைப் பற்றிச் சொல்லி விடலாம் என்றாலோ அதற்கு வாயிருக்கவில்லை. அவளது முதல் காதலைப் பற்றியோ, சந்திரசேகரனைப் பற்றியோ அவன் கணவனிடம் ஏதும் பேசியதே இல்லை. தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று அவளது மதிப்புக்குரிய ஆசிரியர் சரவணன் ஆரம்பத்திலேயே எச்சரித்து விட்டிருந்தார்.

''பூபதி உன்னை மணக்க விரும்புகிறான். நீ சம்மதிக்கப் போகிறாய். இருவரும் ஒருமித்து மணவாழ்க்கை நடத்தப் போகிறீர்கள். என்னிக்கு அவன் கையை பிடிச்சுக்கொண்டு அவனது வாழ்க்கைத் துணைவின்னு நீ புறப்படுகிறாயோ அன்னியிலிருந்து உன் உணர்ச்சி, உன் வாழ்வு-உன் இன்பம் உன் துன்பம் அனைத்திலும் அவனுக்குப் பங்கு உண்டு. நடக்கும் காலமும், வருங்காலமுந்தான் அவனுக்குச் சொந்தம். கடந்த காலத்தைப் பற்றிப் பேச இருவருக்குமே உரிமை இல்லை. உன்னைப்பத்தினவரை ஒரு விபரீதமும் நடந்துவிடவில்லை. கானல் நீரைக் காதல்னு நினைச்சுக் கொஞ்சம் மனம் கலங்கிப் போனாய். இதையெல்லாம் பூபதி கிட்டே சொல்லி, ஆரம்பிக்கப் போகும் இன்ப வாழ்வை மாசுபடுத்தக்கூடாது. மனித உள்ளம் விசித்திரமானது. சிறு சஞ்சலங் கூடப்போதும். ...பெரும் விபரீதங்களுக்கு அடிகோலி விடும். சந்திரனைப் பற்றிப் பேச வேண்டியது ஒன்றுமில்லை. முறையுமல்ல'' வற்

புறுத்தி சரவணன் கூறிய இந்த அறிவுரைகளை அவள் மறக்கவேயில்லை. அதன்படிதான் நடந்து வந்தாள்.

இனி இதுபற்றி கணவனிடம் அவள் பேசுவதுமுறையா? ஒருவேளை கணவன் மனதில் சந்திரனை பற்றி ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டு விட்டதா? முதல் முறை சந்திரன் வந்து விட்டுப் போனதும் அவர்கள் வாழ்க்கை முன் போல் அமைதியும் ஆனந்தமுமாகத்தானே இருந்தது. சில நாட்களாகத்தானே பூபதியிடம் இந்த மாறுதல்கள்! ஏன்? இதைப் பற்றி தக்க ஆலோசனை கேட்க சரவணன் கூட அருகில் இல்லையே என்ற ஏக்கம். அவளுக்கு ஒன்றுமே புலப்படாத ஒரு குழப்பம்.

இரவு வெகுநேரம் சென்ற பின்னர்தான் அன்று பூபதி வீட்டிற்கு வந்தான். நடைசுவர் ஓரமாக சைக்கிளை நிற்க வைத்துவிட்டு கூடத்துத் தரைமீது பாயை விரித்துப் போட்டுக் கொண்டு படுத்து விட்டான்.

கலவரமடைந்து போனாள் மாதவி. அருகில் வந்து, மெல்லிய குரலில் ''சாப்பிட வேண்டாமா? படுத்துட்டீங் களே?'' கேட்டு முடிப்பதற்குள் துக்கம் அவள் தொண் டையை அடைத்தது.

''வேண்டாம்...'' முனகினான் பூபதி.

படுக்கையில் இருப்புக் கொள்ளாமல் அவன் புரள் வதைக் கண்டு அவளுக்கு மனம் பொறுக்கவில்லை. மெல்ல அவன் கன்னத்தைத் தொட்டுப் பார்த்தாள். உடல் நெருப் பாகச் சுட்டது.

''காய்ச்சல் அடிக்கிறதே! மருந்து...'' அவள் முடிக்க வில்லை.

''வரும் வழியில் டாக்டரிடம் காட்டிவிட்டு வந்தேன். மருந்து கொடுத்தார். சாப்பிட்டுவிட்டேன். இப்போ எனக்கு ஒன்னும் வேண்டாம். என்னைத் தொந்திரவு செய்யாதே...'' சீறிவிட்டுப் போர்வையை இழுத்து முகத்தை மூடிக்கொண்டு விட்டான்.



குழந்தைக்கு உணவை ஊட்டித் தூங்க வைத்த பின்னர் மாதவி சமையலறையைச் சாத்திவிட்டு கணவன் காலடி யில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

அன்று முழுவதும் அவள் ஏதும் சாப்பிடவேயில்லை. பசிக்குப் பதில் வயிற்றிலே நெருப்பாக ஒரு கிலி.

உடம்புக்கு சிறிது நோவு வந்து விட்டாலும் பொறுக் காமல் துடித்துப்போகும் பூபதி இப்படி ஏன் மவுனமாக இருக்கிறான். முன்னொரு சமயம் கடும் காய்ச்சலுடன் இரண்டு நாள் படுத்துவிட்டபோது பச்சைப்பிள்ளை போல் அவள் மடியில் தலையை வைத்துக்கொண்டு அரற்றினான். அவளை எங்கும் போக விடாது அடம் பிடித்தானே? அதை யெல்லாம் எண்ணியபோது அவள் இதயமே வெடித்துவிடும் போல் வேதனை செய்தது.

எழுந்து சென்று அலமாரியிலிருந்த மருந்து டப்பாவை எடுத்து வந்தாள். அருகில் உட்கார்ந்து கொண்டாள். மெல்ல முகத்தின் மீது கிடந்த போர்வையை நீக்கினாள். லேசாக மருந்தை விரல்களால் தொட்டு அவன் நெற்றிமீது பூசத் தொடங்கினாள்.

அவ்வளவுதான். சட்டென்று அவள் கரத்தை அப்பால் தள்ளிவிட்டு பூபதி எழுந்து உட்கார்ந்தான். மூலையில் எரிந்து கொண்டிருந்த விடி விளக்கின் மங்கிய ஒளியில் அவன் முகபாவம் முழுமையாக விளங்கவில்லை. காய்ச்சல் கடுமையாக வீசுகிறது என்பதை அவனது முனகல் உணர்த் தியது.

''என்னைத் தொல்லை செய்யாமல் தனியாக இருக்க விடு. தீவிரமாக சிந்தித்து ஒரு முடிவுக்கு வர எனக்குத் தனிமை இப்போது மிகவும் அவசியம். என்னை எந்தக் கேள்வியும் கேட்காதே. ஏதேனும் கேட்டால் விஷயம் விபரீதமாகலாம்'' சீறினான். அவன் குரலில் வெறுப்பு நிறைந்திருந்தது.

மாதவியின் நெஞ்சு வேகமாகத் துடித்துக் கொண்டது. ஓவென்று அழ வேண்டும் போன்ற துக்கம் நெஞ்சிலே,

பெரும் பெரும் உண்டையாக அடைத்துக் கொண்டது. அவளால் சட்டென்று பேச முடியவில்லை. விழிகளில் பொங்கிய கண்ணீரை அடக்கிக்கொண்டு சமாளித்தாள்.

''நான் என்ன செய்துட்டேன். எங்கிட்டே ஏன் இந்த கோபம்? இப்படி மறைமுகமாகப் பேசுவதைவிட என்னை ஒரேயடியாகக் கொன்று விடுங்கோ''விக்கி அவள் அழுதாள். அவனுடைய கால்கள்மீது விழுந்து கண்ணீரை உதிர்த்தாள்.

தன் கால்களை அவளது பிடியினின்று நீக்கிக் கொண்ட பூபதி சற்றுத் தள்ளி எழுந்து சுவரின்மீது சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டான்.

''மாதவி!'' அதட்டலாக அழைத்தான். காய்ச்சலில் வேதனைப்படும் என்னைக் கொஞ்சம் ஓய்வாக இருக்கவிட மாட்டியா? அதற்குக்கூட நான் தகுதியற்றவனா?ஏன் இந்த அழுகை? அழ வேண்டியவன் நான்...'' என்றான் கசப்பு நிறைந்த குரலில்.

அன்பு மொழியின்றி வேறு பேசத் தெரியாத கணவன் வாயிலிருந்தா இந்தக் கடும் சொற்கள்? மாதவியால் கட்டுக் கொள்ள இயலவில்லை. எழுந்து சமையலறைக்குள் சரண் புகுந்தாள்.

இனி அவளுக்கு இந்த வாழ்வு தேவையா?

வானம் இடிந்து, மண்ணோடு மண்ணாக ஏன் புதைந்து போகவில்லை?

மரணம் ஏன் ஓடி வந்து அவளைத் தழுவி மறைக்க வில்லை?

பூபதியின் அன்பை இழந்தபின், இனியும் அவள் வாழத் தான் வேண்டுமா?

ஏன் - ஏன்?...

மனம் வெடிக்க அவள் விம்மிவிம்மி அழுதுகொண்டே யிருந்தாள்.

# 14

சில ஆண்டுதான் என்றாலும் சரவணன் தோற்றத்தில் மிகவும் உருக்குலைந்து விட்டிருந்தார். வறுமை, குடும்பச் சுமை இரண்டும் சேர்ந்து எஞ்சியிருந்த அவரது வலு முழுவதையும் குடித்து விட்டன.

முன்போல் அவரால் பட்டணத்துப் பெரிய மனிதர்கள் வீட்டுக்குள் புகுந்து சங்கீதத்தை விலைபேச முடியவில்லை. வீட்டோடு தங்கிவிட்டார். ஆசைப்பட்டு வலிய தேடி வந்த ஒன்றிரண்டு சிறுமிகளுக்கு மட்டும்தான் அவர் கற்பித்து வந்தார். அதனால் வாடி வதங்கியது அவர் குடும்பம்.

நோயாளியான அவர் மனைவியின் உடல்நிலை படு மோசமாகிவிட்டது. இனி சொல்வதற்கில்லை. நாட்களை எண்ண வேண்டியதுதான் என்று நகரத்து ஆஸ்பத்திரி வைத்தியர்கள் கைவிட்டு விட்டனர். குடும்பத்தில் முதலில் செத்து மடியப்போவது யார் என்பதுபோல், வறுமை கொஞ்சம் கொஞ்சமாக அவர்களைப் பிடுங்கித் தின்று கொண்டிருந்தது.

ஒருநாள் பொறுக்க முடியாமல் கௌரி வேலைக்குப் புறப்பட்டு விட்டாள். அவள் அதிகம் படித்தவள் அல்ல. பத்தாவது வகுப்புத் தேர்வுக்குப் பின்னர் தட்டெழுத்திலும், சுருக்கெழுத்திலும் பயிற்சி பெற்றிருந்தாள். ஒரு காலத்தில் உதவலாம் என்று கற்ற அந்த வித்தை இப்போது அவர்களுக்கு உணவு அளித்தது.

நகரத்தில் மறுகோடியிலிருந்த ஒரு மருந்து உற்பத்தி சாலையில் அவள் கணக்கராக வேலை பார்த்து வந்தாள். இயற்கையில் அவள் தாயைப்போல் நல்ல அழகி. சிறிது நீண்ட வடிவ முகம். எடுப்பான மூக்கு—கரிய நீண்ட கண்கள். அடர்ந்த நீண்ட கூந்தல்-வறுமையின் கோரப்பிடியையும் மீறி பருவப் பூரிப்பில் செக்கச் சிவந்த சொக்குத் தங்கம் போல் மின்னினாள்.

மகள் வேலை செய்ய. தாம் மட்டும் உட்கார்ந்து சாப்பிட வேண்டிய விதியை எண்ணி நொந்து போனார் சரவணன். வீட்டு நிழலிலே விஷமர்கள் கண்கள் படாமல் வாழவேண்டிய பருவப் பெண்ணை வெயிலிலும், மழை யிலும் ஓடியாடி உழைக்கச் செய்ய வேண்டி வந்ததே என்று மனம் கூசிப்போனார். அதைத்தவிர அவரால் வேறு எதையும் செய்ய இயலவில்லை.

சேலம் சென்ற அந்த பஸ்ஸில் அவர் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அந்த நிலையத்தில் வந்து நின்றதும் அங்கே இறங்குபவர் அவரைத் தவிர வேறு எவரும் இருக்க வில்லை. திம்மனூர் அங்கிருந்து சில கிலோமீட்டர் தூரம் என்பதை நெடுஞ்சாலையில் இருந்த டீக்கடைகாரர் தெரி வித்தார். கையில் மாற்றுக்குக் கொணர்ந்த ஒரு வேட்டியும் துண்டையும் தவிர அவரிடம் சுமை எதுவும் இல்லை. கையில் பிடித்த பையுடன் கடைக்காரர் காட்டிய பாதை யில் மெல்ல நடந்தார்.

விடிந்து வெகுநேரம் ஆகவில்லை. அடிவானம் மெல்ல வெளுத்துக் கொண்டு வந்தது. அருகில் ஓடிய காவேரியில் இருந்து பூங்காற்று குளுமையாக வீசியது. எங்கு திரும்பி னாலும் பச்சை பசேலென்றவயல்கள். சலசலத்தநீரோடை கள். இந்த எழிலைப் பார்த்தபடியே நடந்தேபோய் விடுவது என்று தமது தள்ளாமையை பாராட்டாது மெல்ல மேலே நடந்தார்.

கரையைக் கிழித்துக்கொண்டு ஓடிய ஒரு சிறு வாய்க்கால் மதகின் அருகே வந்ததும் சட்டென்று நின்றார். வீடு நெருங்கி விட்டது போன்ற ஓர் உணர்வு. வாய்க்கால் படிகள் மீது கிராமத்துப் பெண்கள் இருவர் நின்று கொண் டிருந்தனர். அவர்களில் ஒருத்தி நீர் நி றந்த குடத்தை இடுப்பில் எடுத்துக்கொண்டு திரும்பியவள், அவரை வியப் புடன் பார்த்தாள். இந்தப் புதிய மனிதர் யார் என்ற பாவனை அவள் பார்வையில்.



"பூபதி வீடு எங்கே இருக்குன்னு சொல்ல முடியுமா?" பணிவாகக் கேட்டார் சரவணன்.

"நேரே போய் சோத்துக் கைப் பக்கம் திரும்பினால் வேப்ப மரம் ஒண்ணு வரும். அதுக்கு அப்பாலே ஒரு ஓட்டு வீடு ஒண்ணு தெரியும். அதுதான் "அவங்க வீடு..."

"நல்லதம்மா!" நன்றி கூறி விட்டு மேலே நடந்தார் அவர்.

வெகுதூரம் அவர் சென்று விடவில்லை. காற்றினூடே மிதந்து வந்த சிரிப்பு அலைகள் அவர் காதுகளில் விழுந்தன. அதன் பொருள் என்னவென்றும் விளங்கி விட்டது. துன்ப பெருமூச்சு விட்டார் அவர்.

பூபதி இப்படி ஊரார் நகைக்கும்படி மாதவியை அவலமாக்கி விட்டானே? அவன் ஒரு மனிதனா?

கோபத்தில் அவருடைய கால்கள் தள்ளாடின மூச்சு இரைத்தது. வீட்டை நெருங்க நெருங்க இனம் விளங்காத் துயரம் ஒன்று அவரைப் பற்றிக் கொண்டது.

இறந்து போனவரின் நெருங்கிய உறவினரைக் காணச் செல்லும்போது ஏற்படும் புரியாத அந்த வேதனையில் அவர் குழம்பிக்கொண்டு நடந்தார். என்ன பேசுவது, எப்ப டிச் சமாதானம் செய்வது என்ற தயக்கம் அவருக்கு உணர்ச் சிக் கொந்தளிப்பில் மூச்சு வாங்க, இதயம் படபடக்க வீட்டு வாயிலில் நின்று மெல்லக் கதவை அணுகித் தட்டினார்.

கதவைத் திறந்தாள், நரைத்த தலை கிழவி ஒருத்தி. அவள் முகக் குறியிலிருந்து அவளுக்கு எல்லாம் தெரியும் என்று விளங்கியது.

"நீங்கள்"

"மாதவி என் உறவுப் பெண்!" சுருக்கமாகப் பதில் அளித்தார்.

''நல்லதாப் போச்சு, நீங்க வந்தது. அந்தப் பொண்ணு இந்தப் பத்து நாளா ஒரு பொட்டுத் தண்ணிகூட வாயிலே விடலை. ஒரே அழுகைதான்...'' சொல்லிவிட்டுப் பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவள்போல், ''நான் எதிர் வீட்டிலேதான் இருக்கிறேன். மனசு கேட்கலை. நான் இங்கேயே ராவும் பகலுமா இந்தப் பெண்ணை கட்டிக் காத்துக்கிட்டு கிடக்கிறேன். அறியாப் பொண்ணு, பாவம்'' என்றாள் அனுதாபத்துடன்.

பேச்சுக் குரலைக் கேட்டதும் கூடத்துத் தரையில் படுத்துக்கிடந்த மாதவி விருக்கென எழுந்து உட்கார்ந்தாள் உணவும் உறக்கமுமின்றி அவள் இளைத்துத் துரும்பாகி விட்டிருந்தாள்,

திருமணத்திற்குப் பின்னர் மறுபடியும் அவளைப் பார்க்கும் வாய்ப்பு சரவணனுக்கு இருக்கவேயில்லை. அழுதழுது—சிவந்து வீங்கிய முகமும் கண்களும்- வாராத கூந்தலும்- அலுங்கிய ஆடையுமாக அவள் துயரமே வடிவாய் எழுந்து எதிர்பட்டதைக்கண்டு அவர் திடுக்கிட்டுப் போனார்.

''பாவிப் பயலே! இப்படி அலங்கோலப்படுத்தி அவமானப்படுத்தவா அன்னிக்கு வற்புறுத்தி இந்தப் பெண்ணை உனக்குக் கட்டிக் கொடுத்தேன்!'' தமக்குள்ளே பூபதியை சபித்தார்.

எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தாலும் தனது கடிதத்தை தந்தி போல் பாவித்து, பெற்ற தகப்பனை விட மேலான பரிவுடன் உதவி புரிய வந்திருக்காரே என்று எண்ணிய மாதவிக்கு துக்கம் தாள முடியவில்லை.

''ஐயா! நான் என்ன சொல்லுவேன். என் வாழ்வு நாசமாகி விட்டதே... என் மணிவண்ணனைக் கூடவா இழக்கணும்...'' திணறலும் விம்மலுமாகக் கேட்டுவிட்டு அவருடைய கால்களைப் பிடித்துக்கொண்டு அழுதாள்.



அன்று இரவு உறக்கமின்றி முன்னும் பின்னும் உலவிக் கொண்டிருந்த சரவணனிடம், மாதவி ஒளிவு மறைவின்றி நடந்ததையெல்லாம் கூறிவிட்டாள். இனி நடக்க வேண்டியதைப் பற்றி ஆலோசிக்க வேண்டியது அவர் பொறுப்பாக இருந்தது.

பொழுது புலராமல் இருக்கட்டும் என்று சூரியனுக்கு கட்டளையிட்ட புராணகாலத்து நளாயினியின் சக்தி மட்டும் அவளுக்கு இருந்திருந்தால், அன்று வெள்ளிக் கிழமை காலைப் பொழுதை விடிய விடாது தடுத்து விட்டிருப்பாள் மாதவி. அப்படி ஒரு பயங்கர தவிப்பு அவளுக்கு.

சில தினமாகக் காய்ச்சலில் படுத்திருந்த பூபதி உடல் முற்றும் தேறாத நிலையில் பிடிவாதமாக வேலைக்குப் புறப் பட்டு விட்டான். அன்று காலை அவனை வீட்டிலே தடுத்து நிறுத்தி வைக்க அவளால் இயலவில்லை. கணவன் வீட்டிலேயே இருக்கவேண்டும். இப்போது சந்திரன் அவளைத் தனியே சந்திக்கும் ஒரு சந்தர்ப்பமே ஏற்படாது என்று மிகவும் விரும்பினாள்.

கணவனிடம் வெளிப்படையாகக் கூற முடியாமல் தவித்தாள். அந்தப் பாழும் பிற்பகல் வந்தது. மூன்று மணியளவில் காலைச் சுற்றிய பாம்பைப் போல் சந்திரன் வந்து கதவைத் தட்டினான். அளவிட முடியாத பெருங்கோபத்துடன் மாதவி கதவைத் திறந்தாள். எப்படியாவது வெளிப்படையாகத் தன் வெறுப்பைக் காட்டி அவனது தவறான செயலுக்கு முடிவுகட்டி விடுவது என்று முன்னதாகத் தீர்மானம் செய்து வைத்திருந்தாள்.

வழக்கம்போல் அவன் கோட்டும் சூட்டுமாக வரவில்லை. சரிகை வேட்டி, வெள்ளை ஜிப்பா அழகு செய்ய முகத்திற்கு கருப்புக் கண்ணாடி அணி செய்ய சுகத்தைத் தேடித் திரியும் சில இளவெட்டுகளைப் போல உல்லாச நடையுடன் உள்ளே நுழைந்தான். அவனுக்கு முன், அவன்

வாரி உடம்பில் இரைத்துக் கொண்டிருந்த ரோஜா அத்தரின் மணம் முந்திக்கொண்டு உள்ளே வந்தது.

வாயிற்கதவை வேண்டுமென்றே திறந்தபடி விட்டு வைத்தாள் மாதவி. கப்பலைப் போன்ற காரைக் கண்டதும் வேடிக்கை பார்க்க வந்து நிற்கப் போகும் அண்டை வீட்டுப் பெண்கள் அவளைப் பற்றித் தவறாக நினைக்கக்கூடாது அல்லவா? வீண் வதந்தி, பழிச் சொற்கள் இவற்றுக்கு வாயிற் கதவு மட்டும் பாதுகாப்பு அல்ல என்பதை அவள் அதுசமயம் உணர்ந்து கொள்ளவில்லை.

''ஒரு மாதிரியாகப் பார்க்கிறீயே மாதவி!'' கேட்டபடி உள்ளே வந்து நின்றான் சந்திரன்.

அவனது பார்வை—பேச்சு எல்லாம் அவளுக்கு நெருப்பாக இருந்தன.

''வீண் பழியை உண்டாக்கி எங்கள் வாழ்க்கையை நாசமாக்க வேண்டுமென்றே புறப்பட்டு வந்திருக்கிறீங்க. உங்களைப் பார்த்த பின் எப்படியிருக்கும்?''என்று சீறினாள் கோபத்துடன். தொட்டில் சங்கிலியை ஆதரவுக்குப் பிடித்துக்கொண்டு நின்றாள். அவள் கால்கள் நடுங்கின.

''ஆசையோடு உன்னைக் காண வந்திருக்கிறேன். ஆத்திரத்தில் துடிக்கிறீயே மாதவி'' குழைவாகக் கேட்டுக் கொண்டு சந்திரன் அவள் அருகில் வந்தான்.

அவளுக்கு மூச்சு முட்டியது. என்னைப் பெயர் சொல்லி அழைக்கவும், இங்கே தனியே வந்து பேச முயற்சிக்கவும் உங்களுக்கு உரிமை கிடையாது. பரிமளா அக்கா கணவன் என்கிற மரியாதைக்காக முதல் தடவை உங்களை உள்ளே வர அனுமதித்தேன். வீணான உங்கள் எண்ணம் எல்லோருடைய நாசத்திற்கும் காரணமாகிவிடும் என்று எச்சரிக்கத்தான் இம்முறையும் அனுமதித்தேன். மாற்றான் மனைவி என்ற நினைப்பு இல்லாது இப்படிப் பேச வெட்கமில்லை?



என் கணவர் காதில் பட்டால் கொதித்துப் போவார். பின்னால் உங்களுக்கும் பரிமளா அக்காவுக்கும் வீணான அவமானம்'' என்றாள் கடசுட.

தீப்பொறி பறந்த அவளுடைய விழிகளை ஆர்வத்துடன் பார்த்துவிட்டு அவன் கபடமாகச் சிரித்தான்.

''சினிமாக் கதாநாயகிகள் போல் ரொகத்தான் வசனம் பேசுகிறாய்? இதைச்சொல்ல பெரிய ஒத்திகை செய்தாயோ உன் மொழியிலேயே எனக்கும் பேசத் தெரியும். அன்று உனக்கு அழகின் கடவுள் வேலனாக நான் இனித்தேன். இன்று வில்லனாக வந்து கசப்பை வாரி வழங்குகிறேன்... அப்படித்தானே?'' ஏளனமாகக் கேட்டுவிட்டு உரக்கச் சிரித்தான்.

மாதவி ஒரு கணம் நடுங்கிப் போனாள். ஆனாலும், துணிவை விடவில்லை. ''அதையெல்லாம் பற்றிப் பேச உரிமை கிடையாது. போதும். வாயை மூடுங்கள்'' இரைந்து கத்தினாள் அடக்கமாட்டாத ஆத்திரத்தில். வெறுப்பும் திகிலும் சேர்ந்து அவள் தேக முழுவதும் வியர்க்கச் செய்தன.

''வேண்டும். அவளுக்கு-இன்னமும் வேண்டும்-இதற்கு மேலும் வேண்டும். காது பொறுக்காத வார்த்தைகளைக் கேட்டு அவள் நன்றாகத் துடிக்கட்டும். தேன் வண்டைப் போல் சமூகத்தில் நிலையின்றித் திரிந்து கொண்டிருக்கும் காமுகனைத் தவறாக நம்பி, காதலன் என்று தன் மாசற்ற அன்பை அவன் காலடியில் வைத்துப் பணிந்தாளே? அந்தப் பாவத்திற்கு இன்னும் பல கொடுமைகளை அனுபவித்துத் தான் ஆகவேண்டும்...'' தன்னைத்தானே உள்ளூர சாடிக் கொண்டாள் அவள்.

''மாதவி! கடந்து போனது என்று அதை எப்படி உதறி விட முடியும்? முதல் முதலில் காதல் என்ன என்று அறியாத உனது களங்கமற்ற உள்ளத்திலே எனக்குத்தானே நீ இடம் கொடுத்தாய்—நாம் இருவரும் ஒருவருக்கொருவர் எவ்வளவு அன்பு வச்சிருந்தோம். பணம், பதவிக்கு மயங்கி பெற்றோர்களின் பேராசைக்குப் பலியானவள் நான். அதெல்லாம்

உனக்குத் தெரிந்ததுதானே. பணமும், பதவியும் எனக்கு சுகத்தைக் கொடுக்கவில்லையே? கொடுக்க அவைகளுக்கு சக்தி கிடையாது. ஏன் தெரியுமா? இரத்தத்துடன் கலந்து என் உயிரோடு ஒன்றிவிட்ட உன்மேல் கொண்ட ஆசை கொடும் தீயாக என்னை வாட்டி வதைக்கையில்-பணமும்-பதவியும் யாருக்கு வேண்டும்? மாதவி! வேண்டாம் நமக்கு இந்தப் போலி வாழ்வு. நீ மட்டும் சுகமாகவா இருக்கிறாய்? நான் நம்ப மாட்டேன். என் திருமணத்தின்போது பந்தலில் இருந்து ஓடி மயங்கி விழுந்தாயே? ஏன் விழுந்தே? வேலைகளின் அலுப்பா? உள்ளம் சிதறிய உணர்ச்சிக் கொந்தளிப்பைத் தாள முடியவில்லை. என்மேல் கொண்ட கட்டுக்கடங்கா காதலின் வேதனையைத் தாளமுடியாது நீ மூர்ச்சையாகிவிட்டே. அதைப் புரிந்துக்கொண்டு நான் பட்ட துயரம்? மாதவி! நம் காதல் மறக்க முடியாத காதல்-ஒன்று கலந்துவிட்ட பிரிக்க இயலாத பாசம் - யுகயுகமாகத் தொடர்ந்து ஓடிவரும் துண்டிக்க இயலாத இணைப்பு''

எரிமலையாகப் பொங்கிப் போனாள் மாதவி. இந்தப் பித்தனுடைய போக்கை எப்படி நிறுத்துவது?...சிந்தித்து அவள் ஒரு முடிவுக்கு வரும் சமயம் தெரு வாயிற்படியில் ஏதோ காலடி ஓசை கேட்டது போன்ற மருட்சி.

''யாரது?''

அதட்டிக்கொண்டு வேகமாக அங்கே விரைந்தாள். கதவு திறந்தபடிதான் இருந்தது. யாரையும் காணவில்லை. வாயிலில் நின்ற காரின் மீது படிந்திருந்த புழுதிப்படலத்தில் விரலை வைத்துக் கோலமெழுதிக் கொண்டு நின்றனர் கிராமத்துச் சிறுவர் சிலர்.

''பரிமளா அக்கா வீட்டு உப்பைத் தின்றுவிட்டோம் என்பதற்காக நான் பொறுத்தேன். மிகவும் முறை தவறி வாயில் வந்தபடி பிதற்றுகிறீங்க. உங்களுக்கும் எனக்கும் இடையே உறவு ஏதும் இல்லை. பூபதி என் கணவர் - அவரைத் தவிர என் எண்ணத்தில்கூட வேறு ஒருத்தரின்



நிழல் படாது... தயவு செய்து போயிடுங்க— நீங்கள் இங்கேவருவதை நான் விரும்பலை'' தாழ்ந்திய குரலில் சொன்னாள்.

இடியெனச் சிரித்தான் சந்திரன். பெரிய கண்ணகி போல் பேசி விட்டியே மாதவி?'' ஏளனமாகத் தொடர்ந்து சிரித்தான்.

மாதவி அவமானத்தில் முகம் சிவந்து போனாள். நெஞ்சு பதறியது. அவனது வார்த்தைகள் சுட்டு எரித்தன.

''வெளியே போங்கள் என்று மரியாதையாகச் சொன்னால் புரியாதுன்னா உங்களைப் போக வைக்க எனக்குத் தெரியும். ஓவென்று கூச்சலிட்டு அண்டை அயலாரை உதவிக்கு அழைக்கவும் நான் துணிந்துவிட்டேன். பின்னால் வரும் அவமானத்தில் உங்களுக்கும் பங்கு உண்டு. மறக்க வேண்டாம்'' ஆவேசம் பிடித்தவள் போல் அதட்டிப் பேசினாள்.

உடல் பதைக்க, கண்கள் கனல் கக்க, காளிபோல் அவள் நின்ற கோலத்தைக் கண்டு சந்திரன் ஒரு கணம் கலங்கிப் போனான்.

''உம்!'' என்று பதிலுக்கு உறுமினான். பிறகு ''நான் வரேன்''—கருக்கமாகக் கூறிவிட்டு விர் என வெளியேறி காருக்குள் ஏறிக்கொண்டான்.

தன் நினைவுக்கு வர மாதவிக்கு வெகுநேரம் சென்றது.

# 15

பூபதி அன்று வீட்டிற்குத் திரும்பிய பொழுது நடு இரவாகி விட்டது. மாதவி உறக்கம் வராது கவலையுடன் வாயில் மீதே விழியாகக் காத்துக் கொண்டிருந்தாள்.

''ஏன் இவ்வளவு நேரம்?'' என்று எடுத்த எடுப்பிலேயே கேட்க அவளுக்கு அச்சமாக இருந்தது. நெருப்பாக

எரிந்த அவன் கண்களைக் கண்டு அவள் நடுங்கிப் போய் விட்டாள்.

ஏன் இத்தனை கோபம்? யார்மேல் கோபம்? எதற்காக?... குழப்பத்துடன் சிறிது நேரம்வரை இருந்து பார்த்தாள். மனம் அமைதியடையவில்லை.

''கடையில் கணக்கு எடுத்துக் கொண்டிருந்தீர்களா என்ன? நேரம் ரொம்ப ஆயிட்டதே?'' மெல்லிய குரலில் பயந்தபடி கேட்டாள்.

பூபதி அவள் பக்கம் கூடத் திரும்பவில்லை. அவளைத் தாண்டிக்கொண்டு உள்ளே விரைந்தான்.

''என் தலையெழுத்தைக் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தேன்...'' பட்டென்று பதில் அளித்துவிட்டுத் தொட்டில் தூங்கிக் கொண்டிருந்த மகன் அருகே வந்து நின்றான்.

விடி விளக்கு வீசிய மெல்லிய வெளிச்சத்தில் மணிவண்ணன் பால்வடியும் இனிய முகத்தைக் கண்கொட்டாமல் சிறிது நேரம் உற்றுப் பார்த்தான். பின்னர் ஏதும் பேசாது கூடத்து மூலையில் சுருட்டி வைத்திருந்த பாயை எடுத்துக் கொண்டு முன்னறைக்குள் புகுந்தான்.

கரை உடைத்துக்கொண்டு பொங்கிப் புறப்பட்ட வெள்ளமாக எழுந்த துக்கத்தை வெகு சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள் மாதவி.

அவன் பின்னால் ஓடிச்சென்று காலடியில் விழுந்துகதற வேண்டும்போல் ஓர் ஆத்திரம் அவளை உலுக்கியது.

''உங்கள் மனத்தில் என்னதான் இருக்கு? சொல்லுங்கள். தவறு செய்தவள் நானாக இருந்தால் தண்டனையை ஏற்கத் தயார்...'' என்று அவன் பாதங்களைப் பற்றிக் கொண்டு கண்ணீரால் கழுவவேண்டும் போன்ற ஓர் ஆவேசம்.

கடுமையே உருவாக அவளது கண்ணீருக்கும் அசையாத இரும்புத்தூணாக மாறிவிட்டிருந்த அவன் அருகே நிற்கவும்



அவளுக்குத் துணிவு இல்லை. புயலில் சிக்கிய கொடியென மேனி நடுங்கியது.

செய்வதென்ன என்று புரியாது அரண்டு போய்க் குழந்தையின் தொட்டில் அருகே உட்கார்ந்து விட்டாள்.

குழந்தை மணிவண்ணன் அழுதான்

சட்டென்று விழித்துக்கொண்டாள் மாதவி. மகனை வாரி அணைத்து சமாதானப் படுத்திக்கொண்டே முன்னறைக்குள் வந்தாள்.

விடிந்து சிறிது நேரந்தான் ஆகிவிட்டிருந்தது. ஒருக்களித்துக் கிடந்த வாயிற் கதவைக் கண்டதும் அவள் திடுக்கிட்டுப் போய் விட்டாள்.

தரைமீது விரிந்துப் போட்ட பாய் அப்படியே கிடந்தது. பூபதியை அங்கே காணவில்லை.

வாயில் திண்ணையில் உட்கார்ந்திருக்கலாம் என்று எண்ணியபடி மெல்லக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். அங்கும் அவனைக் காணவில்லை. தெருவில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையும் காணவில்லை.

'ஒரு வேளை புழக்கடைப் பக்கம் இருப்பாரோ... வேகமாக உள்ளே ஓடிப்போய் பார்த்தாள்.

முதல் நாளிரவு அவள் தாளிட்ட கதவு அப்படியேதான் இருந்தது.

கலவரமும் பீதியும் போட்டியிட அவர்கள் படுக்கும் அறைப்பக்கம் வந்து பார்த்தாள். சில தினங்களாக பயன்படுத்தாமல் சுருட்டிக் கயிற்றுக் கட்டிலின் மீது வைக்கப்பட்டிருந்த படுக்கை அப்படியேதான் இருந்தது.

அதன் அருகே இதுநாள் வரை பார்த்திராத ஒரு கடித உறை நீட்டிக் கொண்டு படபடத்ததைக் கண்டாள்.

அருகில் சென்றதுமே அது பூபதி எழுதியது என்று விளங்கி விட்டது.

உரைமீது அவன் பெயர் காணப்பட்டது.

பிரித்துப் படிக்குமுன்பே பயத்தில் அவளுக்குப் பாதி உயிர் பிரிந்து விட்டது. மீதியைக் கடிதத்தில் கண்ட செய்தி குடித்து விட்டது.

''என்ன எழுதுவது என்று எனக்கே விளங்கவில்லை. குற்றம் புரிந்து விட்டவன் நான். உன்னைக் குறை கூற வில்லை.

சந்திரசேகரனுக்கும் உனக்கும் ஏற்கனவே அறிமுகம் உண்டு. அத்துடன் காதலும் உண்டு என்ற உண்மை எனக்கு முன்பே தெரிந்திருந்தால். உன் வாழ்வில் நான் குறுக்கிட்டிருக்க மாட்டேன்.

நானே உண்மையைத் தேடிக்கொண்டு போகவில்லை. அது தானாகவே வலிய என்னைத் தேடிக்கொண்டு வந்தது. சில தினங்களுக்கு முன்னர் நான் வீட்டிற்கு வழக்கத்திற்குச் சிறிது முன்னதாகத் திரும்பினேன். கதவு இடுக்கில் ஒரு கடிதத்தைத் திணிக்க முயன்ற தபால்காரனைக் கண்டேன். எனக்குத்தான் இருக்குமென்று அவசரமாகப் பிரித்து விட்டேன். பின்னர்தான் தெரிந்தது அது எனக்கு அல்ல.

சந்திரன் தன் அன்பைக் கொட்டி உனக்கு எழுதியிருந்த காதல் கடிதம், அது.

அப்போது என் உள்ளத்தைப் பொசுக்க நெருப்புத் தேவையிருக்கவில்லை.

''மீண்டும் சந்திக்கிறேன். பல ஆண்டுகளுக்குப் பின்னர் நான் பார்க்க நேரிட்டது என்றாலும் மறக்க முடியுமா நமது காதலை...''

சந்திரனின் இந்த வார்த்தைகள் என் நெஞ்சைவாளாக அறுத்தன. என் மனம் பட்ட பாட்டை விவரிக்கவே இயலாது. விவரித்தாலும் உன்னால் புரிந்துகொள்ள முடியாது என்னைப் புரிந்து கொள்ள உனக்கு பொறுமைகூட இனி இருக்கிறதா, என்ன?



களங்கமற்ற கண்ணாடி போன்றவள் என் மனைவி என எண்ணி இறுமாந்து போயிருந்தேன். மறைவில் எனக்கு எத்தனை பெரிய துரோகத்தைச் செய்து விட்டாய். எவ்வளவு முறை எனக்குத் தெரியாமல் சந்திப்புகள் நடந்தனவோ?

தரைமீது மணிவண்ணன் அருகே நீ உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது அப்படியே உன் கழுத்தை நெரித்து விடவேண்டும் போன்ற கோரமான கொலைச் சிந்தனை கூட என் மனதில் எழுந்தது உண்மை,

வஞ்சிக்கப்பட்ட கணவன் மிருகத்திற்குக் கீழாக மாறுவதில் வியப்பே இல்லை.

சிந்தித்தேன் - சிந்தித்தேன். இந்தப் பத்து தினங்களும் சித்திரவதைப்பட்டேன். முடிவற்ற இந்தத் துன்பத்திற்கு முடிவு காண முயன்றேன். எனினும் கண்ணால் காணாத வரை ஒரு முடிவிற்கு வருவது தவறு என மனசாட்சி இடித்தது. வெட்கமில்லாது உன்மீது கொண்ட ஆசை கெஞ்சியது.

இன்றுமாலை என் காதுகளே எனக்குச் சாட்சியாக இருந்தன. வீட்டு வாயிலில் நின்ற அந்தப் பெரிய காரைப் பார்த்துவிட்டு உள்ளம் குமுற ஓடி வந்தேன், வீட்டிற்குள். திடீரென்று வஞ்சத்தை வஞ்சத்தால் வெல்ல வேண்டுமென்ற நினைப்பு. மெல்ல ஓசைப்படாது வந்து நடையில் நின்றேன்.

உன்னிடம் சந்திரன் கொஞ்சிப் பேசிய மொழிகள் என் கன்னத்தில் வந்து அறைவனபோல் சுளீரென விழுந்தன.

''மாதவி - நமது காதல் மறக்கமுடியாத காதல்-ஒன்று கலந்துவிட்ட பிரிக்க இயலாத பாசம் - யுகயுகமாகத் தொடர்ந்து வரும் துண்டிக்க இயலாத இணைப்பு!''

கேட்டுக் கொண்டே நிற்கிறாயே கெடுகெட்டவளே இன்னமும் உனக்கு வாழ ஆசை இருக்கிறதா, என்று குத்தியது என் மனசாட்சி. நிற்கப் பிடிக்கவில்லை, மேலே கேட்கப் பொறுக்கவில்லை. அப்படியே வெளியே போனேன்

வாய்க்கால் கரை மீது பல மணி நேரம் இருளில் உட்கார்ந்திருந்தேன். இனி நான் செய்யவேண்டியது என்ன?... மீண்டும் மீண்டும் சிந்தித்தேன்...அதன் முடிவு இதுதான்.

இனி எனக்கு வாழ்க்கையில் சாரமில்லை. கொதித்துக் குமுறும் உள்ளத்துச் சுமையைத் தாங்கும் சக்தியுமில்லை. அமைதியின்றி. உறக்கமின்றி-உணவின்றி பித்தனைப்போல் கடந்த சில தினங்களாக நான் தவித்த தவிப்பு—அது ஒன்றே எனக்குப் பெரும் தண்டனை.

நரகம் இதைவிடவா கொடுமையானது? மரணம் இதை விடவா பயங்கரமானது? அவமானம் தொடர இயலாத வஞ்சனை வாதனை செய்யாத, அமைதி நிரம்பிய அந்த ஓர் இடத்திற்குள் மறைந்து விடுவது என்பதே என் தீர்மானம்.

என்னை எங்கும் தேடாதே. பயன் இல்லை. உன் மனம் போல் நீ வாழ்க்கையை வகுத்துக் கொள்ளலாம். இந்தப் பாவி பூபதி இனி குறுக்கிட மாட்டான். மணிவண்ணனுக்கு என் ஆசி.

பூபதி ''

கடிதத்தைப் படித்துவிட்டு மனம் வெடிக்க அழுதாள். வெகுநேரம் கத்தி ஓலமிட்டாள்.

முடிவில் ஏதோ எண்ணியவளாகத் தன்னைச் சீர்படுத்திக்கொண்டு மணிவண்ணனைத் தூக்கிக்கொண்டாள்.

வாயிற் கதவைப் பூட்டிவிட்டு வேகமாக பஸ் நிலையத்திற்கு ஓடினாள். காவேரிக்கரை முழுவதும் தேடிப் பார்த்தாள். அடர்ந்து கிடந்த தென்னந்தோப்பில் மறைந்து கிடந்த பாழுங்கிணற்றை எட்டிப் பார்த்தாள்.

காற்றோடு கலந்து விட்டவன் போல் அவள் கணவன் மாயமாகப் போய் விட்டான்.

உச்சி வேளையும் கடந்துவிட்டது. வீட்டிற்குத் திரும்பி வந்தவள், தன் வேதனையெல்லாம் அடக்கிக் கொண்டு பொறுமையாகக் காத்திருந்தாள்.



அழுது ரகளை செய்தால் அண்டை அயலாருக்குத் தெரிந்து விடும். வீண் புரளி ஏற்படலாம். ஒரு சமயம் பூபதி கோபம் தணிந்து வீடு திரும்பி வரக்கூடுமே?

நம்பிக்கையுடன் மூன்று நாளைக் கழித்து விட்டாள். ஆனால், பூபதி வரவேயில்லை.

எத்தனை மூடி வைத்தும் விஷயம் நெருப்பாக ஊரில் பரவி விட்டது. கற்பனைக் கதைகள் சிறகு விரித்துப் பறந்தன. வம்பு விமர்சனத்திற்கோ கணக்கில்லாமல் போயிற்று. துக்கம் விசாரிக்கவும் வம்பு திரட்டவும் வந்து விட்டனர் அண்டை அயலார்.

ஒரு வாரகாலம் சென்றது. ஒரு நாள் பூபதி வேலை பார்த்து வந்த கடை முதலாளியே அவனை நேரில் காண அங்கு வந்து விட்டார். கடைக்காரரின் கார் வாசலில் வந்து நின்று விட்டதும் ஊரே திமிலோகப்பட்டது.

முதலாளிக்கு என்ன சொல்வது என்றே மாதவிக்குப் புரியவில்லை. அவருக்கு ஏற்கனவே ஓரளவிற்கு விஷயம் தெரிந்திருந்தது. அவளை மேலும் புண்படுத்த விரும்பாத வராகச் சுற்றி வளைத்தார்.

''ஒரு மாத சம்பளம் அவருக்குக் கொடுக்க வேண்டியது முறை. அதை இதில் வைத்திருக்கிறேன். தொடர்ந்து கொஞ்சகாலம் நீங்கள் இங்கே இருக்கலாம். ஆனால், புதி தாக கடைக்கு வந்திருக்கும் கணக்கருக்கு இந்த வீட்டைக் கொடுப்பதாக வாக்களித்து இருக்கிறேன். அதனால் ...''

இழுத்தபடி முதலாளி அவளிடம் ஒரு காகித உறையைக் கொடுத்துவிட்டு விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

மேலே என்ன செய்வது என்று புரியாது தவித்த மாதவிக்கு சரவணனின் நினைப்பு வரவே—இவருக்கு விபரமாக எல்லாம் எழுதி உடனே வந்து உதவ வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

ஒன்றையும் ஒளிக்காது நடந்ததைப் பூராவும் மாதவி சொன்னாள். பூபதியின் கடிதத்தையும் அவர் படித்துப் பார்த்தார். தாங்க முடியாத சினத்தில் ஆடிப் போய் விட்டார்.

''கடமை, பொறுப்பு, இதெல்லாம் இல்லாத இளம் வயது வாலிபனா பூபதி? வயதும் அறிவும் அனுபவமும் முதிர்ந்த மனிதன். முன்பின் ஆராயாமல் கோழைத்தன மாக அல்லவா ஓடிவிட்டான்? கண் கலங்காமல் மாதவியை வைத்திருப்பான் என்று இவன் கையில் ஒப்படைச்சதுக்கு...'' தனக்குள் எண்ணியபடி கோபத்துடன் கூடத்திலே முன் னும் பின்னும் உலவினார் சரவணன்.

''சுவர் ஓரமாக நின்று கொண்டிருந்த மாதவியிடம் திரும்பி — ''கோழை - மகா கோழை ... பூபதியும் ஒரு மனிதனா?'' என்று சீற்றத்துடன் சொன்னார்.

'' அவர்மேல் குற்றமில்லை, ஐயா. குற்றம் புரிந்தவள் நான். இவர் மனத்தில் சந்தேகத்தை அவ்வளவு தூரம் வளர்த்துவிட்டேன். களங்கமற்ற தன் பரிசுத்த நிலையை நிரூபிக்க சீதை தீக்குளித்ததுபோல் அவருக்காக தீயில்கூட பாய நான் தயார் - எனக்கு விளக்கம் கொடுக்க அவகாசம் கொடுக்கலையே,'' என்றாள் தழுதழுத்த குரலில்.

''என்னிடமாவது அவன் வந்து விளக்கம் கேட்டிருக் கலாம் அல்லவா? முட்டாள், இப்படி ஒரு காரியம் செய் வானா? அது சரி அம்மா, நீ அழுததெல்லாம் போதும், கண்ணீரைத் துடைத்துக் கொள். இனி நாம் என்ன செய்ய வேணுங்கிறது எனக்கு விளங்கிவிட்டது...'' என்றார் உத்திரவிடும் பாவனையில்.

''என்ன?'' என்று கேட்கும் பாவனையில் அவள் பார்த் தாள்.

''எல்லாத்தையும் எடுத்து மூட்டை கட்டிக் கொண்டு நாளைக்கு நாம் ஊருக்குப் புறப்பட வேண்டியது. நீ எங்க



ளுடன் வந்து தங்கப் போகிறாய்...அதுதான் முடிவு'' என்றார் அதட்டலாக.

''அது எப்படி ஐயா முடியும்? உங்களுக்கு பாரமாக...'' மாதவி முடிக்குமுன் அந்தக் கிழவர் கோபமடைந்து விட்டார்.

கொடிக்குக் காய் பாரமா? நீயும் எனக்கு ஒரு குழந்தை. நான் பெற்றெடுக்காத குழந்தை நீ. என் மகளை வச்சுக் காப்பாத்துகிறது என் கடமை. மறுபேச்சு சொல் லாம புறப்படு. வேண்டுமானால் பூபதி உன்னைத் தேடிக் கொண்டு அங்கு வரட்டும். பின்னர் சொல்கிறேன்'' என்றார் பிடிவாதமாக.

# 16

கோடை காலம்.

நகரத்தின் மிக நெருக்கமான ஒரு பகுதியில் குறுகிய சந்தொன்றில் இருந்தது, அந்த வீடு.

அதன் பின்கட்டில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தாள் மாதவி.

முன் கட்டில் ஆறு குடித்தனக்காரர்கள். பகல் பொழு தெல்லாம் அங்கே ஓரே இரைச்சல். இத்துடன் அருகிலிருந்த சாலையில் வாகனங்கள் எழுப்பிய சத்தம் நரம்புகளைப் பொடி செய்து கொண்டிருந்தது.

மாதவி குடியிருந்த பகுதியில் காற்றோட்டம் குறைவு. பகல் முழுவதும் இரைச்சல். இரவில் புழுக்கம். வெகு தொலைவு அன்றாடம் நடந்து சென்று உடலை வருத்தி வேலை செய்யும் அலுப்பு. கிடைத்த வருவாயில் வயிற்றை நிரப்ப வழியில்லாத பற்றாக்குறை. இவை நடுவே அவள், உழன்று கொண்டிருந்தாள்.

காத்திருந்தாள் அவள் காத்திருந்தாள். காலமுழுவதும் அவள் காத்திருக்கவும் தயார்தான். ஆனால், இம்மனூரில்

அவளைத் தவிக்க தவிக்கவிட்டுப் போன பூபதி போனவன் தான். ஆண்டுகள் ஐந்து நகர்ந்தோடி மறைந்து விட்டன. அவனை மீண்டும் காண்போம் என்ற எண்ணமும் அவளிடம் கரையத் தொடங்கியது.

பூபதி ஒரு சமயம் இறந்து விட்டானோ?

அவள் விதவையா?

அல்லது, வாழ்வை இழந்தவளா?

உண்மை விளங்காத ஒரு நிலையில் உள்ளம்குமுறியபடி அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

சக்திக்கு மீறிய உழைப்பால் அவள் உருமாறித் தேய்ந்தாள். ஆனால், களைபொருந்திய மகன் மணி வண்ணனை எட்டு வயது சிறுவனாக வளர்த்து விட்டாள்.

இன்னும் எஞ்சிய காலத்தைப் பொறுமையாக ஓட்டி விட்டால் மகனைப் பற்றி அவள் கண்ட கனவு நினைவாகி விடும் என்ற ஒரு நம்பிக்கையில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்தாள்.

ஆரம்பத்தில் சரவணன் மிகவும் வற்புறுத்தியதால் அவள் அவர்கள் குடும்பத்தோடு சேர்ந்தே வாழ்ந்து வந் தாள். நோயாளியான காமாட்சியம்மாள் சில நாளில் கால மாகி விடவே பல தொல்லைகள் ஒன்றன்பின் ஒன்றாக அந்தக் குடும்பத்தைத் தொடர்ந்தன. செலவும்-கடனும் சமாளிக்க முடியாது சரவணன் தத்தளித்தார். அநசமயம் சிக்கனத்தை முன்னிட்டு கௌரி வேலைபார்த்து வந்த நிறுவனத்தில் சில பகுதிகளில் 'ஆட் குறைப்பு' செய்திருந் தனர். அதில் கௌரியும் ஒருத்தியாக இருந்தாள். இந்நிலை யில் அவர்கள் குடும்பத்திற்குப் பாரமாக மேலும் அங்கே தங்கி வசிக்க மாதவிக்கு மனமில்லை. மறுத்து விட்டாள். கௌரியிடம் கொஞ்சம் பணம் செலவிற்குக் கொடுத்து விட்டுக் குழந்தையுடன் தனி இடம் தேடிக்கொண்டு புறப் பட்டுவிட்டாள்.



சென்னை வாசத்திலே சில மாதங்களில் செலவழிந்தது போக அவள் கையிருப்பாக மிஞ்சியது இருநூறு ரூபாய்கள் தான். ஆபத்திற்கு இருக்கட்டும் என்று அதை சேமிப்பு நிதியில் கட்டி விட்டாள். அன்றாட வாழ்க்கையை நடத்த ஆண் பிள்ளையைப் போல் அவள் பாடுபட்டு உழைக்க வேண்டி வந்துவிட்டது.

கைலாசத்தின் மீதோ - தங்கம்மாள் மீதோ அவள் குறைபட்டுக் கொள்ளவில்லை. அனாதையாகி விட்டிருந்த அவளை அவர்கள் சிறுவயதில் ஆதரித்தனர். செய்நன்றியை மறக்கும் சிறுகுணம் அவளுக்குக் கிடையவே கிடையாது. சுபாவத்தில் உணர்ச்சி வசப்பட்டு உருகிவிடும் கோழைப் பெண் மாதவி. நன்மை செய்தவர்களுக்குப் பிரதியாக ஏதும் செய்யவில்லையே என எண்ணி ஏங்கும் மென்மை உள்ளம். ஆனால், அடிநாளில் அவளுக்குத் தக்க கல்வி வசதி அளிக்க தங்கம்மாள் மறுத்தாளே என்ற சிறு கசப்பு உள்ளத்தில்.

படித்துப் பட்டம் பெற்றவளாக இருந்தால் பள்ளி ஆசிரியைத் தொழிலுக்குப் பஞ்சம் இராதே? அவள் சுகமாக வாழ்ந்து கொண்டிருப்பாளே! பட்டம் இல்லாததால்... அப்படிப்பட்ட பதவிகளுக்கு வாய்ப்பு இல்லை. தேவி நிலையத்தின் சமையல் அறைக்குள் சரணாகி விட்டிருந்த அவளுக்கு ஒரு தொழிலும் தெரிந்திருக்கவில்லை.

அவள் பயின்ற சங்கீதம் சபைக்கு முன்வர அனாதை யற்றதாக இருந்தது. கீழே உதிர்ந்ததை வாரி எடுத்தது போன்று அவள் அள்ளிக் கொண்ட அறிவு. அது. பூஜை யறையில் பாடினால்பகவான் ஏற்றுக் கொள்வார். மனிதர் கள் நடத்திய சங்கீதப் பள்ளிக்கு அது எடுபடாத சரக்காக இருந்தது. முறைப்படி சங்கீதத்தைக் கற்றுக்கொள்ளும் மனநிலை அவளிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு விட்டது. இந்நிலையில் எப்போது அவள் சங்கீதம் கற்றுக் கொள்வது - பிறருக்கு ஆசிரியை ஆவது?

தேவி நிலையத்தில் அவள் கற்றுக்கொண்ட ஒரே கலை தான் அவளுக்கு இது சமயம் உதவியாக இருந்தது. தங்கம் மாள் வீட்டு சமையலறையில் விதம் விதமாக நாவிற்குச் சுவையாக உணவு தயாரிக்கத் தெரிந்து கொண்டிருந்த மாதவி, முடிவில் சமையல் தொழிலைத் தன் வாழ்வின் வழி காட்டியாக மேற்கொண்டு விட்டாள். விடியுமுன் வேலைக்கு எழுந்து ஓடி, நாள் முழுவதும் அடுப்படியில் கிடந்து வெந்தாள். ஆனால், மாத முடிவில் கிடைத்த சம்பளம் அவளுக்கும், அவள் மகனுக்கும் போதியதாக இருக்கவில்லை.

நகரத்துப் பிரபல ஓட்டல் ஒன்றில் சிற்றுண்டிப் பகுதி யில் வேலை பார்த்து வந்த சிவகுரு அடிக்கடி ஓய்ந்த போதெல்லாம் அவளைப் பார்த்துவிட்டுப் போவான். அப் போதெல்லாம் அவன் உதவியாகக் கொடுக்க வந்த பணத்தை அவள் கையால் தொடவும் மறுத்துவிட்டாள்.

''என்னிடம் அன்பு காட்ட ஒரு அண்ணன் இருக்கிறார் அந்த நினைவே போதும். எனக்குத் தேவையானது தற் சமயம் இருக்கிறது'' என்று அழுத்தமாகக் கூறினாள்.

சிவகுருவுக்கு நடந்த விஷயம் முழுவதும் தெரிந்திருக்க வில்லை. பூபதி ஏதோ காரணமாக வீட்டைவிட்டு வெளி யேறி விட்டான் என்ற வரைக்குந்தான் அவனுக்கு உண்மை தெரிந்தது. ''ஒருசமயம் வேலை பார்த்த இடத்தில் பணத் தில் கையை வைத்து விட்டான் போலும். முதலாளி கண்டிப்பானவர். சும்மா விடமாட்டார். அந்தப் பயமும், அவமானமும் அவனை வீட்டைவிட்டு ஓடச்செய்து விட்டன போலிருக்கிறது. மாதவி வெளியே சொல்ல விருப்பமின்றி மறைக்கிறாள். இருக்கட்டும், புண்பட்ட மனம். மேலும் குடைவானேன்'' பெருந்தன்மையுடன் கடந்து போனவை களைப் பற்றி மறந்தவனாக இருந்தான்.

பொருள் உதவியை மறுத்த மாதவி, அவனது புத்தி மதியையும் ஏற்க மறுத்துவிட்டாள் என்று சிவகுருவுக்கு மிக்க வருத்தம். கைலாசத்தின்பங்களாவிலேயே மீண்டும்



சென்று அவள் தங்குவதுதான் சரியென்று அவனுக்குத் தோன்றியது. எத்தனை வற்புறுத்தியும் அவள் பிடிவாத மாக இருந்துவிட்டாள். தனியே வசிப்பதைப் பெரிதும் விரும்பினாள், அதற்குப்பின் அவனால் செய்யக்கூடியது ஏதும் இருக்கவில்லை. அவ்வப்போது வந்து விசாரித்துப் போய் வந்தான்.

தனக்குக் கிடைக்கும் வருவாயைப் பெருக்க வேண்டும் என்ற ஆவல் மாதவிக்கு. மணிவண்ணனுக்கு உண்ணவும், உடுக்கவும் - கல்வி கற்கவும் எந்தவிதமான கஷ்டமும் ஏற் படக்கூடாது என்ற துடிப்பு அவளுக்கு. அவர்கள் வசித்த தெருவில் ஒரு பெண்மணி தையல் வகுப்பு நடத்தி வந்தாள் பகல் முழுவதும் சமையல்காரியாக உழைத்துவிட்டு, அந்திப் பொழுதில் வீடு திரும்பிய அவள், உடல் சோர்வைப் பாராது தையல் வகுப்புக்குச் சென்று வந்தாள். இரவில் விளக்கடியில் உட்கார்ந்து பழைய காகிதங்களை வெட்டிப்- பழம் துணிகளைத் தைத்து தானே மேலும் பயின்று கொண்டாள். வருட முடிவில் அவளிடமிருந்த ஒரே நகை யான மெல்லிய தங்கச் சங்கிலியை விற்று தையல் யந்திரம் ஒன்றை வாங்கிக்கொண்டாள்.

நகரத்திற்கு வந்து வாழ்க்கையைத் தானே வகுத்துக் கொள்ளத் திட்டமிட்ட மாதவி, ஐந்தாவது வருட முடிவில் பகலில் சமையற்காரியாகவும் - இரவு வேளைகளில் தையல் காரியாகவும் கடுமையாக உழைத்தாள்.

அதிகமான உழைப்பினால் சீர்குலைந்து மேனி மண் ணோடு மண்ணாகி விட்டாலும் சரி; அன்று உள்ளத்திலே எடுத்துக்கொண்ட அந்த எண்ணத்தை ஈடேற்றிவிட வேண்டும் என்ற ஒரே நோக்கம் அவளுக்கு. நாளடைவில் அவளது ஆரோக்கியம் நலிந்தது. ஆனால், அவளது உள்ளத்து வலிமையோ இரும்பினும் திடமாக வளர்ந்து கொண்டே போயிற்று.

பூபதி அவர்களை விட்டுச் சென்ற பின் அவள் மணிவண்ணனுக்கு என்னென்னவோ செய்ய ஆசைப்பட்டாள். தந்தை காட்டாத பாசம் - ஊட்டாத கல்வி - தாயின் பரிவு எல்லாவற்றையும் சேர்த்து அவனை வளர்த்தாள். ஒருகணம் கூட அவன் கண்களில்' நீர் வடிக்கக்கூடாது - நெஞ்சில் தந்தையில்லை என்ற ஏக்கத்தின் நிழல்கூட வீசக்கூடாது என்ற ஆதங்கம் அவளுக்கு. ஆனால் வேலை நிமித்தம் நாள் முழுவதும் அவளால் அவன் அருகில் இருக்க முடியவில்லை.

கைக் குழந்தையுடன் வேலை தேடிக்கொண்டு அவள் புறப்பட்ட புதிதில் பட்ட தொல்லைகள் அநேகம்.

''குழந்தையை கவனிப்பியா - சமையலைப் பார்ப்பியா...? இது ஒத்துவராது...'' தலையை அசைத்து அனுப்பி விட்டனர், சிலர்.

''நினைத்தபோது பிள்ளைக்குப் பாலும், தயிரும் எடுத்து ஊட்டிவிடுவாள், சரிபட்டு வராது'' என்று அஞ்சி வேலை கொடுக்க மறுத்தவர் பலர்!

''கணவன் இருக்கிறாரா? வெளியூர் போயிருக்காரா?'' அவளது பொட்டையும் - பூவையும் - இளமையையும் சந்தேகக் கண்களுடன் பார்த்தவர், ஒரு சிலர்.

அவர்களிடம் தர்கிக்கவோ - விவரித்துச் சொல்லவோ மாதவிக்கு விருப்பம் இருக்கவில்லை. வகையும் இருக்கவில்லை. உயிருக்கு மேல் அவள் நேசித்த பூபதியே அவளது கற்பைச் சந்தேகித்தபின்னர் இனி யாருக்கு அவள் விளக்கம் தரவேண்டும். பயன்?

ஆரம்பத்தில் வேலைக்குப் போக வேண்டி அவள் மணிவண்ணனை வீட்டின் முன்கட்டில் வசித்த அஞ்சலைப் பாட்டியிடம் ஒப்படைத்து விட்டுப் போனாள். பாட்டியின் பேரன் நகரத்துத் தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்து வந்தான். அவன் வேலைக்குப் புறப்பட்ட பின்னர் எஞ்சிய பொழுதைத் தூக்கத்தில் கழித்துக் கொண்டிருந்தாள்.



பாட்டி வெற்றிலை, பாக்கு செலவுக்கு ஆகுமே என்று மாதவி கொடுத்த சிறு தொகைக்கு குழந்தையைப்பார்த்துக் கொள்ள இசைந்தாள்.

ஆனாலும், நாள் முழுவதும் குழந்தை மீது பெற்றவளின் நினைப்பு. பாட்டி கவனக்குறைவாக இருந்து விட்டால்? மழை பெய்கிறதே...மணிவண்ணன் முற்றத்து மழையில் நனைந்து ஆடுகிறானோ?...பல கவலைகள், சஞ்சலத்திலே தத்தளித்து— ஏழ்மையிலேவாடி— உடலால் உழைத்து...எப்படியோ மூன்று ஆண்டுகளை கடத்தி விட்டிருந்தாள்.

மணிவண்ணன் பள்ளிப்பருவம் எய்திய சமயம்—பாட்டி திடீரென்று மாரடைப்பில் மரணமடைந்து விட்டாள். அவளுக்கும் முன்போல் மகனை நாள் முழுவதும் கட்டிக் காத்து வரவேண்டிய அவசியம் இப்பொழுதுஇருக்கவில்லை.

காலை உணவு கொடுத்து—உடுத்தி- புத்தகப் பையைக் கையில் தந்து மகனை வாயிற்படிக்கு அருகே வெளியே உட்கார வைத்துவிட்டு அவள் வீட்டைப் பூட்டிக்கொண்டு வேலைக்குப் போய் விடுவாள். அவர்கள் வசித்த வீட்டின் அருகேயே பள்ளிக்கூடம் இருந்தது. மணி ,அடிக்கும்வரை உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாது மணிவண்ணன் படித்துக் கொண்டிருப்பான். பள்ளி மணியின் முதல் ஒலி கேட்டதும் கையில் பிடித்த பையுடன் மதிய உணவுத்தூக்கு பாத்திரத்தையும் சுமந்துகொண்டு ஒரே ஓட்டமாக ஓடி விடுவான்.

மணிவண்ணன் விஷயத்தில் மாதவியின் உழைப்பு வீணாக வில்லை. கல்வி மீது அவனுக்குஅதிகமான கருத்து. வீடு திரும்பிய தாயார் இரவு வேளையில் விளக்கடியில் தைப்பதற்கு உட்கார்ந்து கொண்டால், பிள்ளை அருகே வந்து புத்தகங்களுடன் அமர்ந்து கொண்டு வெகுநேரம் படித்தான்.

''நல்ல புத்திசாலி- அடக்கமான மாணாக்கன்'' என்று ஆசிரியர்கள் சொன்னபோது மாதவி பூரித்துப்போனாள். அவனது களை பொருந்திய முகத்தைப் பார்த்து- கனிவான மொழிகளைக் கேட்டு. அவள் தனது இழப்பை மறந்து வாழ்ந்து கொண்டிருந்தாள்.

ஒரு நாள் மாலை. மாதவிக்கு அதிகப்படியான வேலை. வீடு திரும்புவதற்கு வெகுநேரமாகி விட்டது. இலேசாக பரவி வந்த இருளைக் கண்டு அவள் வேகமாக நடந்தாள்.

மணிவண்ணன் அவள் வருகைக்காக பசியுடன் வீட்டு வாயிற்படியில் காத்திருப்பானே என்ற தவிப்பு அவளுக்கு.

மாதவி வேலை பார்த்து வந்த வீட்டின் எஜமானிக்கு மிகவும் தாராள மனம். பகலில் மீதமாகும் உணவை மாதவி வீட்டிற்கு எடுத்துப்போக அனுமதித்தாள்.

பலவகை பதார்த்தங்களை சுவையுடன் சமைத்து வீட்டவர்களுக்குப் பறிமாறிவிட்டு அவள் பசியுடனே தான் இருப்பது வழக்கம். எஜமானி என்ன வற்புறுத்தினாலும் மாதவி அங்கே சாப்பிடுவது இல்லை. ஒரு தம்ளர் மோர் மட்டும் அருந்திவிட்டு பொழுதைக் கழித்து விடுவது வழக்கம்.

பகல் உணவின்போது மணிவண்ணன் தாயார் கட்டிக் கொடுத்த பழைய சோற்றைச் சாப்பிடுவான். அப்போது அவன் மட்டும் இலையைப் பரப்பிச் சுடச் சுட சோறும்-குழம்பும் வைத்து கொண்டு சாப்பிட மனம் ஒப்பியதில்லை. கையுடன் தினம் எடுத்துச் செல்லும் பாத்திரங்களில் தன் பங்கு சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து விடுவாள். அதற்குப்பின் சமைக்கவே அவளுக்குப் பொழுது இருக்காது. தாயும் பிள்ளையும் அந்த உணவைப் பகிர்ந்து கொள்வார்கள்.

தெருமுனைக்கு வந்ததும் மாதவி சுற்றும் முற்றும் பார்த்தாள். அவர்கள் வசித்த சந்திற்கு அப்பாலிருந்த தெருக் கோடியில் ஒரு ரிக்ஷா நிலையம். சவாரி இல்லாத



போது இரவும் பகலும் தன் ரிக்ஷாவிலேயே முடங்கிக் கொண்டு கிடப்பான் கந்தப்பன். மாதவிக்கு அவன் மீது அனுதாபம். கந்தப்பனுக்கும் அவள் மீது இரக்கம். என்றாவது சாப்பாடு மீதமாகி விட்டால் மாதவி அவனை அழைத்துக் கொடுப்பாள். இனிப்புப் பண்டங்கள் ஏதாவது கொண்டு வந்திருந்தாலும் அவனுக்குத் தருவாள்.

குசவட்டை போல் உடலைச் சுருட்டிக்கொண்டு கிடந்த கந்தப்பன் அவளைக் கண்டதும் எழுந்து நின்றான்.

''என்ன தங்கச்சி?''

மாதவிக்கு அன்று எஜமானி அதிகமாக உணவை எடுத்துப்போக கொடுத்து விட்டிருந்தாள்.

''கந்தப்பா குவளையை எடு'' உத்திரவிட்டாள். சுமந்து வந்த பாத்திரத்திலிருந்து கொஞ்சம் சோறும் குழம்பும் எடுத்து அவன் குவளையில் போட்டாள்.

''உனக்கு தங்கமான மனசு அம்மா...'' மகிழ்ச்சியுடன் பல்லைக் காட்டினான் கந்தப்பன்.

தனக்கு மிஞ்சிக் கிடப்பதை இன்னோர் ஏழை சாப்பிடட்டுமே என்ற இரக்க உணர்வு மாதவிக்கு.

''வர்ரேன், அண்ணே'' என்று பாத்திரங்களைத் தூக்கிக் கொண்டு வேகமாக வீட்டிற்கு விரைந்தாள் மாதவி.

என்றும்போல் அவள் மகன் அவளுக்காகக் காத்துக் கொண்டு அங்கே உட்கார்ந்திருக்கவில்லை.

முன்கட்டில் குடியிருந்த பெண்கள் அனைவரும் முற்றத்தில் கூடியிருந்தனர். ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது அங்கே.

அவர்கள் நடுவில் மணிவண்ணன் தொணைக் குற்றம் புரிந்தவன்போல் தலையைக் கவிழ்த்துக்கொண்டு நின்று கொண்டிருந்தான்.

மாதவி திடுக்கிட்டுப் போனாள்.

16337
3206388

சோற்றுப் பாத்திரங்களை வாயில் ஓரத்தில் வைத்து விட்டு, முற்றத்தை நோக்கிப் பதற்றமாக விரைந்தாள்.

# 17

மாதவி முற்றத்துக்குள் வருவதற்குள் கையை நீட்டிக் கொண்டு அடிக்கும் பாவனையில் முன்வந்து கூக்குரலிட்டாள் ஒருத்தி.

''புருஷன் தெரியாம புள்ளையை மட்டும் பெத்து வச்சுக்கிட்டா மானம் கெட்டவ'' வசைபாடிக் கொண்டே அடிக்க வருகிறவள் போல் கையை ஓங்கி வந்த அவளைக் கண்டதும் மாதவிக்குச் சினம் பொங்கிக்கொண்டு வந்தது,

''என்னம்மா! முறை தவறி என்ன பேச்சு, இது?''...

''எருமை மாடு போல் எட்டு வயசாச்சு. சண்டை போட்டுப் புத்தம் புதுச் சொக்காயைக் கிழிச்சுட்டானே உன் மகன். காலையிலேதான் புதுசா எடுத்துப் போட்டுப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பினேன். குழந்தை அழுதுகிட்டே வந்தான். என் வீட்டுக்காரர் பொல்லாதவர். யார் அவருக்கு பதில் சொல்லுவாங்க, உனக்கு என்ன?...'' அந்த மாதிரி கவலை இருந்தாதானே தெரியும்? சரமாரியாகத் தொடுத்தாள் மற்றொருத்தி.

''அத்தோட விசாரிக்க வந்த, என்னைப் பெரியவவ்னு பார்க்காம ''வாயை மூடு பாட்டி'' அப்படின்னு அதட்டிப் பேசறானே பொடிப் பயல், அப்பன் பேர் தெரியாத அயோக்கியன்.'' இரைந்து கத்தினாள் பொல்லாத கிழவி ஒருத்தி.

''என் சட்டைக்குப் பதில் சட்டை வாங்கித் தராட்டி எங்கப்பா உங்களைச் சும்மா விடமாட்டார்'' கீச்சுக்குரலில் கிரீச்சிட்டுக் கொண்டு முன் வந்து நின்றான் சட்டையைப் பறிகொடுத்த சிறுவன்.



மணிவண்ணனா இவ்வாறு செய்தான்? மாதவியால் நம்பவே முடியவில்லை. அவர்களது சுடு சொற்கள் நெஞ்சைப் புண்ணாக்கின. அழுகையும் ஆத்திரமும் குமுற, மகன் பக்கம் திரும்பினாள்.

''இவங்க சொல்றது உண்மையா?'' கேட்டுவிட்டு உறுத்து விழித்தாள்.

தலையைத் தாழ்த்திக் கொண்டிருந்த மணிவண்ணன் தாயைப் பரிதாபமாகப் பார்த்தான். அவன் கண்களில் நீர் துளித்தது. உதடுகள் பயத்தால் துடித்தன. எச்சிலை விழுங்கிக் கொண்டான். ''ஆமாம் அம்மா...'' நடுங்கியது அவன் குரல்.

''கேட்டுக்கிட்டியாம்மா! உன்கிட்டேயே ஒப்புக் கொள்கிறானே, என்ன துணிச்சல் பாத்தியாடி! இந்த வயசில் இத்தனைப் பொல்லாத்தனம்னா போகப்போக என்ன செய்வானோ?'' முகவாயில் கைவைத்து அபிநயம் செய்தாள் இன்னொருத்தி.

''கொலை கூடத்தான் செய்வான்! ஒழுங்காப் பெத்த பிள்ளையானா...'' என்று முடிக்குமுன் கோபம் தாங்க முடியாத மாதவி, ''போதும்...உங்கள் விளக்கம். சம்பந்தமில்லாதவங்களுக்கெல்லாம் இங்கே என்ன வேலை?''என்று உரத்த குரலில் அதட்டினாள்.

பின்னர் ஒரே எட்டில் மகன் அருகே நெருங்கி அவன் கரத்தைப் பற்றி முற்றத்தின் ஓரத்திற்கு இழுத்து வந்தாள்.

''ஏன் அவன் சட்டையைக் கிழிச்சே? ஏண்டா செய்தே? உனக்கு அத்தனை திமிரா?...'' ஆவேசத்துடன் அவனைக் குலுக்கினாள்.

மணிவண்ணன் மவுனமாக நின்றான். அவளுக்கு ஆத்திரம் கட்டுக்கொள்ளவில்லை. ''பேசேண்டா! ஏன்

வாயடைச்சு நிக்கிறே? அழுகையை அடக்கிக் கொண்டு கோபத்துடன் கேட்டாள்.

''பத்து ரூபாய்க்கு தள்ளுபடியிலே எடுத்த சட்டை. பொருளுக்குப் பொருளாவது—பணமாவது கொடுக்காட்டி நான் சும்மா இருக்கமாட்டேன்'' சட்டையைப் பறிகொடுத்தவனின் தாய் உறுமினாள்.

''ஆமாம். அதுதான் நியாயம்...'' கூடியிருந்தவர்கள் இடையே முணுமுணுப்பு.

இடித்த புளியாக நின்ற மகனைக் கண்டு மேலும் ஆத்திரம் பொங்க மாதவி, ''சொல்லேன்டா...ஏன் ஊமையா நிக்கிறே...உன்னைப் பெற்ற எனக்கு இதுவும் வேணும்' இன்னமும் வேணும்...'' கத்தியபடி வெறிகொண்டவன் போல் மகனின் கன்னத்தில் மாறி மாறி அறைந்தாள்.

கூடியிருந்தவர்களில் பலரும் தாய்மார்கள்தான். எனினும் ஒருத்திகூட வந்து இதைத் தடுத்து நிறுத்தவில்லை. வேடிக்கை பார்த்தபடி சுவைத்துக்கொண்டு நின்றனர்.

வேதனை தாளாது, முடிவில் அலறிய மணிவண்ணன் பின்கட்டிற்கு ஓடி மறைந்தான்.

துக்கம் கசப்பாகத் தொண்டையை அடைக்க, கண்களை நீர் மறைக்க; இடுப்பில் செருகியிருந்த சுருக்குப் பையை வெடுக்கென இழுத்துத் திறந்தாள் மாதவி.

அன்று அவள் எஜமானி கொடுத்த மாதச் சம்பளம் அதில் இருந்தது. பாடுபட்டுச் சேகரித்த பணம். அதிலிருந்து பத்து ரூபாய் நோட்டை உருவி எடுத்து, சட்டையைப் பறிகொடுத்தவனின் தாயிடம் எல்லோர் முன்னிலையிலும் நீட்டினாள்.

''இனி மூச்சு விட்டால், தெரியுமா? எடுத்துக் கோங்கோ உங்கள் பணத்தை. அனாவசியமான பேச்சு வேண்டாம். அப்புறம் நான் மகா பொல்லாதவளாகி



விடுவேன்,'' என்று அதட்டிவிட்டு, துக்கத்தைக் கட்டுப்படுத்த இயலாது கண்ணீர் உகுத்தபடி தன் குடியிருப்புப் பகுதிக்கு விரைந்தாள்.

அன்று இரவு தாயும் மகனும் பட்டினியாகவே படுத்துக் கொண்டார்கள்.

ஆத்திரத்தில் குமுறிய மாதவி குலுங்கி குலுங்கி அழுத மணிவண்ணனைத் தேற்ற முயற்சிக்கவேயில்லை.

வருத்தம் தெரியாத பிள்ளையை அல்லவா அவள் பெற்றிருக்கிறாள்! ஏன் திடீரென்று இந்தப் பொல்லாத் தனம்?... அவளுக்கு உறக்கமே வரவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு, மனத்தைக் கட்டுப்படுத்த முடியாதவளாய், விம்மிக் கொண்டிருந்த மகன் அருகே வந்து நின்றாள்.

''அப்போதுதான் சொல்ல மாட்டேன்னே—இப்போவாவது சொல்லித் தொலை. ஏன் அவன் சட்டையைக் கிழிச்சே?'' கேட்டாள் கடினமான குரலில்.

விம்மலை நிறுத்திவிட்டுத் தாயை ஏறிட்டுப் பார்த்தான் மணிவண்ணன்.

அழுதழுது வீங்கிவிட்டிருந்த அவன் கண்களில் நீர் புரண்டு ஓடியது.

''உன் அம்மா கெட்டவள். அதனால்தான் உன் அப்பா அவளை விட்டு ஓடி விட்டார் அப்படின்னான் அந்தப் பையன். எல்லோரும் சிரிச்சாங்க. உங்களைக் கெட்டவன்னு சொன்னதைக் கேட்கப் பொறுக்கலை. அடிச்சேன். அவன் சட்டையைப் பிடிச்சுக் கிழிச்சுப் போட்டேன்'' கேவினான் மகன்.

மாதவியின் உள்ளம் சுக்கல் தூளாக வெடித்தது.

''மணிவண்ணா! என் கண்ணே! உன்னைப் பெற்ற வயிறு குளிர்ந்துட்டுதடா!'' சொல்லிக் கொண்டு உணர்ச்சி வசத்தில் மகனை மார்புடன் தழுவிக் கொண்டாள்.

இருவரும் வெகுநேரம் அழுது கொண்டு இருந்தனர்.

சில தினங்களுக்குப் பின்னர், இருபுறம் கொளுத்தி வைக்கப்பட்ட மெழுகுவர்த்தி போல மாதவியின் ஆரோக்கியம் வேகமாகக் கரையத் தொடங்கியது.

''ஓய்வு அவசியம். நல்லசத்துள்ள உணவும் அவசியம்... இல்லையெனில் காச நோய் பிடித்துக்கொண்டு விடும்...'' என்று ஒருநாள் அவளைப் பரிசோதித்த வைத்தியர் பயமுறுத்தி விட்டார்.

பெற்றோர் இன்றி அனாதைச் சிறுமியாகப் பிறரை அண்டி வாழ்ந்த அந்த நாட்களின் துன்பங்களை அவள் நன்கு அறிந்தவள். அவள்பட்ட கஷ்டங்களை ஆசை மகன் மணிவண்ணன் அடையக் கூடாது என்ற ஆதங்கம் அவளுக்கு. ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அவனுக்காகவாவது அவள் நீண்ட காலம் வாழ்ந்தாக வேண்டும். அதேசமயம் உடுக்கவும்- உண்ணவும் அவர்கள் சிரமப்படக் கூடாது. இதற்கு வழி?...சிந்தித்தாள், சிந்தித்தாள்.

மழை, வெயில் எனப் பாராது வெளியே தினசரி போக வேண்டியிருந்த சமையல் வேலையை விட்டு விட்டு வீட்டு நிழலில் தங்கியபடியே பகல் முழுவதும் தைப்பது- இரவில் ஓய்வாக நன்றாக உறங்குவது என்ற முடிவுக்கு வந்தாள்.

இந்தத் தீர்மானம் அவளது வாழ்க்கையிலே நல்லதொரு திருப்பத்தை உண்டாக்கியது. தையல் வேலையில் மிக்க கவனத்தைச் செலுத்தி அவள் பாடுபட்டதின் பயனாக அவளது வேலைத் திறமை விரைவில் அண்டை அயலில் வசித்த பெண்களுக்குப் புலனாகியது.



''உடலில் வைத்து தைத்து விட்டதுபோல் அல்லவா தைக்கிறாள்! என்ன அழகான சோளிகள்!'' அந்த வட்டாரத்துப் பெண்கள் புகழத் தொடங்கினர்.

''புதுவிதத் தையல்- அழகான வெட்டு- அபாரமான படைப்பு...'' என்று கல்லூரிப் பெண்கள் வியந்தனர்.

''மிகவும் நல்ல மரியாதையாகப் பேசுகிறாள். சொன்ன தேதிக்குக் கொடுத்து விடுகிறாள்'' என்று குடும்பப் பெண்கள் பாராட்டு வழங்கினர்.

அத்துடன் வாடிக்கைக் காரர்களின் குடும்பமும் வளர்ந்து கொண்டு போயிற்று. ''யாரது? சோளி புகழ் மாதவி தைத்த ரவிக்கையா?...வெட்டைப் பார்த்தாலே தெரிகிறதே?'' என ஆடை அணிகளைப் பற்றிப் பேசிக் கொள்ளும் பொழுது பெண்கள் வாயில் அடிபடும் அளவு புகழ்பெற்றவளாக வளர்ந்து விட்டாள் அவள்.

இதன் பயன்-

இரண்டு ஆண்டு காலத்தில் அவள் தன் வீட்டை வேறு ஒரு நல்ல இடத்திற்கு மாற்றிக் கொள்ள முடிந்தது. ஒண்டுக்குடித்தன வாழ்க்கை, வளர்ந்து வரும் தன் தொழிலுக்கு ஒவ்வாது என்று உணர்ந்து, அருகில் இருந்த பெரிய தெருவில் தனியாக ஒரு சிறு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டாள். வாயில் புறத்து அறையைக் கடையாக அமைத்துக் கொண்டாள்.

நாளடைவில் புதிய தையல் எந்திரங்கள்- மின் விசிறி- வந்தவர் அமர்ந்து கொள்ள நாற்காலிகள்- உடையைப் போட்டுச் சரிபார்க்க கண்ணாடி பொருத்தப்பட்ட தடுப்பு- என எல்லா வசதிகளையும் செய்து கொண்டு விட்டாள்.

பெருகி வரும் பிரபலத்திற்கு விளம்பரப் பலகையாக வாயில் சுவரின் மீது ''பூபதி தையற் கடை'' என்ற பெயர்

பலகையும் பொருத்தப்பட்டது. உதவிக்கு இரண்டு பெண்களை வேறு அமர்த்திக் கொண்டாள்.

அன்று பிற்பகல் கடையைத் திறந்துகொண்டு வேலை செய்யத் தையல் எந்திரத்தில் வந்து உட்கார்ந்தாள் மாதவி

தீபாவளி பண்டிகை வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது. குறித்த காலத்தில் தைத்துக் கொடுக்க வேண்டிய துணிகள் மலையென ஒரு பக்கம் குவிந்து கிடந்தன. அவள் மனம் எதிலும் நிலைக்காமல் அலைமோதிக் கொண்டிருந்தது. பிற்பகல் சாப்பிட வீட்டிற்கு வந்த மணிவண்ணன் காய்ச்சலும் குளிருமாகத் திணறிக்கொண்டு பள்ளிக்குச் செல்லாது படுத்து விட்டான். காய்ச்சலைத் தணிக்கும் மருந்து கையிருப்பாக இருந்ததால் சிறிதளவு அவனுக்குக் கொடுத்தாள். நாள் முழுவதும் அருகே உட்கார்ந்து கொண்டிருக்க அவளுக்கு நேரம் இல்லை. எனவே கண் பார்வையில் படும்படி எதிர் அறையில் ஒரு படுக்கைமீது அவனைக் கிடத்திவிட்டுத் தன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

மகனுக்கு உடம்பு சரியில்லையே என்ற கவலையினால் ஏற்பட்ட மனக்குழப்பம் அல்ல, அது. வாழ்க்கைப் போராட்டத்தில் எதிர் நீச்சல் போட்டு ஓரளவு வெற்றி கண்டிருந்த மாதவி தலைவலி காய்ச்சல் இவற்றைக்கண்டு எளிதில் மருண்டு விடுவதில்லை. துன்பங்களைக் கண்டு பாறையாகக் கடினப்பட்டிருந்த அவளது நெஞ்சம் கொடுஞ்சொற்களைக் கேட்டுப் பூவைப்போல் கசங்கி வாடிவெம்பியது என்னவோ உண்மை. எத்தனை அனுபவங்கள் ஏற்பட்ட போதிலும் அபவாதம், வீண்பழி முதலியவற்றைக் கேட்டதும் ''விட்டுத்தள்ளு'' என்று உறுதி வரும் அலட்சிய மன உறுதி ஏனோ அவளுக்கு வரவே இல்லை. மோப்பக் குழையும் அனிச்சமாக இருந்த அவளது மென்மையுள்ளம் கடின சொற்களைக் கேட்டு அதிர்ந்துபோய் ஒருசில நிமிடம் சஞ்சலப் பட்டுத்தான் அமைதியடைவது வழக்கம். மனம்



குழம்பிய போதெல்லாம் அவளுக்கு வேலையில் கவனம் குறைந்துவிடுவதும் இயல்பே.

வங்காளத்தில் இருந்து கொண்டு வந்த நீலப்பட்டுத் துணியை ஒரு பெண்மணி அவளிடம் தைக்கக் கொடுத்திருந்தாள். மேஜை மீது துணியைப் பரப்பி விட்டு அதன்மீது குறியீடுகள் இட்டபின் வெட்டத் தொடங்கிய மாதவி, தான் தவறு செய்து விட்டதை உணர்ந்தாள். தேடி வாங்க முடியாத அந்த அபூர்வப் பட்டுத் துணியை வீணாக்கி விட்டோமே என்ற கவலை. அதைக் கொடுத்த வாடிக்கைக்காரி மிகவும் கோபக்காரி. துணியைப் பாழ்படுத்தி விட்டது தெரிந்தால் புலம்பிக்கொண்டு சண்டைக்கு வந்துவிடுவாள். பிறகு பார்த்துச் சமாளிப்போம் என்று துணியை வெறுப்புடன் சுருட்டி மூலையில் வைத்தாள்.

மற்றொன்றை எடுத்தாள். மீண்டும் குழப்பம். தவறாகத் தைப்பதும் - பிரிப்பதுமாகப் பொழுதை வீணே கழித்துக் கொண்டிருந்தாள். அடிக்கடி முகத்திலே வியர்வை அரும்பு கட்டி, கன்னங்களின் ஓரத்தில் வழிந்து கொண்டிருந்தது. கூட உதவிக்கு அமர்த்தப்பட்ட பெண்கள் இருவரும் அவளை அதிசயமாகப் பார்த்தனர். இவளுக்கு என்ன வந்து விட்டது? வேலையில் ஏன் இத்தனை தடுமாற்றம்? அவர்களுக்குப் புரியவில்லை.

மாதவியின் குழம்பிய மன நிலைக்குக் காரணம் கைலாசத்தின் அருமை மகள் பரிமளாதான். சென்னை நகரில் வந்து குடியேறிய இந்தச் சில ஆண்டுகளில் மாதவி தப்பித் தவறிக்கூட தேவி நிலையத்தின் பக்கம் போனதில்லை. தன் வாழ்வின் அவல நிலைக்குக் காரணமான சந்திரனை மீண்டும் சந்திக்கவே அவள் சிறிதும் விரும்பவில்லை. ஆனால் தன் நிலையை விளக்கி அவள் ஒருசமயம் தங்கம்மாளுக்கு மட்டும் கடிதம் போட்டிருந்தாள்.

அதைக் கண்டு தங்கம் மனமிரங்கி அவளைக் கண்டு ஓடி வந்து விடவில்லை. எனவே அவள் பரிமளாவைப் பார்த்துப்

பல ஆண்டு ஆகிவிட்டிருந்தது. அன்று காலையில்தான் முதல் முதலாக அவளைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

முதல்நாள் அவளிடம் வந்த வாடிக்கைக்காரப் பெண் மணிகளில் ஒருத்தி ''வெளிநாடு செல்லவிருக்கும் என் சிநேகிதிக்கு நீங்கள் அழகான பல சோளிகள் தைத்துத் தர வேண்டும். நாளைக்கு காலை அவளை இங்கே துணிகளுடன் நேரில் கூட்டி வருகிறேன். கேட்ட கூலியைக் கொடுத்து விடுவாள். ஆனால், வேலை மட்டும் அபூர்வமாக இருக்க வேணுமாம்...'' என்றாள்.

''அதெற்கென்ன. பார்ப்போம்...'' என்றாள் மாதவி.

''அதென்ன அப்படிச் சொல்லி விட்டீங்க. இது உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். என் சிநேகிதிக்கு உங்கள் தையல் பிடித்து விட்டால் உங்களை அதிர்ஷ்டம் பிடித்துக் கொண்டு விடும். அவளுக்குப் பல தோழிகள். அத்தனை பேரும் பிறகு உங்களிடந்தான் வருவாங்க...பிறகு இந்தத் தையல் கடை பெரிய தையல் மாளிகையாகி விடும்...'' சவால் விட்டு விட்டுப் போயிருந்தாள் அந்த பெண்.

வரவிருப்பவளின் ஊர், பெயர் இவற்றைப்பற்றி மாதவி கேட்கவில்லை. வேலை நடுவே வீண் வம்பு விவகாரம் ஏன் என்பது அவள் கொள்கை.

வழக்கம்போல் மணிவண்ணனைப் பள்ளிக்கு அனுப்பி விட்டுக் கடையைத் திறந்தாள். உதவிப் பெண்கள் வரக் கொஞ்சம் நேரம் செல்லுமாதலால் தான் மட்டுமே கடையில் உட்கார்ந்திருந்தாள். தையல் எந்திரங்களைத் துடைத்து சுத்தம் செய்து கொண்டிருந்தபோது வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. தலையை நிமிராது தன் வேலையிலே கருத்தாக இருந்தாள் மாதவி. வாயிற்படியில் ஒலித்த அந்தக் குரல் பழக்கமானதாக இருக்கவே சட்டென்று ஒருகணம் நிமிர்ந்து பார்த்தாள். அதுசமயம் வேகமாக உள்ளே வந்து நின்ற பரிமளா, பேயைக் கண்டு மருண்டவள் போல் திகைத்துப் போய் நின்று விட்டாள்.



''நீயா?'' என்று கடுமையாகக் கேட்டு விட்டு - கூட்டி வந்த தோழியின் பக்கம் திரும்பினாள்.

''பரிமளா வா... வாக்கா உட்கார்...'' பரிவுடன் உபசரித்தபடி மாதவி எழுந்து வந்தாள்.

''அக்காவாம் அக்கா! போதும் சொந்தம்...'' வெடுக்கென்று பதில் அளித்த பரிமளா, நிற்கப் பிடிக்காதவளாய்த் தோழியின் கரத்தைப் பற்றி இழுத்துக் கொண்டு வேகமாகத் திரும்பினாள்.

''அக்கா'' என்று மாதவி அழைத்த குரல் அவள் தொண்டையிலேயே நின்று விட்டது. ஒரே எட்டில் வாயிலைத் தாண்டிக்கொண்டு சென்ற பரிமளா சொன்னது அவள் காதுகளில் கணீரென வந்து விழ மட்டும் தவறவில்லை.

''எனக்கொன்றும் இவள் சொந்தமல்ல. எங்கள் வீட்டில் தங்கி வேலை செய்து கொண்டிருந்தவள். அனாதை என்று பரிதாபப்பட்டு அம்மா வீட்டுப்பெண் போல வளர்த்தாங்க. காலாகாலத்தில் தக்க இடத்தில் கட்டிக் கொடுத்தோம். ஆனால், அவன் ஒரு அயோக்கியன். வேலை பார்த்த இடத்தில் பணத்தைக் கையாடி விட்டு ஊரை விட்டே ஓடி விட்டான். இவள் மட்டும் லேசுப்பட்டவள் இல்லை. தனி வீடும் - கடையும் வைத்துக்கொண்டு இப்படித் தடபுடலாக வாழுகிறதின் இரகசியம் தெரியாதா? இவளது நடத்தை அவ்வளவு சரியில்லை என்று என் கணவர் கேள்விப்பட்டு ரொம்ப வருந்தினார். நடத்தை கெட்டு சந்தி சிரிக்க வாழும் இவள் எப்படி சொந்தம் பாராட்டுகிறாள் பார்த்தியா... இந்த மாதிரித் துஷ்டர்களைக் கண்டால் கொஞ்சம் தூர இருப்பதே நல்லது...'' என்றாள் பரிமளா.

''ரொம்ப வருந்துகிறேன். எனக்கு உண்மை தெரிந்திருந்தால் நான் உன்னை இவளிடம் அழைத்து வந்திருக்கவே மாட்டேன்'' என்றாள் கூட வந்தவள்.

கார் கதவு படார் என்று சாத்தப்படும் ஓசையும், பின்னர் அது விரையும் ஒலியும் கேட்டன.

அவமானத்தினால் உடல் குறுகி, உள்ளம் நைந்து கண்களில் நீர் முட்ட உட்கார்ந்திருந்த மாதவி, அதிர்ச்சியில் கல்லாய்ச் சமைந்து போனாள்.

# 18

அதை வேடிக்கை என்பதா? வேதனை என்பதா?

பரிமளாவின் கணவன் சந்திரசேகரன் பிறன் மனை விரும்பும் பெரும் கோழை. அவன் செய்த தகாத காரியம் மாதவியின் கற்புக்கே களங்கம் தேடிக் கொடுத்தது. வாழ்வையே குலைத்தது. கைக் குழந்தையுடன் கணவனால் கைவிடப்பட்டு அபலையாகி நடுத்தெருவில் நிற்கவிட்டது. தவறு செய்தவன் அவன். தண்டிக்கப்படுபவள் அவள், பழி ஓரிடம் பாவம் ஓரிடமா? மாதவி உள்ளம் கொதித்தாள்.

உண்மையை உணராமல் பரிமளா துச்சமாகப் பேசி விட்டுப் போனது அவளது நெஞ்சை அறுத்தது. புண்பட்ட மனதின் வேதனையுடன் நாள் முழுவதும் பெருமூச்செறிந்து கண்ணீர் உகுத்தபடியேஇருந்த அவளுக்கு வேலையில் மனம் செல்லாதது வியப்பு இல்லையே?

முன்னறையைப் பூட்டிக் கொண்டு வீட்டின் உட்பகுதிக்குள் சென்றாள். சமையலறையருகே இருந்த தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த மேசையருகே வந்து நின்றாள்.

அதன்மீது பெரிதாக்கப்பட்ட அவளுடைய கணவனின் புகைப்படம் அலங்காரமாகக் கொலுவீற்றுக் கொண்டிருந்தது. கவலையில் உள்ளம் வேதனைப்படும்போதும், காலையிலும், மாலையிலும் அந்தப் படத்தருகே வந்து நிற்பது வழக்கமாகி விட்டிருந்தது.



படத்தை உற்றுப் பார்த்தபடியே நின்றாள், மாதவி. புன்முறுவலித்த பூபதி அவளைப் பார்த்து வாயசைப்பது போல ஒரு பிரமை ஏற்படவே கண்களில் பெருகிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

''பரிமளா சொல்லட்டும். ஊரே சொல்லட்டும். உலகம் தூற்றட்டும். அபவாதங்களைக்கேட்டு புண்ணாகி வெடித்து விடுமளவு அழுகிறேன். கண்ணீரும் காலமும் இந்தப் புண்ணை விரைவில் ஆற்றி விடுகின்றன. ஆனால் கணவனால் சந்தேகிக்கப் பட்டவள் என்ற நினைவு நெஞ்சில் ஏற்படுத்திய அந்தப் புண் இருக்கிறதே அது இந்தப் பிறவியிலே ஆறவே ஆறாத புண். கண்ணீரும், காலமும் ஆற்ற முடியாத இந்தப் புண் என் கட்டையுடன்தான் மறையும். எனக்கு ஏன் இந்தத் தண்டனை? அத்தனை கொடியவளா நான்? மீண்டும் நாம் சந்திப்போமா? என் களங்கமற்ற தன்மையை நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம், ஒரு கடுகு அளவு வாய்ப்பு எனக்குக் கொடுக்க நீங்கள் மறந்தது நியாயமா?''

தானே பைத்தியம் பிடித்தவள்போல் பேசிக்கொண்டாள். துயரம் தாளாது தேம்பித் தேம்பி அழுதாள். அதன் பின்னர் அன்று பொழுது முழுவதும் அமைதியின்றி வீணே கழிந்தது.

இருள் இலேசாகப் பரவத் தொடங்கியது. முன் அறையிலும் வாயிற்புறத்திலும் மின்விளக்குகளைஎரியவிட்டாள். பின்னர் சமையலறைக்குள் சென்று காய்ச்சலுடன் படுத்திருந்த மகனுக்குக் கொஞ்சம் கஞ்சி தயாரித்து வந்தாள்.

தாயின் வற்புறுத்தலுக்காக வேண்டா வெறுப்பாக அதைக் குடித்தான் மகன். அத்துடன் கசந்து வழிந்த மருந்தையும் விழுங்கி வைத்தான். உடல் வலியும், தலை வலியும் தாளமுடியாமல் இருந்தும் அவன் பொறுமையாக இருந்தான்.

தலையை வருடிவிட்ட தாயின் முகத்தை இரக்கத்துடன் பார்த்தான். நாள் முழுவதும் ஓய்வு இன்றித் தாய் கடுமை

யாக உழைக்கிறான் என்ற எண்ணத்தில் அவள் மனம் கரைந்து போனாள்.

''நீங்க போய் உங்க வேலையைக் கவனியுங்கள் அம்மா...'' அனுதாபத்துடன் சொன்னான். தாயாருக்கு வேலைகள் அதிகம் இருக்கின்றன-அடிக்கடி கூப்பிட்டுத் தொல்லை கொடுக்கக் கூடாது என்று கவலைப்பட்டது, அந்தப் பிஞ்சு உள்ளம்.

''உன் உடம்பு இப்போ எப்படி இருக்கு?'' கனிவுடன் கேட்டுக் கொண்டு அருகில் வந்து உட்கார்ந்தாள்.

''எல்லாம் சரியாய் விட்டதம்மா...நாளைக்கு அந்த ஜட்ஜ் வீட்டுத் துணியைத் தைத்துக் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறீங்களே- அதை முடிச்சிட்டீங்களா?'' நினைவு படுத்தினான் மகன்.

கண்களில் மல்கிய நீரைச் சமாளித்துக்கொண்டு அவன் முதுகை மெல்ல வருடினாள் தாய். ''உனக்கு இதெல்லாம் பத்தி கவலை ஏன்? தூங்குடா கண்ணு...'' அன்புடன் கடிந்து கொண்டாள்.

சிறிது நேரம் மகன் அமைதியாக கண்களை மூடிக் கொண்டிருந்தான்.

சில நாளாகக் கேட்க வேண்டுமென்று துடித்த அந்தக் கேள்வியை அதற்கு மேலும் மனதிற்குள் அடக்கி வைக்க அவனால் முடியவில்லை.

பள்ளிக் கூடத்தில் முன்பு ஒரு சமயம் ஒரு தோழனுடன் ஏற்பட்ட வாக்குவாதத்திற்குப்பின் பலமுறை அவன் தாயி டம் கேட்டு அறிய ஆவல் பட்டான். ஆனால் அச்சம் தடுத் தது. அதே சமயம் சரிவரக் கேட்டுத் தெரிந்து கேலிசெய்யும் மற்றவர்களுக்குச் சுடசுட பதில் அளிக்க வேண்டுமென்ற ஆத்திரம்...

''அம்மா!'' மெல்லக் கண்களை விழித்துக் கூப்பிட் டான். ''கொஞ்ச நாளில் நான் பெரியவனாகி வேலைக்குப்



போய் சம்பாதிப்பேன். நீங்க கஷ்டப்படாமல் வீட்டிலே சுகமா இருக்கலாம் இல்லியா, அம்மா?'' குழைவுடன் கேட்டான் மணிவண்ணன்.

மாதவியின் நெஞ்சு பெருமையில் விம்மியது. மகனின் பரிவு புண்ணான உள்ளத்துக்கு ஆறுதலாக இருந்தது.

''அப்படியே செய்யலாம் கண்ணா'' ஆசையுடன் மகனைத் தழுவிக் கொண்டாள்.

''அம்மா!'' மறுபடியும் அழைத்தான் மகன். ''நம்ப அப்பா ஏன் வீட்டைவிட்டுப் போய்விட்டார்?''

கேட்டுவிட்டுக் கலவரத்துடன் கண்களை மூடிக் கொண் டான். எங்கே கன்னத்தில் அறை விழுமோ என்ற நிகில் அவனுக்கு.

பளீர் என்று மாதவியின் நெஞ்சில் விழுந்தது ஓர் அடி. ''குழந்தை பெரியவனாகிக் கொண்டு வருகிறான்! அறியும் ஆவல் மிகுந்த பள்ளிப்பருவம். ஒருநாள் இல்லாவிடில் ஒரு நாள் கேட்கப் போகிறான்'' என அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த கேள்விதான்.

என்றாலும், ஒரு கணம் அவளுக்குப் பெரும் திகைப்பு. சமாளித்துக் கொண்டாள். ''உங்கப்பா ஊருக்குப் போயி ருக்கிறார் என்று முன்பே சொல்லியிருக்கேனே கண்ணா...'' தடுமாறினாள்.

''ஊருக்குப் போனவர் ஏன் திரும்பி வரலை? சங்கரன் அப்பாகூட பம்பாய் போனார். திரும்பி வந்தபோது அவனுக்கும் அவன் அம்மாவுக்கும் எல்லாம் வாங்கிட்டு வந்தார். ஒருநாள் கூட நம்ப அப்பா ஊரிலிருந்து வரலையே அம்மா. அங்கிருந்து நம் செலவுக்குப் பணமாவது அனுப்பக் கூடாதா? ரவியின் அப்பா அமெரிக்காவில் இருக்காராம். செலவுக்கு பணம் அனுப்புகிறார். நம்ப அப்பா உதவி

ஒண்ணும் செய்யிறதில்லை. நீங்கதானே கஷ்டப்பட்டு வேலை செய்யிறீங்க. எனக்கு அப்பா மேலே ரொம்பக் கோபம் வருதம்மா...'' காய்ச்சலுடன் இரைந்தான்.

மாதவிக்குக் கேட்க முடியவில்லை. 'வாயை மூடு' என்று கடிந்து கொள்ளவும் முடியவில்லை. துக்கம் குமுறிக் கொண்டு வந்தது.

மணிவண்ணனை கண்ணுக்குக் கண்ணாக வளர்க்க ஆசைப்பட்ட பூபதி இங்கே இல்லை. அதற்குப்பதில் தந்தை இல்லையே என்ற ஏக்கத்தை அந்தப் பிஞ்சு மனதில் ஏற்படுத்தி விட்டு மாயமாய் மறைந்து போனது நீதியா?

மனைவிக்குத்தான் அவர் செய்யவேண்டிய கடமை ஏதும் இல்லை. போகட்டும்...மகனுக்குக் கூடவா கடமை இருக்கவில்லை?...எண்ணிப் பதைபதைத்தாள். தன் மனக் கொதிப்பை அடக்கிக் கொண்டு மகனின் முகத்தை மெல்ல ஆசையுடன் தடவிக் கொடுத்தாள்.

''இல்லேடா கண்ணு. நீ அப்படியெல்லாம் பேசக் கூடாது. உன் அப்பா ரொம்ப நல்லவர். வெளியூருக்குப் போன இடத்தில் என்ன கஷ்டமோ அவருக்கு? உன்மேல் அவருக்கு ரொம்ப ஆசை. நீ வளர்ந்து படிக்கணும்—பெரிய டாக்டராகணும்... அப்படின்னு அடிக்கடி சொல்வார். உன்னை மடியில் வச்சிக் கொஞ்சி மகிழ்வார். உன் சின்ன வாயில் தன் கையாலே சாப்பாடு ஊட்டி சந்தோஷப் படுவார் — நீ அவருடைய உயிராச்சே!'' கூறிக்கொண்டே வந்தவள் துக்கம் தாளாமல் நிறுத்தினாள். தொண்டை கரகரத்தது.

கண்களை விழித்து தாயின் முகத்தைப் பார்த்த மணிவண்ணன் தன் சிறிய கரங்களை நீட்டிக் கண்ணீர் கசிந்த அவளுடைய கண்களை மெல்லத் துடைத்து விட்டான்.

''அம்மா நீங்க அழக்கூடாது. நீங்க அழுதா எனக்கும் அழுகை வருது. இனி நான் ரொம்ப நல்ல பையனா இருப்பேன். யார்கிட்டேயும் சண்டைக்குப் போகமாட்டேன். நல்லாப் படிச்சு அப்பா நினைச்ச மாதிரி பெரிய



டாக்டராகி விடுவேன்...அப்போ நீங்க கட்டாயம் சந்தோஷப்படுவீங்க'' சொல்லிவிட்டு நிறுத்தினான்.

மாதவி துன்பப் பெருமூச்செறிந்தாள்.

மகன் தொடர்ந்தான்! ''அம்மா! ஒண்ணு மட்டும் நிச்சயம் செய்யத்தான் போறேன். அப்பா ஒருநாள் திரும்பி வந்தாக்க, அவரை நான் சும்மா விடமாட்டேன். ஒரு கேள்வி கேட்கத்தான் போறேன். எங்களையெல்லாம்தனியே உட்டுட்டு உங்களை யார் ஊர் போகச் சொன்னது? நீங்க எங்களோட இல்லாது நாங்க எத்தனை கஷ்டப்பட்டோம்னு கட்டாயம் அவர் மனசுலே படராப்ல பட்டுனு கேட்கத்தான் போறேன்'' காய்ச்சலின் வேகத்தில் அவன் பேசிக்கொண்டே போனான்.

''சரிடா கண்ணு. இப்போ நீ தூங்கு'' என்றாள் மாதவி. சற்றுத் தணிந்திருந்த மன வேதனை அவளுக்கு மீண்டும் தலையெடுத்துவிட்டது.

அதுசமயம் யாரோ வாயிற்கதவைத் தட்டும் ஒலி கேட்டது.

மாதவி எழுந்துசென்று கதவைத் திறந்தாள்.

வாயிலில் நின்ற கௌரி மிகவும் பரபரப்புடன் காணப் பட்டாள்.

''அக்கா! உங்களை ஐயா கையோடு கூட்டி வரச்சொன்னாங்க. ரொம்ப முக்கியமாம்'' என்றாள் அவள். வேகமாக ஓடிவந்த களைப்பில் அவளுக்கு மூச்சு வாங்கியது.

மாதவி ஏதோ சொல்லத் தயங்குவதைக் கண்ட கௌரி ''அப்பா உடம்புக்கு முடியாமல் இருக்கிறார். உங்களைக் கட்டாயம் பார்க்கணுமாம்'' துக்கத்துடன் கூறினாள்.

மாதவிக்கு அதற்குப் பிறகு யோசிக்கவே நேரம் இருக்க வில்லை. ''இதோ வர்றேன். கொஞ்சம் இங்கேயே இரு'' உத்தரவிட்டுவிட்டு வெளியே இருளில் வேகமாக நடந்தாள்.

இரண்டு தெருக்களை நொடியில் கடந்து அந்தப்பழைய ரிக்ஷா நிலையத்திற்கு வந்தாள்.

கந்தப்பன் எப்பொழுதும்போல் ரிக்ஷாவிற்குள் முடங்கிக் கிடந்தான்.

''கந்தப்பா! எழுந்திரு. கொஞ்சம் வீடுவரை வரியா?'' கேட்டாள் மாதவி.

கந்தப்பன் கையோடு ஓட்டி வந்த ரிக்ஷாவை வாயிலில் நிறுத்தச் சொல்லிவிட்டு, முன்னறை வாயிற்படியில் அவனைக் காவலாக உட்கார வைத்தாள்.

''ரொம்ப அவசரம். இவங்க வீட்டுக்குப் போய் நொடியிலே திரும்பி விடுவேன், அதுவரை குழந்தையை...'' மாதவி முடிக்கு முன் கந்தப்பன் அபயம் கொடுத்தான்.

''கவலைப்படாதேம்மா. குழந்தையை ஒரு ஈ எறும்பு கூட தொடாம நான் பார்த்துக்கிறேன்...நீங்க போயிட்டு வாங்க ..''

ஒரு மணி நேரம் சென்ற பின்னர்தான் அவள் சரவணன் வீட்டில் இருந்து திரும்ப முடிந்தது. ஓட்டமும் நடையுமாக அவள் விரைந்து வந்தாள்.

வாயிற்கதவில் பெரிய பூட்டுத் தொங்குவதைக் கண்டதும் அவளுக்குப் பகீர் என்றது.

என்ன ஆயிற்று? யாரைக் கேட்பது? அவளுக்கு ஒரே கலக்கம்.

எதிர் வீட்டுக்காரரிடம் விசாரிக்கலாம் என்று பரபரப்புடன் அவள் விரைந்தபொழுது தெருக்கோடியில் கந்தப்பனின் ரிக்ஷா வருவதைக் கண்டுவிட்டாள்.

வேகமாக ஓட்டி வந்த ரிக்ஷாவை கந்தப்பன் நிறுத்தினான். அதிலிருந்த மணிவண்ணனை வாரி அணைத்துத் தூக்கிக்கொண்டு வந்தான். இடக்கையில் பிடித்திருந்த



சாவியை கந்தப்பன் தரையில் போட்டான். ''கொஞ்சம் கதவைத் திறங்க அம்மா. புள்ளைக்கு என்னம்மா காய்ச்சல் கீது...'' உரிமையுடன் உத்தரவிட்டான்.

''மறுபடியும் காய்ச்சல் அதிகமாயிடுச்சா?'' மாதவி பதறிக் கொண்டு ஓடி வந்தாள்.

''நீங்க போன பின்னாலே குழந்தைக்கு காய்ச்சல் அதிகமாகி உடம்பை தூக்கிப்போடத் தொடங்கிடுச்சு..... தலை நோவுன்னு பொறுக்க முடியாம ''ஓ'' ன்னு கத்தி அழுதிச்சு—பாத்துக்கிட்டே இருக்க மனசு இல்லே. ரிக்ஷாவிலே எடுத்து வச்சிட்டு நம்ம வடக்குத்தெரு டாக்டர் சுந்தரம் இருக்காரே அவருக்கிட்டே ஓடினேன். அவரு மக காலேஜிலே படிக்குதே...அதுக்கு தினம் நான்தானே சவாரி செய்றேன். மகராசன் உடனே கவனிச்சார். ஒரு ஊசி போட்டு—மருந்தும் குடுத்தார். ராவுக்குள்ளே காய்ச்சல் தணிஞ்சுடுமாம்'' விவரித்தபடி மணிவண்ணனை மெல்லப் பாயில் கிடத்தினான்.

நன்றிப்பெருக்கில் மாதவியின் நெஞ்சு பொங்கியது. உலகில் எல்லோருமே கெட்டவர்களாக இருக்கவில்லையே. அன்றாடம் உழைத்து வயிற்றை வளர்க்கும் ஏழைதான் கந்தப்பன். வறுமையின் அவதாரம், அவனிடம்கூட இத்தனை கருணையை இறைவன் விட்டு வைத்திருக்கிறாரே?

''கந்தப்பா! உட்காரு சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' உபசரித்தாள் மாதவி.

முன்னறை தரையில் இலையை விரித்து வயிறார சோறும் குழம்பும் பரிமாறினாள்.

நிறைவுடன் சாப்பிட்டுவிட்டு அவன் எழுந்து எச்சில் இலையை குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு கையைக் கழுவிக்கொண்டு வந்து நின்றான்.

அவன் விடைபெற்றுப் போகுமுன் தன் கைப்பையிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டொன்றை எடுத்து அவனிடம் கொடுக்க வந்தாள்.

''என்னத்துகக்ம்மா இது...'' வாங்க மறுத்தான் கந்தப்பன்.

''டாக்டர் மருந்துக்கும்- உன் ரிக்ஷா வாடகைக்கும் எடுத்துக்கோ கந்தப்பா...!'' மாதவி மன நெகிழ்ச்சியுடன் கெஞ்சினாள்.

''போம்மா நீங்க ஒண்ணு? வயிறு பசிக்கும் போதெல்லாம் கூப்பிட்டு எனக்கு நீங்க சோறு பாடுறீங்களே. அதுக்கு நான் துட்டு கொடுத்தேனா? டாக்டருக்கு எதுக்கும்மா? கந்தப்பன் கிட்ட அவர் காசு வாங்கறதில்லை. ஏம்மா? செஞ்ச உதவிக்கெல்லாம் துட்டு வாங்கறவன் மனுசனோட சேத்தியா? நீங்க உலகம் தெரியாத பெண்ணம்மா. குழந்தையை நல்லா பார்த்துக்கோங்க. அது ஒண்ணே எனக்குப் போதும்... நான் வரேன்'' கூறிவிட்டு ரிக்ஷாவுடன் அவன் நிலையத்திற்குப் புறப்பட்டு விட்டான்.

மாதவிக்கு அன்று உறக்கமே வரவில்லை. பரிமளா சொன்ன கடும் மொழிகள், குழந்தை மணிவண்ணன் கேட்ட கேள்விகள், அதன் உட்பொருள், சரவணனின் உடல்நிலை, கந்தப்பனின் கருணை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அவள் சிந்தனையில் அலை மோதின...

எல்லாவற்றையும் விட அவள் உள்ளத்தை உறுத்தியது ஒரு விஷயம்.

சரவணனின் வீட்டில் இருந்து வெளிப்படுமுன்னர் கௌரி அவளை ஜாடையாகக்காட்டி சமையல் அறைக்குள் அழைத்துச் சென்றாள். ஆதரவுடன் தன் கையைப் பிடித்த கௌரியின் கரங்கள் நடுங்குவதை மாதவி உணர்ந்தாள்.

''அக்கா!'' கௌரியின் குரல் கரகரத்தது. ''உங்களிடம் நான் ஒன்று பேச வேண்டும். மிகவும் முக்கியம். பெற்ற தாயைப் போல எண்ணி உங்கள் உதவி வேண்டி நிற்கிறேன்... நாளைக்கு வீட்டுக்கு வந்து விவரமாகச் சொல்றேன்...'' தடுமாறினாள். அவள் கண்கள் கலங்கின



மாதவிக்கு இந்த வேண்டுகோள் விசித்திரமாக பட்டது.

அவளிடம் கௌரி கூற விரும்பும் ரகசியம் என்னவாக இருக்கும்?

மாதவி படுக்கையில் திரும்பத்திரும்ப புரண்டு படுத்தாள். உறக்கம் வரவே இல்லை.

## 19

மழைக்குப் பின் வெயில்- கடும் வெயிலுக்குப் பின் மழை- புயலுக்குப்பின் அமைதி- இதெல்லாம் இயற்கை நியதி. அதேபோலத் தொடர்ந்து ஏற்படும் துன்பங்களுக்குப் பின்னர் நன்மைகள் தொடர்வதும் இயல்புதான்.

ஆனால் சரவணன் வாழ்வில் துன்பத்தில் இருந்து ஒரு நல்ல திருப்பமே இல்லை. அதுவரை காத்திருக்க இயலாத அவரது ஆரோக்கியம் மிகவும் சிதைந்து போய்விட்டது. அதிகமான இரத்த அழுத்தம் உடலின் ஒரு பாகத்தின் உணர்வுகளைச் சுண்டச் செய்துவிடவே நடக்க முடியாது அவர் படுக்கையாகி விட்டார். அத்துடன்போதாததுபோல் கண் பார்வையும் நாளடைவில் மங்கிவிட்டது. காடராக்ட் வளர்ச்சியால் பார்வை குன்றிவிட்ட அவருக்கு சிகிச்சை செய்ய முடியாதபடி ஆரோக்கியக் குறைவு குறுக்கிட்டது. இந்நிலையில்தான் அன்று மாலை அவர் மாதவியைப் பார்க்க வேண்டுமென்று விரும்பி, மகளை அனுப்பி வைத்திருந்தார்.

சரவணன் ஒரு வீட்டின் மாடியில் இரண்டு அறைகள் கொண்ட ஒரு பகுதியில் வசித்து வந்தார். மாதவி எதிர்பார்த்த வண்ணம் அங்கு ஏழ்மை தாண்டவமாடவில்லை. மின்விசிறி சுழல, பெரிய அறை மத்தியில் கிடந்த கட்டிலின் மீது பஞ்சுமெத்தையில் அவர் படுத்திருந்தார். அருகே சிறு

மேசைமீது சுத்தமான வெள்ளை விரிப்புப் போடப்பட்டிருந்தது. அவர் உட்கொள்ள வேண்டிய மருந்துகள் புட்டிகளிலும்-டப்பாகளிலும் அதன்மீது வரிசையாக வைக்கப்பட்டு இருந்தன. எதிர்ப்புறம் இரண்டு பிரம்பு நாற்காலிகள் கிடந்தன.

அறைக்கு வெளியே ஒலித்த காலடியைக் கேட்டதும் ''மாதவி! வாம்மா'' என்றார். உள்ளுணர்ச்சி மூலம் அவளது வருகையை உணர்ந்து கொண்ட சரவணன், எலும்பும் தோலுமாகப் படுக்கையோடு ஒட்டிக் கிடந்தார். மாதவிக்கு அவரை அந்நிலையில் காண மிக்க வருத்தமாக இருந்தது.

''ஐயா! உங்க உடம்பு இத்தனை கோலமாகப்போனது எனக்குத் தெரியாமல் போயிற்றே. கௌரி ஒரு தடவைகூட வந்து சொல்லலையே'' அரற்றினாள் வேதனையுடன்.

''நாற்காலியை இப்படிப் பக்கத்தில் இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார் அம்மா. உங்கிட்ட முக்கியமா சில சங்கதிகள் பேசணும்'' என்றார் அந்தக் கிழவர்.

மாதவி அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். பார்வை குறைந்த அவருடைய கண்கள் கூரை முகட்டைப் பார்த்தன. பிறகு தொண்டையை லேசாக இருமிச் சரிப்படுத்திக்கொண்டு சொன்னார்.

''மாதவி! எனக்கென்னவோ இனி நான் ரொம்பநாள் இருப்பேன்னு நம்பிக்கை இல்லையம்மா. இரத்த அழுத்தம் இதயத்தை பாதித்து விட்டதுன்னு வைத்தியர்கூடச் சொல்லி விட்டார். உண்மையைக் கேட்டு நான் பயப்படலை'' நிறுத்தினார்.

மாதவி மனம் கரைந்து போனாள். நன்மையைத் தவிர பிறருக்குத் தீமையைக் கனவில்கூடக் கருதாத இரக்க உள்ளம் கொண்ட அவருக்கா இந்த மாதிரியான நோய்கள்? ''வேறு வைத்தியர் யாரையாவது அழைத்து வரட்டுமா?



பெரிய ஸ்பெஷலிஸ்ட்டு வந்து பார்த்தால் ஒரு சமயம் உடம்பு தேறலாமே?'' ஆவலுடன் சொன்னாள்.

''வைத்தியர்கள் இனி செய்யக்கூடியது ஏதும் இல்லை, குழந்தை கௌரி ஆண்பிள்ளை போல எனக்கு எல்லாம் செய்துவிட்டாள். எத்தனையோ வைத்தியர்கள், ஏறிஇறங்காத ஆஸ்பத்திரி இனி இல்லையம்மா. அந்தக் குழந்தை படும்பாடு எனக்குச் சகிக்கலை. காலையில் விடியுமுன் எழுந்து எனக்குப் பணிவிடை செய்துட்டு, உணவு தயாரிச்சு வச்சுட்டு வேலைக்குப் போகிறாள். இடைவேளையில் ஓடி வந்து மீண்டும் என்னைக் கவனித்துவிட்டு ஓடுகிறாள். மறுபடி இருட்டின பிறகுதான் அவளால் வீடு திரும்ப முடிகிறது. ஒரு நாள் போல சின்ன வயதுப் பெண் இப்படி அலைந்து திரிகிறதை பொறுத்துக்கொண்டு உதவியற்றவனாக செத்தும் சாகாமல் படுக்கையில் கிடக்க என்னால் பொறுக்கலையம்மா. பொறுக்கலை. குழந்தை படும் பாட்டை பார்க்கவேணாம் என்றுதானே ஆண்டவன் என் கண் பார்வையையும் பறித்துக் கொண்டுவிட்டார். மாதவி! சொல்லும்மா, குழந்தை. என் வாழ்வும் ஒரு வாழ்வா... தொடர்ந்து நான் உயிரோட இருக்கணுமா?'' துக்கத்துடன் திணறினார்.

கண்களில் பொங்கிய நீரைச் சட்டென்று துடைத்துக் கொண்டாள் மாதவி. தந்தைக்கு ஒப்பாக இருந்து பல விதத்திலும் அவளுக்கு உதவியவர் சரவணன். அவர் படும் வேதனையைக் காண அவளுக்குப் பொறுக்கவேயில்லை. ''ஐயா சொல்லுங்க. என்னால் ஆன உதவியைச் செய்யக் காத்திருக்கிறேன். மருந்தா, வைத்தியச் செலவா, வேறு பணத் தேவையா, எதுவானாலும் வெளிப்படையாகச் சொல்லுங்க - செய்யக் காத்திருக்கிறேன். தனியே வசிக்கச் சிரமமா இருந்தா நீங்களும் கௌரியும் என்னோட வந்து தங்கிக் கொள்ளலாம், நமக்குள்ளே வேற்றுமை என்றுமே கிடையாதே ஐயா?'' என்றாள் ஆவலுடன்.

ஒருகணம் சரவணன் பேசவில்லை. பின்னர், ''நீ எங்க மேலே வச்சிருக்கிற அன்பு எனக்குத் தெரியும். அந்தத்

துணிவில்தான் மாதவி உன்னைக் கூப்பிட்டு அனுப்பினேன். தற்சமயம் கௌரி நல்ல இடத்தில் வேலை பார்க்கிறாள்—பொருள் வசதிக்குக் குறைவில்லை. சில நாளாக எனக்கு அடிக்கடி நெஞ்சுவலி வருகிறது. நேற்று ராத்திரியும், இன்னிக்குப் பகல் ஒரு தடவையும் பொறுக்க முடியாத அளவு நோவு வந்துவிட்டது. இந்த மாதிரி சமயங்களில் எனக்கு கௌரியைப் பற்றி ரொம்பக் கவலை ஏற்படுகிறது. நான் மாரடைப்பில் திடீர்னு போய்விட்டால் கௌரி கதி என்னன்னு மனசை அலட்டிக்கிறேன். கன்னிப் பெண். வேலை செய்கிறாள் என்றாலும் உலக அனுபவம் போதாது தன்னந்தனியே வாழ்க்கையை எப்படிச் சமாளிப்பாள்? எங்களுக்கு உறவினர் சிலர் இருக்கிறார்கள். அவர்களிடம் எனக்கு நம்பிக்கை கிடையாது. அதனாலே நல்ல சுய அறிவுடன் இருக்கும்போதே உங்கிட்டே சொல்லிடணும்னு ஆசைப்பட்டேன். மாதவி! கௌரியை உன் சகோதரியாகப் பார்த்துக்கொள், அம்மா. எனக்குத் திடீர்னு ஏதாவது ஏற்பட்டால், அவள் தனியே வாழ்வது நல்லதல்ல. உன்னுடன் இருப்பதுதான் தக்க பாதுகாப்பு...நல்ல இடமாக் கிடைச்சா அவளைக் கட்டிக் கொடுத்துவிடு. வாழ்க்கையில் உனக்கு ஏற்பட்ட இடிகள் எத்தனை. அவ்வளவிற்கும் அசையாது ஒரே நோக்குடன் நேர்மை வழியிலே ஒழுக்கம் குலையாது வாழ நீ பட்ட பாடுகள், எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் எனக்குத் தெரிஞ்சவைதான்-அதனால்தான் கௌரியை உன்னிடம் ஒப்படைக்கிறேன். மாதவி! முன்பு உன்னிடத்திலே எனக்கு அன்பு இருந்தது. இப்போ உன்மீது மட்டமற்ற மதிப்பு ஏற்பட்டு விட்டிருக்கு. உன்னைப்போல என் கௌரியும் மாசற்ற வாழ்க்கை வாழணும்னு ஆசை. நான் கேட்பதெல்லாம் ஒரு சிறு உபகாரம். எனக்குப் பின், திருமணம் ஆகும்வரை கௌரியை உன்னோட வச்சுப் பாதுகாக்கணும். அவள் வேலை செய்து சம்பாதித்துத் தருவாள் — உனக்குப் பாரமா இருக்க மாட்டாள்'' வெகுநேரம் பேசியதால் அவருக்கு மூச்சு தடுமாறியது.



மாதவி மிக்க மனம் கரைந்துபோனாள். ''கௌரி என் தங்கை. அவளைப் பாதுகாப்பது என் கடமை. இவ்வளவு தூரம் நீங்க எடுத்துச் சொல்லவேணுமா? நீங்கள் வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதீங்க. விரைவிலே உங்க உடம்பு குணமாகிவிடும்னு நம்புறேன்'' ஆறுதல் கூறினாள்.

சரவணன் வறட்சியாகச் சிரித்தார். ''மனம் விட்டுப் பேசிய பிறகு எனக்கு நிம்மதியா இருக்கு'' என்றார் ஆயாசத்துடன்.

அது சமயம் காப்பியைத் தயாரித்து இரண்டு தம்ளரில் ஊற்றி எடுத்துக்கொண்டு கௌரி சமையலறையிலிருந்து வெளி வந்தாள். பளிச்சென்று வீசிய விளக்கொளியில் அவளை உற்றுக் கவனித்த மாதவிக்கு மெத்த வியப்பு.

இயற்கையில் கௌரி கொஞ்சம் அழகி. அந்த அழகு இப்போது பொங்கிக் கொண்டிருந்தது. மெருகிட்ட தங்கமென அவளது தாழம்பூ மேனி அலாதியானதொரு பொலிவுடன் மின்னியது - கருவண்டு கண்களும் புதுஒளி- செம்மை பரவி நின்ற கன்னக் கதுப்புகள் சற்று உப்பி அழகாகக் காணப்பட்டன. அதிகப்படியான அலங்காரம் என்று சொல்வதற்கில்லை. உண்மையிலே கௌரி முன்னைவிட அழகாகி விட்டிருந்தாள். என்னவாக இருக்கும்?

மணிவண்ணன் உறங்கிக் கொண்டிருந்தான். பகல் உணவிற்குப்பின் தையல் யந்திரத்து அருகே வந்து உட்கார்ந்த மாதவி ஒரே மூச்சாகத் தைத்துக் கொண்டிருந்தாள். இரண்டு நாளாக கவனியாமல் கிடந்த வேலையின் சுமையும் ஓரளவு குறைந்தது. மாலை இருள் கவ்வத் தொடங்கியது. அவள் வேலையை விட்டு எழுந்திருந்தாள். அதுவரை சிந்தனையில் மறைந்திருந்த அந்தக் கேள்வி மீண்டும் முளைத்தெழுந்து நின்றது.

கௌரி ஏன் அப்படி இருக்கிறாள்? அந்தப் பொலிவு? ஒருவேளை உள்ளத்தில் ஊறிவிடும் மகிழ்ச்சியா? தந்தை நோயுடன் போராடிக்கொண்டு இருக்கும்போது என்ன மகிழ்ச்சி இருக்கக்கூடும்? ஒருசமயம் ஏதாவது காதல் விஷயமாக இருக்குமோ? மாதவி பெருமூச்செறிந்தாள்

கௌரி உலக அனுபவம் தெரியாத பேதைப் பெண். கவர்ச்சியைக் காதல் என்று நினைத்து கலங்கிப் போகக் கூடாது. ஒளிவு மறைவு இல்லாமல் அவளிடம் பேசித் தக்க புத்திமதி சொல்ல வேண்டும்...பலவாறு எண்ணியபடி விளக்கைப் பொருத்தினாள். விழித்துக் கொண்டுவிட்ட மணிவண்ணன் ஒய்வாக ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான்.

''அக்கா?...'' என்று அழைத்தபடி கௌரி உள்ளே வந்தாள்.

மாதவி அருகில் வந்து உட்கார்ந்தவள் பேசவில்லை. ஓரக்கண்ணால் மணிவண்ணனைப் பார்த்து விட்டுக் குழப்பத்துடன் வாளா இருந்தாள். நிலைமையைப் புரிந்து கொண்ட மாதவி, அவளைக் கூடத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றாள்.

அங்கே சுவர் ஓரமாகக் கிடந்த நாடா கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டாள் கௌரி. ஏதோ குற்றம் புரிந்து விட்டவளைப் போலக் குழப்பத்துடன் விழித்தாள்.

''அக்கா! எப்படி ஆரம்பிக்கிறதுன்றே தெரியவில்லை. எனக்கு ரொம்ப பயமா இருக்கு. நீங்க என்மேல் கோபிக்க மாட்டீங்கன்னு உறுதி சொன்னால்தான் நான் மேலே பேசுவேன், அக்கா! நான் தாயில்லாத பெண். உங்களை விட்டா வேறு கதி கிடையாது'' தொடர்ந்து பேச முடியாது திணறினாள். கண்களில் நீர் புரண்டது.

அருகே வந்து அமர்ந்துகொண்ட மாதவி அவளை அன்புடன் அணைத்துக்கொண்டாள். ''உனக்காக நான்



எதுவும் செய்யக் காத்திருக்கிறேன். கவலைப்படாமல் சொல் அம்மா'' என்றாள்.

கௌரியின் உடல் வெடவெடவென்று நடுங்கியது. ''அக்கா!'' என்று அழைத்தவள் பேச முடியாது பெரும் விம்மல்களுடன் மாதவியின் தோள்மீது சாய்ந்துகொண்டு குமுறிக் குமுறி அழ ஆரம்பித்து விட்டாள்.

மாதவிக்கு ஒரே குழப்பம். சிறிது நேரம் அவளை அப்படியே அழ விட்டு விட்டுக் கலவரத்துடன் மவுனமாக இருந்தாள். பின்னர் அவள் கண்ணீரைத் துடைத்து முகத்தை நிமிர்த்தினாள். கூந்தலை அன்புடன் கோதிவிட்டு ''என்னம்மா கௌரி, உள்ளதை மறைக்காம என்னிடம் சொல்லு. என்னால் முடிஞ்ச உதவியெல்லாம் செய்யத் தயார். நீ சொல்லாவிட்டால் நானாவது கேட்கிறேன். ஒப்புக்கொள். நீ யாரையோ விரும்புகிறாய்—காதலிக்கிறாய் அதுதானே உண்மை?'' என்று கேட்டாள்.

துயரத்துடன் நிமிர்ந்து பார்த்த கௌரி தலையை ஆட்டினாள். ''இல்லையக்கா. நான் காதல்னு நினைச்சுத்தான் அவரிடம் நெருங்கிப் பழகினேன். பின்னாடி புரிஞ்சுது அவருக்கு என்மேல் காதல் இல்லை...என் இளமையும் அழகையும்தான் விரும்பினார்னு தெரிஞ்சு கொண்டு விட்டேன்...''

''என்ன சொல்றே கௌரி?''

மாதவி நடுங்கிப் போனாள்.

''உண்மையைச் சொல்றேன். வேலை தேடிக்கொண்டு பல இடங்களில் அலைஞ்சேன். அப்போ அவரைச் சந்தித்தேன். அவரது ஸ்தாபனத்திலே எனக்கு ஒரு நல்லவேலை—நிறைய சம்பளத்துடன் போட்டுக் கொடுத்தார். ஆரம்பத்திலே என்னிடம் அன்பாகக் கனிவாகப் பழகினார். நான் மயங்கிப் போனேன் அவருக்கு ஏற்கனவே மனைவி இருப்பது எனக்குத் தெரியும். அப்படியிருந்தும் அவரிடம் நான் என் மனத்தைப் பறிகொடுத்து விட்டேன். என்னை இரண்டாவது மனைவியாக மணந்து கொள்வதாகத்தான் வாக்களித்தார்.''

''கௌரி இதென்ன பேச்சு? ஒரு மனைவி உயிரோட இருக்கும்போது இன்னொருத்தியை மணக்கச் சட்டம் அனுமதிக்காதே. நீ அவர் பேச்சை நம்பினியா, கடவுளே!...''

''நம்பினேன் அக்கா...நெருக்கமாகப் பழகினேன். அவர் கொடுத்த தாராளமான சம்பளத்தில் அப்பாவின் மருந்து— சாப்பாடு—வாடகை—உடுக்கத் துணியென்று சுகமாக வாழ முடிந்தது. ஆனால், அதற்கு ஈடாக என் வாழ்க்கையையும் பலியாக்கிக் கொண்டு விட்டேன்''மேலே பேச முடியாது கண்ணீர் உகுத்தபடி கௌரி நிறுத்தினாள்.

மாதவி பதறிப்போனாள். ''என்னம்மா சொல்றே... என் மனசைக் குழப்புகிறியேம்மா...''

''உண்மையைச் சொல்றேன் அக்கா. அப்பா என்னைக் கண்டிப்பாக நல்ல முறையில்தான் வளர்த்தார். ஆனால் நான்தான் வழி தவறிப் போயிட்டேன். கல்யாணமாகாத நிலையிலேயே நான் தாயாகி விட்டிருக்கேன் அக்கா...இந்த உண்மை அப்பாவுக்குத் தெரிஞ்சா அந்தஅவமானத்திலேயே அவர் உயிர் போய்விடும். நான் மகாபாவி... அவர் உயிருக்கு எமனாக வந்திருக்கேன்...எனக்குச் சாகவும் துணிவு இல்லை... வாழவும் வழி தெரியலை...அக்கா...''

அடக்கமாட்டாது கத்திக்கொண்டு மாதவியின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள் கௌரி.

## 20

சில தினங்களுக்குப் பின்னர், ஒரு ஞாயிற்றுக்கிழமை. பகல் வேளை. உணவிற்குப் பின் ஒய்வாக சிறிது நேரம் படுக்க பாயை எடுத்துக் கூடத்துத் தரையில் விரித்தாள் மாதவி.

வாயில் கதவை யாரோ படபடவென்று தட்டும் ஓசை கேட்டது. வெளியே சைக்கிளுடன் ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான். அவன் முகத்திலே பரபரப்பு.



''சரவணன் அய்யாவுக்கு உடம்புக்கு முடியாம இருக்கு டாக்டர்கூட வந்துவிட்டார். உங்களைக் கையோட கூட்டி வரச் சொன்னாங்க. நான் பக்கத்து வீட்டுக்காரர் மகன்'' சொல்லிவிட்டு அவன் காற்றாகப் பறந்துவிட்டான்.

நெஞ்சும் வாயும் திகிலில் உலர்ந்து போக, மாதவி செயலற்று ஒரு கணம் நின்றுவிட்டாள். பின்னர் தன்னைச் சமாளித்துக்கொண்டு, முன்னறையில் படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த மகனைக் கூப்பிட்டு வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுக் குளியலறைக்குள் விரைந்தாள். அவசரமாக முகத்தைக் கழுவித் துடைத்து— கூந்தலை வாரி முடித்துக்கொண்டு—வேறு துணி உடுத்திக்கொண்டு ஓட்டமும் நடையுமாகக் கிளம்பினாள்.

ரிக்ஷா நிலையத்தில் கந்தப்பனைக் காணவில்லை. கையைத் தட்டி வேகமாகச் சென்ற 'ஆட்டோ'வை நிறுத்தி ஏறிக்கொண்டு விரைந்தாள்.

அவள் வீட்டை அடையுமுன் சரவணனுக்கு உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டிருந்தது.

''இதய நோவு பலமாக இருப்பதால் நோயாளியை ஆஸ்பத்திரிக்கு அகற்ற முடியாது. இரவுப் பொழுது போனால்தான் நிச்சயமாகச் சொல்ல முடியும்'' என்று கௌரியிடம் கிசுகிசுத்த வைத்தியர், தமது பெட்டியுடன் அறையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்.

கண்களும் முகமும் சிவக்க, விம்மி அழுது கொண்டிருந்த கௌரி, அவளைக் கண்டதும் இன்னமும் பலத்து அழத் தொடங்கி விட்டாள். அவளைச் சமாதானப் படுத்திவிட்டு, மாதவி சரவணனது படுக்கையருகே வந்து நின்றாள்.

பார்வை இழந்து போன நிலை- நெஞ்சைப் பிளந்த நோவு வேறு- எனினும் அவரால் அவள் அருகாமையை ஊகித்துக் கொள்ள முடிந்தது.

''மாதவி! வாம்மா! உன்னை எதிர்பார்த்துக் கொண்டு தான்...'' பேச முடியாது திணறினார்.

பொறுப்பை ஏற்றுக்கொள்ள அவள் வந்து விட்டதைக் கண்டதும்...முன்னறைக்குள்ளே வந்து கூடிவிட்டிருந்த அக்கம் பக்கத்தவர்கள் மெல்ல நகர்ந்து விட்டனர்.

''நான் வந்து விட்டேன்—கவலையை விட்டுவிட்டுக் கொஞ்சம் தூங்க முயற்சி செய்யுங்கோ. மத்ததை எல்லாம் பின்னால் பேசிக்கொள்ளலாம்'' என்றாள் மாதவி கனிவுடன்.

சரவணன் முகத்திலே வறட்சியானதொரு மெல்லிய புன்னகை அரும்பியது.

''மாதவி! பேச அதிக பொழுது இல்லை. எனக்குத் தெரியும். அதனாலே இப்படிக் கிட்டேவா...'' மூச்சுத் திணறியது அவருக்கு.

கையை நீட்டி மெல்ல அவள் கரத்தைத் தடுமாற்றத் துடன் பிடித்துக் கொண்டார்.

''குழந்தை மாதவி! இந்த உடம்பு இனி இன்னொரு வலிக்குத் தாங்காது. தெரியும். கௌரி உலகம் தெரியாத வள்—பச்சைக் குழந்தை போல. அவளை நீதான்...'' அவ ரால் அதற்குமேல் பேச முடியவில்லை. பார்வை குறைந்த கண்கள் குளமாகி நீர் புரண்டு, கடைவாய் வழியே விழுந்து தலையணையை நனைத்தது. மூச்சு முட்டியது. நெஞ்சில் கபம் இழுத்தது.

மாதவிக்குத் தாள முடியாத துக்கம். தந்தைக்குமேல் அதிகப் பாசம் காட்டிய அவரும் அவளை விட்டுப்போகும் நேரம் வந்து விட்டதா என்ற பயங்கர நினைவில் துயரம் நெஞ்சையடைக்க...கண்கள் கலங்க...' ஐயா! கவலைப் படாதீங்க. அவள் என் தங்கை. அவளைப் பத்திரமா பாதுகாத்து ஒரு நல்ல இடத்திலே ஒப்படைக்கிறது என் பொறுப்பு...'' நாத்தழுதழுக்கச் சொன்னாள்.



''கௌரி இங்கே வாம்மா...!'' தந்தை தேய்ந்த குரலில் அழைத்தார்.

ஆனால், அதற்குமேல் பேச்சு அவரிடம் இருந்து வர வில்லை. நெஞ்சில் அது சமயம் ஏற்பட்ட பலத்த வலியைத் தாங்க முடியாத வேதனையுடன் துடித்துப் போய்க் கண் களை இறுக மூடிக்கொண்டார். பின்னர் திறக்கவேயில்லை.

பலமுறை மாதவி அதைப்பற்றி எண்ணி நெஞ்சம் நெகிழ்ந்து போனாள். கண் பார்வையின்றி—நெஞ்சு வலி யால் கடைசி நிமிடம் மகளிடம் ஒரு வார்த்தை கூடப் பேச முடியாது போய்விட்டாரே என்று பல தடவை எண்ணி அவள் வருந்தியது உண்மை. ஆனால், ஒரு வழியில் இயற்கை அவருக்குச் செய்த பல கொடுமைகளில் ஒரு நன்மை இருக்கத்தான் இருந்தது.

கடைசிக் காலத்தில் அவரது பார்வை மங்கிப் போனது எவ்வளவு நல்லதாகி விட்டது? இல்லாவிடில், கௌரியின் நிலையைப் பார்த்து, கவரிமான் போன்ற அந்த நல்லவர் எப்படித் துடித்துச் செத்து விட்டிருப்பார்?

சரவணனது இறுதிக் கடனை நிறைவேற்ற உதவிகள் செய்ய அவள் சிவகுருவை அவசரமாக அவன் வேலைசெய்த இடத்திலிருந்து அழைக்க நேர்ந்தது. அதற்குப்பின் தொடர்ந்து ஏற்பட்ட பல காரியங்களுக்கும் அவன் கூட வந்து அடிக்கடி உதவி புரிந்தான்.

சரவணன் இறந்ததும் அந்த வீட்டைக் காலி செய்து விட்டு, தேவையான சாமான்களை மட்டும் வைத்துக் கொண்டு மீதியுள்ளதை விற்று—கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்துவிட்டு, கௌரியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டாள் மாதவி தான் வசித்த அந்த வீட்டிற்கு கௌரியை அழைத்துக்கொண்டு செல்லுமுன்பு மாதவி தன்

கொள்கைகளையும் மீறி ஒரு கற்பனைக் கதையை உருவாக்கிக் கொள்ள நேர்ந்தது.

அவளை வற்புறுத்தி அவள் கழுத்திலே ஒரு மஞ்சள் கயிற்றைத் தாலியுடன் அணிவித்தாள்.

"கௌரி அவள் அத்தை மகள். கல்யாணமாகி சில மாதம் ஆகிறது. அவளை விட்டு அவள் கணவன் வேலை நிமித்தம் துபாய் சென்றிருக்கிறான். குழந்தை பிறந்ததும் வந்து அழைத்துப் போவான்" என்பதுதான் அந்தக் கதை.

அடிக்கடி அவர்களைக் காண வந்து போய்க் கொண்டிருந்த சிவகுருவுக்கு மட்டும் லேசாகச் சந்தேகம். ஆனால், இது ஒரு பெண்ணின் மானப்பிரச்னை என்றவரை அவனுக்குப் புரிந்தது. கிளறிக் கேட்க மனம் இன்றி வாளா இருந்து விட்டான்.

தன் வீட்டிற்கு அழைத்து வந்த சில தினத்துக்குப் பின்னர் மாதவி, அவளைத் தனக்குத் தெரிந்த ஒரு பெண் வைத்தியரிடம் அழைத்துச் சென்றாள். வைத்தியரிடமும் - வக்கீலிடமும் உண்மையைச் சொல்லியாகவேண்டும் என்பது அவளுக்குத் தெரியும்.

உண்மை நிலையை எடுத்துச்சொல்லி உதவி கோரினாள்.

கௌரியைப் பரிசோதித்த வைத்தியர், உதட்டை மடக்கித் தலையை ஆட்டினாள். தாய்மை நிலை நல்லதொரு வளர்ச்சியை அடைந்து விட்டதால் கருச்சிதைவு செய்வது அபாயம் என்று கைவிரித்துவிட்டாள்.

கௌரிக்கு வேறுவழியிருக்கவில்லை. உலகத்தின் முன் திருமணமான பெண்ணாகவும், மனசாட்சிக்கு முன் மணமாகாத தாயாகவும் பிள்ளைப் பேற்றை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டு வாழவேண்டிய பரிதாப நிலை வாய்த்து விட்டது.

அதற்குப் பின்னர் கௌரி உற்சாகமெல்லாம் இழந்து ஒடுங்கிப் போய்விட்டாள். ஏமாற்றத்தைக் கொடுத்த வாழ்க்கைமீது ஒரு வெறுப்பு. தன் அறியாமையைப் பற்றி தன் மீதே மனக்கசப்பு. சமூகத்தின்முன் தன்னை ஏளனத்



திற்கு ஆளாக்கிவிட்ட அவனை எண்ணி மனக்கொதிப்பு—பல்வேறு உணர்ச்சிகளின் மோதலில் - எண்ணக் குவியல்களிலே புதைந்துபோய் உயிரற்ற ஓவியமாக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

குறித்த காலத்தில் வைத்தியர் ஆலோசனைப்படி பிரசவத்திற்காக கௌரி அந்தத் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள்.

துன்பம் வரும்பொழுது தனித்தே வருவதில்லை—தொடர்ந்த சங்கிலிபோல் ஒன்றன்பின் ஒன்றாக வந்து தொல்லை கொடுப்பது இயல்பு. கௌரி பட்ட துயரங்கள் போதாதுபோல் அவளது பிள்ளைப் பேற்றிலும் சிக்கலும் சிரமமும் ஏற்பட்டன. அறுவைச் சிகிச்சை செய்துதான் குழந்தையை எடுக்க இயலும் என்று வைத்தியர் தெரிவித்தபோது, மாதவி பயந்துபோனாள். தன் வீட்டையும்—தொழிலையும் கவனிக்க நேரமின்றி கவலையுடன் நாள் முழுவதும் கௌரியுடன் மருத்துவமனையிலேயே காத்திருந்தாள். இரவு முழுவதும்கண் விழித்தாள். கௌரி வேதனையில் துடித்தபோது பெற்ற தாயைப் போன்று அவள் பதறித் தவித்தாள்.

பயன்? மாதவியின் நேரம்-பொருள் - பட்ட கஷ்டங்கள் எல்லாம் வீண் என்பதுபோல் அறுவை சிகிச்சை நடந்த நான்காவது நாள் கௌரிக்கு ஜன்னி கண்டு, வயிறு உப்பி, மூச்சுவிட முடியாதபடி உடல் நிலை அபாயமாகி விட்டது

மாதவி பட்ட மனவேதனை கொஞ்ச நஞ்சமல்ல. வேண்டாத தெய்வங்களும் பாக்கியில்லை.

"அக்கா!" தீனமாக அழைத்த தொனியில் ஈனப் படி கௌரி அவளை அழைத்தாள்

"என்னம்மா வேணும்?" மாதவி அருகில் விரைவாக ஓடிவந்தாள்.

கௌரிக்கு சுவாசிக்கவே மிகவும் கடினமாக இருந்தது-அத்துடன் காய்ச்சல். அதன் வேகத்தில் அரற்றல்...

''அக்கா இப்படி வாங்க...சொல்றேன்'' இணறியபடி அழைத்த கௌரி அவளைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''சின்ன வயசிலேயே நான் நரகத்தை அனுபவிச்சு விட்டேன், அக்கா. போதும் எனக்கு இந்த வாழ்வு. குழந்தை பிறப்பதற்கு முந்தி இது மேலே எனக்கு ஒரே வெறுப்பா இருந்திச்சு...ஆனால், இப்போ...அனாதையா விட்டுட்டுப் போறோமென்னு துக்கமா இருக்கு, அக்கா...'' அவள் இக்கித் திணறினாள்.

கலங்கிய கண்களை சமாளித்துக்கொண்டு மாதவி அவள் அருகே அன்புடன் குனிந்தாள். ''கௌரி! என்னென்னவோ பேசிறியே. உடம்பை அலட்டிக்காதே அம்மா'' துயரம் அவள் நெஞ்சை அடைத்தது. பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்த உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''இரண்டு நாளா அப்பா அழைக்கிறது போலக் கனவு காணறேன் - எனக்குப் புரிஞ்சு போச்சு. எனக்குப் பிறகு நீங்கதான் தாயா இருந்து இந்தக் குழந்தையைப் பார்த்துக் கணும். என் பெட்டியிலே புடவைக்கடியிலே ஆயிரம்ரூபாய் வச்சிருக்கிறேன். செலவுக்கு அதை எடுத்துக்கோங்க. போதாட்டா குழந்தையோட அப்பாவைக் கேட்டா கட்டாயம் பண உதவி செய்வார். பல வழியிலே அவர் மோசக்காரர். ஆனால், குழந்தையின்னா அவருக்கு உயிர். அதனாலே அவரைப் போய் பார்த்துப்பேசி உதவி வாங்கிக் கோங்க - என் மகளைப் படிக்க வையுங்க. நல்லவளா — வளருங்கோ ... என்னாட்டம் அவளும் கெட்டுப் போகாம அவள் உங்களைப் போல நல்லவளா - நேர்மையானவளா வாழட்டும் - வாழ்த்தறேன் அக்கா ... இப்படிக் கிட்ட வாங்கோ...அவர் பெயரைச் சொல்றேன்'' பேசமுடியாது அவள் தடுமாறினாள்.

கண்களில் பெருகிய நீரைத் துடைத்துக்கொண்டு கௌரியின் முகத்தருகே துயரத்துடன் மாதவி குனிந்தாள்.



உடலில் இருந்துஅவள் உயிர் ஒடுங்கிக்கொண்டிருந்தது. ஆனால், உதடுகள் மட்டும் லேசாக அசைந்தன. ஒவ்வோர் எழுத்தாக கடைசி மூச்சுடன் வெளிப்பட்ட அந்தப் பெயர் எங்கிருந்தோ கேட்பதுபோல் மாதவியின் காதுகளில் விழுந்தது.

அவளுக்கு ஏற்பட்ட திகைப்பு? உடலும் உள்ளமும் நடுங்க- நெஞ்சு படைக்க...வேதனை தாள முடியாது, அவள் ''கௌரி!'' என்று கூவிவிட்டாள்.

''நீ சொல்கிறது உண்மையா?'' குழறியது அவள் குரல். கௌரியின் முகத்தைப் பிரமிப்புடன் பார்த்தாள்.

அவளுக்குப் பதில் சொல்லுமுன்-

அனுபவித்த வேதனைகளில் இருந்து விடுபட்ட மலர்ச்சி புன்னகையாக ஒளிவிட, கௌரி இந்த உலகில் இருந்து விடுதலை பெற்றுக் கொண்டு விட்டாள்.

# 21

ஆறுமாத காலம் விரைந்தோடி விட்டது. குழந்தை ரஜினி திண் என்று வளர்ந்து விட்டிருந்தாள்.

தாயைப் போன்று அவளும் தங்க நிறம்- கருவண்டு கண்கள்- அடர்ந்து நெற்றியிலே அலை பாய்ந்த கருண்ட முடி - பொக்கை வாயைத் திறந்து குழந்தை களுக்கென்று சிரித்த போதெல்லாம் மாதவி தன் துயரம் அனைத்தையும் மறந்தே போனாள்.

மீண்டும் மணிவண்ணனைச் சின்னஞ்சிறு குழந்தையாக வளர்ப்பது போன்ற ஓர் இன்ப நினைப்பு. அந்த பிரமிப் பிலே - மகிழ்ச்சியிலே அவள் கௌரியின் மகளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தாள்.

மணிவண்ணனுக்கும் தங்கச்சியின் மீது உயிர்-பள்ளியில் இருந்து வந்ததும் குழந்தையுடன் கொஞ்ச நேரமாவது

கொஞ்சி விளையாடாவிடில் பாடத்திலேயே அவன் மனம் லயிக்காது. அத்தனை ஆசை.

குழந்தை ரஜினியின் வரவால் அந்தச் சின்னஞ்சிறு வீட்டிலே தாய்- மகன் என்ற இருவர் இடையே ஏற்கனவே நெருக்கமாக வளர்ந்து கொண்டிருந்த பாசம் இன்னமும் அதிக இறுக்கமாக நெருங்கியது.

மாதவியின் தொழில் முன்னைவிடப் பன்மடங்குபெருகி விட்டது. அவர்கள் வசித்த அந்தச் சிறிய வீடு அதற்குப் போதியதாக இருக்கவில்லை. எனவே அவள் வேறு ஒரு பகுதியில் பெரியதொரு வீட்டை வாடகைக்கு எடுத்து குடிபுக வேண்டி வந்து விட்டது. வாயில்புறம் முழுவதையும் கடை- வரவேற்பறை என்று நேர்த்தியாக அலங்கரிக்கவும் -கடைக்கு இன்னமும் சில புதிய எந்திரங்கள் வாங்கவும்- வீட்டை ஒழுங்கு செய்யவுமே அவளுக்கு நேரம் போதியதாக இல்லை. அதனால், அவளுக்கு வெளி விவகாரங்களை பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கவில்லை.

சிவகுருவும் இப்போது வாழ்க்கை நிலையில் முன்னேறி விட்டிருந்தான். ஒரு பிரபல ஓட்டலில் மிட்டாய் தயாரிப்பு பகுதியில் தலைவனாக அவன் பணி புரிந்துகொண்டிருந்தான். இன்னமும் தனி ஆளாகவே அவன் வாழ்ந்து வந்தான். முன்போல் அடிக்கடி அவன் தன் சகோதரி மாதவியைக் காணச் சென்று வர இயலவில்லை.

பல மாதங்களுக்குப் பின்னர் ஒருநாள் மாலை ஒரு பெரிய மிட்டாய் பொட்டலத்துடன் அவன் தங்கையைக் காணப் புறப்பட்டான்.

கௌரியின் மரணச் சடங்கின்போது சிவகுரு வந்திருந்தான்- அவர்களுக்குள் ஓர் ஏற்பாடு-

''எந்தக் காரணம் கொண்டும் ரஜினி யாருடைய குழந்தை என்ற உண்மையை வெளியே தெரிவிப்பதுஇல்லை அவள் மாதவியின் மகளாகவே வளரட்டும்- அனாதை என்ற அவலநிலை அவளுக்குத் தெரிய வேண்டியது இல்லை.



சிவகுரு இந்த யோசனைக்குக் கட்டுப்பட்டான். அதனால் அவன் கௌரியைப் பற்றியோ-அவள் விட்டுச்சென்ற குழந்தையைப் பற்றியோ யாரிடமும் மூச்சு விடவில்லை.

வெகுநேரம் பேசியிருந்து விட்டுக் கிளம்பும்போதுதான் அவன் அந்தச் செய்தியைச் சொன்னான்.

''கைலாசம் மாமாவுக்கு உடம்புக்கு முடியாம வீட்டிலேயே தங்கியிருக்கிறார். நீ ஒரு நடை போய் அவரைப் பார்த்துவிட்டு வருவதுதானே? என்ன இருந்தாலும் நாமெல்லாம் அவங்க ஆதரவில் ஒரு காலத்தில் வாழ்ந்தவங்களாச்சே?''

அவன் சென்று வெகு நேரமாகியும் அந்த வார்த்தை அவள் நெஞ்சை உருத்திக் கொண்டேயிருந்தது.

கைலாசத்தையோ- தங்கம்மாளையோ அவள் மறக்க விரும்பவில்லை. தேவி நிலையத்திற்கு அவள் போக விரும்பாததற்குப் பல காரணங்கள் இருந்தன-சிவகுருவிடம் சொல்லித் தெளிய வைக்கத்தான் வழியிருக்கவில்லை.

எனினும், மனசாட்சிக்கு அஞ்சி ஒருநாள் மாலை அவள் துணிவுடன் கிளம்பினாள்.கைலாசம் ஐயாவுக்குக் கொஞ்சம் சாத்துக்கொடிப் பழங்களும், தங்கம்மாளுக்குப் பிடித்தமான மலைவாழைப் பழங்களையும் வாங்கி ஒரு கூடையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

தேவி நிலையத்தில் அவளுக்குத் தெரியாத மூலை முடுக்குகள்- செடி கொடிகள்- பாத்திரம் பண்டங்கள் ஏதுமே கிடையாது. இளமைப்பருவத்துக்கனவுகள் அனைத்தையும் விழுங்கிக்கொண்டு உழைப்பின் நடுவே சுற்றிச் சுற்றி வந்த வீடாயிற்றே? ஆனாலும், அவளுக்கு கேட் அருகே வந்ததுமே தயக்கமாகத்தான் இருந்தது.

அதிகாரம் கைமாறி விட்டதின் அறிகுறியாக ஆட்களும் மாறி விட்டனர். வாயிலைக் காத்து நின்ற கூர்க்கா அவளைக் கடுமையாக உறுத்து விழித்தான். ''எங்கே

வந்தே- ஐயாவுக்கு உடம்புக்கு சுகமில்லை. யாரும் உள்ளே போகக் கூடாது'' அதட்டினான்.

மாதவி வெட்கத்தை விழுங்கிக் கொண்டாள். கைலாசத்திற்குத் தான் உறவு என்றும், பார்க்க வந்திருப்பதாகவும் பணிவாகச் சொல்லித் தன்பெயரையும் தெரிவித்தாள்.

உள்ளே சென்று விசாரித்து விட்டு வந்த பின்னர்தான் அவன் கேட்டைத் திறந்து அவளை அனுமதித்தான்.

வராந்தாவைத் தாண்டி வரவேற்பு அறைக்குள்ளே வந்து நின்றவளுக்கு மிக்க வியப்பு- அடையாளமே தெரியாதபடி அந்த அறை இப்போது மிகவும் புதுவிதத்தில அலங்கரிக்கப் பட்டு இருந்தது. விலை உயர்ந்த சோபாக்களையும் மேஜைகளையும் மிரட்சியுடன் பார்த்தபடி திரும்பியவள் திகைத்துப் போனாள்.

சப்தமிடாது பின்புறக் கதவு வழியே உள்ளே வந்து கொண்டிருந்த பரிமளாவின் முகத்திலே கடுமை தெரிந்தது.

''உட்கார்'' என்று கூட உபசரிக்காது அவளை ஏற இறங்க உறுத்து விழித்தாள், பரிமளா.

''என்ன தைரியமிருந்தால் நீ இங்கே வருவாய்? யாருக்கு இந்தக் காணிக்கையெல்லாம்?'' ஏளனமாகக் கேட்டுவிட்டு விஷமமாகப் புன்னகைத்தாள் அவள்.

ஆயிரம் வேல்கள் தாக்கிய வேதனை-வெட்கத்திலே முகம் சிவந்து உடல் குறுகி- உள்ளம் கூசிப் போனது மாதவிக்கு. பேச முடியாது வார்த்தைகள் தடுமாறின- நெஞ்சு படபடந்நது.

''அப்பாவுக்கு உடம்புக்கு சுகமில்லைன்னு கேள்விப் பட்டேன். வந்து ஒரு தடவை பார்க்கலாம் போல் ஆசையாக இருந்தது, வந்தேன். அந்த நாளில் அனாதையான என்மேல் ஆதரவு காட்டி அப்பா எனக்கு அடைக்கலம் கொடுத்தவராச்சே- அந்த நன்றியை மறக்க முடியலை.



அதைத்தவிர வேறு எதையும் வேண்டி நான் இங்கே வரலை...'' என்றாள் தழுதழுத்த குரலில்.

''உனக்குத் தேவைப்பட்டதைத்தான் கொடுக்க ஏகப் பட்டவங்க இருக்காங்களே! நீ எப்படி வாழ்கிறேங்கிறது தெரிஞ்ச விஷயம். அந்த வெட்கக்கேட்டை ஏன் விவரிக்கணும்'' சீறினாள் பரிமளா.

''அபாண்டமா ஏன் அக்கா பேசுகிறீங்க?'' மாதவிக்கு அழுகை நெஞ்சை அடைத்தது. கண்களில் நீர் முட்டியது.

''அபாண்டமா நான் ஏன் பேசணும்? உன் கேடு கெட்ட நடத்தை சொல்கிறதே. உனக்கு இப்போ ஒரு கைக்குழந்தை ஒண்ணு இருப்பதாகக் கேள்விப்பட்டோம்...அப்பா காதில் இதெல்லாம் பட்டு அவர் உன்மேல் ரொம்ப வருத்தமாக இருக்கிறார் - அவரை நீ பார்க்கத் தேவையே இல்லை. ஏற்கனவே நோயாக இருக்கிறார். நீ வந்து நின்று உபத்திரவம் கொடுக்கணுமா? போதும், மரியாதையாய் போய் விடு - நீ வந்த விவரமே அவருக்குத் தெரியக்கூடாது'' உத்திரவாக அதட்டினாள் பரிமளா.

அவமானம் தாளமுடியாது ஆடிப் போய்விட்டாள், மாதவி. எப்படித்தான் அன்று அங்கிருந்து திரும்பி வீடு வந்து சேர்ந்தாளோ. அது ஓர் அதிசயம்.

பரிமளாவுக்கு அழகு இருந்தது. படிப்பு இருந்தது. அந்தஸ்தும், ஆஸ்தியும் இருந்தன. அழகான கணவன் இருந்தான். எல்லா நிறைவுகளும் இருந்தன.

கணவனால் கைவிடப்பட்ட ஏழைப் பெண் மாதவி— உழைப்பால் உயரப் பாடுபடுகிறவள். அவளைக் கண்டு பரிமளா ஏன் பொறாமைப்பட வேண்டும்? ஆத்திரப்பட வேண்டும்? வெறுக்கவேண்டும்? வீண்பழி சுமத்தி அவமதிக்க வேண்டும்? ஏன்? மாதவிக்குப் புரியாத புதிர். ஆனால், உள்ளத்தை வேதனையால் உலுக்கிக் கண்ணீர் பெருக்கச் செய்த பயங்கரப் புதிர்.

நாட்கள் வேகமாக நகர்ந்தன. ஒரு நாள் அவள் பத்திரிகையில் பார்த்தாள். கண்கள் கலங்கின - அவளை வளர்த்து ஆளாக்கிய உத்தம மனிதர் கைலாசம் மண்ணுலகை விட்டு மறைந்து விட்டார். செய்தியை அவர் அலுவலகத்துத் தொழிலாளிகள் புகைப்படத்துடன் வெளியிட்டு இருந்தனர். மாதவிக்குத் தாளமாட்டாத துயரம். அவரது இறுதிச் சடங்குகளில் கூட அவள் கலந்துகொள்ள முடியாது போய்விட்டதே என்ற வருத்தம்.

தங்கம்மாளை நேரில் கண்டு துக்கம் விசாரிக்கலாம் என்றாலோ மீண்டும் அவமானப்பட அவளுக்குத் தெம்பில்லை. எனவே தனது அனுதாபத்தைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதித் தபாலில் சேர்த்தாள். அந்தக் கடிதத்திற்கும் அதே கதிதான். முகவரியில் குறிப்பிட்ட நபர் அங்கு இல்லை என்று கடிதம் அவளுக்கே திரும்பி வந்துவிட்டது.

அன்று ரஜனிக்கு முதலாவது ஆண்டு பிறந்த நாள்.

குழந்தையுடன் அருகில் இருந்த கோயிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து முடித்துவிட்டுப் பிரசாதத்துடன் வீடு திரும்பினாள் மாதவி. அன்று ஓய்வு நாள். கடையைத் திறக்கவில்லை. மணிவண்ணன் தேர்வுக்குப் படிக்க வகுப்புத் தோழன் ஒருத்தன் வீட்டிற்குப் போயிருந்தான். அவள் மட்டுமேதான் வீட்டில் தனியே இருந்தாள்.

குழந்தைக்குக் காலை உணவை ஊட்டிவிட்டு, உறங்கத் தொட்டிலில் இட்டுவிட்டுத் தன் காரியங்களைக் கவனிக்க சமையல் அறைக்குள் புகுந்தாள்.

வாயில் அழைப்பு மணி ஒலித்தது.

அவசரமாகக் கதவைத் திறந்தவள் அயர்ந்து போய் நின்று விட்டாள்.

பல ஆண்டுக்குப் பின்னர் மறுபடியும் அவளைத் தேடிக் கொண்டு சந்திரசேகரன் வந்து இருந்தான்.



அவளது அனுமதியைக் கேட்காமலே சுவாதீனமாக அவன் உள்ளே வந்து நின்றான்.

முன்னைவிட அவன் இரட்டிப்பு மடங்கு ஊதிவிட்டிருந்தான். குடியும், கோலாகலமுமாக அவன் நடத்திய வாழ்க்கையின் சுவடுகள் படிந்த முகத்திலே வயதின் சுருக்கங்கள் காணப்பட்டன. காதோரத்து முடி நரைத்து நடை சிறிது தள்ளாடி, உடல் தளர்ந்தவனாகத் தோன்றினான். ஆனால், கண்களில் மட்டும் அதே விஷமப் பார்வை- உதட்டிலே அதே வஞ்சகப் புன்னகை.

"உட்கார் என்றுகூட உபசரிக்கப் பிடிக்காத அளவு நீ வாழ்க்கையில் முன்னேறி விட்டே..." என்று சொல்லிக் கொண்டே ஒரு நாற்காலியில் அவன் அமர்ந்தான். அறை முழுவதையும் அவன் பூசியிருந்த 'ஓடிகலன்' வாசனை நிறைந்தது.

பேச்சுக் குரலைக் கேட்டதும் உள்ளே தாழ்வாரத்தில் தொட்டிலில் கிடந்த குழந்தை புரண்டாள். விழித்துக் கொண்டு மெல்ல அழத் தொடங்கினாள்.

"அடடா! உனக்கு இன்னொரு குழந்தையா...? வரும்போதெல்லாம் நீ தொட்டிலை ஆட்டிக் கொண்டு இருக்கிறியே? பேஷ்!" விஷமமாகக் கேட்டுவிட்டு அவன் சிரித்தான்.

மாதவியின் கண்கள் தணலாயின. நெஞ்சிலே ஆத்திரம் திகுதிகுவென்று 'எரிந்தது. அவளது வாழ்க்கைக்கே உலை வைத்த அந்த வஞ்சகன் மீண்டும் ஏன் வந்திருக்கிறான்?

தனக்குள்ளே வெகுண்டபடி அவள் விரைந்து சென்று குழந்தையை வாரி அணைத்துக் கொண்டு முன்னறைக்குள் வந்தாள்.

தோளிலே அவள் சாத்திக்கொண்டிருந்த ரஜினியின் அழகு முகத்தை வியப்புடன் அவன் வெறித்தான்.

"நேர்மையின் இலக்கணம்போல் அன்னிக்கு என்னிடம் பிடி கொடுக்காமல் பேசினியே? இப்போ? யார் இவளது அப்பா? எனக்குக் கிடைக்காத பாக்கியத்தை அனுபவிக்கும் அந்த மகாராஜனின் பெயரையாவது எனக்குச் சொல்லக் கூடாதா?... வசதியானவனாகத்தான் இருக்கணும். பெரிய வீடு-மின்விசிறி மேஜை நாற்காலி ...ன்னு எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறான் அவன். ஆனால், அவனை விடப் பலமடங்கு சுகபோகத்திலே உன்னை நான் வாழ வச்சிருப்பேன். இப்பவும் மூடி முழுகிப் போய்விடவில்லை. நீ மட்டும் சரின்னு ஒப்புக்கொண்டால்...காரும் பங்களாவுமாக ராணி போல இருக்கலாம். இப்போ கைலாசம் ஐயாவுடைய வியாபாரம் பூராவும் என் கைக்கு வந்தாச்சு. தெரியும் இல்லையா...?" என்று கேட்டுவிட்டு உல்லாசமாகப் பார்த்தான்.

பொறுக்க முடியாது பொங்கிப் போனாள் மாதவி. "இதுவரை பரிமளா அக்காவுக்காக மரியாதை வச்சிருந்தேன். இனி யாருக்காகவும் தயவு காட்ட வேண்டிய அவசியம் இல்லை. இந்த நிமிஷம் இங்கிருந்து போயிடுங்க. இல்லாட்டி மரியாதை காற்றிலே பறக்கும். என்னைக் காப்பாத்திக்கிற துணிவு எனக்கு உண்டுங்கிறதைப் புரிஞ்சுக்குங்க- வீணா என் கோபத்தைத் தூண்டாதீங்க. பின்னால் விபரீதமாகி விடும்..." படபடவென்று கூறிக் கொண்டே அருகில் மேசை மீது அவள் வைத்திருந்த கனமான வெண்கல பூந்தொட்டியைக் கையில் தூக்கிக் கொண்டாள்.

சந்திரசேகரன் ஒருகணம் நடுங்கி விட்டான். ஆத்திரத்தில் அதை முகத்தின் மீது வீசி விடுவாளோ என்ற தயக்கத்துடன் "அந்தப் பழைய நாட்களை நினைத்து..."

அவன் முடிக்குமுன் அவள் காளிபோல் ஆவேசத்துடன் உரத்த குரலில் கத்திவிட்டாள். "கைலாசம் அய்யா போயிட்டார். அத்தோட அந்த வீட்டு உறவே எனக்கு



அத்துப்போச்சு—அப்படி இருக்கையிலே இங்கே ஏன் பழைய கதையை அவிழ்க்கிறீங்க...கடைசியாக எச்சரிக்கிறேன். மரியாதையாகப் போயிடுங்க—மறுபடி இந்தப் பக்கம் வரவே முயற்சிக்காதீங்க. தீர்மானமாகச் சொல்லி விட்டேன்..." கத்தினாள்.

விருக்கென்று எழுந்தான் சந்திரசேகரன். ஏமாற்றம் தாளாத ஆத்திரம் அவனுக்கு. "ஒருத்தனுடன் வாழ்க்கை நடத்திப் பிள்ளை பெற்று வைத்துக்கொண்டு வீராப்பாகப் பேசுகிறியா—வெட்கம் கெட்டவள்..." முணுமுணுத்து விட்டு...வேகமாகத் தெருவில் மறைந்தான்.

வெடவெடவென்று கோபத்திலே நடுங்கிக்கொண்டு நின்ற மாதவி கதவைத் தாளிட மறந்து வெளியே வெறித்தபடி நின்று கொண்டிருந்தாள்.

படிக்கச் சென்றிருந்த மகன் வீட்டிற்குள் வந்தவன் திடுக்கிட்டுப் போனான்.

"அம்மா - உங்களுக்கு என்னம்மா? உடம்புக்கு...?" கவலையுடன் விசாரித்தான்.

அடிவயிற்றில் இருந்து சுருண்டு எழுந்த உணர்வுகள் நெஞ்சை அடைக்க அவளால் கட்டுக்கொள்ள இயலவில்லை.

"மணிவண்ணா! நீ எப்ப சீக்கிரம் பெரியவன் ஆவாய்? எப்போ என் பொறுப்பெல்லாம் எடுத்துக்கிட்டு எனக்கு உதவியா துணையா இருப்பேன்னு நினைச்சேன்...மனசை..." சொல்ல முடியாது அவள் குலுங்கக் குலுங்க அழுதாள்.

மணிவண்ணன் ஓடிவந்து தாயின் இடுப்பைக் கட்டிக் கொண்டான். "அம்மா! இப்பவே நான் பெரியவன்தானே- என்ன உதவி செய்யணும் சொல்லுங்க, அம்மா?" கனிவுடன் ஆதரவுடன் கேட்டான்.

மாதவி துயரத்திலும் - மகிழ்ச்சியிலும் துடித்துப் போனாள்.

## 22

அன்று பகல் மாதவி வெளியே கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டு இருந்தாள்.

அன்று ரஜினியின் கல்லூரி ஆண்டு விழா - அத்துடன் மாணவிகளுக்கு பரிசளிப்பும் இணைக்கப்பட்டு இருந்தது. அதில் ரஜினியின் மெல்லிசைப் பாடல்கள் ஒரு முக்கிய நிகழ்ச்சி. மேலும் அந்த ஆண்டின் இறுதியிலே நடந்த தேர்வில் அதிக மதிப்பெண்கள் வாங்கி வெற்றி பெற்றிருந்த ரஜினிக்குப் பல பரிசுகள் காத்திருந்தன.

மேடைமீது ஏறி அவள் பலர் முன்னிலையில் நின்று பாடப் போவதையும், பரிசுகள் பல பெறப் போவதையும், கண்டுகளிக்க மாதவி புறப்பட்டுக் கொண்டு இருந்தாள்.

கண்ணாடி முன் கூந்தலை மெல்ல வாரியபடி நின்ற அவளுக்கே அவள் உருவத்தைக் காண மலைப்பாக இருந்தது-

இன்றுதான் அவள் சேவி நிலையத்து வாயிலில் அழுக்குப் பாவாடையும் பரட்டைக் கூந்தலுமாக தகரப் பெட்டியை இடையில் இடுக்கிக் கொண்டு நிற்பது போன்ற நினைவு-அதற்குள் ஆண்டு பல உருண்டோடி விட்டது.

அதை எண்ணி வியந்தபடி இங்குமங்கும் தலையில் நரை இழையோடிய கூந்தலை மெல்ல வாரி விட்டபடி அவள் நின்று கொண்டு இருந்தாள்.

நாற்பது வயதைத் தாண்டிவிட்ட போதிலும் அவள் இன்னமும் இளமையோடுதான் இருந்தாள். முகத்திலே சிறிதளவுகூட தளர்ச்சியோ சுருக்கங்களோ காணவில்லை. சமீப காலத்தில் அவளுக்கு வாழ்க்கையில் ஒன்றன் மேல்



ஒன்றாகப் பொங்கி வளர்ந்து கொண்டு வந்த நிறைவுகள் தான் அதற்குக் காரணம்.

குழந்தை உருவில் ரஜினி அவளது வீட்டிற்குள் புகுந்தவுடன் கூடவே அதிர்ஷ்டமும் தவழத் தொடங்கி வளர்ந்து பெருக ஆரம்பித்தது என்ற தீவிரமான நம்பிக்கை அவளுக்கு. ரஜினி வந்த பின்னர் அந்தப் பதினைந்து ஆண்டு காலத்திற்குள் அவர்கள் வாழ்க்கையில்தான் எத்தனை பெரும் மாற்றங்கள் - நிறைவுகள் - வசதிகள்?

பூபதி தையற்கடை விரைவில் பூபதி மகளிர் அழகு மாளிகையாக மாறியது. அண்ணாசாலையில் அலங்காரமானதொரு பெரிய கடை - பெண்களுக்கு வேண்டிய உடைகள் அனைத்தையும் விற்பனை செய்து கொண்டிருந்தது. நகரத்தில் பல இடங்களில் அதற்குக் கிளைகள்.

வாடிக்கைக்காரர்களுக்கு மட்டுமே தைத்துக் கொடுப்பதுடன் மாதவி நிறுத்திக் கொள்ளவில்லை. வெளிநாடுகளுக்குப் பெரிய அளவில் ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்த சில மொத்த வியாபார நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு, அவர்களுக்கு வேண்டியவைகளைப் பெருமளவில் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டாள். அதிகமாகப் புதிய இயந்திரங்களை வாங்கி, தைப்பதற்குப் பல பெண்களை அமர்த்தி மேற்பார்வையிட்டு சலிக்காது உழைத்தாள். அதன் பயனால் விரைவில் அவள் வாழ்க்கை நிலையில் உயர்ந்துவிட்டாள்.

ரஜினிக்கு ஐந்து வயதாகிக் கொண்டிருக்கையில் மாதவி குடியிருக்கச் சொந்தமாக ஒரு சிறு வீட்டை வாங்கிக் கொண்டுவிட்டாள். பின்னர் வியாபாரம்பலக்கத் தொடங்கியதும், தங்களது குடியிருப்பை அடையாரில் ஒரு பெரிய சொந்த பங்களாவுக்கு மாற்றிக் கொண்டாள். அத்துடன் கார், வீட்டைக் கவனிக்க வேலையாட்கள், சமையலுக்கு ஆள், தோட்டக்காரன் என்று வசதிகளையும் பெருக்கிக் கொண்டாள்.

மணிவண்ணன் கருத்துடன் படித்து அவளது ஆசைகளை நினைவாக்கப் பெரிதும் உதவினான். டாக்டர் பட்டம் பெற்று உரிய தேர்ச்சிகள் முடிந்ததும் மேல் படிப்பைத் தொடர்ந்து அறுவை சிகிச்சைப் பகுதியில் தேர்ச்சியுற்று நகரத்தில் இருந்த பிரபலமான தனியார் மருத்துவமனையில் பணிபுரிய அமர்ந்து விட்டிருந்தான். அதைப்பற்றி மாதவிக்கு அளவிட முடியாத பெருமை. வாட்டசாட்டமாக வளர்ந்து நின்ற மகனைப் பார்த்துப் பூரித்துப் போனாள்.

ரஜினியும் அண்ணனுக்கு எந்தவிதத்திலும் குறைந்து விடவில்லை. பெற்ற தாயைவிட அவள் பன்மடங்கு அழகியாக இருந்தாள். சங்கீத அறிவில் தாத்தாவைவிட ஒருபடி மேலாக இருந்தாள். படிப்பில் மகா கெட்டிக்காரி என்ற பெயர் எடுத்தாள். சங்கீதத்தில் சிறு வயதிலேயே அவள் காட்டிய ஆர்வத்தைப் புரிந்து கொண்டு மாதவி அவளுக்கு முறைப்படி அதைக் கற்பிக்க ஏற்பாடு செய்திருந்தாள். கர்நாடக சங்கீதம் - மெல்லிசை - பாப் மியூசிக் என்று ரஜினி ஒன்றையும் விடவில்லை. பதினைந்து வயதிலேயே எல்லாவற்றையும் திறமையாக - இனிமையாகப் பாடக் கூடிய அளவு அவள் தேர்ச்சி பெற்றாள்.

மகன் - மகள் இருவரது முன்னேற்றத்தைப் பற்றி மாதவிக்கு மிக்க பெருமை. வியாபாரம் முன்னேறி அவர்களது வாழ்க்கையில் இல்லாமை என்பதே இல்லாது போய் விட்டதைக் குறித்தும் மகிழ்ச்சியே.

ஆனால், அடிமனதிற்குள்ளே அவளுக்கு ஒரு பெருங் குறை இருக்கத்தான் செய்தது. நெற்றி வியர்வை நிலத்தில் வடிய உழைத்த உழைப்பில் உயர்ந்து நிற்கும்போது அதன் பயனைக்கூட இருந்து அனுபவிக்க அவள் கணவன் அருகில் இல்லையே?

மகனது வெற்றிகளைப் பார்த்து மகிழவோ - வளர்ப்பு மகளது இனிய குரலைக் கேட்டு இன்பம் அடையவோ பூபதி



கூட இல்லையே என்று எண்ணிய போதெல்லாம் தன்னையும் மீறிய துக்கத்தில் அவள் கண்ணீர் சிந்தினாள்.

கூந்தலை வாரி முடித்துக் கொண்டு வழக்கம் போல் நெற்றியில் பெரிய பொட்டை வைத்துக்கொண்டாள் அவள். புடவையைச் சரி செய்துகொண்டு மீண்டும் ஒரு முறை தன் உருவத்தைக் கண்ணாடியல் பார்த்துவிட்டுத் திரும்புமுன் மாடிப் படியை மின்னல் வேகத்தில் தாண்டிக் கொண்டு ரஜினி உற்சாகத்துடன் ஓடி வந்தாள்.

மணிவண்ணன் எத்தனை அடக்கமான அமைதியான பிள்ளையோ அதற்கு நேர்மாறாக இருந்தாள் ரஜினி.

கூச்சலும் கொம்மாளமுமாக—சிரிப்பும் வேடிக்கையுமாக துருதுருவென்று அலைந்த கண்களுடன் மான்குட்டி போல அந்த வீட்டில் துள்ளிக்கொண்டு இருந்தாள்.

தாயும் மகளும் விழாவுக்குப் புறப்பட்டனர்.

அவளது கல்லூரி விழாவில் மாதவி கலந்து கொள்வது இதுதான் முதல் தடவை. கல்லூரியின் தலைவிக்கு அவளைக் கண்டு மிக்க மகிழ்ச்சி. அன்புடன் எதிர்கொண்டு வரவேற்று முன் வரிசையில் ஒரு நல்ல இருக்கையில் அமரச் செய்து உபசரித்தாள்.

எங்கேயோ ஓர் அடுக்களையில் சமையல்காரியாக இருந்த மாதவியைப் பலருக்குத் தெரியாது. ஆனால், பொது வியாபாரத்திலே பிரபலமாகி விட்டிருந்த அவளைப் பல பெண்களுக்குத் தெரிந்து விட்டிருந்தது.

"அது யார் தெரியுமா? டாக்டர் மணிவண்ணனின் தாயார் மாதவி அம்மாள்."

"மெல்லிசை வழங்கப் போகும் ரஜினியின் தாயார் தான் அங்கே உட்கார்ந்திருப்பது... நன்றாகப் பார்த்துக் கொள்."

பூபதி மகளிர் அழகு மாளிகையின் சொந்தக்காரிதான் இந்த மாதவி. ஒரு காலத்தில் ஒரே ஒரு தையல் மிஷினுடன் தொழிலைத் தொடங்கி இப்போ...பங்களா—கார்...அது இதுன்னு ஓகோன்னு போய் விட்டாள்.

கூடியிருந்த பெண்களில் சிலர் அவளைப் பார்த்து மெல்ல கிசுகிசுத்தது அவள் காதுகளில் விழத்தான்செய்தது. ஜிவ்வென்று காதுகளும் மூக்கும் வெட்கத்திலே லேசாக சிவந்தன. நெஞ்சிலே ஓர் இன்பப் படபடப்பு. நெற்றியில் துளிர்த்த வியர்வையை மெல்லத் துடைத்துக் கொண்டு மேடையை ஆவலுடன் பார்த்தாள்.

அன்று விழாவிற்குத் தலைமை தாங்க இருந்த பெண் மணி வரமுடியாது போய் விடவே, தலைவி பரபரப்புடன் கூட்டத்தின் பின்னால் அமர்ந்திருந்த ஒரு பெண்ணைத் தலைமை தாங்க பணிவுடன் கேட்டு மேடைக்கு அழைத்து வந்து கொண்டிருந்தாள்.

இறைவணக்கம் பாட ஒலி பெருக்கியின் முன் ரஜினி வந்து நின்ற போதுதான் அந்தப் பெண்ணை மாதவி கவனித்தாள். ஒருகணம் திடுக்கிட்டுப் போய் விட்டாள். பரிமளாதான் அன்றைய விழாவின் புதியதலைவி.

வழக்கம்போல் அவள் மிகவும் ஆடம்பரமாக உடுத்திக் கொண்டிருந்தாள். முகத்தில் எக்கச் சக்கமான ஒப்பனை. இருந்தும் கண்களின் கடையிலே கோடுகள் போல் பரவியிருந்த சுருக்கங்களையும்-தாடையின் கீழ் தொங்கிய மெல்லிய மடிப்புகளையும் மறைக்க முடியவில்லை. தாயார் தங்கம்மாளைப் போல் உடலும் பருத்து விட்டிருந்தது. அதன் பயனாக அவள் அணிந்து கொண்டிருந்த வைர அட்டிகை கழுத்தை இருக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது.

ஏன் வந்தோம் என்று மாதவிக்கு ஒருகணம் கலவரம். ஆனாலும், சமாளித்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

இறை வணக்கம்- பேச்சுக்கள் ஓய்ந்ததும், மெல்லிசை நிகழ்ச்சி தொடங்கியது.



மேடைக் கூச்சம் சிறிதும் இன்றி ரஜினி ஒலிபெருக்கி முன்னால் நின்றபடி தாயைப் பார்த்து புன்னகைத்தபடியின் தலையை நிமிர்த்திக் கொண்டு உற்சாகத்துடன் பாடினாள்.

அவளது இனிய குரல் வண்டுபோல் மண்டபம் முழுவதும் சுழன்று காதுகளில் மோதியதும், மாதவி தன்னை மறந்தே போனாள். இசையோடு ஒன்றிவிட்டாள்.

ஒவ்வொரு பாட்டிற்குப் பின்னரும் பலத்த கைதட்டல்- "ஒன்ஸ் மோர்" கூச்சல்கள்...ஆரவாரம். ரஜினியின் மெல்லிசைக்குப் பலத்த வரவேற்பு-பாராட்டுதல்கள்.

அடுத்தபடியாக பரிசளிப்பு நிகழ்ச்சி தொடங்கியது.

தமிழ்- ஆங்கிலம்-சங்கீதம்- விஞ்ஞானம் என்று பல பகுதிகளுக்கும் பரிசு பெற்ற மாணவி என்று ரஜினியைப் பல முறை மேடைக்கு அழைத்தார். கல்லூரித் தலைவி. ஒவ்வொரு தடவையும் மாணவிகள் இடையே பலத்த ஆரவாரம்.

சங்கீதத்திற்கு என்ற முதல்பரிசையும் ரஜினியே தட்டிக் கொண்டு விட்டாள்.

'மெட்ரிக்' வகுப்பில் முதன்மையாகத் தேறிய மாணவி என்ற பரிசும் அவளுக்கே வழங்கப்பட்டது.

கடைசியாக, கல்லூரியின் சிறந்த மாணவி என்பதற்கான தங்கப் பதக்கமும் ரஜினிக்கே வழங்கப்பட்டபோது அந்த மண்டபமே இடிந்து விழுந்துவிடும் போன்ற பலத்த கைதட்டல். மாதவி கண்கள் பனிக்க-நெஞ்சு பெருமையில் மின்ன மகளை ஆசையுடன் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

விழா முடிந்ததும் பெண்களும்- மாணவிகளும் மாதவியைச் சூழ்ந்து கொண்டனர். அவள் மகளைப் பாராட்டினர். பெருமையாகப் பேசினர்.

கூட்டத்தில் இருந்து மெல்ல விடுபட்டு அவள் ஒருபுறம் ஒதுங்கி வந்து நின்றாள். தூக்கமாட்டாத அளவு புத்தகங்கள்-பரிசுப் பொருட்களைச் சுமந்துகொண்டு, மகிழ்ச்சியில் முகம் சிவக்க- கண்கள் பளபளக்க தாயைத் தேடிக்கொண்டு ரஜினி விரைந்து வந்தாள்.

அதற்குள் கல்லூரித் தலைவி வேகமாக அவள் அருகே வந்தாள்.

''இத்தனை கெட்டிக்காரியான பெண்ணின் தாயை நீங்கள் சந்திக்க வேண்டாமா? இவங்கதான் அந்தப் பெருமைக்குரியவங்க'' என்று புன்னகைத்தபடி, கூடவந்த பரிமளாவுக்கு அவளை அறிமுகம் செய்து வைத்தாள்.

உள்ளமும் உடலும் சில்லிட்டுப் போனதுபோல் ஒரு திகிலில் மாதவி விழித்தாள்.

அதற்குள் தலைவியை வேறு யாரோ அழைக்கவே அவள் கூட்டத்தின் வேறுபக்கம் மறைந்து விட்டாள்.

ரஜினியை மாணவிகள் சூழ்ந்துகொண்டு விட்டனர்.

தனியே பரிமளாவுடன் நின்ற மாதவி-முடிவில் துணிவுடன் நிமிர்ந்து பார்த்தாள்.

இன்னமும் இளமை அழியாது கம்பீரமாக எதிரே நின்ற அவளை உற்றுப் பார்த்த பரிமளாவின் நெஞ்சைப் பொறாமை சுட்டது.

அவர்கள் வீட்டு அடுக்களையில் கிடந்த அனாதைக்கு இத்தனை பெரும் வாழ்வா... ஆத்திரத்தில் புழுங்கினாள் அவள். அழகான கணவன்- அப்பா விட்டுப்போன சொத்துக்கள் எல்லாம் இருந்தும் மாதவிக்குக் கிடைத்த மக்கள் செல்வம் அவளுக்கு இல்லையே?

அந்த எண்ணத்திலே எழுந்த ஏமாற்றத்தின் சீற்றத்தைப் பரிமளாவால் அடக்க முடியவில்லை.



''நீயா! நான் எதிர்பார்க்கவேயில்லை. தவறிப் போனாலும் நீ சாமர்த்தியகாரிதான். ஓர் அழகான பெண்ணைப் பெற்றுக்கொண்டு விட்டிருக்கிறாய்—ஆமாம், ஒரு பிள்ளை ஒருத்தன் இருந்தானே, அவன்?...'' ஏளனமாகக் கேட்டாள்.

பொங்கி எழுந்த கோபத்தை மாதவி விழுங்கிக் கொண்டாள். ''என் பிள்ளை இப்போது ஒருடாக்டர் வேலைபார்க்கிறான்'' பட்டென்று எரிச்சலுடன் பதில் அளித்தாள்.

''பரவாயில்லை. நீ ரொம்பவும் முன்னேறி விட்டிருக்கிறாய்...''

பரம்பரையாக பெரியவங்க வச்சிட்டுப்போன சொத்தைத் தின்னு சோம்பேறியாக வாழ்கிற உங்ககிட்ட உழைப்பின் பெருமையைப் பற்றிப் பேசி என்ன பயன்? ...குட்டிச் சுவரில் முட்டிக் கொள்வதற்கு ஒப்பாகும்.''

காரமாகச் சொல்லிவிட்டு விர் என்று அங்கிருந்து அகன்றாள் மாதவி.

வெகு நேரம் அவளுக்கு நெஞ்சின் படபடப்பு அடங்கவே இல்லை.

16337
32063388

## 23

பல மாதங்களுக்குப் பின்னர் ஒருநாள் பகல் மணிவண்ணன் மருத்துவமனையிலிருந்து சாப்பிட வீட்டிற்கு வந்திருந்தான். அவர்கள் வசித்த வீட்டிற்கும் மருத்துவ மனைக்கும் தொலைதூரம். அதனால் பல நாள் பகல் பொழுது உணவை அவன் அருகில் இருந்த ஓர் ஓட்டலிலேயே சாப்பிட்டான். என்றாவது அபூர்வமாக அவன் வீட்டிற்குப் பகல் நேரத்தில் வருவது உண்டு-வருமுன் தாயாருக்குத் தொலைபேசியில் தெரிவித்துவிட்டே வருவதும் வழக்கம்.

வியாபாரம் பெருகிவிட்ட போதிலும் பகல் வேளையில் உணவுக்குப் பின் மாதவி இப்பொழுதெல்லாம் ஓய்வு எடுத்

துக்கொள்ளத் தொடங்கியிருந்தாள். ஒருநாள் அவளைப் பரிசோதித்த மகன், அவளுக்கு ரத்த அழுத்தம் அதிகமாகிக் கொண்டு வருவதை உணர்ந்து, தக்க மருந்துகள்கொடுத்து, பகல்வேளை ஓய்வை வற்புறுத்தியிருந்தான்.

''உங்களுக்கு என்ன கவலையம்மா? ஏன் இப்படி உடம்பைக் கெடுத்துக்கிறீங்க?'' மகன் பரிவோடு விசாரித்த போது அவள் புன்னகைத்து மழுப்பிவிட்டாள். ''கவலையா? எனக்கென்ன ஒன்றுமில்லையே?''

ஆனால், உண்மையில் அவளுக்கு மனதிற்குள்ளே பல கவலைகள்—பலவிதமான குழப்ப உணர்வுகள். ஓங்கி உயரமாக வளர்ந்து நிற்கும் மகனுக்கு விரைவாகத் திருமணம் செய்து வைக்கவேண்டும் என்ற ஆவல்.

ரஜினி பி. ஏ. படித்து முடித்தவுடன், ஒரு நல்ல இடத்தில் அவளைக் கட்டிக் கொடுத்துவிட வேண்டும். பின்னர்?... இப்படிப் பல கவலைகள். இதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை.

மணிவண்ணன் முன்பெல்லாம் வேலை முடிந்ததும் மாலை ஆறு மணியளவில் திரும்பிவிடுவது வழக்கம். வாரத்திற்கு இருமுறைதான் இரவு வேளையில் அவனுக்கு ஆஸ்பத்திரியில் அலுவல் இருந்தது. இப்பொழுது அவன் தினமும் நேரங்கழித்தே விட்டிற்கு வந்தான். வாரத்திற்கு மூன்று நாளைக்கு மேல் இரவு வேலை என்று ஆஸ்பத்திரியிலே தங்கத் தொடங்கினான்.

அவள் தாயாகவும் தந்தையாகவும் இருந்து அவனை ஆளாக்கினாள்; உண்மைதான். ஆனால் வயது வந்த பிள்ளை அவன். பொறுப்பான தொழிலை மேற்கொண்டு இருக்கிறவன். அவனிடம் ஏன் என்னத்திற்கு இத்தனை நேரம் ஆயிற்று என்று கேட்டுத் தெரிந்துகொள்ளக் கூச்சமாகவும் இருந்தது. ஆனாலும், உள்ளத்தில் ஓர் உறுத்தல். இளம் வயதுப்பிள்ளை. உணர்வுகளின் குழப்பத்திலே ஏதாவது தவறான வழியில் போய்விட்டால்?...



ரஜனிக்கு வயதுக்கு மீறிய செழிப்பான உடல்வாகு. கொள்ளை அழகு வேறு. சமீப காலத்தில் மெல்லிசைக் குழுவினர் பலர் அவளைத் தங்கள் குழுவில் சேர்த்துக் கொள்ளத் துடித்தபடி விட்டை வட்டமிட்டனர். தாயின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவள். மாதவியின உத்திரவின்றி அவள் மேடைக் கச்சேரிகளுக்கு ஒத்துக்கொள்ளமாட்டாள். எல்லோருக்கும் மறுப்புத் தெரிவித்துக் கொண்டிருந்தாள். ஆனால், எத்தனை காலத்துக்கு அவள் அடங்கி இருப்பாள்? புகழ் என்பதற்கு ஒரு தனி போதை உண்டே. அதன் மயக்கத்தில் அவள் அமிழ்ந்து விட்டால்?...அந்தக் கவலை வேறு.

இந்த மாதிரியான பிரச்சனைகளைப் பற்றி சிந்திக்கையில் தான் அவள் அடிக்கடி தன்கணவனைப் பற்றி எண்ணிக் கலங்கினாள். பூபதி மட்டும் அவளுடன் இப்போது இருந்தால்?...இளம் வயதினரான மணிவண்ணன் - ரஜனி இருவரின் பிற்காலத்தைப் பற்றி அவள் தனியே மண்டையைக் குழப்பிக்கொண்டு அவதிப்படத் தேவையில்லை.

மகனுக்கு உணவைப் பரிமாறிக்கொண்டே அவன் முகத்தைக் கவனித்தாள்.

அவன் முகவாட்டத்துடன் காணப்பட்டான் அதிகப் படியான வேலையா? தாயின் மனத்திலே குழப்பம்.

''மணிவண்ணா! சாப்பாடு நல்லா இல்லையா-எல்லாத்தையும் ஒதுக்கிறியே. ஏன்?'' ஆதங்கத்துடன் கேட்டாள்.

ஒருபிடி சோற்றை வாயில் போட்டுக்கொண்டு மவுனமாக மென்று விழுங்கிய மணிவண்ணன், மிக்க ஆலோசனையுடன் இருந்தான். அவளது கேள்விக்குப் பதில் அளிக்கவில்லை.

''ரசத்துக்கு உப்பு சரியா இருக்கிறதான்னு பார்... கையை நீட்டு'' மறுபடியும் மாதவி அழுத்தமாகப் பேசினாள்.

கனவில் இருந்து திடுக்கிட்டு எழுந்து கொண்டவன் போல் அவன் விழித்தான். ரசத்தை சோற்றுடன் கலந்து

வேகமாக விழுங்கிவிட்டு அத்துடன் போதும் என்று எழுந்து விட்டான்.

முன்னறையில் சோபாவிலே வந்து சாய்ந்துகொண்ட மகனைக் கவனித்தபடி தாய் கலக்கத்துடன் எதிரே ஓர் இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

''அம்மா ஒன்று கேட்பேன். கோவிச்சுக்க மாட்டீங்களே?''

மாதவியின் நெஞ்சம் துணுக்குற்றது. ''கேள் மணி' வண்ணா! உன்கிட்டே எனக்கு எதுக்குமே கோபம் வராது' ஏனோ அவள் உடல் முழுவதும் பீதியில் வியர்த்துக் கொட்டியது.

''அப்பா இன்னமும் உயிரோடு இருக்கிறார் என்று நம்புகிறீர்களா?''

அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. நெஞ்சை வேதனை அடைத்தது. பொங்கி எழுந்த துக்கத்தைக் கட்டுப் படுத்திக்கொண்டு மெல்லியதாகப் புன்முறுவலித்தாள்.

''அப்படித்தான் நினைத்துக்கொண்டு அந்த எதிர் பார்ப்பில் மஞ்சள் குங்குமத்தை விட மனம் இல்லாது வாழ் கிறேன். ஏன் கேட்கிறே?''

''எனக்கு நம்பிக்கை இல்லையம்மா. இருந்திருந்தால் இத்தனை காலம் நம்மைத் தேடிக்கொண்டு வராதிருப் பாரா?''

''மணிவண்ணா! என் வரைக்கும் அவர் நிச்சயம் உயிரோடு இருக்கிறார். எங்கேயோ இருக்கிறார்'' பேச முடியாது துக்கத்துடன் திணறினாள்.

''அவர் இருந்தால் இப்போது நம்முடன் வந்து கலந்து கொண்டால் எவ்வளவு நலமாக இருக்கும்''

''நானும் அப்படித்தான் நினைத்து சதா ஏங்கிக் கொண்டு இருக்கிறேன். என்ன செய்வது?'' கன்னங்களில்



வழிந்த கண்ணீரை அவள் சட்டென்று துடைத்துக் கொண்டாள்.

''இள வயதில் என்னை விட்டுப்போன அப்பா மறைந்த குறை தெரியாமல் நீங்க என்னைப் பாடுபட்டு வளர்த்தீங்க- படிக்க வைச்சீங்க. அதற்காக நான் ரொம்ப நன்றி பாராட் டுகிறேன்.''

''தாய் மகனுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன்—அவ்வளவுதான்.''

''அம்மா! இன்னொரு கடமையும் இருக்கு. அதையும் பூர்த்தி செய்து விட்டால்...இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் தான் ஒரு மகன் மனம் விட்டுப் பேசத் தன்னைப் போன்ற ஒரு ஆண் துணையை விரும்புகிறான் - கொஞ்ச காலமாக என் மனதைக் குழப்புகிற ஒரு பிரச்சினையைச் சொல்லித் தெளிவுகாண அப்பா அருகில் இல்லையேன்னு நான் ரொம்ப வேதனைப்படுகிறேன்'' அவனது வார்த்தைகள் உடைந்தன.

திகைப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தாள், மாதவி.

''மணிவண்ணா! சொல், தயங்காதே. அப்பாவுடைய இடத்தில் இருந்து கொண்டு கேட்கிறேன். இத்தனை வருட மாகப் பழகிய பின்னும் உன் தாயை உனக்குத் தெரிந்து கொள்ள முடியலையா? சொல்லப்பா... சொல்லு...'' உணர்ச்சி வசத்திலே பேச முடியாது தடுமாறிப் போனாள்.

அருகில் கிடந்த ஓர் இருக்கையில் வந்து மணிவண்ணன் உட்கார்ந்து கொண்டான். தாயின் கரத்தை ஆதரவுடன் பிடித்துக் கொண்டான்.

''அம்மா நான் ஒரு பெண்ணை விரும்புகிறேன்'' என்றான்.

நீண்டதொரு பெருமூச்சு அவளிடம் இருந்து வந்தது. உடனடியாக மனதில் ஒரு நிம்மதி. ''இவ்வளவுதானே... இதைப்பற்றி என்னிடம் தயக்கம் ஏன்?''

''தயக்கம் இருப்பதால்தான் சொல்ல முடியாமல் பல நாளாக வேதனைப் பட்டுக்கொண்டு இருந்தேன். நான் விரும்பும் நளினியும் ஒரு டாக்டர். வேறு ஒரு மருத்துவமனையில் அவள் தற்சமயம் பயிற்சி பெற்றுக் கொண்டு இருக்கிறாள். சாதாரண, எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண். அவளது படிப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் காரணமான அவளது தூரத்துஉறவினரான மாமன் குடும்பத்திற்கு அவள் மிகவும் கடமைப்பட்டு இருக்கிறாளாம். என்னை அவள் மிகவும் விரும்புகிறாள். மணந்து கொள்ளச் சம்மதமும் தெரிவித்து விட்டாள். ஆனால்...''

''ஆனால்? ... வியப்புடன் தாய் மகனைப் பார்த்தாள்.

''எனக்கு சொல்ல நா கூசுகிறது. சொன்னால் உங்கள் மனம் புண்படுமோ என்று பயப்படுகிறேன்- நளினி கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது அவளுடன் கோபித்துக் கொண்டு சில நாளாக அவளைச் சந்திக்க மறுத்து அலைந்து கொண்டிருக்கிறேன். ஒரேயடியாக அவளை என் நினைவில் இருந்து நீக்கிவிடவும் முடியவில்லை. நான் படும் வேதனையை விவரிக்கவும் எனக்குத் தெரியவில்லை...''

''போதும், விவரிக்க வேண்டாம். புரிகிறது. அந்தப் பெண் என்ன கேட்டாள்? அதை என்னிடம் தயங்காமல் சொல்லு.''

'உங்கள் தந்தை உங்களை விட்டுப் போயிட்டாராமே. அதுக்கு காரணம் என்ன என்று கேட்டாள். அவள் மாமன் குடும்பத்தாருக்கு அவசியம் நம்மைப் பற்றிய அனைத்தும் தெரிய வேண்டுமாம். அவர்கள் கவுரவத்தையும், குடும்பத்து சூழ்நிலையையும் பெரிதும் அலசிப்பார்ப்பவர்களாம்... அதனால்...'' பேச முடியாது தாயைப் பரிதாபமாகப் பார்த்தான்.

அவமானத்தில் கூசிக் குறுகி - நெஞ்சம் பதைக்க அயர்ந்துபோய் விட்டாள் மாதவி. அவளது வாழ்க்கையிலே மறைந்து போய்விட்டிருந்த அந்த விஷயம் - ரகசியம்



இப்போது அம்பலத்திற்கு வரவேண்டுமா? அப்படி ஓர் அவசியமா? பொங்கி எழுந்த உணர்வுகளின் வேதனையைச் சகித்துக் கொண்டாள்.

''மணிவண்ணா! அவங்களுக்கு என்னைப்பற்றி அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் நான் மறுப்பு சொல்ல மாட்டேன். இன்று சாயங்காலம் நீ வீட்டிற்கு வந்ததும் என்னை அந்தப் பெண்ணின் வீட்டிற்கு அழைத்துப் போ. நானே என்னைப்பற்றிச் சகலமும் அவளிடம் சொல்லி விடுகிறேன். பின்னர் தீர்மானிப்பது அவள் விருப்பம்'' என்றாள்.

''உங்களை நீங்கள் இப்படி இறக்கிக் கொள்ளவா வேண்டும், அம்மா?'' மகன் குரல் தழுதழுத்தது.

''உன் பொருட்டு நான் நெருப்புக்குள் இறங்க வேண்டுமானாலும் தயார். உன்னைவிட உயர்ந்தது எனக்கு உலகில் எதுவுமே இல்லை. கவலைப்படாதே'' படபடவென்று பேசி விட்டு அவள் எழுந்து சென்றுவிட்டாள்.

அன்று மாலை அவள் முடிவு எடுத்தபடி டாக்டர் நளினியை நேரேயே சந்திக்க அவள் வீட்டுக்குப் புறப்பட்டாள் மாதவி. மணிவண்ணன்தான் காரை ஓட்டிக்கொண்டு வந்தான். தாங்கள் வரப்போவதை அவன் நளினிக்கு முன்னதாகவே சொல்லியிருந்தான். நகரத்தில் நெருக்கமான ஒரு தெருவில் ஒரு சந்திற்குள்தான் அவள் வீடு இருந்தது. அவள் அது சமயம் வீட்டில் தனியாகத்தான் இருந்தாள்.

மிகவும் சிறிய முன்னறையில் மாதவி வந்து உட்கார்ந்து கொண்டாள். அந்த—வீட்டின் தோற்றம் எல்லாம் அவளது பற்றாக்குறை நாட்களை நினைவில் நிறுத்தின. வாயிற்படியில் தொங்கிய திரைச் சேலையை ஒதுக்கிக் கொண்டு உள்ளே வந்து நின்ற பெண்ணை அவள் வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

ரஜனியைப் போல் அவள் மிக்க அழகியல்ல, மணிவண்ணனுக்கு ஏற்ற உயரம். நல்ல உடல் கட்டு. எடுப்பான மூக்கும் பளபளத்த கண்களுமாக மிக்க கவர்ச்சியாக-பார்க்க நன்றாகத்தான் இருந்தாள். இடையில் சாதாரணமாக ஒரு நூல் சேலை உடுத்திருந்தாள். மேனியில் நகைகளே இருக்கவில்லை.

மணிவண்ணன் அவர்களைத் தனியே பேசவிட்டு, மெல்ல வெளியே சென்று காரில் உட்கார்ந்துவிட்டான்.

"என்னைப்பற்றித் தெரிந்து கொள்ள நீ ஆசைப்பட்டாயாம். நியாயம், ஒப்புக்கொள்கிறேன். அதற்குமுன் உன்னைப்பற்றி நான் கொஞ்சம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்" மெல்ல மாதவி ஆரம்பித்தாள்.

எதிரே இருக்கையில் வந்து அமர்ந்து கொண்ட நளினியின் கூரிய விழிகள் அவளை அளந்தன.

"என்னைப்பற்றி அதிகம் இல்லை. நாங்கள் மிகவும் ஏழைகள். என் அப்பா ஒரு பணக்காரர் வீட்டில் பல ஆண்டுகளாக எடுபிடி ஆளாகவேலைபார்க்கிறார். என் அம்மா அதே வீட்டில் சமையல் வேலை செய்கிறாங்க. நல்லவேளையாக நான் அவர்களுக்கு ஒரே குழந்தை. ஒருவழியில் அந்தப் பணக்காரர் எங்களுக்கு உறவு. சிறுவயதிலேயே எம்மேல் அந்த அம்மாளுக்குக் கொஞ்சம் பற்றுதல். என் படிப்புக்கு அவங்கதான் இதுவரையும் உதவி செய்தாங்க. உங்கள் மகனை நான் மணந்துகொள்ள ஒப்புக்கொண்டதும் உண்மையை என் பெற்றோர்களுக்குச் சொல்லிவிட்டேன். அவர்கள் எனது பாதுகாவலராக இதுவரை இருந்துவரும் எங்கள் தூரத்து உறவினரான அந்தப் பணக்காரக் குடும்பத்தினிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டார்கள். அவர்களுக்கு ஏற்கனவே உங்களைப் பற்றி சில தகவல்கள் தெரியுமாம். அதை விவரமாகத் தெரிந்துகொள்ள விரும்பினார்கள்— அதனால்..." அவள் முடிக்காது தயக்கத்துடன் மாதவியின் முகத்தைப் பார்த்தாள்.



"பரவாயில்லை அம்மா-சில சமயங்களில் குழியில் புதைத்து விட்டதைத் திரும்ப எடுத்து ஆராய வேண்டியுள்ளது. சட்டத்தின் சமநோக்கைக் காக்க அப்படிச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். நான் வெட்கப்படவில்லை. விவரமாகச் சொல்கிறேன். அந்தப் 'பணக்கார உறவினர்கள்' பெயரை எனக்குத் தெரிவிக்க முடியுமா? உன்னைக் குழப்புவதைவிட நானே அவர்களை நேரில் கண்டு அவர்கள் விரும்பிய தகவல்களுக்கு வேண்டிய விளக்கங்களைச் சொல்லிவிட முடியும்."

"ஒரு சமயம் உங்களுக்கு அவர்களைத் தெரிந்திருக்கலாம். நகரத்திலே மிகவும் பிரபலமானவர்கள். 'கைலாசம் பேப்பர் மார்ட்' என்ற நிறுவனத்தின் சொந்தக்காரர் தான் என் தூரத்து மாமன். சந்திரசேகரு பேர். அவருடைய மனைவிதான் என் பாதுகாவலர். இருவரின் தயவால்தான் நான் படித்து முன்னுக்கு வந்திருக்கிறேன்."

மின்விசையால் தாக்கப்பட்ட அதிர்ச்சியில் மாதவி எழுந்து நின்றாள். இது என்ன வேடிக்கை! மீண்டும் மீண்டும் அவள் இந்தப் பரிமளாவுடன்தானா வந்து மோதிக் கொள்ள வேண்டும்?

"நான் வரேன்" சுருக்கமாக விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தாள்.

"அம்மா! என்ன ஆயிற்று?"

"மணிவண்ணா! என்னை அதிகம் கேட்காதே. நீ நளினியை மறந்துவிட வேண்டும். உன் படிப்பிற்கு-அழகிற்கு அந்தஸ்திற்கு பெண்கொடுக்க எத்தனையோ பேர் தயாராக இருக்கிறாங்க. இவர்கள் வீட்டு உறவு நமக்கு வேண்டாம். விடு..." கோபத்துடன் சொன்னாள் மாதவி.

# 24

அதற்குப் பின்னர் மணிவண்ணன் சிரிப்பை மறந்து சித்தம் கலங்கியவன் போல் வளைய வந்து கொண்டிருந்தான். ஒளி இழந்த அவன் முகத்தையும்-ஏக்கம் நிறைந்த கண்களையும் பார்த்து உள்ளூர மனம்புழுங்கினாள் மாதவி. ஆனால் விட்டுக்கொடுக்க இயலாத ஒரு பிடிவாதம் அவளை ஆட்டுவித்துக் கொண்டிருந்தது.

அண்ணனுக்கும் தங்கைக்கும் இடையே எப்பொழுமே நெருக்கமான பரிவு. இப்பொழுது அது பல்மடங்காகப் பெருகி விட்டிருந்தது. மணிவண்ணன் எதையும் தன் தங்கை ரஜனியிடம் இருந்து ஒளித்தவன் இல்லை. அவளும் தன் அண்ணனுக்குச் சொல்லாது தன் உள்ளத்தில் எந்த ரகசியத்தையும் புதைத்து வைத்துக்கொண்டது இல்லை.

நளினியை அவன் விரும்புகிறான். மணம் செய்து கொள்ள அவளும் இசைந்திருக்கிறாள் என்ற விஷயம் தங்கைக்கு முன்னதாகவே தெரியும். தாயாரிடம் அவன் சொல்லும்வரை அவள் கட்டுப்பாடாக வாயை மூடிக் கொண்டு இருந்தாள். தாயார் ஒப்புதல் கொடுக்க மறுத்ததை அறிந்து அவள் அதிர்ச்சியடைந்து போய்விட்டிருந்தாள்.

அண்ணன் மணிவண்ணனுக்கே மறுப்பு சொல்லிவிட்ட தாயார், அவள் விஷயத்தில் என்ன சொல்லுவார்களோ? இப்படி ஒரு சந்தேகம் அவள் உள்ளத்தை சங்கடப்படுத்திக் கொண்டு இருந்தது. அதற்குக்காரணம் இல்லாமல் இல்லை.

சில நாளில் நேரம் இருக்கும்போது மணிவண்ணன் தங்கையைத் தன் காரிலேயே அழைத்துச் செல்வது வழக்கம். ஒருநாள் அவன் மருத்துவமனைக்கு முதலில் செல்ல வேண்டியிருந்தது.



''ஒரு அவசரக் கேஸ். அதை முதலில் பார்த்துவிட்டுப் பின்னர் உன்னைக் காலேஜில் கொண்டு விடுகிறேன்'' என்று கூறிவிட்டு காரை மருத்துவமனையில் ஒரு மரத்தடியில் நிறுத்திவிட்டு அவன் உள்ளே வேகமாக விரைந்தான். காரில் அமர்ந்தபடியே சுற்றிலும் கண்களை ஓடவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த ரஜனியின் பார்வை அதுசமயம் தோட்டத்திற்குள் வந்த அந்தப் பெரிய வெளிநாட்டுக் காரின் மீது லயித்தது.

கப்பலைப்போன்ற அந்த வாகனத்தை ஓட்டிக்கொண்டு வந்த வாலிபன் சொல்லி வைத்தாற்போல் அவர்கள் நின்ற மரத்தடி அருகே அதைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டு இறங்கினான்.

ரஜனியின் இதயத்திலே ஓர் இன்ப நாதம். நெஞ்சிலே ஒரு சிலிர்ப்பு—அவனை அதிசயமாக உற்றுப் பார்த்தாள். சுருண்டமுடி நெற்றிமீது தவழ, தனக்குள்ளே லேசாக முறுவலித்துக் கொண்டு காரை விட்டு இறங்கிய அந்த அரும்பு மீசை அழகன், தங்கள் கார அருகே வருவதைக் கண்டதும் அவளுக்கு விவரிக்க இயலாத ஓர் இன்பப் பரபரப்பு! மெல்லக் குவிந்து முன் இருக்கையில் இருந்தவாறு அவனைக் கனிவுடன் பார்த்தாள்.

''டாக்டர் மணிவண்ணன் கார்தானே இது?'' புன்னகைத்தான்.

''ஆமாம்!'' என்று சொல்லிவிட்டு அவள் தன் கை விரல்களைப் பார்த்தாள். கன்னங்களும் காதுகளும் கன்று கொண்டு எரிகின்ற உணர்வில் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

''அப்போ அவர் உள்ளே போயிருக்கிறாரா? ஒரு சமயம் அப்பாவைப் பார்க்கத்தான் போயிருப்பார். நான் தான் தொலைபேசியில் அவரைக் காலையில் கூப்பிட்டுச் சொன்னேன். ஆமாம் நீங்கள்?'' என்றான் வியப்புடன்.

''நான் அவருடைய தங்கை'' தன்னைப் பற்றிச் சொல்லிக்கொள்ள வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு.

''டாக்டருக்கு இன்னமும் திருமணம் ஆகவில்லை என்று கேள்விப்பட்டேன். உங்களைப் பார்த்ததும்...'' முடிக்காது அவன் சிரித்து விட்டான். சிரிக்கும்போது ஏற்பட்ட மலர்ச்சியில் அவன் முன்னைவிட அழகாக அவளுக்குத் தென்பட்டான்.

''நீங்கள் யார்னு சொல்லலையே?'' கொஞ்சம் துணிவுடன் கேட்டுவிட்டான்.

''உங்களுக்குத் தெரியுமோ என்னவோ? கட்டட சாமான்கள் விற்பனை செய்யும் 'பிரகாசம் அண்டு பார்ட்னர்' என்கிற வியாபார நிறுவனத்தின் கூட்டாளியான பரந்தாமன் என்கிறவரின் மகன் நான். அப்பா கொஞ்ச நாளாக ரொம்ப நோய்வாய்ப்பட்டு இங்கே அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். நேற்று இரவு அவருக்குத் தூக்கம் இல்லாது இருமல் தொந்திரவு செய்துகொண்டு இருந்தது. அதனால் காலையில் முதலில் வந்து கவனிக்கும்படி டாக்டரைப் போனில் கேட்டுக்கொண்டேன். ஆமாம்! நான் உங்களைப் பார்த்து இருக்கிறேனே!'' அவன் வியப்புடன் புருவங்களை உயர்த்தித் தாடையைத் தடவிக் கொண்டு நின்றான்.

''இப்போ நினைவுக்கு வருகிறது. உங்கள் படத்தை ஏதோ ஒரு பத்திரிக்கையில் பார்த்த ஞாபகம். முந்தா நாள் வானொலியில் உங்கள் மெல்லிசைக் கச்சேரியிருந்தது. அப்பா கூட கேட்டு ரசித்தார். ரொம்ப நல்லா பாடறீங்களே! எங்கள் அபிமான மெல்லிசைப் பாடகி ரஜனி அவர்கள் மணிவண்ணன் சகோதரி என்பது இதுவரை தெரியாது போயிற்றே?'' உற்சாகமாக அவன் பேசினான்.

மகிழ்ந்து போய்விட்டாள் அவள். ''ரொம்பப் புகழ்கிறீர்களே?'' நாணம் கலந்த மெல்லிய குரலில் சொன்னாள்.



''பிறகு பார்க்கிறேன்'' கூறிவிட்டு நகர்ந்த அவன், கொஞ்ச தூரம் சென்றதும் திரும்பி காருக்கு வந்தான். அவள் அருகே குனிந்து தாழ்ந்த குரலில் சொன்னான்:

''நீங்கள் பாடிய பாடல்களில் ''குயிலே உனக்கு அனந்தகோடி நமஸ்காரம் குமரன் 'வரக் கூவுவாய்'' என்ற காம்போதி ராகத்துப் பாடல் எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அந்தப் பாட்டு இன்னமும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. என் பெயர் குமரன்...'' இளநகை செய்துவிட்டு அவன் வேகமாக அப்பால் சென்றுவிட்டான்.

வெகுநேரம் அவள் நெஞ்சு இன்பத்தைத் தாளாது பக்பக் என்று அடித்துக்கொண்டது.

அன்று கல்லூரியில் அவளுக்குப் பாடங்கள் மீதே நினைவு பதியவில்லை. அடிக்கடி அரும்பு மீசையும் குறும்புப் பார்வையுமாகக் குமரன் அவளது நினைவில் எழுந்து அவளது சிந்தனைகளை அலைபாயச் செய்தான்.

சில தினங்களுக்குப் பின்னர் ஒரு நாள் மாலை, மாதவி கடைக்குச் சென்றிருந்தாள். ரஜினி மட்டும் வேலைக்காரியுடன் வீட்டில் இருந்தாள். வாயிலில் அழைப்பு மணி ஒலித்தது. கதவைத் திறந்தபோது வெளியே குமரன் நின்றுகொண்டிருந்தான்.

''டாக்டர் இன்னமும் வீட்டிற்கு வரவில்லை போலிருக்கிறது'' விசாரித்தபடி உள்ளே வந்து ஒரு சோபாவில் சாய்ந்து கொண்டான்.

அம்மாவை நினைத்து அவளுக்குப் பயம், அதே சமயம் அவனைக் கண்டு மகிழ்ச்சி. இனம் விளங்கா உணர்விலே திண்டாடிப் போனாள்.

''அப்பாவிடம் உங்களைப் பற்றிச் சொன்னேன். அவர் இன்னமும் மருத்துவமனையில்தான் இருக்கிறார். உங்களை

நேரே காணவிரும்புகிறார். உங்கள் அண்ணனுடன் ஒருநாள் அவரை வந்து பார்த்து விட்டுப் போகவேண்டும். அதைக் கேட்கத்தான் வந்தேன்'' என்றான்.

அவளுக்கு என்ன பதில் அளிப்பது என்று விளங்கவில்லை. ''அண்ணனும் அம்மாவும் சரின்னு ஒப்புக் கொண்டால் கட்டாயம் அவரை வந்து பார்க்கிறேன்'' என்றாள் பொதுவாக.

சிறிது நேரம் அவன் இருந்து பேசிவிட்டு குளிர்பானம் அருந்திவிட்டுச் சென்றான்.

மணிவண்ணனிடம் முதலில் அவள் இதைப்பற்றிப் பேசினாள்.

''அம்மாவிடம் சொல்ல வேண்டாம். உடனே மறுப்புத் தெரிவிப்பாங்க. நான் இருக்கும்போது உனக்குப் பயம் ஏன்? பரந்தாமனுக்கு வயிற்றுவலி...பாவம் ரொம்பவும் துன்பப் படுகிறார். இப்பொழுதுதான் கொஞ்சம் குணமாகிக்கொண்டு வருகிறது. நோயாளி மனிதன் தன் அபிமானப் பாடகியைப் பார்க்க ஆசைப்படுகிறார். காலேஜ் போகும் வழியில் கொஞ்சநேரம் அவரை எட்டிப் பார்த்து விட்டுப் போ—அந்த மகிழ்ச்சியில் ஒருசமயம் அவர் உடல்நிலை விரைவில் குணம் அடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை'' என்றான் வேடிக்கையாக. அவளும் ஒப்புக் கொண்டாள்.

அடுத்தநாளே அவள் கல்லூரிக்குப் போகுமுன் அண்ணனுடன் அந்த மருத்துவமனைக்குள் சென்றாள். பெரியவரைப் பார்த்ததும் புரிந்துகொண்டாள். குமரன் சாயலில் தந்தையைக் கொண்டிருந்தான்.

''வாம்மா! குமரன் சொன்னான்...'' மகிழ்ச்சியுடன் வரவேற்றபடி அவர் எழுந்து நின்றபோது, நோயையும் மீறிய கம்பீரத் தோற்றம். வியப்போடு அவள் பார்த்தாள். அவரும் அவளை மிக்க ஆர்வத்துடன் கவனித்தார்.



பின்னர்தான் ஒருநாள் மணிவண்ணன் அந்தச் சந்திப்பின் உட்பொருளை விளக்கினான். கல்லூரிக்குப் போகும் வழியில் காரை நிறுத்திவிட்டு அவன் தங்கையைப் பார்த்து புன்னகைத்தான்.

''முதலில் உன் சம்மதத்தைத் தெரிந்த பிறகுதான் அம்மாவிடம் விவரமாகச் சொல்வதுன்னு இருக்கேன். பரந்தாமன் என்னோடு வெகுநேரம் நேற்றுப் பேசினார். அவர் மகன் குமரனுக்கு உன்னை மிகவும் பிடித்திருக்கிறதாம். உனக்கு இன்னமும் கல்யாணத்துக்கு வயதாகவில்லைன்னு சொன்னேன். அவர்கள் காத்திருக்க ஒப்புக் கொண்டிருக்காங்க...உன் விருப்பம்?''

அவள் பதில் அளிக்காது வெட்கத்துடன் காரின் உள்ளே கிடந்த பாயை வெறித்தாள். அண்ணன் புரிந்துகொண்டு விட்டான்.

அதற்குப்பின் பலமுறை அவள் பரந்தாமனைக் காண மருத்துவமனைக்குச் சென்றதுண்டு...பல தடவை குமரனை அங்கு சந்தித்ததுண்டு. பேசியதுண்டு...இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டு இருக்கப் பொழுது இல்லையே என்று ஏங்கியதும் உண்டு.

முதலில் அண்ணனுக்கும் நளினுக்கும் திருமணம்... பின்னர் அவளுக்கும் குமரனுக்கும் என்ற இனிய கனவுகளுடன் அவள் தனிப்பட்ட ஒரு கற்பனை உலகில் உலா வந்து கொண்டு இருந்தாள். மகனின் விருப்பத்திற்கு மாதவி இசையாது மறுத்து விட்டதைக் கேட்டு அவள் மிகவும் அதிர்ந்து போனாள்; மிரண்டுவிட்டாள். அண்ணனுக்கே ஒப்புதல் கொடுக்காத தாய் அவள் விருப்பத்தைக் கேட்டு இணங்கவா போகிறாள்?...மறுத்து விட்டால்?...ரஜனிக்குப் பல இரவுகள் உறக்கமேயில்லை.

அன்று மாலை வழக்கம்போல் அவளை அழைத்துக் கொண்டு காரில் புறப்பட்டான், மணிவண்ணன்.

முன்பெல்லாம் வழி நெடுகிலும் அவள் அண்ணனுடன் வாய் ஓயாது பேசிக்கொண்டு போவது வழக்கம். தாயின் கடும் உத்திரவைக் கேட்டு மனம் உடைந்து விட்டிருந்த அண்ணன் மீது அவளுக்கு மிக்க இரக்கம். காரில் பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்டிருந்தாள். வழக்கமாகப் போகும் சாலையில் இருந்து மணிவண்ணன் காரை வேறுபக்கம் திருப்புவதைக் கண்டு அவள் சற்று திகைத்துப் போனாள், அண்ணனுக்கு ஞாபகமறதியா?...

''இப்போ நாம் எங்கே அண்ணா போய்க்கொண்டு இருக்கிறோம்?'' ஜாடையாக நினைவுபடுத்தினாள்.

''இப்போ நாம் பரந்தாமனது கூட்டாளியான திரு பிரகாசம் அவர்களைப் பார்க்கப் போய்க்கொண்டு இருக்கிறோம். என் விருப்பத்தை ஏற்க அம்மா மறுத்துவிட்டாங்க, உன் விருப்பத்திற்கும் அந்தக்கதி வரக்கூடாதுன்னு ஒரு முன் ஏற்பாடு செய்யத்தான் அவரிடம்போய்க்கொண்டு இருக்கிறேன். பிரகாசமும், பரந்தாமனும் நெடுநாளைய நண்பர்களாம். கூட்டாக வியாபாரத்தை ஆரம்பித்து அடிமட்ட நிலையில் இருந்து முன்னுக்கு வந்தவர்கள், பரந்தாமனைப் போலவே கூட்டாளியும் மனைவியை இழந்தவர். பரந்தாமனுக்காவது ஒரே பிள்ளை குமரன் இருக்கிறான். பிரகாசத்திற்கு அவரது புத்தகங்களும்...அன்போடு அவர் வளர்க்கும் அல்சேஷியனுந்தான் துணை. பரந்தாமனைப் பார்க்க மருத்துவமனைக்கு அவர் வந்தபோது சந்தித்தேன். பார்த்த அளவிலே என் மனதிலே அவர்பால் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டு விட்டது. அன்போடு பேசினார். மிகவும் பிடித்துவிட்டது. குமரன் விஷயமாகப் பரந்தாமன் அவரிடம் சொல்லியிருக்கிறார். அதனால் அவர் உன்னைப் பார்க்க ஆவல் கொண்டு என்னிடம் தெரிவித்தார். அவ்வளவுதான்'' என்றான்.



''அண்ணா! எனக்குப் பயமா இருக்கிறது. ஒரு சமயம் அவருக்கு என்னைப் பிடிக்காது போய்விட்டால்?...'' கலவரத்துடன் கேட்டாள், தங்கை.

''அண்ணன் நான் எதுக்கு இருக்கேன்? உனக்கும் குமரனுக்கும் மணம் முடித்து வைக்க வேண்டியது என் பொறுப்பு. கவலையை விடு'' என்றான் மணிவண்ணன் உறுதியாக.

பூந்தமல்லியில் இருந்தது பிரகாசத்தின் பங்களா. பெரிய தோட்டத்திற்குள் இருந்த அழகான கட்டிடத்தை அவள் வியப்போடு பார்த்தாள். அவர்கள் வருவதை முன் கூட்டியே உணர்ந்த வேலையாள் ''அல்சேஷ''னைப் பிடித்துக்கட்டி வைத்திருந்தான். வெகு தொலைவில் இருந்த போதிலும் காரைக் கண்டதும் அது தொண்டைக் கிழியக் குரைத்துக் கொண்டு இருந்தது.

வராந்தாவைத் தாண்டி அவர்கள் அந்தப் பெரிய வரவேற்பு அறைக்குள் வந்து உட்கார்ந்தனர். தன்னைச் சுற்றிலும் திகைப்புடன் பார்த்துக்கொண்டு இருந்த அவள் பின்னால் காலடி ஓசை கேட்டுத் திரும்பினாள்.

வெள்ளை வெளேர் என்ற மல் ஜிப்பாவும் வேட்டியுமாக ஒரு காலை மெல்ல ஊன்றி நடந்துவந்த மனிதரை உற்றுப் பார்த்தாள். ஏறக்குறைய பரந்தாமனை ஒத்த வயது—பட்டை பட்டையாக வெளுத்து விட்ட முடி. கன்னக் கதுப்புகளிலே வயதின் மெல்லிய சுருக்கங்கள்-நரை கலந்த மீசை. கூர்மையான கண்கள்...ஏனோ அவரை கண்டு ரஜனி சிறிது மிரண்டு விட்டாள். எழுந்து கைகூப்பி வணங்கிவிட்டு உட்கார்ந்த அவள் நெஞ்சு வேகமாகப் பயத்தில் துடித்தது.

''உட்காருங்க டாக்டர்!'' என்று உபசரித்தபடியே ஓர் இருக்கையில் பிரகாசம் அமர்ந்து கொண்டார்.

''நீ ரொம்ப இனிமையாகப் பாடுகிறாய்...ரேடியோவில் நீ பாடியதை நானும் கேட்டேன்'' என்று கூறியபடி அவளைக் காலோடு தலைவரை ஏற இறங்கப் பார்த்தார்.

அதற்குள் வேலையாள் காப்பிக் கோப்பைகளுடன் அங்கே வந்தான்.

மணிவண்ணன் காப்பியைப் பருகிக்கொண்டே அவர் முகத்தைப் பார்த்தான். அவன் நெஞ்சம் நுனுக்குற்றது.

சற்றுமுன் சிரிப்பில் மலர்ந்து காணப்பட்ட அவருடைய முகம் சட்டென்று கறுத்திருந்தது-காரணம் அவனுக்கு மிக்க குழப்பமாக இருந்தது.

## 25

சில தினங்களில் பரந்தாமன் மருத்துவமனையிலிருந்து வீடு சென்று விட்டார். அதற்குப் பின்னர் சில நாளில் அவர் தம் மகனுடன் வியாபார சம்பந்தமாக வெளி நாட்டிற்கு நான்கு மாதம் பயணம் சென்றார். இந்தச் செய்தி ரஜனிக்கு மிக்க ஏமாற்றத்தைக் கொடுத்தது. அருமையாகத் தன் பங்களாவிற்கு அழைத்துப் பேசிய பிரகாசமும் தமது அபிப்பிராயத்தைக் கூறவேயில்லை. கோடை நாட்களை குளுமையாகக் கழிக்க அவர் தமது உதகை பங்களாவிற்கு போய்விட்டார்.

ரஜனிக்குத் தாள முடியாத துயரம்- அதை மறக்க இறுதித் தேர்வுப் படிப்பில் அதிகமாகக் கவனம் செலுத்தத் தொடங்கினாள். கோடை விடுமுறையின்போது அவள் தங்களது அண்ணாசாலை கடையில் தாயாருக்கு உதவியாக வேலை செய்து வந்தாள். வெளி நாட்டிற்குச் சென்றிருந்த குமரனிடம் இருந்து ஒரு சமயம் கடிதம் வரக்கூடும் என்று ஆவலுடன் நாட்களை எதிர் நோக்கியும் பயன் இருக்க வில்லை. அவள் வரை விஷயம் கிணற்றில்போட்ட கல்லாக சந்தடியின்றி அமுங்கிக் கிடந்தது.

விடுமுறை நாட்களும் வீணான எதிர்பார்ப்பில் சென்று மறைந்தன. மீண்டும் கல்லூரி திறக்கப்பட்டது. வழக்கம்



போல் அவள் நல்ல மதிப்பெண்களுடன் தேர்வில் வெற்றி பெற்றிருந்தாள். தாயின் ஆலோசனைப்படி பி. ஏ. வகுப்பில் பொருளாதாரப் பகுதியில் படிக்கச் சேர்ந்து விட்டாள்.

கல்லூரிக்குப் போவதிலும்- வீட்டிற்கு வந்ததும் படிப்பதிலும் உள்ளத்தை வாட்டிய கவலையை ஓரளவு அவள் மறந்து விட்டிருந்தாள். என்றாலும் இரவில் உறங்கும் நிமித்தம் படுக்கை மீது வந்து உட்கார்ந்த போதெல்லாம் குமரன் நினைவு நெஞ்சை வாட்டி வேதனை செய்தது. ஆமாம் குமரன் ஏன் அவளுக்கு ஒரு கடிதம்கூடப் போடாது மவுனமாக இருக்கிறான்? அவளுக்குப் புரியவேயில்லை.

ஒருநாள் காலை. காரை ஓட்டிக்கொண்டு சென்ற அண்ணன் முன்போலவே சாலையில் இருந்து விலகி வேறு திசையில் செல்வதைக் கண்டாள். என்னென்னவோ எதிர் பார்ப்பில் ஏங்கிக்கொண்டிருந்த அவள் நெஞ்சம் படபட வென்று துடித்துக்கொண்டது.

''அண்ணா! கல்லூரிக்கு இது சுற்று வழியாச்சே!'' நினைவுபடுத்தினாள்.

''நான் இப்போ எங்கே போய்க்கொண்டு இருக்கிறேன் என்பது உனக்குத் தெரியும். இல்லையா?'' கேலியாகக் கேட்ட அண்ணன், தங்கையின் முகத்தைப் பரிவுடன் பார்த்தான்.

''பிரகாசம் அவர்கள் ஊட்டியில் இருந்து திரும்பிவந்து விட்டார். நேற்று இரவு தொலைபேசியில் என்னிடம் பேசினார். உன்னை இன்று காலை பங்களாவுக்கு அழைத்து வரச்சொன்னார். என்னவோ பேச வேண்டுமாம்'' மணிவண்ணன் சொன்னான்.

''என்ன பேச வேண்டுமாம்?'' முகம் சிவக்க அவள் திகைத்தாள்.

''எனக்கென்ன தெரியும்? நண்பரின் வருங்கால மருமகளைப் பார்த்துப் பேச அவருக்கு ஆயிரம் இருக்கும்''

கேலி செய்தபடியே அவன் வேகமாக வண்டியை பிரகாசத்தின் பங்களாவை நோக்கி ஓட்டினான்.

'குமரன் எப்பொழுது திரும்பி வரப்போகிறாராம்! கேட்டீங்களா?' அண்ணனிடம் விசாரிக்க வேண்டும் போன்ற துடிப்பு அவளுக்கு. வெட்கத்துடன் வாளா இருந்து விட்டாள்.

பிரகாசத்தின் வீட்டு முன்புறத் தோட்டத்து நடைபாதையிலே வண்டி ஓடியபோது அவள் கவனித்தாள். அங்கிருந்த ஒரு பெரிய மரத்தடியில் போடப்பட்டு இருந்த பிரம்பு நாற்காலியில் அவர் அமர்ந்திருந்தார். அருகே வட்ட வடிவில் ஒருமேசை-அதன்மீது வேலையாள் காப்பிக் கெட்டிலையும் பலகாரத் தட்டுகளையும் வைத்துவிட்டுப் போயிருந்தான்.

வண்டியை விட்டு அவர்கள் இறங்கியதும் மலர்ந்த முகத்துடன் அவர் எழுந்து வந்து வரவேற்றார்.

''உங்களுக்காக காப்பி பலகாரம் சாப்பிடாமல் காத்துக்கொண்டிருக்கிறேன். இன்று முருகேசன் எனக்குப்பிடித்த பலகாரம் செய்திருக்கிறான். ஏனம்மா? உனக்கு இடியாப்பம் பிடிக்கும் இல்லையா?'' வேடிக்கையாகக் கேட்டபடி அவர்கள் பக்கம் தட்டுகளை நகர்த்திவிட்டு, அருகில் இருந்த இருக்கைகளில் அமரும்படி கையமர்த்தினார்.

மவுனமாக அவர்கள் சாப்பிட்டு முடித்தனர். வேலையாள் தட்டுகளை வந்து எடுத்துச் சென்றான். தனக்கு மருத்துவமனையில் கவனிக்க வேண்டிய அவசர வேலை ஒன்று இருப்பதாகச் சொல்லிக்கொண்டு மணிவண்ணன் எழுந்தான்.

''ரஜனி இங்கேயே கொஞ்ச நேரம் என்னோடு இருக்கட்டும். அவளுடன் சில முக்கிய விஷயங்கள் நான்



பேசவேண்டும். பின்னால் நானே என் காரில் அவளை காலேஜிற்கு அனுப்பி வைக்கிறேன். உனக்கு ஆட்சேபனை இல்லையே?'' கேட்டார் பிரகாசம்.

''இல்லை'' என்று தலையை ஆட்டிவிட்டு, மணிவண்ணன் தங்கையை அங்கேயே விட்டுவிட்டுக் கிளம்பினான்.

மேலும் மேலும் தன்னை ஊன்றிப் பார்த்த அந்த மனிதரைக் கண்டு உள்ளூர ரஜனிக்கு அச்சமாகத்தான் இருந்தது. ஆனாலும், துணிவுடன் உட்கார்ந்திருந்தாள்.

''தோட்டத்தையும், வீட்டையும் சுற்றிப் பார்த்து விட்டு பின்னர் பேசலாமா?'' எழுந்தார் பிரகாசம்.

அவள் சிறிது தயக்கத்துடன் அவரைத் தொடர்ந்தாள்.

தோட்டத்தில் இருந்த ஒவ்வொரு செடியையும் உற்சாகத்துடன் அவளுக்கு விவரித்துக் கொண்டு முன்னே சென்றார். பின்னர் தமது வீடு முழுவதையும் அவளுக்குச் சுற்றிக் காட்டினார்.

வீடு பெரியதாகவும் - அலங்காரமானதாகவும் - பிரமிப்பூட்டுவதாகவும் இருந்தது.

''இந்த வீட்டையும் இதில் உள்ளவற்றையும் நிர்வகிக்கிற திறமையும் தகுதியும் உடைய ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டு இருந்தோம். எனக்கும் பரந்தாமனுக்கும் இடையே வித்தியாசமே கிடையாது. திருமணத்துக்குப்பின் இந்த வீட்டைக் குமரனுக்குக் கொடுத்து, நுங்கம்பாக்கத்துச் சிறிய பங்களாவுக்குப் போய்விடத் தீர்மானித்து இருக்கிறேன். குமரன்மீது எனக்கு சொந்த மகன் போல பாசம். அவனும் ''பெரியப்பா'' என்று என் காலைச் சுற்றி வருவான். தங்கமான பிள்ளை. நான் முடிவு எடுக்கும் வரை நீ அந்தப் பெண்ணோடு கடிதம் மூலம் கூடத் தொடர்பு கொள்ளத் தேவையில்லை என்று உத்திரவிட்டேன். அதுக்குக் கட்டுப்பட்டு அவன் உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல்கூட ஊருக்குப் புறப்பட்டான். என் பேச்சிற்கு

அத்தனை மதிப்புக் கொடுப்பவன். எனக்கு உன்னை ரொம்பவும் பிடித்துவிட்டது. குமரனும் பரந்தாமனும் இன்னும் சில தினங்களில் திரும்பிவிடுவார்கள். அதற்குப்பின் உன் வீட்டவர்களைச் சந்தித்து விவரம் பேசலாம் என்று காத்திருக்கிறோம். ஆமாம், உனக்கு இப்போது என்ன வயது?'' வினவினார் அவர்.

''பதினேழு ஆகப் போகிறது'' என்றாள் அவள் தடுமாற்றத்துடன்.

''அதுக்கென்ன? நிச்சயம் செய்து கொண்டுவிட்டு ஒரு வருடம் காத்துக் கொண்டிருந்தால் போகிறது. கல்யாணத்திற்குப் பின்னரும் நீ மேலே படிக்கலாம் - தொடர்ந்து உன் மெல்லிசைக் கச்சேரிகளையும் நடத்தலாம். எங்களுக்குத் தடையே இல்லை'' சிரித்துக்கொண்டே அவளை மீண்டும் உற்றுப் பார்த்தார்.

வெட்கத்துடன் மவுனமாக பின்னால் நடந்து வந்து கொண்டு இருந்தாள் அவள். வாயில் வராந்தாவிற்கு வந்ததும் அவர் முழங்காலைப் பிடித்துக்கொண்டு ஒரு நாற்காலியில் அமர்ந்தார். ''வயதாகிவிட்டது. நடக்க முடியலை. முட்டிவலி...நீயும் உட்கார்'' உபசரித்தார்.

பார்வைக்குக் கடுமையானவராகத் தோன்றினாலும் முடிவில் அவர்களது காதலுக்கு ஒப்புதல் கொடுத்துவிட்டாரே என்ற மகிழ்ச்சியில் முகம் சிவந்து நெஞ்சு துடிக்க அவள் சற்று அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

'நீ உண்மையை என்னிடம் தாராளமாகச் சொல்லலாம் மறைக்கவே தேவையில்லை. அதனால்தான் உன்னுடன் தனியே பேசவேணுமென்று இங்கே அழைத்தேன்'' அவர் ஆரம்பித்ததைக் கேட்டு அவள் அதிர்ச்சியடைந்து போனாள். திகைப்புடன் விழித்தாள்.



''மணிவண்ணன் ஓரளவுக்குச் சொன்னான்-விவரமாக நான் கேட்கவில்லை. உன் தந்தை இறந்து ரொம்ப காலமாகிறதோ?''

உடல் முழுவதும் சூடாகப் பரவிய திகில் உணர்வு முகத்தையும் எரித்தது. கைக்குட்டையை எடுத்து தன் கன்னங்களை அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

''அவர் இறக்கவில்லை. உயிரோடு இருப்பதாக எங்க அம்மா இன்னமும் நம்புகிறாங்க. ஏதோ மனத்தாங்கல் காரணமாக வீட்டைவிட்டுப் போனவர் போனவரே...'' முடிக்காது அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

''உனக்கு உன் தந்தையை ஞாபகம் இருக்கா'' கேட்டுவிட்டு அவர் எழுந்து வராந்தா மீது அமைதியின்றி மேலும் கீழும் உலாவத் தொடங்கினார்.

அவளுக்குப் புரிந்துவிட்டது. லெவம்பர்கள் மாதவியைப் பற்றி பழிச்சொற்கள் பேசுகிறார்கள் என்பதை மணிவண்ணன் சொல்ல, அவள் பலமுறை கேட்டு மனம் வெதும்பிப் போயிருந்தாள் - அதனால்தான் இப்படி ஒரு கேள்வி அவரிடம் இருந்து வந்திருக்க வேண்டும்.

எக்காரணம் கொண்டும் அவர் மாதவியைப் பற்றி தவறாக நினைக்கக் கூடாது என்ற ஆதங்கம்...

பொங்கிப் புரண்டு எழுந்த பல்வேறு உணர்வில் அவள் கண்களில் லேசாக நீர் முட்டிக்கொண்டு வந்தது-உதடுகள் துடித்தன. உடல் முழுவதும் பதறியது.

''நீ சின்னப் பிள்ளையாக இருந்திருப்பாய் - அதனால்தான் நினைவில்லை. இல்லையா?'' அவர் கேட்டார்.

''நீங்க கேட்குமுன் நானே சொல்லிவிடத்தான் இருந்தேன். எதையும் மறைக்க வேண்டும் என்ற எண்ணமே எனக்குக் கிடையாது. பூபதி அழகு மாளிகையின் சொந்தக்காரியான மாதவியம்மா என் சொந்தத் தாய் இல்லை.

மணிவண்ணன்தான் அவர்களின் பிள்ளை. நான் அவங்களுடைய வளர்ப்பு மகள். நான் பிறந்தவுடனேயே என் தாயார் காலமாகி விட்டாங்க.''

''அட பாவமே. அப்படியா சங்கதி...உன் தந்தை உயிரோடு இருக்கிறார் அல்லவா?...''

''அவர் யார் என்பதே எங்களுக்குத் தெரியாது. என் தாய் ஒருவரை நம்பினாங்க. திருமணமாகும் முன் இவங்களுக்கு நான் பிறந்துவிட்டேன். விளங்கச் சொன்னால் நான் ஓர் அவமானச் சின்னம்'' முடிப்பதற்குள் அவள் குரல் தழதழத்தது.

''இதைக் கேட்க எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கும்மா...'' அனுதாபப்பட்டார் பிரகாசம்.

''உண்மை கசப்பானது. எனக்குத் தெரியும். ஆரம்பத்திலே இந்த உண்மை என்னை அதிர வைத்தது. இப்போது அந்த நிலையை என் மனம் ஏற்றுக்கொண்டு விட்டது. அதற்காக என் தாயின் மேல் எனக்குக் கோபமோ - சமூகத்தின்மேல் மனக் கசப்போ கிடையாது. ஏன் என்றால் எனக்குக் குறையே தெரியாத வகையில் என் வளர்ப்புத் தாய் என்னை ஆசையும் பாசமுமாக வளர்த்து ஆளாக்கி விட்டாங்க...''

''அப்படியா, சந்தோஷம். உன் தாய் யார் என்றாவது தெரியுமா?''

''என் தாயார், என் பாட்டன், என் குடும்பம் எல்லாவற்றையும் பற்றி விபரமாகத் தெரியும். பாட்டு வாத்தியார் சரவணன் என்கிறவரை இன்னமும் தெரிஞ்சவங்க சிலர் நகரத்திலே இருக்கிறாங்க. அவருடைய ஒரே மகள் கௌரி தான் என் தாய். என் தாய்க்கு நான் பிறந்து அவமானத்தைத் தேடிக் கொடுத்தேன். ஆனால், அவங்க தங்களது பாரம்பரை சொத்தான சங்கீத அறிவை எனக்குக்



கொடுத்துப் போயிருக்காங்க. பாடவேண்டும் என்கிற ஆசை எனக்கு இயற்கையாகவே சிறுவயதிலேயே ஏற்பட்டு விட்டது. என் வளர்ப்புத் தாய் என் ஆசையை நிறைவேத்தி வச்சாங்க. அவங்களுக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டு இருக்கேன்...'' படபட என்று பேசி முடித்துவிட்டு துணிவுடன் அவர் முகத்தைப் பார்த்தாள். 'இன்னும் ஏதாவது தெரிய வேண்டுமா?' என்பது போலிருந்தது அந்தப் பார்வை.

மனம் நெகிழ்ந்து போனார் பிரகாசம். வராந்தாமீது படிந்த காலை-வெயில் மேலே விழ, எதிரே உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணை கண்கொட்டாது வியப்புடன் பார்த்தார்.

தங்கச் சிலைபோல் பருவ எழிலில் ரஜனி மின்னிக் கொண்டிருந்தாள்.

பார்க்க மட்டும் அவள் பேரழகியல்ல— குணத்திலும் உயர்ந்தவளாக இருக்கிறாளே? அவருக்கு ஆச்சரியம். ''எங்கள் குமரன் கொடுத்து வைத்தவன். நாங்கள் எல்லோருமே பாக்கியசாலிகள் அம்மா. கபடம் இல்லாத உன் பேச்சு என் மனதைத் தொட்டு விட்டதம்மா...உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சுப்போச்சு...'' புன்னகைத்த பிரகாசம் வேலையாளை கைதட்டி அழைத்தார்.

''இந்தக் குழந்தைக்கு சாப்பிட சூடாகக் கொஞ்சம் ஓவல் எடுத்துக்கொண்டு வா சீக்கிரம்— அப்படியே நம்ம டிரைவரையும் வரச்சொல்'' என்று உத்தரவிட்டார்.

அன்று மாலை ரஜனி கல்லூரியில் இருந்து திரும்பிய போது வாயில் பக்கம் நின்று கொண்டிருந்த தாயின் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனாள். வழக்கம்இல்லாத வழக்கமாக மாதவியின் முகம் கடுகடுவென்றிருந்தது.

''முகத்தைக் கழுவிக்கொண்டு, காலேஜ் உடுப்புகளை மாத்திக்கொண்டு, டிபன் சாப்பிட்டதும் என் அறைக்கு வா...'' உத்தரவிட்டு அவள் வேகமாக உள்ளே சென்று விட்டாள்.

மகளைக் கண்டதும் அறைக் கதவைச் சாத்திவிட்டு படுக்கை மீது வந்து உட்கார்ந்து கொண்டாள் மாதவி.

''அம்மா! எதுக்குக் கூப்பிட்டீங்க?...'' தயக்கத்துடன் விழித்தபடி நின்ற ரஜனியை எரித்து விடுகிறவள்போல் உறுத்துப் பார்த்தாள்.

''காலையில் நீ எங்கே போயிருந்தே? பீரோ சாவியைக் காணலையின்னு உன்னைக் கேட்க காலேஜிற்கு நான் வந்திருந்தேன். உன் தோழி சுபா வராந்தாவிலே நின்று கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் 'ஏன் அம்மா ரஜனி காலையிலே வகுப்புக்கு வரவில்லை'ன்னு கேட்டுவிட்டாள். நல்ல வேளை, என் மானம் பிழைத்தது. சட்டென்று சமாளித்துக்கொண்டு உனக்கு உடம்பு சுகமில்லைன்னு சொல்லிவிட்டு வேகமாக வந்து விட்டேன். நீ எங்கேயோ ஊர் சுற்றிக்கொண்டிருந்த உண்மை அவர்களுக்கெல்லாம் தெரிந்து விட்டால் நம் குடும்ப கவுரவம் என்ன ஆகிறது? எத்தனை நாளாக இந்தக் காரியம் செய்கிறாய்? உண்மையைச் சொல்லு...'' கோபமும் ஆத்திரமும்பொங்கிய குரலில் அதட்டினாள்.

ரஜனி நடுங்கிப் போனாள். அண்ணனது யோசனைப் படியே அவள் இதுவரை குமரனைப் பற்றித் தன் தாயிடம் வாயைத் திறக்கவேயில்லை. ஆனால், இப்பொழுது சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது.

''பிரகாசம் என்பவர் வீட்டுக்கு அண்ணா கூட்டிக் கொண்டு போனார்.''

''யாரந்தப் பிரகாசம்?''



''பரந்தாமன் என்கிற நோயாளிக்கு மருத்துவமனையில் சிகிச்சையளித்தபோது அண்ணாவுக்கு அவர் நண்பரான பிரகாசம் அறிமுகமானார்.''

''பரவாயில்லை! அண்ணனுக்கும் தங்கைக்கும் வெளியிலே அம்மாவுக்குத் தெரியாமல் புதுச் சிநேகிதர்கள் முளைசுட்டாங்க! அதுக்காக காலேஜ் படிப்பை உதறிவிட்டு வரச் சொன்னானா அண்ணன்?'' கோபத்துடன் விழித்துப் பார்த்தாள், மாதவி.

''பரந்தாமனின் மகன் குமரன் என்னை மணக்கவிரும்புகிறார். எனக்கும் விருப்பம். பிரகாசம் நண்பர் என்ற முறையில் என்னிடம் சில விஷயங்கள் கேட்க விரும்பினார்..'' பேச முடியாது திகிலுடன் குழறினாள் ரஜனி.

கட்டுக்கொள்ள இயலாத கோபத்துடன் மகள் அருகே எழுந்து வந்தாள் மாதவி. ''பேஷ்! என்னைக் கேட்காமல் தங்கைக்கு மணமுடிக்க அண்ணன் திட்டமிட்டு விட்டானா? அவனது விருப்பத்துக்கு வளைந்து கொடுக்கவில்லை என்பதற்காக என்மேல் அவன் பழிதீர்த்துக்கிறான். இதுக்கு நீயும் உடந்தை. உனக்காக நான் பட்டபாட்டுக்கு இதுதான் பலன். இருக்கிறதெல்லாம் போதாதுன்னு உன்னாலே வேற எனக்குப் பழியா?-பாவிப் பெண்ணே! என்ன துணிச்சல் உனக்கு...'' ஆத்திரத்தை அடக்கமாட்டாது கையை ஓங்கி மகளின் கன்னத்திலே ஓர் அறை விட்டாள்.

''அம்மா!'' என்று அலறிய ரஜனி, வேதனையில் சுருண்டு ஆதரவுக்கு சுவரைப் பிடித்துக் கொண்டு விம்மினாள். ''ஒருக்காலும் உங்களுக்கு அவமானத்தை நான் தேடித்தர மாட்டேன் அம்மா. என் உயிர் போனாலும் போகட்டும்னு உண்மையைத்தான் சொல்லுவேன். அவர் கேட்டதுக்கு உண்மையைத்தான் சொன்னேன்'' விக்கி விக்கி அழுதாள்.

''என்ன உண்மையைச் சொல்லிவிட்டே...'' அதட்டியபடி கையை மீண்டும் ஓங்கிக்கொண்டு அருகில் வந்தாள் மாதவி.

"உங்களைப்பத்தி தவறாக நினைப்பாருனு பயந்து நீங்க என் வளர்ப்புத் தாய் என்கிற உண்மையைச் சொல்லி விட்டேன். ஆமாம், அம்மா எனக்கு இதை அண்ணாதான் சொன்னார். கோவிக்காதிங்க அம்மா... என்னைப் பொறுத்தவரை நீங்கதான்என் தாய்-மன்னிச்சுக்கோங்க..."

குலுங்கக் குலுங்க அழுதபடி அவள் பாதங்களில் விழுந்து கெட்டியாகப் பற்றிக்கொண்டு விட்டாள் ரஜனி.

மின் விசையில் தாக்குண்ட அதிர்ச்சியில் பேச்சு இழந்து செயல் இழந்து மரமாக நின்று விட்டாள் மாதவி.

## 26

அன்று பகல் மாதவி அண்ணாசாலையில் இருந்த தங்கள் கடையைக் கவனிக்கப் புறப்பட்டு இருந்தாள். கடை முழுவதையும் ஒரு முறை சுற்றிப் பார்வையிட்டு விட்டு களைப்புடன் தனது அறைக்குள் வந்து அமர்ந்துகொண்டாள். அது "குளுகுளு" அறை. அப்படியும் முகத்திலே குப்பென்று வியர்வை துளிர்த்து. கழுத்தின்மீது வழிவதை உணர்ந்தாள்.

முன்போல் ஓயாது உழைக்க அவளுக்கு உடலில் வலு இருக்கவில்லை. அதற்குக் காரணம் அவளுக்குத் தெரியும். பல நாளாக மணிவண்ணன் தாயிடம் அதிகம் பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்டான். அதைப் பாராட்டாதவள் போல் அவள் வெளிப்பார்வைக்குத் தென்பட்டாலும், உள்ளூர வேதனையில் பொடிப் பொடியாகிக் கொண்டிருந்தாள்.

கைகுட்டையை எடுக்க பையைத் திறந்த பொழுது அவள் எப்பொழுதும் பத்திரமாக வைத்திருக்கும் சிறு தோத்திரப் புத்தகம் வெளியே வந்து விழுந்தது. கையில் எடுத்தாள். முதல்பக்கத்தில் அட்டை மடிப்புக்குள் செருகப்



பட்டு இருந்த மணிவண்ணனின் புகைப்படம் நழுவி மேசை மீது விழுந்தது. வரிசையாகப் பற்கள் மின்னின. நெற்றிமீது சுருண்ட முடி புரள பத்து வயதுச் சிறுவனாக அதில் அவன் சிரித்துக் கொண்டு நின்றான். மாதவியின் கண்கள் கலங்கின. நெஞ்சை கனமாக வேதனை அழுத்தியது.

மழை, இடி, வெய்யில் என்று எதையும் பாராது வறுமையுடன் போராடி அவனை ஆளாக்கியதற்கு இது தானா பலன்? தன்னுள் எழுந்த கேள்வியின் வேதனையைத் தாள முடியாது எழுந்து அவள் அறைக்குள்ளே மெல்ல நடந்தாள். அருகே இருந்த ஜன்னல் வழியே தெருவை எட்டிப் பார்த்தபடி நின்றாள்.

அப்போது சாலையில் வேகமாக ஒரு பெரிய கார் வந்து கொண்டு இருந்தது. அவர்கள் கடையை நெருங்கியதும் நின்றது. காரில் இருந்து இறங்கிய பெண்மணியைக் கண்டதும் மின்விசையில் தாக்குண்டவள் போல் அதிர்ச்சியுடன் திரும்பித் தன் இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டாள், மாதவி.

குளிர்ந்த நீர் நிறைந்த கண்ணாடிக் கூஜாவைத் தம்ளருடன் சுமந்து கொண்டு வந்த ஆபீஸ் பையன் உள்ளே நுழைந்தான். கூஜாவை மேசைமீது வைத்தவன், ஒரு சிறு துண்டுக் கடிதத்தையும் வைத்துவிட்டு நகர்ந்தான். தம்ளரில் நீரை நிரப்பிக் குடிக்கக் கையில் எடுத்த மாதவி அசட்டையாக இடக்கையால் அந்தக் கடிதத் துண்டைப் பிரித்துப் பார்த்தாள். மீண்டும் அதிர்ச்சி.

"திருமதி பரிமளா சந்திரசேகரன் தங்களைக் காண விரும்புகிறார். வெளி அறையில் காத்திருக்கிறார்கள்" என்று ஆபீஸ் கணக்கர் ஒரு சிறு குறிப்பை அனுப்பி இருந்தார்.

வேகமாகத் தண்ணீரைப் பருகி விட்டுத் தம்ளரை வைத்தவளுக்கு மூச்சு முட்டியது.

கோபத்துடன் அழைப்பு மணியை பலமாக விரல்களால் அழுத்தினாள். கதவைத் தள்ளித் திறந்து கொண்டு பையன் எட்டிப் பார்த்தான்.

''அந்த அம்மாளை வரச்சொல்...'' கூறிவிட்டு மேசை மேல் இருந்த பைல்களில் ஒன்றை எடுத்துப் புரட்டத் தொடங்கினாள். நெஞ்சிலே ஒரு படபடப்பு.

முகத்திலே வேகமாக மோதிய செண்டின் மணமும் புடவையின் சரசரப்பும் அவளை நிமிர்ந்து பார்க்கச் செய்தன. ''இப்படி நான் உட்காரலாமா?'' ஏளனமாக வினவியபடி எதிரே கிடந்த இருக்கையில் பரிமளா அமர்ந்து கொண்டாள். வழக்கம்போல் அவள் முகத்தில் கனமான ஒப்பனை. உயரத் தூக்கிக் கட்டிக் கொண்டிருந்த கொண்டையில் ஓர் ஒற்றை ரோஜா மலர். இடையிலே துவண்ட அமெரிக்கன் ஜார்ஜெட்டின் தலைப்பை விசிறிக் கொண்டு அவள் மாதவியை உறுத்துப் பார்த்தாள்.

பொங்கி எழுந்த கோபத்தை மாதவி கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''ஏதாவது எங்கள் கடையில் வாங்க வந்தீங்களா, அக்கா. என்ன வேணும்னு சொல்லுங்கள். நான் இங்கேயே எடுத்து வரும்படிசொல்றேன்...அதுக்கு முன்னாடி கொஞ்சம் காப்பி ஏதாவது தாகத்துக்கு?...'' உபசாரமாக வினவினாள்.

''எனக்கு அழகு சாதனப் பொருள்கள் ஏதாவது வேணும்னா உன் கடைக்கு வரத் தேவையில்லை. வேண்டியதை பாரிசில் இருந்து தருவித்துக்கொள்ள முடியும். அனுப்பி வைக்க நண்பர்கள் அங்கே இருக்கிறார்கள். உன்னால் என் வீட்டில் ஒரு பிரச்னை. அதைத் தீர்த்துக் கட்டிவிட்டுப் போகத்தான் வந்தேன். அத்தோட ரொம்ப நாளா உன்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டிய ஒரு சந்தேகமும் இருக்கு...?'' என்றாள் பரிமளா காரமாக.



உதட்டைக் கடித்துக்கொண்டு மாதவி ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள். ''நளினியைப் பற்றிய பிரச்சினை தானே?'' அசட்டையாகக் கேட்டாள்.

''கெட்டிக்காரி! எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாய், இல்லையா? எங்களோடு தொடர்பு வைத்துக் கொள்வதில் உனக்குத்தான் எத்தனை துடிப்பு?''

''உங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் வீட்டின் தொடர்பு எங்களுக்கு எதற்குன்னு எப்பவோ நளினியைப் பற்றிய நினைவை உதறி விட்டாச்சே. அதைப் பற்றிப் பேச என்ன இருக்கு?'' மாதவியும் சூடாகக் கேட்டாள்.

''உன் மகனுக்கு வேண்டாம். ஆனால், உனக்கு என் வீட்டுத் தொடர்பு நிரந்தரமாக வேண்டும் இல்லையா? உன் சங்கதி எனக்குத் தெரியும். ஒளிக்க வேண்டாம்.''

''என்ன சொல்றீங்க அக்கா?''

''புரியும்படி சொல்லட்டுமா! என் கணவர் சந்திரனுக்கும் உனக்கும் நீண்ட நாளா தொடர்பு உண்டு என்பது எனக்குத் தெரியும்.''

''அக்கா! இது வீண்பழி! கண்டபடி பேசாதீங்க. பாவம்.''

''பெரிய அருந்ததி! உன்னையா எனக்குத் தெரியாது. கட்டின புருஷனைக் கல்போல வச்சுக்கொண்டு என் கணவனை உன் சாகசத்தால் எப்படிச் சுண்டி இழுத்துக்கொண்டிருந்தே? அவர் உன்னைப் பார்க்க அந்தக் குக்கிராமத்துக்கு காரில் ஓடிவந்த விஷயமும் எனக்குத் தெரியும். என் தந்தை போட்ட பிச்சையில் வளர்ந்தவள் நீ. என் வாழ்க்கைக்கே உலை வச்சிட்டியே. நன்றி கெட்ட நாகப் பாம்பு! உன்னைப் போல ஒரு துரோகியை இந்த உலகம் முழுவதும் தேடினாலும் கிடைக்காது...''

''நிறுத்துங்க!'' மாதவி கட்டுக்கடங்காத கோபத்தில் சீறினாள். ''வாயில் வந்தபடி இமிறாகப் பேசுறீங்க. அது உங்களது சுபாவம். எதிர்த்துப் பேசாவிட்டால் ரொம்ப ஏறிக்கொண்டு போவீங்க. உண்மையிலே துரோகம் செஞ்சவங்க நீங்கதான். அந்த உண்மை உங்களுக்குத் தெரியுமா?''

''என்ன உளறுகிறே?''

''உளரவில்லை. உண்மையைச் சொல்றேன். போகட்டும்னு நான் மறந்துவிட முயற்சித்தாலும், நீங்க விடமாட்டேன் என்கிறீங்க. விஷயம் தெரிஞ்சு வேதனைப்படபோறீங்க. என்னைப் பொறுத்தவரை அது என் மனசில் இருந்து உதறி எறியப்பட்ட ஒரு கெட்ட கனவு. உங்களுக்குத் தெரியுமா? சந்திரன் உங்களை விரும்பி மணக்க சம்மதிக்குமுன் என்னை விரும்பி திருமணம் செய்து கொள்வதாக வாக்குக் கொடுத்திருந்தார்...''

''பொய்! நான் நம்பமாட்டேன்.''

''நம்பும்படியாக அவர் எழுதின கடிதங்களை உங்களுக்குக் காட்டினால்?''...

திடுக்கிட்டுப் போன பரிமளா வெட்டி விடுவதுபோல் அவளை வெறித்தாள்.

''நானும் அந்தச் சமயம் அவரை விரும்பினேன். அதை இப்போ சொல்லிக் கொள்ள எனக்கு அச்சம் ஒன்றுமில்லை. கபடமற்ற சின்னஞ்சிறு வயது. உங்கள் வீட்டில் அண்டிப் பிழைத்துக் கொண்டிருந்த அனாதை நான். அப்போது அன்பான வார்த்தைகள் சொல்ல எனக்கு யாரும் கிடையாது. சந்திரன் என்னிடம் இனிமையாக பேசினார். காதலிப்பதாகச் சொன்னார். மயங்கினேன். ஆனால், விரைவில் அவரது வஞ்சகம் வெளியாகி விட்டது. பணத்திற்கும் அந்தஸ்திற்கும் அடிமையாகி ஏழைப் பெண் என்று என்னை உதறிவிட்டார். முதலில் மனத்திற்கு பெரும் அதிர்ச்சியாக



இருந்தது. ஆனால், இன்று நினைத்துப் பார்க்கும்போது ஒரு பெரிய ஆபத்தில் இருந்து தப்பினேனே என்ற மகிழ்ச்சி. மன நிம்மதி எனக்கு.''

''நீ சொல்கிறதெல்லாம் உண்மை என்பதற்கு ஆதாரம்?''

மாதவி லேசாகச் சிரித்தாள். ''சந்திரன் அப்போது எனக்கு எழுதின சில கடிதங்கள் இன்னமும் கைவசம் இருக்கின்றன. அதை அமர காவியங்கள்னு நான் பத்திரப் படுத்தி வைக்கலை. மனம் உடைந்து நான் துக்கத்திலே மூழ்கியிருந்த அந்தக் காலத்தில் பாட்டு வாத்தியார் சரவணன் தான் ஆறுதல்சொல்லி பலவகையிலும் உதவினார். அவரிடம் இந்தக் கடிதங்களைக் கொடுத்து இருந்தேன். ஒரு சமயம் தேவைப்படும் என்று உத்தேசித்தோ என்னவோ அவர் தான் இருக்கும்வரை பத்திரப்படுத்தி வைத்திருந்தார் அவர் போனபின் அவர் மகள் கடிதங்களை என்னிடம் கொண்டுவந்து கொடுத்தாள். ஒரு காலத்தில் இவை எனக்குப் பெரும் பொக்கிஷமாகத் தோன்றின. உண்மை. இன்று? பழைய குப்பைக்குச் சமம்!'' மாதவி அலட்சியமாகச் சிரித்தாள்.

பரிமளா ஏதோ கேட்க முயற்சித்தாள். அதற்குள் மாதவி, ''குப்பையை ஏன் இன்றும் பாதுகாத்து வைச்சிருக்கிறாய் என்றுதானே கேக்கறீங்க? உங்கள் அருமைக் கணவர் உங்களை மணந்து கொண்டும் மன அமைதியில்லாமல் என்னிடம் வந்து அன்பு வார்த்தைகள் பேசி துன்புறுத்திக் கொண்டு இருந்தார் தொடர்ந்து என்னை வாதனை செய்தால் இந்தக் கடிதங்களை உங்களிடம் கொடுத்து உண்மையைச் சொல்லி அவரது விபரீதப் போக்கிற்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் என்ற நினைப்போடு பத்திரப்படுத்தி வச்சிருந்தேன்-பார்க்கணுமா சொல்லுங்க?...'' என்றவள், விர் என எழுந்து அறைக்குள் இருந்த இரும்புப் பீரோலைவத் திறந்து கள்ள அறைக்குள்

கையை விட்டு பழுப்புநிற காகித உறைஒன்றை எடுத்தாள். அதில் இருந்த சில கடிதங்களை உருவி மேஜைமீது அவள் முன் அசட்டையாகப் போட்டாள்.

''ஒரு காலத்தில் இவற்றை யாராவது பார்த்துவிடப் போகிறாங்களோ என்று பயந்தேன். இப்போது இவை எனக்கு தூசிக்குச் சமம்...'' சிரித்தாள் கோபத்துடன் மாதவி.

அந்தக் கடிதங்களை எடுத்துப் பிரித்து மேலெழுந்த வாரியாகப் பார்த்ததும் பரிமளாவுக்கு விளங்கிவிட்டது. சந்திரனின் காதல் கடிதங்கள் அவை. அவளை மணக்கு முன்பே வேலைக்காரியாக வாழ்ந்த மாதவிமேல் அவனுக்கு அன்பு இருந்தது. இதை பரிமளாவால் ஏற்கவோ தாங்கிக் கொள்ளவோ இயலவில்லை. நெஞ்சே வெடித்து விடும் போல் வேதனையும் ஆத்திரமும் பொங்கி எழ, அவள் இருக்கையில் இருந்து துள்ளி எழுந்தாள்.

''இவற்றை நீ என்னிடம் காட்டினதினால் மிகவும் நேர்மையானவள் என்ற எண்ணமோ? உன் கணவன் ஊரை விட்டுப் போனபின் ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாய் நீ. உன்னைத் தெரியாதா எனக்கு?'' சினத்தினால் வெடித்தாள்.

பதை பதைத்துப் போன மாதவிக்கும் கோபம் பொங்கிக்கொண்டுதான் வந்தது. சிரமத்துடன் கட்டுப்படுத்திக் கொண்டாள். ''அது என் சொந்த விஷயம். நான் நல்லவளோ கெட்டவளோ அதுவும் என்வரைக்கும். உங்கள் வாழ்க்கையில் என் நிழல்கூடப் பட்டதில்லை. அதனால் நீங்கள் அனாவசியமாக என் விஷயத்தில் தலையிடக் கூடாது, எச்சரிக்கிறேன்'' கோபமாக மேஜை மீது இருந்த அழைப்பு மணியை அழுத்தினாள்.

''கூப்பிட்டீங்களா அம்மா?...'' ஆபீஸ் பையன் தலையை நீட்டினான்.

பரிமளாவுக்குப் புரிந்து விட்டது. அவமானத்திலே அவள் ஆடிப்போனாள்.



தன் கணவன் ஆரம்பத்தில் இருந்து செய்து விட்டிருந்த துரோகத்தை நினைத்து அவள் அதிர்ந்து போய் விட்டிருந்தாள். அட்டகாசமான வார்த்தைகள் அடங்கிவிட்டன. ஆத்திரமும் அழுகையும் பொத்துக்கொண்டு வந்தன.

''நான் உன்னை எச்சரிக்கிறேன். பண ஆசைகொண்டு நளினியை உன் மருமகள் ஆக்கிக்கொள்ளத் திட்டமிட்டாயோ நான் பொல்லாதவளாகி விடுவேன்'' சீறினாள், பரிமளா.

''போதும் அக்கா—பேசாதீங்க. உங்க பணம் இங்கே யாருக்கு வேணும்? அந்த மாதிரி எண்ணம் எனக்குக் கிடையாது. இன்னொரு முறை வம்புக் கதைகளுடன் இங்கே வந்தீங்களானால் நானும் மகா பொல்லாதவளாக மாறி விடுவேன். நினைவு இருக்கட்டும். உங்கவீட்டு அடுப்படியிலே புழுங்கிக் கிடந்த மாதவி அல்ல, நான் இப்போது. அதுவும் நினைவு இருக்கட்டும்.''

விடுக்கென்று கதவைத் தள்ளிக்கொண்டு வெளியே சென்று விட்டாள், மாதவி.

அதற்குமேல் பரிமளா அங்கே நிற்பதில் பயன்?

# 27

ஒரு வார காலமாக மாதவி எங்குமே போகாது வீட்டிலேயே படுத்துவிட்டாள். இரண்டு நாள் அடித்த காய்ச்சலில் அவள் உடல் மிகவும் நலிந்து விட்டிருந்தது.

மணிவண்ணன் தாயைக் கருத்துடன் கவனித்தான். ஆனால், தாய்க்கும் மகனுக்கும் இடையே அறுந்து கிடந்த பேச்சுத் தொடர்பு அதே நிலையில்தான் இருந்தது.

சில மாதம் முன்னர்தான் அறிமுகமானவள் நளினி. அவனுக்காக கண்ணின் கருமணியாக வளர்த்து ஆளாக்கிய

தாயின் உணர்வுகளை மதிக்க மறுத்துவிட்டானே மகன் என்ற அதிர்ச்சி அவளுக்குத் தாங்க முடியவில்லை.

நீண்ட தூரம் நடந்து அலுத்து ஓய்ந்து விழுந்துவிட்ட பயணி போல் உணர்வுகள் தோய்ந்து உற்சாகமின்றி வாழ்க்கை மீதே வெறுப்புத் தட்டி படுத்துக் கிடந்தாள். யாருக்காக உழைக்க வேண்டும்? இனி எதற்காகப் பாடுபட வேண்டும் என்று உள்ளத்திலே ஓர் அசட்டை - கசப்பு.

இவ்வளவு நாளும் இல்லாது இப்போது அவள் தன் கணவனது செய்கையை வேறு ஒரு கோணத்தில் இருந்து ஆராய்ந்து மனம் குமைந்து போனாள். தீர விசாரிக்காது அவசரப்பட்டு முடிவு எடுத்து- வறுமையிலும் தனிமையிலும் அவளைத் தவிக்கவிட்டுப் போனாரே...என்ன கொடுமை. அதை எண்ணி இப்போது மனம் வெதும்பினாள்.

நினைவு தெரிந்த நாளில் இருந்து அவள் வாழ்க்கையில் எத்தனையோ இடர்கள். இனியாவது மகன்மூலம் சுகம் பெறலாம் எனக் கனவு கண்டுகொண்டு இருந்த அவளது ஆசை நிராசையாகிவிட்ட ஏமாற்றத்தைத் தாளமுடியாது துவண்டு போய்விட்டாள்.

உறக்கத்தை வெறுத்து—உணவை ஒதுக்கி - வாழக்கூட பிடிக்காது மனம் தளர்ந்த நிலையில் அவள் இருந்தாள்.

அன்றுகாலை, கல்லூரிக்குப் புறப்படுமுன் ரஜனி அறைக்குள் வந்து படுக்கையருகே நின்றாள்.

''அம்மா, கொஞ்சம் சூடா பால் ஒரு வாய் சாப்பிடுங்கோ. பட்டினிகிடப்பது உங்க உடம்புக்கு ஆகாதுன்னு அண்ணன் சொல்கிறார்'' கனிவுடன் சொல்லிக் கொண்டு தாயின் கன்னத்தை மெல்ல வருடினாள்.

மாதவி அவள் கரத்தை அப்பால் தள்ளிவிட்டு சுவரைப் பார்த்தபடி படுத்துக்கொண்டாள்.



''எனக்கு ஏன் இந்த வீண் உபகாரம்? பசித்தால் நானே எடுத்துச் சாப்பிடுறேன். நேரமாச்சு. நீ காலேஜுக்குப் புறப்படு'' அதட்டினாள்.

அதற்கு மேல் வற்புறுத்த அஞ்சி ரஜனி, சென்று விட்டாள்.

மணிவண்ணனுக்கு மருத்துவ மனையில் இரவு வேலை இருந்ததால் அவன் அங்கேயே தங்கி விட்டான். மாதவி மட்டுமே வீட்டில் தனியாக இருந்தாள். என்னென்னவோ எண்ணியபடி படுக்கையில் அமைதியின்றிப் புரண்டு கொண்டிருந்தவள், களைப்புத் தாளாது அயர்ந்து உறங்கி விட்டாள்.

திடீரென்று விழித்தபோது, நேரம் நடுப்பகலைத் தாண்டி விட்டிருந்தது. சமையற்கார அம்மாள் பலமுறை அறைக்குள்ளே வந்து எட்டிப் பார்த்துவிட்டு எஜமானியை எழுப்பப் பயந்து வாளா இருந்து விட்டாள். அவள் அருகில் இருந்த முக்காலிமீது பிளாஸ்க்கில் வைத்துவிட்டுப் போன கஞ்சி அப்படியே இருந்தது.

மெல்ல எழுந்து குளியலறைக்குள் புகுந்து முகத்தைக் கழுவிக்கொண்டாள் மாதவி. கசங்கிக் கிடந்த புடவையை சீராக்கிக் கொண்டு, கூந்தலை வாரி முடிந்து நெற்றியில் பொட்டிட்டுக் கொண்டு படுக்கை மீது வந்து அமர்ந்தாள். பலவீனம் தாங்காது தலை சுற்றியது. பிளாஸ்கைத் திறந்து சூடான கஞ்சியைத் தம்ளரில் ஊற்றி ஒரு வாய் சாப்பிட்டாள்.

இன்னமும் வாழ ஆசையா?...இடையே எழுந்த வெறுப்பில் சட்டென்று தம்ளரை வைத்து விட்டு வாயைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்த போது, வேலைக்காரி வாயிற் படியருகே நிற்பதைக் கண்டாள்.

''தூங்கிட்டிருந்தீங்க - எழுப்ப மனசில்லை. ஒரு பொண்ணு வந்து வெகுநேரமா உங்களைப் பார்க்கக் காத்திட்டு இருக்கு.''

''யார் அது? என்ன வேணுமாம்?''

''யாரோ டாக்டர் நளினியாம். உடம்புக்கு முடியாம நீங்க படுத்திருப்பதாகக் கேள்விப்பட்டுதாம். பார்த்திட்டுப் போக வந்திருக்கு.''

சாட்டை கொண்டு தாக்கியது போன்ற வேதனையில் மாதவி நிமிர்ந்து உட்கார்ந்தாள். நெஞ்சம்பதைபதைத்தது.

''நான் இப்போ எழுந்திட்டேனே. உடனே வரச் சொல்லு'' என்றாள் எரிச்சலுடன்.

வாயிற்படியில் அசைந்த புடவைத் தலைப்பை ஓரக் கண்ணால் பார்த்தபடி உட்கார்ந்திருந்த மாதவிக்கு உள்ளூரக் கோபம்.

நளினி எதற்காக அவளைப் பார்க்க வேண்டும்? இந்தப் பிரச்சினைக்கு என்னதான் முடிவு?

கை குவித்து வணங்கிய அந்தப் பெண்ணை உட்காரச் சொல்லி இருக்கையைக் காட்டினாள்.

''காய்ச்சல் வந்து உடம்புக்கு முடியாம இருக்கிறீங்கன்னு கேள்விப்பட்டேன்-அதனால்...'' முடிக்காது, இருக்கையில் அவள் உட்கார்ந்து கொண்டாள்.

''மணிவண்ணன் சொன்னானா?'' ... கேட்டுவிட்டு மாதவி அந்தப்பெண்ணை காலோடு தலைவரை கண்களால் ஊடுருவினாள்.

நளினியின் கன்னங்கள் லேசாகச் சிவந்து போயின. மெல்லியதாக அரும்பிய புன்முறுவலுடன் தலையைக் குனிந்துகொண்டு ஒரு கணம் வாளா இருந்தாள்.

''கொஞ்ச நாளாக நாங்கள் இருவரும் பேச்சுவார்த்தையின்றி பிரிந்து இருந்தோம். தொடர்ந்து அவரால் என்னைப் பார்க்காது இருக்க முடியவில்லை. என்னாலும் அவரை மறக்க முடியலை.''



''இதனால் ஏற்படப் போகும் சிக்கல்களைப் பற்றிச் சிந்தித்தாயா?''

''நன்றாக, யோசித்துப் பார்த்தேன். என்னை ஆளாக்கிப் படிக்க வச்ச என் தூரத்து உறவினர்களான சந்திரசேகரன் தம்பதிகள் மனக் கொதிப்படைவாங்க. அவர்கள் தயவில் வாழும் என் பெற்றோர்கள் பயப்படுவாங்க. மருத்துவமனை அமைச்சுக் கொடுத்து எனக்கு உதவிகள் செய்யத் தயாராக இருந்த அவர்களை விரோதிச்சுக் கொண்டு - நல்ல வாய்ப்புகளை நாசப்படுத்திக் கொண்டு விட்டேன்னு ஏமாற்றம் அடைவாங்க - திருமணத்துக்கு ஒப்புதல் கொடுக்க மாட்டாங்க. நான் துணிஞ்சு விட்டேன். மணிவண்ணனைத் தவிர வேறு யாரையும் மணப்பதில்லையினு தீர்மானம் செய்துவிட்டேன். உழைக்க உடம்பில் வலுவும், உதவ தொழில் கல்வியும் இருக்கும் போது நான் ஏன் அவர்கள் உதவியை நாடணும்? அவங்க பணம் எனக்கு எதுக்கு? என் படிப்புக்குச் செலவழித்த பணத்தை வேண்டுமானாலும் உழைத்துத் திருப்பித் தந்து விட நான் தயார்...''

''அவங்களை விட்டுத்தள்ளு - என்னைப் பற்றிச் சிந்தித்தாயா?''

அவள் குழப்பத்துடன் மாதவியைப் பார்த்து விழித்தாள்.

''மாமியார்னு பெருமைப் பட்டுக்கொள்ள தகுதிவுடையவளான்னு என்னைப் பற்றி யோசித்தியா? என்னைப் பற்றி ஏதேதோ தகவல்கள் கேள்விப்பட்டு இருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்களே. அவை என்ன ஏது என்பதாவது உனக்குத் தெரியுமா?''

சட்டென்று எழுந்து, மாதவியின் அருகில் தரைமீது அவள் காலடியில் வந்து உட்கார்ந்து கொண்ட நளினி, நெஞ்சம் நெகிழ்ந்து போய் அவள் கால்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள்.

''மன்னிச்சுக்கோங்க அம்மா. அன்னிக்கு என் பெற்றோர்கள் பேச்சைக்கேட்டு, அப்படி ஒரு கேள்வியை எழுப்பி உங்க மனசை புண்படுத்திட்டேன். பின்னாடி ரொம்ப வருத்தப்பட்டேன். எனக்கு நீங்கதான் முக்கியமே ஒழிய - கேள்விப்படும் தகவல்கள் முக்கியமல்ல-''

''அவை உண்மையாக இருந்தால்...''

''அதைப்பற்றியும் அக்கறை இல்லை''.

மாதவி தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு தன் கரங்களை அவளது பிடியில் இருந்து விடுவித்துக்கொண்டு எழுந்திருந்தாள்.

''நோயாக இருந்த என்னை நீ பார்க்க வந்தது பற்றி நன்றி. உன்னைப் போன்ற ஒரு புத்திசாலியான பெண்ணை மருமகளாக அடைய நான் கொடுத்து வச்சிருக்கணும். ஆனால், அத்தனை பெரிய பாக்கியத்துக்கு நான் லாயக் கற்றவள்னு எனக்குத் தெரியும். விளக்கம் கேட்காதே. இந்தத் திருமணத்தில் உனக்கும் - எனக்கும் யாருக்கும் நிம்மதி இருக்காது. அதனால் நீ என் மகனை மறந்து, உன் பெற்றோர்கள் விருப்பப்படி வாழ முயற்சி பண்ணு''.

''அம்மா என்ன சொல்றீங்க...'' விம்மிக் கொண்டு எழுந்து நின்றாள் நளினி.

''உங்கள் திருமணத்திற்கு நானும் ஒப்புதல் கொடுக்க மறுக்கிறேன். அவ்வளவுதான். தயவு செய்து நீ இங்கிருந்து போய்விடு. மேலே ஏதும் பேசி ஏற்கனவே நொந்து போயிருக்கும் என்னை வருத்தப்படுத்தாதே. உனக்குப் புண்ணியமுண்டு'' கடுமையான குரலில் உத்திரவிட்டாள் மாதவி.

அன்று மாலை. மருத்துவமனையில் இருந்து வந்த மணி வண்ணன் நேரே தாயின் அறைக்குள் வந்து நின்றான்.



அவள் எதிர்பார்த்ததுதான். எனவே திடுக்கிடவில்லை. மெல்ல படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். வெந்து விட்டிருந்த அவன் முகத்தைத் துணிவுடன் உற்றுப் பார்த்தாள்.

''நளினி எல்லாத்தையும் சொன்னாள். அவள் எத்தனையோ கேட்டுக் கொண்டும் நீங்க மறுத்துவிட்டீங் களாம். ஏம்மா உங்களுக்கு இந்தப் பிடிவாதம்?''

''என் முடிவை நான் மாற்றிக் கொள்ளப் போவ தில்லை. அது தீர்மானமானது. திரும்பத் திரும்பப் பேசி என்ன பயன்?''

''என் முடிவையும் நான் மாற்றிக் கொள்ளப்போவ இல்லை...''

''என்ன சொல்றே?''

''ஆமாம். நானும் நளினியும் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்துவிட்டோம். ஒருவரையொருவர் இனி பிரிந்து வாழ எங்களால் முடியாது. நீங்கள் மனம் ஒப்பி சம்மதம் கொடுத்துச் சிறப்பாக எடுத்துச் செய்ய வேண்டிய திருமணம். அந்த யோகம் எனக்கு இல்லை. போகட்டும். நண்பர்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கி றார்கள். அவங்க உதவியுடன் நாங்கள் இருவரும் எளிய முறையில் திருமணத்தை முடித்துக்கொள்ளத் தீர்மானித்து விட்டோம். உண்மையை முதலிலேயே சொல்லி விடு கிறேன். பின்னால் நீங்க வருத்தப்பட்டு மன அதிர்ச்சி அடையத் தேவையில்லை.''

திகைத்துப் போனாள் மாதவி— தாயை விரோதித்துக் கொள்ளும் அளவு தீவிரமாகிவிட்ட காதலா, அது? அவ ளால் நம்ப முடியவில்லை.

''இது தனிப்பட்ட முறையில் உன் ஏற்பாடா? அல்லது நளினியின் ஆலோசனையா?'' ஏளனமாகக் கேட்டாள் தாய்.

''எனது திட்டம். ஓரளவுக்கு இது உருவாக பிரகாசம் அவர்கள் காரணம் என்றும் சொல்வேன்.''

''யார் அந்தப் பிரகாசம்?''

''என் நண்பர். கொஞ்ச காலமாகத்தான் அவரை எனக்குத் தெரியும். வைத்தியர் என்ற நிலையில் அறிமுகமானேன். தொடர்ந்து அன்புடன் பழகத் தொடங்கினோம். வயதில் அவர் எனக்குப் பெரியவர். ஆனாலும் சரிசமமாக நட்புரிமை பாராட்டிப் பழகத் தெரிந்தவர். ஒளிவு மறைவில்லாமல் என் உள்ளத்து உணர்வுகளை அவரிடம் எடுத்துச்சொன்னேன். தீவிரமாகச் சிந்தித்தார். பின்னர்தான் இந்த முடிவை எடுத்துச் சொன்னார்.''

''பேஷ்! தாயையும் பிள்ளையையும் பிரிக்க யோசனை சொல்லிக் கொடுத்த அந்த உத்தமருக்கு பிள்ளைக்குட்டிகள் எத்தனையோ?''

''மனைவியை இழந்தவர். அவருக்குன்னு குழந்தைகள் ஏதும் கிடையாது. கட்டிட சாமான்கள் விற்பனை செய்யும் வியாபாரம். நல்ல வசதியான வாழ்க்கை. மற்றவங்களுக்கு உதவணும்னு ஒரு நல்ல எண்ணம்...''

''முன்னே பின்னே நான் கேள்விப்படாத எவனோ ஒருத்தன் நம் குடும்பத்து விஷயங்களில் புகுந்து குழப்புறான்னு சொல்லு.''

''பிரகாசம் அண்ட் பார்ட்னர் என்கிற வியாபார நிறுவனம் ரொம்பப் பிரபலமானது. பிரகாசம் ரொம்ப கண்ணியமானவர். என்மேல் ஏற்பட்டுள்ள அன்பினால் என் பிரச்னைக்குத் தீர்வுகாண இதில் இறங்கியிருக்கிறார். அம்மா! மறுபடியும் கெஞ்சிக் கேட்கிறேன். உங்க முடிவு தான் என்ன?''

''இனி என் முடிவைப்பத்தி என்ன? நளினியை திருமணம் செய்துகொள்ள நீ தீர்மானிச்சுட்டே. எடுத்துச் செய்ய நல்ல ஒரு நண்பரும் கிடைச்சிருக்கார். இனி நான் எதுக்கு?... நடத்து காரியத்தை...''

சொல்லி முடிப்பதற்குள் துக்கம் தொண்டையை அடைக்க அவள் படுக்கை மீது தொப்பென்று விழுந்தாள்.



பலமான விம்மல்கள் உடலைக் குலுக்க அவள் குமுறிக் குமுறி அழுதாள்.

# 28

அதற்குப் பின்னர் அந்த மூவர் உள்ளத்திலும் அமைதி இருக்கவில்லை. பொழுது கனமாகி நீண்டு நகர்வது போன்றதொரு பிரமைகூட.

மாதவி உணவை அறவே வெறுத்துப் படுக்கையிலேயே நோயாளிபோல் மனம் ஒடிந்து கிடந்தாள்.

தாயின் அறைக்குள் பலமுறை சென்று பார்த்துவந்த மகள் ரஜனிக்குத் தாங்கொணாத் துயரம்.

அன்னை ஆகாரமின்றி பட்டினியாகப் படுத்துக்கிடக்கையில் அவள் மட்டும் பாலும்பழரசமும் பருகுவது எப்படி? இந்நிலை நீடித்துக்கொண்டு போய்க்கொண்டு இருந்தால் எங்கே போய்விட முடியும் என்ற நிலை. தாயுடன் பேசித் தீர்வுகாண நெருங்கினால், மாதவியின் முகம் நெருப்பாக மாறி, நிற்காது விரட்டியது. அண்ணனுக்கும் அன்னைக்கும் இடையே அவள் தவித்துக்கொண்டு தனக்குள்ளே வேதனைப் படுவதைத் தவிர வேறு வழி தோன்றவில்லை.

மணிவண்ணனும் அமைதியை இழந்து விட்டிருந்தான். முன்போல் தன் வேலைமீது கூட அவனால் முழு கவனத்தையும் செலுத்த முடியவில்லை. நெஞ்சிலே இறக்க முடியாத சுமையான ஒரு கனம்.

நளினி அவனுக்காகத் தன் வளமான வருங்காலத்தைத் துறந்துவிட்டு, பெற்றோர்களின் மனத்தாங்கலை ஒதுக்கிவிட்டு உறவினர்களான சந்திரசேகரன் பரிமளா தம்பதியினரை விரோதித்துக்கொண்டு தன் கல்வி ஒன்றையே சொத்தாகச் சுமந்துகொண்டு புறப்பட்டு வந்துவிடத் தயாராக இருந்தாள்.

அத்தனை தியாகத்திற்குச் சித்தமாக இருந்த காதலியை அவன் இப்போது எப்படி கைவிட முடியும்? தாயார் இதை ஏன் புரிந்துகொண்டு ஒப்புதல் கொடுக்கக் கூடாது? மகனது வாழ்விற்கு பெற்றவளா முட்டுக்கட்டை?

பரிமளா குடும்பத்தின் மீது தாயாருக்கு அடிநாளில் இருந்தே சிறிது மனத்தாங்கல் என்றவரை அவன் அறிவான். பரிமளா மீது கொண்டுள்ள கோபத்தை தனியிடமா காட்டுவது? அதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

விளக்கம் கொடுக்க மறுத்து வீம்பு பிடித்த தாயிடம் பேச முடியாது, நண்பர் பிரகாசத்திடம் ஒளிவு மறைவின்றி தன் உணர்வுகளின் கொந்தளிப்பைக் கொட்டி விட்டான். தப்பு என்ன?

'காதலித்த பெண்ணைக் கைவிடுவது மிகவும் கேவலமான செயல்...கல்யாணம் செய்துகொள். நாங்கள் துணை நிற்கிறோம். தாயார் இப்போது மறுப்பு சொல்வாங்க— பின்னர் பேரனை எடுத்து மடியில் வைத்துக் கொஞ்சுவாங்க— காலம் மாறுதல்கள் செய்துவிடும். நீ ஆயிரம் காலத்துப் பயிர்—மனம் உடைந்து உன் வாழ்க்கையை மண்ணாக்கிக் கொள்ளக் கூடாது...'' என்று உபதேசித்தார் பிரகாசம்.

அவர் பேசியது அவனுக்கு மிக்க ஆறுதலாக இருந்தது. அவர் காட்டிய அன்பும் பரிவும் அவனை மிக ஈர்த்தன. எப்படிப்பட்ட அன்பான நண்பர்? நேர்மையாகப் பேசுகிறார். தெளிவாக விளக்குகிறார்...அவரைப்பற்றி அவன் பெருமைப பட்டான்.

தினமும் இருமுறை அவன் தாயின் அறைக்குள் வந்து தயக்கத்துடன் அவள் காலடியில் நின்று பார்த்தான். மாதவி சுவரில் இருந்து திரும்ப மறுத்துப் படுத்துக் கிடந்தாள்.

''அம்மா'' என்று பன்முறை அழைத்துப் பார்த்தான். பயன் இல்லை. உண்மையாக உறங்கினால்தானே எழுப்ப



முடியும்? வேண்டும் என்றே கண்களை மூடிக்கொண்டு மவுனமாக இருப்பவளை எப்படிப் பேசவைக்க முடியும்? தோல்வியுற்ற சலிப்புடன் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தான்.

எல்லா வசதிகளும் அவர்களுக்கு வாழ்க்கையில் இப்போது கிடைத்திருந்தது. ஆனால், மூவரும் அமைதியின்றி-உறக்கமின்றி உணவு கொள்ள விருப்பமின்றி அவரவர்களின் உணர்வுகளோடு புதைந்து... ஏங்கி வேதனையில் துடித்துக்கொண்டு இருந்தனர்.

அன்று காலை.

அறைக் கதவை மெல்லத் திறந்துகொண்டு ரஜனி உள்ளே வந்தாள்.

குப்பென்று வீசிய மல்லிகையின் மணமும், புடவை சரசரத்த ஓசையும் அவளது அருகாமையை மாதவிக்கு உணர்த்தின.

''அம்மா'' என்று கொஞ்சியகுரல் காதுகளை மென்மையாகத் தழுவின.

ஆனால், மனதைக் கல்லாக்கிக் கொண்டு அவள் அசையாது படுத்துக் கிடந்தாள்.

கூடவே உள்ளே நுழைந்த சமையற்கார அம்மாளிடம் பேசுவது தாயாருக்குக் கேட்டது.

''தூங்கிகிட்டு இருக்காங்கன்னு நீங்க அசட்டையாக இருந்திடாதீங்க. கொஞ்ச நேரம் கழிச்சு அவங்களை எழுப்பி சாப்பிட ஏதாவது கொடுங்க'' உத்தரவிட்டாள் மகள்.

''நேற்று முழுவதும் சாப்பிடலை...முந்தாநாள் ராத்திரியும் பட்டினி. நான் எத்தனையோ வற்புறுத்தறேன் கேட்டாத்தானே...ஆமாம், இவங்களுக்கு என்ன கோபம்? யார் மேலே?...எதுக்கு?''

''என்னைக் கேட்டா எனக்கென்ன தெரியும்— அவங்களையே கேட்டுப் பார்க்கிறதுதானே- இந்த ஆராய்ச்சி உங்களுக்குத் தேவையில்லை- போய் வேலையைக் கவனியுங்கோ'' கொஞ்சம் கோபமாகக் கூறிவிட்டு ஜன்னல் அருகே சென்றாள். தாயின் முகத்திலே வெளிச்சம் படா வண்ணம் திரையை இழுத்துவிட்டாள். பின்னர் தாயின் அருகே வந்து குனிந்து முகத்தைப் பார்த்துவிட்டு பெருமூச்சுடன் வெளியே சென்று விட்டாள்.

சிறிது பொழுதில் தோட்டத்தில் இருந்து புறப்பட்டு வாயிலைத் தாண்டிச் செல்லும் ஓசை கேட்டது. அண்ணன் வேலைக்கும், தங்கை கல்லூரிக்கும் கிளம்பி விட்டனர் என்பதை உணர்ந்த மாதவி மெல்ல எழுந்து உட்கார்ந்தாள்

காலை எட்டு மணியாகி விட்டிருந்தது. அவள் வாழ்க்கையில் இதுதான் முதல்தடவை. பல் விளக்காது முகம் கழுவாது படுக்கையிலே வெகுநேரம் புரண்டுகொண்டு கிடப்பது.

மெல்ல எழுந்து குளியல் அறைக்குள் புகுந்தாள். சூடான நீரில் குளித்து, வேறு உடை அணிந்துகொண்டு தலையை வாரிமுடித்து பொட்டிட்டுக்கொண்டு-அறைக்குள் இருந்த நாற்காலி ஒன்றில் வந்து அமர்ந்தாள்.

வீடும் அதிலுள்ள பொருள்களும் சுழல்வது போன்ற பசி மயக்கம். கண்களை மூடிக்கொண்டாள். மகன்மீது வைத்திருந்த பாசம் இப்போது நஞ்சாக மாறி அவள் உள்ளத்தையும் உடலையும் ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்தது.

''எழுந்திட்டீங்களா? உடம்பு இப்போ எப்படி இருக்கு?'' விசாரித்தபடி சமையல்கார அம்மா தம்ளரில் சூடான காப்பியைக் கொண்டு வந்து அருகில் வைத்தாள்.

''தேவலாம்...காலை பத்திரிகை எங்கே?'' பேச்சுக்குக் கேட்டு வைத்தாள் மாதவி.



''இதோ இருக்கும்மா. இன்னும் நீங்க பார்க்கலையா– அந்த டெல்லி கொலை கேஸ் பத்தின விவரம்கூட இருக்கு'' உற்சாகமாகப் பேச முயன்ற அவளைக் கையமர்த்திப் போகச் செய்துவிட்டு பத்திரிகையைப் புரட்டினாள் மாதவி.

காப்பியைத் பருகிக்கொண்டே மேலெழுந்தவாரியாக படித்துக் கொண்டு இருந்தவள் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''பிரகாசம் அண்ட் பார்ட்னர்'' - கட்டட சாமான் விற்பனையாளர்கள் என்ற பெயர் விளம்பரம் அரைப் பக்கத்தை அடைத்துக் கொண்டு இருப்பதைக் கண்டதும் அவள் நெஞ்சு படபடத்தது.

உடல் எல்லாம் அனலாக எரியும் உணர்வு.

வேகமாகக் காப்பியை பருகித் தம்ளரைக் கீழே வைத்து விட்டு பத்திரிகையை மடித்து அப்பால் வைத்தாள்-

அவள் பயன்படுத்துவதற்கு என்று தனியாக ஒரு தொலைபேசி படுக்கைத் தலைமாட்டிலே அமைக்கப்பட்டு இருந்தது- எழுந்து சென்று கண்ணாடியை மாட்டிக் கொண்டு, 'டெலிபோன்' டைரக்டரியை வேகமாகப் புரட்டினாள்.

பூந்தமல்லி முகவரியில் காணப்பட்ட பிரகாசத்தின் பங்களா தொலைபேசி எண்களை வேகமாகச் சுழற்றினாள்.

''அலோ! தமிழ் குடில். பிரகாசம் அண்ட் பார்ட்னர்ஸ்...'' மறுபக்கம் யாரோ ஒரு வாலிபனின் கனிவான - குரல் ஒலித்தது.

''பிரகாசம் அவர்கள்வீட்டிலேதானே இருக்கிறாங்க?— அவருடன் நான் நேரில் பேச விரும்புகிறேன்...'' கோபத்துடன் பற்களைக் கடித்துக்கொண்டு மெல்லச் சொன்னாள், அவள்.

பிரகாசம்! முன்பின் கேள்விப்படாத மூன்றாம் மனிதன். அவளுக்கும், அவள் மகனுக்கும் இடையே புகுந்து

பிளவை உண்டாக்க பூதம்போல் எங்கு இருந்து முளைத் தான் என்ற ஆத்திரம் அவளுக்கு.

''ஆமாம்! நீங்கள் யார்?'' சிறிது அதிகாரமாகக் கேட்டது அந்த இளைய குரல்.

''அவரது வீடுதானே இது...நீ...?'' அவள் முடிக்க வில்லை.

''ஆமாம். தமிழ் குடில். பிரகாசம் அவர்களின் பங்களாதான். நான் அவருடைய அந்தரங்கச் செயலாளர்- என்ன வேணும் ஏன் பார்க்கணும் - நீங்க யார் - எல்லா விவரமும் சொன்னால் பிறகு கேட்டுச் சொல்ல முடியும்.''

''பூபதி மகளிர் அழகு மாளிகையின் தலைவி மாதவி பேசுகிறேன். அவரை நான் கொஞ்சம் அவசரமாகப் பார்க் கணும்.''

''வியாபார சம்பந்தமாக இருந்தால் எங்கள் ஆபீஸ் மானேஜர் சதாசிவத்திடம் நீங்கள் பேசினால் போதும். அவர் எல்லாவற்றையும் கவனிப்பார்.''

''இல்லை. இது சொந்த விஷயம் - அவரிடம் நேரிடை யாகப் பேச வேண்டிய முக்கியமான சங்கதி''

''அப்படியா ... அவரைக் கேட்டுத்தான் சொல்ல முடியும். அவர் இப்போ பூஜையில் இருக்கிறார். அரை மணிக்கு மேலாகும். உங்கள் தொலைபேசி எண்ணைக் கொடுத்தால் பிறகு நான் கேட்டுத் தெரிவிக்கிறேன்.

பிறர் வீட்டுக்குள் புகுந்து கலகம் விளைவிக்கிற பிரகாசத்திற்கு பூஜை ஒரு கேடா? கோபத்தில் கேட்கத் துடித்தாள் மாதவி. அடக்கிக்கொண்டு, தனது தொலை பேசி எண்ணைத் தெரிவித்துவிட்டு, ''குரல் வாங்கி''யை வைத்தாள்.

அதற்குப்பின் அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை. அறையைவிட்டு அப்பால் நகரக்கூட மனம் இல்லை



பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு அடிக்கொரு தடவை தொலைபேசியை வெறித்தபடி உட்கார்ந்து இருந்தாள்.

பிரகாசம் நீண்ட நேரம் பூஜையில் அமர்ந்துவிட்டது போல் நேரம் மெல்ல நகர்த்துகொண்டு இருந்தது.

முடிவில் தொலைபேசி கிணுகிணுத்ததும் எழுந்து சென்று எடுத்தாள்.

''தமிழ்குடிலில் இருந்து செயலாளர் பேசுகிறேன். மாதவி அம்மாதானே? இன்று மாலை ஐந்து மணி அளவில் இங்கே நீங்க வரமுடியுமான்னு கேட்கிறார்.''

ஒருகணம் அவமான உணர்வு நெஞ்சையடைக்க அவள் பதில் அளிக்க முடியாது விழித்தாள்.

''உங்களுக்கு வசதிப்படாவிட்டால்...'' அவன் முடி வுக்கு முன் அவள் பதட்டமாகப் பேசினாள். ''எனக்கு வசதிப்படும். ஐந்து மணி அளவில் இன்று மாலை அவரைச் சந்திக்கப் பங்களாவுக்கே வருகிறேன் - சொல்லுங்கள்... நன்றி. குரல் வாங்கியைப் பிடியில் வைத்தாள். நெஞ்சு பட படப்பும் உடல் நடுக்கமும் அடங்க அவளுக்கு வெகுநேரம் சென்றது. பின்வர் அறையைவிட்டு வெளியே வந்து தோட் டத்திற்குள் உலாவினாள். செடிகளைப் பார்வையிடுவது போல் சுற்றிக்கொண்டே வந்த அவள் உள்ளத்தில் பல யோசனைகள்.

பிரகாசத்தைப் பார்த்ததும் என்ன பேசுவது? என்ன கேட்பது?

கோபத்துடன் பேசுவதா? காரியத்தைக் கெடுத்துவிடா திருக்க மிகவும் கனிவாக - தாழ்வாகப் பேசுவதா?

கெஞ்சுவதா? மிஞ்சுவதா?

இதென்ன தலையெழுத்து? யாரோ ஒரு மனிதனிடம்— பிச்சை கேட்பதுபோல் மகளது பிரச்னைக்கு முடிவு கேட்க அவள் நேரிடையாகச் சொல்லவேண்டுமா? வெட்கம்-வெட் கம். அந்த அருவெறுப்பில் உடல் சிலிர்த்துப் போனாள்.

அன்று மாலை—தமிழ் குடிலின் தோட்டத்திற்குள் கார் நுழைந்ததுமே மாதவிக்கு திகில் கலந்த ஒரு பரபரப்பு.

வண்டியை விட்டு இறங்கியவள் தயக்கத்துடன் படிகளைத் தாண்டி வராந்தாவிற்கு வந்து சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''வாங்க இப்படி - உட்காருங்கள்'' உபசரித்தான் இருதா மீசை வாலிபன் ஒருத்தன். அவன்தான் பிரகாசத்தின் அந்தரங்கக் காரியதரிசி போலும்...அவனை ஏறஇறங்க உற்றுப் பார்க்குமுன் உள்ளே விரைந்துவிட்டான்.

அந்தப் பெரிய வரவேற்பறை அதில் காணப்பட்ட விலை உயர்ந்த பொருள்கள்—சுவரில் தொங்கிய சித்திரங்கள் எல்லாவற்றையும் திகைப்புடன் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தாள் மாதவி.

''உட்காருங்கள். கொஞ்சம் பழரசம் சாப்பிடுங்கள்'' உபசரித்தபடி உள்ளே வந்த வேலையாள் பழரசத் தம்ளரை ஒரு முக்காலி மீது வைத்துவிட்டு மறைந்தான்.

''வேண்டாம்'' என்று அவள் மறுத்தது அவன் காதில் படவில்லை. மேலே சுழன்ற மின்விசிறி அதிகமாகக் குளிர் காற்றை வீசுவது போன்ற உடல் நடுக்கம் அவளுக்கு. புடவைத் தலைப்பை இழுத்து மூடிக்கொண்டு அச்சத்துடன் கண்களைச் சுற்றிலும் ஓட விட்டபடி உட்கார்ந்திருந்தாள்.

எங்கேயோ இரும்பும் சத்தம், தொடர்ந்து தடிமனான பேச்சுக் குரல்...பின்னர் மெல்லிய காலடி ஓசை. அவள் நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது.

''வணக்கம்''

கம்பீரமாகப் பின்னால் இருந்து எழுந்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போய் எழுந்து கைகளைக் கூப்பியபடி திரும்பிப் பார்த்தாள் மாதவி.''



மூச்சே நின்றுவிடும் போன்ற அதிர்ச்சி!

வியப்பில் வார்த்தைகள் தடுமாற—உடல் நடுங்க, கால்கள் பின்ன - துக்கம் நெஞ்சைப் பந்தாக அடைக்க... கண்கள் நீரைக் கொட்ட, ''நீங்களா... உண்மையில் நீங்களா...'' பேச முடியாது தள்ளாடினாள்.

சில தினமாக உணவும் உறக்கமும் இன்றி, பலவீனம் அடைந்துவிட்டிருந்தது உடல். அருவியாக நினைவுகளை மோத விட்டு உள்ளிருந்து பொங்கியெழுந்த உணர்வுகளின் வேகத்தால்...

துவண்டு-சுருண்டு கீழே விழ இருந்தவளைப் பிரகாசம் ஓடிவந்து தாங்கிக் கொண்டார்.

''மாதவி! கண்ணை விழிச்சுப் பார். நான்தான் உன் பூபதி - பயப்படாதே. நல்லா பார்...''

கன்னங்களை கண்ணீர் நனைக்க, நெஞ்சை உணர்வுகள் அடைக்க...மேலே பேசமுடியாது ஆசை மனைவியை இறுக்கமாக நெஞ்சோடு அணைத்துக்கொண்டு விம்மி - விம்மி... பச்சைப்பிள்ளையாக [illegible] எனும் பூபதி.

16337
3206388

## 29

சுரீர் என்ற வேதனை விழிப்பைக் கொடுத்தது.

எங்கேயோ தண்ணீருக்கடியில் இருந்து மேலே எழும்புவதைப் போன்ற நினைவில் கண்களைச் சிறிது திறந்து பார்க்க முயன்றாள் மாதவி.

பளிச்சென்று எரிந்த விளக்கின் ஒளி பட்டுக் கண்கள் கூசின.

ஆமாம்! எங்கே இருக்கிறேன்? யார் பேசுகிறது? என்ற குழப்பத்தில் ''அம்மா'' என்று அரற்றியபடி புரண்டாள்.

"சின்ன ஊசி...ஆச்சு..." என்று குழந்தைக்குச் சொல்வதுபோல் யாரோ கூறியபடி அவள் முழங்கை மடக்கின் மீது பஞ்சினால் மருந்தைத் தடவுவதை உணர்ந்தாள்.

அவர் கழுத்திலே தொங்கிய சோதனைக் குழாயும்—இடைவரை நீண்டு ஆடிய மேல் அங்கியும் கண்களில் பட்ட போதுதான் வைத்தியர் ஒருத்தர் தன்னை கவனிக்கிறார் என்ற உணர்வு ஏற்பட்டது. திடுக்கிட்டுப் போய் கண்களை அகலத் திறந்து சுற்றிலும் கவனித்தாள்.

ஆமாம், இப்போது நேரம்? அடுத்தபடியான குழப்பம்.

பக்கத்து அறை சுவரில் தொங்கிய கெடிகாரம் பதில் அளிப்பதுபோல் "டண்...டண்..." என்றுஏழுமுறை அடித்து ஓய்ந்தபோது அவளுக்கு மெத்த வியப்பு.

இரவு ஏழு மணியாகிக் கொண்டு இருக்கிறதே? அப்படியென்றால்...

அவள் மறுபடியும் தன்னைச் சுற்றிலும் கவனித்தாள். மூடுபனி விலகியதும் எல்லாம் புலப்படுவது போல் - அங்கு இருந்தவர்கள் அவள் கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தனர். அவர்கள் பேசியதும் காதுகளில் நன்றாகக்கேட்டது.

"பட்டினியாகக் கிடந்ததில் ஏற்பட்ட மயக்கம். உடம்பில் வேறு கோளாறு ஏதும் இல்லை. ஊசி போட்டு இருக்கேன். பழச்சாற்றில் குளுக்கோஸ் போட்டுக் கொடுங்க பிறகு நீர் ஆகாரம் ஏதாவது சாப்பிடச் செய்யுங்கள்—விரைவில் சரியாகிவிடும்."

"ஏதும் விபரீதத்தில் முடியக்கூடாதேன்னு மனசில் கவலை டாக்டர்."

"பயப்படாதீங்க, மிஸ்டர் பிரகாசம். உங்கள் மனைவி நூறாண்டு காலம் வாழ்வாங்க."

கண்ணாடியைக் கழற்றிமேல் துண்டினால் துடைத்துக் கொண்டார், பிரகாசம்.



"பல ஆண்டு பிரிந்து இருந்து இப்போது ஏற்பட்ட எதிர்பாராத சந்திப்பில் அவள் மனதில் அதிர்ச்சி உண்டாகி இதயத்தைப் பாதித்துவிட்டதோன்னு பயந்துட்டேன். வெகுநேரம் நினைப்பேயில்லாமல் கிடந்ததினால் உங்களுக்குப் போன் செய்து உடனே வரவழைத்தேன். ரொம்ப நன்றி டாக்டர்" தழுதழுத்தகுரலில் கூறியபடி டாக்டரைப் பின் தொடர்ந்து வாயில் வரை வழியனுப்பச் சென்றார், பிரகாசம்.

மாதவிக்குத் தாங்க முடியாத திகைப்பு!

பிரகாசத்தின் படுக்கை அறையில் அவரது படுக்கைமீது அல்லவா அவள் இவ்வளவு நேரம் படுத்துக் கிடக்கிறாள்.

தவறான காரியம் செய்துவிட்டது போன்ற குற்ற உணர்வில் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருக்க எத்தனித்தபோது, அவர் திரும்பி அறைக்குள் வந்துவிட்டார்.

ஒரே எட்டில் அருகில் நெருங்கி படுக்கையின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டுவிட்டார்.

"இப்போ உடம்பு எப்படி இருக்கு? பேச்சு மூச்சு இல்லாம நீ மயங்கி விழுந்ததும் நான் பயந்து போய் விட்டேன்" என்று கேட்டபடி அவள் முகத்தைக் கனிவுடன் பார்த்தார்.

"மாதவி! நாம் எவ்வளவு காலம் பிரிந்து இருந்தோம். எனது முட்டாள்தனம் நம்மை எத்தனை துயரத்தில் ஆழ்த்தி விட்டது பார்த்தியா? அவசரமாக நான் எடுத்த தீர்ப்பினால் ஆறாத புண்ணை உன் மனசில் ஏற்படுத்தி உன்னை வறுமையிலே வாடவிட்ட பாவி. உன் முன்னாடி வெட்கம் இல்லாமல் வந்து உட்கார்ந்திருக்கேன். என்னை மன்னிப்பாயா மாதவி?" முடிக்குமுன் அவருடைய கண்கள் கலங்கின. தொண்டை கரகரத்தது

மாதவியின் கண்களிலும் நீர் பெருக்கெடுத்து ஓடியது.

''என் போதாத வேளை, அப்படி ஓர் எண்ணம் உங்க மனசில் பட்டது. கடந்து போனதை நினைச்சுக் கலங்கு வதில் லாபம் என்ன?'' அவரது கண்ணீரை மெல்ல தன் முந்தானையினால் துடைத்து விட்டாள்.

''உனக்கு என்மேல் கோபமோ ஆத்திரமோ ஏற்பட லையா மாதவி?'' அதிசயப்பட்டார் அவர்.

''அவசரப்படாமல் ஆத்திரப்படாமல் நான் சொல்ற விளக்கத்தைக் கேட்காமல் இப்படி மறைஞ்சுட்டாரே என்று நான் மருகிப் போனேன். அவ்வளவுதான்...இப்போகூட நீங்க கேட்கத் தயாராக இருந்தால் அன்னிக்கு உங்க மனசில் ஏற்பட்ட அந்த சந்தேகத்திற்கு விளக்கம் தரத் தயாராக இருக்கிறேன்'' விம்மலுடன் மாதவி திணறினாள்.

சட்டென்று தன் கரத்தை நீட்டி அவளைத் தம் நெஞ்சோடு அணைத்துக் கொண்டார் பிரகாசம்.

''வேண்டாம். நானே புரிஞ்சு கொண்டுவிட்டேன். எல்லாம் விவரமாகச் சொல்றேன்—முதல்லே நீ ஏதாவது கொஞ்சம் சாப்பிடு...''

சொல்லி முடிப்பதற்குள் அவர் பிடியில் இருந்து அவள் பரபரப்புடன் நகர்ந்தாள். ''வீட்டை விட்டு வந்து எவ் வளவு நேரமாச்சு? டிரைவர் வாசலில் காத்திருப்பார்'' பேசிக்கொண்டே எழுந்து நிற்க முயன்றாள்.

அவளுடைய கையைப்பற்றி மெல்ல அழைத்துச் சென்று அருகில் கிடந்த இருக்கையிலே அமர்த்திய பிரகாசம் தமது துன்பத்தை மறந்து சிரித்து விட்டார்.

''மாதவி! இதுவும் உன் வீடு என்கிற உணர்வு உனக்கு ஏற்படவில்லை. பார்த்தியா? கால் நூற்றாண்டு காலம் ஏற்பட்ட பிரிவின் ஆழமான வடு உன்மனசை விட்டு அகல வில்லைன்னு புரியுது. காரை எடுத்துக்கொண்டு வீட்டுக் குத்திரும்பிப்போகும்படிடிரைவருக்குநான் உத்தரவுபோட்டு



விட்டேன். அவன் அப்பவே போய்விட்டான். இன்னும் கொஞ்ச நேரத்தில் குழந்தைகள் இங்கே வருவார்கள். தொலைபேசியில் மணிவண்ணனை அழைத்து உடனடியாக ரஜனியுடன் இங்கே வரவேண்டும்னு சொன்னேன். கார ணம் சொல்லவில்லை. ஆனால், அவசரம்— அவசியம் என்று நான் கூறியதைக்கேட்டு அவன் கொஞ்சம் பயந்து விட்டிருக்கிறான் பாவம்'' மறுபடியும் சிரித்தார் அவர்.

''குழந்தைகள் இங்கே வரப் போகிறார்களா...?'' திகைத்தாள் மாதவி.

''எல்லோரும் ஒன்றாகக் கூடிப் பேசவேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. அதனால் வரட்டும் என்று அவர்களை அழைத்தேன். முதலில் நீ கொஞ்சம் பழச்சாறு சாப்பிடு'' பரிவுடன் சொல்லிக்கொண்டு நெற்றிமீது புரண்ட அவளது கூந்தலை மெல்லக் கோதி ஒதுக்கினார்.

அது சமயம், வேலையாள் பழச்சாறு நிறைந்த கண் ணாடி தம்ளரைத் தட்டில் வைத்து எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

மாதவிக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. ''அந்த வேலையாள் இப்போது என்ன நினைப்பான்? அன்று மாலை முன்னறையில் அவன் கொண்டுவந்து கொடுத்த பழச்சாறை மறுத்த அந்த பெண்மணி, பிரகாசத்தின் படுக்கை அறையில் அவருடன் இப்போது நெருக்கமாக அமர்ந்துகொண்டு...'' காதுகளும் கன்னங்களும் குபகுப வென்று எரிய உடல் குறுகி—உள்ளம் பதைக்க இருக்கை யில் சற்று ஒதுங்கிச் சாய்ந்து கொண்டாள்.

பிரகாசம் மெல்லியதாகப் புன்னகைத்தார். பழச்சாறு தம்ளரைத் தட்டில் இருந்து தானே எடுத்து ''மாதவி சாப் பிடு. நம் குழந்தைகள் வந்தால் பேச உனக்கு உடம்பில் தெம்பு இருக்க வேண்டாமா?'' என்றார் உரத்த குரலில்.

வேலைக்காரன் வியப்புடன் விழித்தபடியே வெளியேறு வதைக் கண்டு வெட்கத்தால் மாதவி முகம் சிவந்து போனாள்.

இந்த வேலையாளுக்கு இப்போ ஒரே ஆச்சரியம். இவ னுக்குமட்டும் என்ன? உன்னை அறிந்த ஊரார் அனை வருமே திகைத்துவிடப் போகிறார்கள். மாதவியின் கண வனா? அப்படி உண்மையில் ஒருத்தன் இருந்தானா? பிரகா சம் அவளுடைய கணவனா? இதென்ன கூத்து! நம்பும்படி யான கதையா? என்றெல்லாம் விமர்சிக்கப் போகிறார் கள்.''

''நானே பார்த்திடாவிடில் நம்பியிருக்க மாட்டேனே. பிரகாசம் என்று மாற்றுப்பெயரை வைத்துக் கொண்டிருப் பவர் என் கணவர் என்று எனக்கு எப்படித் தெரியும்?'' கேட்டபடி மாதவி பழச்சாறை மெல்லப் பருகத் தொடங்கி னாள்.

''புத்திசாலியான நீ முதலிலேயே புரிந்து கொள்ளா தது எனக்கு வியப்பாக இருக்கு. என் முழுப் பெயர் உனக் குத் தெரிந்ததுதானே? நீ கூட அடிக்கடி கேலி செய்வாயே... என் பெயரை ஒரு லாரியில் வைத்து இழுக்கலாம்-அத்தனை நீளம் என்று பரிகாசிப்பாயே—மறந்து விட்டதா? பூபதி சண்முக சிவப்பிரகாசம் என்ற என் முழுப் பெயரை வியாபாரத்து வசதியை உத்தேசித்து பி.எஸ்.எஸ்.பிரகாசம் என்று சுருக்கிக் கொண்டேன். என் பெயரை நான் மாற்றிக் கொள்ளவில்லை, மாதவி— அதைப்போலவே என் அன்பை யும் என்னால் மாற்றிக்கொள்ள இயலவில்லை...நீ எனக் குத் துரோகம் செய்து விட்டதாக எண்ணிக்கொண்டு மனம் தடுமாறி துக்கத்தில் தத்தளித்த அந்த நாளிலும் என் மன தில் இருந்து உன் நினைவை உதற முடியவில்லை. உனக்குக் கேட்க அதிசயமாக இருக்கலாம். கொஞ்சம் விவரமாக டந்ததை எடுத்துச் சொல்கிறேன்—கேள்...''



பேசிக்கொண்டே அருகில் இருந்த சோபாவை அவள் அருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு, மிகவும் நெருங்கி வந்து உட்கார்ந்து கொண்டார்.

## 30

''பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ'' என்பார்கள்.

அந்தப் பேசமுடியாத பேரானந்த நிலையில்தான் அவர்கள் இருந்தார்கள்.

ஆனால், பூபதி சொல்வதைக் கேட்பதிலும் மாதவி ஆவலுடன் காணப்பட்டாள்.

அவளைப் பிரிந்து சென்றதில் இருந்து நடந்த நிகழ்ச்சி களை பூபதி சொல்லிக்கொண்டே வந்தார்.

''கானகத்தில் காதலியைக் கைவிட்ட காதலன் கூட்டத்தில் நானும் சேர்ந்து—குழந்தையுடன் உன்னைத் தவிக்க திம்மனூரில் விட்டுவிட்டுக் கிளம்பினேன் அல்லவா? முதலில் எனக்கு வாழ மனம் இருக்கவில்லை. மரணத்தைத் தேடிக்கொண்டு செல்ல அத்தனை துணிவும் இல்லை. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற ஒரு கொள்கை ஊடே எழுந்து உணர்வுகளை குழப்பிக் கொண்டிருந்தது.''

''முடிவில், கையில் இருந்த பணத்தைக் கொண்டு பம்பாய்க்குப் பயணமானேன். ரெயிலில் பிடித்த ஒரு நண்பனுடன் அவன் வசித்த அறையில் கொஞ்ச காலம் தங்கியிருந்தேன். வேலை சுலபமாகக் கிடைத்ததா? பல நாள் வேலைக்கலைந்து பட்டினியுடன் உறக்கம் இன்றித் தவித்திருக்கிறேன்.''

''கடைசியில் துணிவுடன் துறைமுகத்திலே மூட்டை தூக்கும் தொழிலாளிகளின் கூட்டத்திலே சேர்ந்துகொண்டு விட்டேன். உடம்பை அசைக்காது கணக்கு எழுதிப்பிழைத்து

வந்த என்னால் அந்தக் கடினமான வேலையைச் சமாளிக்க முடியவில்லை.

''கடினமான ஒரு மூட்டையுடன் படிகளில் சரிந்து விழுந்து இடுப்பிலே பலத்த அடியுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டேன். அன்றில் இருந்து எனக்கு ஒரு கால் சற்று ஊனமாகி விட்டது''...

''ஐயோ கடவுளே!'' பதறினாள் மாதவி கலவரத்துடன்.

''ஒரு வழியில் அந்த விபத்து எனக்கு அனுகூலமானதாகி விட்டது. காயமடைந்து கிடந்தவனைத் தூக்கி ஓரமாகப் படுக்க வைத்தான், பரந்தாமன். அப்போது அவனும் அங்கே என்னைப்போல் ஒரு தொழிலாளி. எங்களுக்குள் ஏற்பட்ட நட்பு வேரூன்றிப் பிரிக்க முடியாத ஒரு பாசமாக வளர்ந்து நிற்கிறது.''

''அதற்குப்பின் இருவரும் மிகவும் சிந்தித்தோம். பரந்தாமனின் சகோதரி தன் கணவனுடன் கென்யா என்னும் கிழக்கு ஆப்பிரிக்காவில் வசித்து வந்தாள். அவர் அங்கே ஒரு சிறு கடை வைத்திருக்கிறார். அவர் முயற்சியால் நாங்கள் இருவரும் ஆப்ரிக்காவிற்குப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தோம்.''

''அங்கே எங்கள் தகுதிக்கேத்த வேலையும், சம்பளமும் கிடைத்தன. மிகவும் சிக்கனமாக வாழ்ந்தோம். சேமித்தோம், அந்த முதலைக் கூட்டாகப் போட்டு ஒரு சிறு வியாபாரத்தைத் தொடங்கினோம். நல்ல காலம் பிறக்கத் தொடங்கி விட்டதால் சில ஆண்டுகளில் நாங்கள் இருவரும் வெகுவாக முன்னேறி விட்டோம்.

அதுசமயம் தாய்நாட்டிற்கு வந்து திருமணம் செய்து கொண்ட பரந்தாமனுக்கு மறுபடி ஆப்பிரிக்காவில் வந்து வசிக்க மனம் இருக்கவில்லை. மனைவியுடன் பம்பாயிலேயே தங்கிவிட உத்தேசித்தார். எனக்கு கென்யாவில் தனியாக



நண்பனை விட்டு வாழ மனம் ஒப்பவில்லை. பணத்துடன் செல்லப் புறப்பட்டேன்.

''மீண்டும் பம்பாய் வாசம். கூட்டு முயற்சியில் கையில் இருந்த முதலைப்போட்டு கட்டட சாமான்கள் விற்கும் வியாபாரத்தில் இறங்கினோம். குமரன் பிறந்த கொஞ்ச நாளில் பரந்தாமனின் மனைவி இறந்து போனாள். இருவரும் மனைவியை இழந்தவர்கள். துக்கத்தில் இருந்த எங்களைக் காக்க சிறுவன் குமரன்தான் உதவினான். அவன் மீது அன்பைப் பொழிந்து—வியாபாரத்தில் மனதை ஒரே மூச்சாக ஈடுபடுத்தி உழைத்தோம். விரைவில் மளமளவென்று முன்னேறி விட்டோம்.''

''பம்பாய் வாசம் அலுத்துப்போய் சென்னையில் வியாபாரக் கிளை ஒன்றை ஆரம்பித்துக்கொண்டு இருவரும் சிலமாதம் முன்னர்தான் சென்னைக்கு வந்தோம்.''

''உடனடியாக நீங்கள் என்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கலாமே? ஏன் வரலை? கெடுகெட்டவள்—கணவனுக்குத் துரோகம் செய்தவள் என்ற நினைப்பு மாறாததனால்தானே என்னைத்தேட முயற்சிக்கலை?'' துயரமும் கோபமுமாக மாதவி கேட்டாள். அவள் கண்கள் மீண்டும் கலங்கியது. நெஞ்சு துடித்தது.

ஆதரவுடன் அவளுடைய தோள்பட்டை மீது கரத்தை வைத்துக்கொண்டார் பிரகாசம். ''என்னைப் பிரிந்த பின்னர் நீ தன்னந்தனியாக பாடுபட்டு—தையல் கடை வைத்து முன்னேறி...உழைப்பினால் படிப்படியாக உயர்ந்து விட்டாய். மகள் டாக்டருக்குப் படித்துச் சிறப்பாகப் பணி புரிகிறாள் என்று விவரமாகத் தெரிந்தது...''

''அதற்குப்பின் ஏன் தயக்கம்?'' மாதவி கோபத்துடன் கேட்டாள்.

''மனதில் ஒரு சிறு உறுத்தல். பிரபலமான மெல்லிசை பாடகி ரஜனி உன் மகள் என்று கேள்விப்பட்டேன். எப்படி

இருக்க முடியும்? அப்படியானால் நீ வேறு விதமாக வாழ்க்கை அமைத்துக்கொண்டு விட்டாயா என்கிற ஒரு சந்தேகம்...''

''நெருப்பிலே குதித்து எழுந்து வந்தால்கூட என்னை நீங்கள் இன்னமும் சந்தேகிப்பீங்க இல்லையா?...'' கேட்டு முடிப்பதற்குள் கண்களிலிருந்து பொல பொலவென்று அவள் கன்னத்தில் கண்ணீர் சிந்தியது.

நெஞ்சம் நெகிழ்ந்து போன பிரகாசம் அவளை இறுக்கமாகத் தம்மோடு அணைத்துக் கொண்டார். அவளது கண்ணீரை மெல்லத் துடைத்து விட்டார். ''மாதவி! நடந்ததைச் சொன்னேன். மறுபடியும் உன் மனசைப் புண்ணாக்கி விட்டேன். மன்னித்துக் கொள். சமீபத்தில் ரஜனியுடன் பேசவேண்டி இருந்தபோது என் மனதை உறுத்திய அந்தச் சந்தேகமும் தெளிந்து போனது. தியாகம் என்கிற தீயில் புகுந்து மாசுமறுவின்றி வெளிப்பட்டுள்ள என் தெய்வத்தை சந்தேகித்தேனே பாவி என்று நினைத்து நான்படும் வேதனை...'' அவர் குரல் தடைப்பட்டது.

''போகட்டும். இப்பவாவது என்னை நம்புகிறீர்களே அதுபோதும்...''

''ரொம்பப் பெருமைப் படுகிறேன். வறுமையில் போராடியும்—தனிமையில் தவித்தும் பெண்மைக்கு மாசு வராது, உடலால் உழைத்து நேர்மைக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டிவிட்டாய். உன் முன்னால் நான் ரொம்பத் தாழ்ந்து நிக்கிறேன். என்னை மன்னிச்சு மறுபடியும் ஏத்துக்குவியா மாதவி? காலமெல்லாம் கனிந்த பின்னர் இந்த வயதில் உன்னிடம் ஓடிவந்திருக்கிறேன்னு உதாசீனம் பண்ணுவியா? இனியாவது உன் கணவனாக—துணைவனாகக் கூட நின்று குழந்தைக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய ஒரு சந்தர்ப்பம் தருவியா...கலங்கித் தவிக்கிறேன்...மாதவி! உன் விருப்பத்தை துணிவுடன் சொல்—எதுவானாலும் ஏற்கத் தயார்'' தழுதழுத்தது



அவர் குரல். அவளுடைய கரத்தைப் பற்றி தம் கண்களில் ஒற்றிக்கொண்டார், உணர்ச்சி வேகத்தில்.

சூடாகத்தன் கைமீது பட்ட கண்ணீரை உணர்ந்து அவள் திடுக்கிட்டாள். ''என்ன இது பச்சைப் பிள்ளை போல்...'' அவரது கண்ணீரைத் தன் கரத்தால் துடைத்தாள்.

''அப்படீன்னா என்னை ஏத்துக்குவியா மாதவி?'' திணறினார் அவர் துக்கத்துடன்.

''ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாள் இந்தப் பூவுக்கும் பொட்டுக்கும் பெருமை கிட்டத்தான் போகிறதுன்னு பலருடைய அவமதிப்பையும் பாராது தொடர்ந்து உங்களுக்காக பூவும் பொட்டுமாக உலகத்தின் முடிவு வரை காத்திருக்கத் துணிஞ்சேன். என் நம்பிக்கையும் பிரார்த்தனையும் வீண் போகவில்லை. கணவன்-மனைவி இருவருக்கும் காலம் என்ற வரம்பு உண்டா? இருவரின்துணை முடிவு வரை இருக்கும் தேவை இல்லையா?''

திடீரென்று அவரது பிடியில் இருந்து விலகி எழுந்து நின்றாள். அங்கே வரும்போது கவனித்த நினைப்பு வரவேற்பு அறை அருகே ஒரு பூஜையறை-வேகமாக அங்கே ஓடினாள்.

பிரகாசம் அவளைப் பின் தொடர்ந்து வெளியே வந்தார்.

பளிச்சென்று பூஜை அறையில் எரிந்த விளக்கொளியில் படத்தருகே மேடை மீதிருந்த குங்குமச் சிமிழைக் கையில் எடுத்துக் கொண்டு, அத்துடன் படத்தின் மீதிருந்த பூச்சரத்தில் ஒரு துளி அளவு கிள்ளி எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

''இந்தப் பூவை என் தலையில் வச்சு-குங்குமத்தை உங்கள் கையால் தொட்டு எனக்கு வச்சு வாழ்த்துங்க...ஒவ்வொரு பெண்ணுக்கும் கணவன் அமைவதெல்லாம் நீடித்த

இந்த சௌபாக்கியத்தை அவளுக்கு வழங்கத்தானே?" உணர்ச்சி வசத்தில் தடுமாறினாள் மாதவி.

பூவை அவள் தலையில் சூட்டினார், அவர். நடுங்கும் விரல்களால் குங்குமத்தைத் தொட்டு அவள் நெற்றியில் வைத்தார்.

''மாதவி! நீ சாதாரணப் பெண் அல்ல...எங்கள் குலத்தைக்காக்க வந்த தெய்வம்!'' திணறியபடி நெஞ்சோடு அவளை அணைத்துக் கொண்டு குலுங்கக்குலுங்க அழுதார்.

அது சமயம் உள்ளே வந்து நின்ற மணிவண்ணனும் ரஜனியும் திகைப்பில் அயர்ந்துவிட்டனர்.

## 31

சில சமயம் கதைகளில் வரும் சம்பவங்களைவிட வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகள் மிகவும் அதிசயமானவை என்று சொல்வது எத்தனை உண்மை?

தன் கண்களையே நம்ப முடியாதவனாக- உணர்ச்சிப் பெருக்கில் மெய்மறந்து போய் நின்றான், மணிவண்ணன்.

பிரகாசம் கூறியது உண்மையா?

ஒரு வயது குழந்தையாக இருக்கும்போது அவனை விட்டு மறைந்துபோன அப்பா-

சின்னஞ்சிறியவனாக பள்ளிப் பருவத்து இரவுகளில் நினைத்து தலையணை நனைய அழுது பார்க்கத் துடித்தானே அந்த தந்தை...

எப்பொழுது நினைத்தாலும் யாரோ இதயத்தைப் பிடித்துக் கசக்குவது போன்ற துன்ப உணர்வில் தவித்தானே-

இத்தனைக்கும் காரண கர்த்தாவாக இருந்த அவன் தந்தை பூபதியா- இந்தப் பிரகாசம்?

நம்ப முடியவில்லையே!



ரஜனியைப் பற்றிய பிரச்சினையைப் பேசியபோது அன்பும் ஆர்வமுமாக அவனுக்கு ஆறுதல் சொல்லிய நண்பர் பிரகாசமா, அவனுடைய தந்தை பூபதி?...இதென்ன விந்தை!

அம்மா அறையில் படுக்கையருகே மேசைமீது இருந்த அந்தப் படத்தில் கன்னங்கரேல் என்ற சுருண்ட முடியும், கட்டுமஸ்தான உடல் அமைப்பும் கொண்டு, பல்லெல்லாம் பளிச்சிட சிரித்துக்கொண்டிருந்த அப்பாவைப் பார்த்துப் பழகின அவன் கண்கள், பட்டையாக வெளுத்துவிட்ட அந்த முடியையும் - பிரஷ் மீசையையும் - கண்கள் ஓரத்தில் சுருக்கம் விழுந்த கன்னங்களையும் திகைப்புடன் பார்த்தன.

''அப்பாவுக்கு ரெண்டு பேரும் வணக்கம் செய்யுங்கள்''

மாதவி உத்திரவிட்டபோதுதான் அவன் விழித்துக் கொண்டான். சிலநாளாகப் பேசாதிருந்த தாய் தன்னைப் பார்த்துப் புன்முறுவலித்ததைக் காண அவனுக்குக் கரை காணா மகிழ்ச்சி.

''மணிவண்ணா! என்ன யோசிக்கிறே. ரொம்ப நாளா கேட்டுக்கொண்டிருந்த கேள்விக்கு இன்னிக்குப் பதில் சொல்ல முடியும். இவர்தான் உன் அப்பா - நம்மோடு இனி பிரியாது இருக்க வந்திருக்கிறார்...'' பேசி முடிப்பதற்குள் உணர்ச்சிப் பெருக்கில் அவள் கண்கள் கலங்கின.

இன்பமும், துன்பமும் கலந்த ஒரு கலவை உணர்வில் மணிவண்ணன் தவித்துப் போனான். நெஞ்சே இரண்டாகப் பிளந்துவிடும் போன்றதொரு படபடப்பு.

ஒரே எட்டில் தந்தையின் அருகில் வந்தான்.

அடி வயிற்றில் இருந்து புரண்டெழுந்து என்னவோ ஒன்று தொண்டையைப் பிடித்துக் கொள்வது போன்ற உணர்ச்சிக் குழப்பம்.

லேசாக உடல் முழுவதிலும் பதற்றம்.

முத்துக்களாக நெற்றியில் அரும்புகட்டிய வியர்வையை கையால் துடைத்துக் கொண்டான்.

''அப்பா - இப்படி அம்மாவின் அருகிலே கொஞ்சம் நில்லுங்கள். வைத்தியப் பட்டமளிப்பு விழா முடிந்ததும் கையில் பட்டம் பெற்ற சான்றிதழ்களுடன் அம்மாவிடம் வணங்குவதற்கு வந்தபோது - அருகில் ஜோடியாக நீங்க அவங்க பக்கத்திலே இல்லையேன்னு நினைச்சு உள்ளூர நான் புழுங்கி அழுதேன்...ஏங்கினேன். அந்தக் குறை தீர என்னை ஆளாக்கிய உங்களுக்கு நன்றிகூறி இன்று வணங்குகிறேன். வாழ்த்துங்கள்.''

சொல்லிக்கொண்டே கீழேவிழுந்து அவர் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டான்.

உணர்ச்சிப் பிழம்பாகப் போய்விட்ட பூபதியின் உடல் வெடவெடவென்று நடுங்கியது. கண்கள் குளமாயின,

வாரி எடுத்து மகனை மார்புடன் அணைத்துக்கொண்டு பச்சிளம் பிள்ளைபோல் கட்டுப்படுத்த இயலாது விம்மி விம்மி அழுதார்.

''என்ன இது? மகிழ்ச்சியான சமயத்தில் இப்படி கண்ணீர் வடிச்சுக்கொண்டு...''

ஓங்கிய குரலில் மாதவி அதட்டியபோதுதான் தந்தைக்கும் மகனுக்கும் உலகத்தின் நினைப்பு வந்தது,

கண்ணாடியைக் கழற்றி துண்டினால் கண்களைத் துடைத்துக்கொண்டு மீண்டும் அணிந்துகொண்ட பூபதி, சற்றுத் தொலைவில் துயரமும் திகைப்புமாக ஒதுங்கியபடி நின்ற ரஜினியிடம் வேகமாகச் சென்றார்.

''அம்மா ரஜனி - இப்படி வா. நீ எனக்கு மகளா, மருமகளான்னு வெளங்கலையே...'' சிரித்தார்.

ரஜனி வியப்புடன் விழித்துக்கொண்டு அருகில் மெல்ல வந்து நின்றாள். அவள் நெற்றிமீது ஆடிய முன் கூந்தலை மெல்ல ஒதுக்கிவிட்டு, தாழ்ந்த குரலில் சொன்னார்:



''மாதவியின் மகள் என்ற நிலையில் நீ எனக்கு மகள். என் நண்பன் பரந்தாமனுக்கு வரப்போகும் மருமகள் என்ற முறையில் எனக்கும் நீ மருமகள். பார்த்தியா வேடிக்கையை! எனக்கு இரண்டு வகையில் நீ சொந்தமாகி விடுகிறாய்...மருமகள் என்றுஉன்னை அதிகாரம் செய்யவா? மகள் என்று கொஞ்சிக் கொண்டாடவா...'' வாய்விட்டு உரக்கச் சிரித்தார்.

இதைக்கேட்டு மற்றவர்களும் கொல்லென்று நகைத்து விட்டனர்.

அந்த வரவேற்பறை முழுவதுமே சிரிப்பு அலை குமிழியிட்டுச் சுழன்று வந்தது.

அதுசமயம் தயக்கத்துடன் அங்கே மெல்லவந்து எட்டிப் பார்த்தார் சமையல்கார வேலு.

''ஐந்து பேர் சாப்பிட இருக்கிறோம். பாயசத்துடன் விருந்து தயாரிச்சுடுங்க...''அவருக்கு உத்திரவிட்டார் பூபதி.

தங்கள் நால்வரையும் ஒருமுறை மனதிற்குள்ளே எண்ணிக் கொண்டாள் மாதவி பின்னர் கணவன்முகத்தைப் பார்த்து ''ஐந்து பேர் சாப்பிட இருப்பதாகச் சொன்னீங்களே. யார் அந்த ஐந்தாவது ஆசாமி?'' என்று வியப்போடு கேட்டாள்.

''புத்திசாலியான நீ ஊகித்துக் கொண்டிருப்பேன்னு நினைச்சேன். ஐந்தாவது விருந்தாளி உன் வருங்காலத்து மருமகள் நளினி!'' புன்முறுவலுடன் கூறிவிட்டு, மிகவும் தணிந்த குரலில், ''உனக்கு இனியும் நளினியைப் பற்றி ஏதாவது...''

அவர் முடிக்கவில்லை. மாதவி பதட்டத்துடன் குறுக்கிட்டாள்.

''உங்கள் முடிவுதான் இனி என் முடிவு - ஒன்றுபட்டு விட்ட நமக்குள் இனி எதிலும் அபிப்ராயபேதம் ஏதும் இருக்க நியாயமுண்டா?...''

மகிழ்ச்சியோடு முறுவலித்தார் அவர்.

''மணிவண்ணா! காருடன் போய் உடனே நளினியைக் கையோடு அழைச்சிட்டு வா. இனி அவள் நம்ப வீட்டுப் பெண். இந்த மகிழ்ச்சியில் கலந்து கொள்ள அவளுக்கும் உரிமை உண்டு. போ சீக்கிரம்'' உத்திரவிட்டாள் மாதவி.

மணிவண்ணனுக்கு ஆனந்தம் பிடிபடவில்லை - ''நன்றி அம்மா! உண்மையாகவே சொல்லுங்கள். நீங்கள்...''

''உண்மைதான் மணிவண்ணா. இனி அப்பா உத்திரவு தான் என் உத்திரவு. அவர் வேறு நான் வேறுன்னு கிடையாது. அவர் அருகே துணையாக இருக்கும்போது எந்தவித எதிர்ப்பையும் என்னால் சமாளிக்க முடியும்...'' சொல்லி விட்டு பெருமையும் நிறைவுமாகக் கணவனது முகத்தைப் பார்த்தாள்.

சாப்பிட்டதும் அவர்கள் அனைவரும் வாயில் புறத்து வராந்தாவிலே வந்து அமர்ந்துகொண்டு பலவும் பேசி மகிழ்ந்தனர்.

வானத்திலே பால் போன்று நிலவு காய்ந்து கொண்டிருந்தது. தோட்டத்தின் முன்புறத்திலே வளர்ந்து நின்ற பன்னீர் மரத்துப் பூக்களின் வாசத்தை அள்ளிக்கொண்டு காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது.

வாழ்க்கையில் இனி வரப்போகும் இனிய எதிர்பார்ப்பிலே மாதவியின் உள்ளம் மகிழ்ச்சியில் விம்மிக் கொண்டிருந்தது.

ஆனாலும் ஊடே ஒரு சிறு கவலை. உறுத்தல். ''அந்த உண்மையையும் அவரிடம் சொல்லிவிட வேண்டாமா?'' என்று தனக்குள்ளே ஒரு கேள்வி.



தண்ணீர் குடிக்க ரஜனி உள்ளே எழுந்து சென்றாள்.

தோட்டத்து நிலவில் தனியே சற்றுப்பேசி மகிழ நளினியுடன் மணிவண்ணன் மெல்லப் படிகளில் இறங்கி மறைந்தான்.

பூபதியும் - மாதவியும் மட்டுமேதான் இருந்தனர்.

''உங்களிடம் சொல்ல வேண்டியது ஒன்று இருக்கு...'' மெல்லிய குரலில் ஆரம்பித்தாள் மாதவி.

# 32

மாதவியின் குடும்பத்தில் குதூகலம் ஏற்பட்டது.

குழல் விளக்கு ஏற்றியது போல நிலவு ஒளி பரவிக் கொண்டு இருந்தது.

இரவின் குளிர்ச்சி இதமாக இருந்தது. இனிய காற்றும் மெல்ல வீசியது.

மாதவி, பூபதி இருவர் மட்டுமே அங்கேயிருந்தார்கள்.

தன் மனதில் நீண்ட காலமாகப் புதைந்து கிடக்கும் ரகசியத்தைக் கணவனிடம் சொல்ல இதுதான் ஏற்ற நேரம் என்று மாதவி எண்ணினாள்.

அவளது குரலைக் கேட்டதும் பூபதி அவளை நிமிர்ந்து நோக்கினார்.

''ரஜனியின் தாய் யார் என்று உங்களுக்கு ஏற்கனவே தெரியும். அவளுடைய தந்தையைப் பற்றி...'' கூறி முடிக்காது தயக்கத்துடன் அவர் முகத்தைப் பார்த்தாள் மாதவி.

''கபடமற்ற ஒரு பெண்ணை ஏமாற்றிய கயவனைப் பற்றி...'' கூறி முடிக்காது தயக்கத்துடன் அவர் முகத்தைப் பார்த்தாள் மாதவி.

''கபடமற்ற ஒரு பெண்ணை ஏமாற்றிய கயவனைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமா...'' என்றான் பூபதி.

''அவசியம். அப்பொழுதுதான் என் மனதில் உள்ள பாரம் குறையும். நமக்குள்ளே எந்தவிதமான இரகசியமும் இல்லை என்று நிம்மதி அடைவேன்'' என்றாள் மாதவி.

''கௌரி இறக்குமுன்புதான் என்னிடம் சொன்னாள். யாருக்கும் தெரிவிப்பதில்லை என்று வாக்கும் கொடுத்து இருக்கிறேன். குழந்தைகளுக்கோ மற்ற யாருக்குமோ இது தெரியவேண்டிய அவசியமில்லை'' என்றாள் அவள், தொடர்ந்து.

''கௌரிக்கு அவமானத்தைத் தேடிக் கொடுத்துவிட்டு நழுவிவிட்ட மனிதன் வேறு யாருமில்லை...'' எச்சிலை விழுங்கிக் கொண்டு சொன்னாள். ''என் வாழ்க்கையைக் குலைக்க வந்த நச்சுப் பாம்பு அந்த சந்திரசேகரன்—அவன் தான் ரஜனியின் தந்தை.''

ஒரு கணம் மவுனமாக இருந்தார், பூபதி.

பிறகு பேசினார் : ''இந்த சங்கதியை நாம் இப்பவே மறந்துவிடுவோம். நம்வரை ரஜனியும் நம் குழந்தை. அவளுக்குத் தாய் நீ - தந்தை நான், புரிகிறதா?'' அழுத்த மாகச் சொல்லிவிட்டு அவள் கரத்தை அன்புடன் பற்றிக் கொண்டார்.

மாதவி நிம்மதியாக மூச்சு விட்டாள். ''இப்போ என் மனசு லேசாகிவிட்டது. நமக்கு இடையே மகிழ்ச்சியும்— நம்பிக்கையும் தவிர வேறு எதுவுமே கிடையாது'' என்றாள் நன்றி உணர்வுடன்.

பரிமளாவுக்கு நம்பவே முடியவில்லை.

எப்பொழுதோ மாதவியை உதறிவிட்டுப் போன கணவன், பணமும் அந்தஸ்துமாகத் திரும்பி வந்தவுடன் அவளையும் திரும்ப ஏற்றுக்கொண்டு வாழத் தொடங்கி விட்ட செய்தியைக் கேட்டு அவளுக்கு மிக்க வியப்பு - பொறாமை.



தனது அதிகாரத்துக்கு அடங்கிக் கிடந்த நளினியின் பெற்றோர்கள் அவளையும் மீறிக்கொண்டு பிரபல வியா பாரியான பூபதியின் மகனுக்குப் பெண் கொடுக்க இசைந்து விட்டது மாபெரும் அதிர்ச்சியைத் தந்துவிட்டது, பரிமளா வுக்கு.

முடிவில் மாதவிக்கு இப்படி ஒரு மகத்தான வாழ்வா? அந்தஸ்து-பணம்- கணவன்- குழந்தைகள்- இப்போது ஒரு நல்ல மருமகள்...இத்தனையுமா...?

பரிமளாவால் தாங்கவே முடியவில்லை. பொருமினாள் தன் கணவனை ஏசினாள். விதவைத் தாயிடம் எரிந்து விழுந்தாள். வேறு என்ன செய்வாள்?

எல்லோரும் எதிர்பார்த்த அந்த நல்ல நாளும் நெருங்கியது.

மண்டபத்து அலங்காரங்களை மேற்பார்வையிடவும்— கல்யாண வீட்டுப் பலகாரத் தயாரிப்பில் பங்கு ஏற்கவும் மாமன் சீருடன்...சிவகுரு பத்துநாள் முன்னதாகவே தங்கை யின் வீட்டிற்கு வந்துவிட்டான்.

தாடி மீசை நரைத்து...வயதில் சற்று தளர்ந்து விட்ட போதிலும் சிவகுருவின் மனதிலே மாதவி மீது அதே அன்பு- பாசம்- பரிவு இம்மியும் குறையவில்லை. அவன் கொண்டி ருந்த மதிப்பும் மங்கவில்லை.

திருமணம் மிகவும் சிறப் பாக நடந்தேறியது.

பணம் அந்தஸ்து இரண்டிலும் உயர்ந்துவிட்ட மாதவி பண்பிலும் உயர்ந்தவளாகத்தான் இருந்தாள். மாலை நிறைந்த கழுத்தும்- மகிழ்ச்சி நிறைந்த முகமுமாகத் தங் களை மணமக்கள் வணங்க வந்தபோது ''மணிவண்ணா! சாபல் சிவகுருநாதன் வீட்டுக்குப் பெரியவர்- முதலில்

அவரை வணங்கி விட்டுப் பிறகுதான் மத்தவங்களுக்கு வணக்கம் செய்யணும்'' என்றாள்.

சிவகுருவுக்குப் பெருமையும் ஆனந்தமும் தாளாது கண்கள் பணித்தன—நெஞ்சு விம்மியது. ''நூறாண்டு காலம் நல்லா இருங்கோ மனம் நிறைந்து'' மணமக்களை வாழ்த்தினான்.

அண்ணனது திருமண வரவேற்பு விழாவில் தங்கையின் பாட்டுக் கச்சேரி.

மகிழ்ச்சியும்- உற்சாகமும் ஒருங்கே எய்திய ரஜனி வழக்கத்தைவிட அன்று மிக அற்புதமாகப் பாடிக்கொண்டு இருந்தாள்.

முத்துச் சுடராக எரிந்த விளக்கொளியில் அழகு ஓவியமாக அமர்ந்து இன்னிசை எழுப்பிக் கொண்டிருந்த மகளையே கண்கொட்டாது பார்த்து மகிழ்ந்து தம்மை மறந்து உட்கார்ந்திருந்தார், பூபதி.

அந்தஸ்தை காப்பாற்றிக் கொள்ளும் நிமித்தம் பெருமைக்காக சந்திரசேகரன் தம்பதிகளும் கல்யாணத்திற்கு வந்திருந்தனர்.

''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து நீ...''

என்ற திருவாசக அடிகளை மனமுருக ரஜனி பாடத் தொடங்கியதும் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான் சந்திரசேகரன்.

அந்த முகம்...அந்தக் குரல்...எங்கேயோ பார்த்தகேட்ட நினைப்பு- பாரமாக நெஞ்சை அழுத்திய விசித்திர உணர்விலே ஏற்பட்ட ஒரு தவிப்பு...'



பட்டும் வைரமுமாக மின்னியபடி மரமாக உணர்வற்று உட்கார்ந்திருந்த தன் மனைவியை வெறுப்புடன் பார்த்தான்.

பந்தலிலே மகிழ்ச்சியுடன் வளைய வந்துகொண்டிருந்த மாதவியின் பக்கம் அவன் கண்கள் திரும்பியபோது... நீண்டதொரு துன்பப் பெருமூச்சு அவனுள் இருந்து எழுந்தது.

பணம்—அந்தஸ்து இவற்றுக்காக... பண்பு நிறைந்த ஒரு பெண்ணை உதறினானே—இப்போது அவள்குறைந்தா போய் விட்டாள்? அவர்களைவிட அந்தஸ்திலும்— நிறைவுகளிலும் மாதவி உயர்ந்து அல்லவா நிற்கிறாள்? அவனைப் போல் முட்டாள் உலகினில் உண்டா? ஏக்கம் நிறைந்த எண்ணங்கள் உள்ளத்தைக் குலுக்க அவன் இடிந்துபோய் உட்கார்ந்திருந்தான்.

சிறிது நேரத்திற்குப் பின்னர் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார்கள் அவர்கள். பரிமளா வேகமாக முன்னால் நடந்தாள். தயங்கி நின்ற சந்திரசேகரன் மீண்டும் ஒரு முறை மேடை மீது இருந்த ரஜனியை ஆசையுடன் உற்றுப் பார்த்தான்.

''இந்த மாதிரி சங்கீத அறிவு உள்ள குழந்தை மட்டும் எனக்கு இருந்தால்; அந்தஸ்து-பணம்- ஆஸ்தி இதெல்லாம் வேண்டாம் என்று உதறிவிட்டு விடுவேன்...ம்...எல்லாத்துக்கும் கொடுத்து வைக்கவேணும், இல்லையா...?''கொஞ்சம் உரத்த குரலில் சொல்லி விட்டான்.

''குழந்தைக்குச் சுத்திப் போடு. மறந்துடாதே. கண் பட்டுவிடும் போலிருக்கே...?'' பூபதி மெல்லிய குரலில் கிசுகிசுத்த போது மாதவி பக்கென்று சிரித்து விட்டாள்.

"பெற்றவன் இல்லை, அவன். இப்போது மற்றவன்-இந்தப் பூபதியும் மாதவியுந்தான் ரஜனியைப் பெற்றவங்க-புரிகிறதா"

சொல்லிவிட்டு அவர் சிரித்தார்.

மாதவியும் மகிழ்ச்சியுடன் அந்த சிரிப்பிலே கலந்து கொண்டு சிரித்தாள்.

பல ஆண்டுக்குப் பின், துன்பமெல்லாம் மறந்து மனம் விட்டுக் கணவனுடன் மகிழ்ச்சியாக அவள் சிரித்தாள்-வெகு நேரம் சிரித்துக்கொண்டே இருந்தாள்.

16337
3206388